50
1963-2013 Years
Golden Jubilee



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர்

## உயர்திரு. சரவணமுத்து புவனேஸ்வரன்

(சரா) அவர்களின்

# புவனம்

# பொன்விழா சிறப்புமலர்

01.06.2013

50 Years
Golden Jubilee

# பொன்விழா

**01.06.2013**

## உயர்திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் (சரா) அவர்களின்




# புவனம்

## பொன்விழா சிறப்புமலர்

## சரா பொன்விழா சபை

## நூல் விபரம்


| | |
|---|---|
| தலைப்பு: | "புவனம்"<br>சரவணமுத்து புவனேஸ்வரன் பொன்விழா சிறப்பு மலர் |
| பதிப்பு : | 2013 ஜூன் 01 |
| அளவு: | 182 x 257 mm |
| பக்கங்கள்: | xiv + 182 |
| வெளியீடு: | சரா பொன்விழாச் சபை<br>சயன்ஸ் அக்கடமி,<br>நல்லூர், யாழ்ப்பாணம். |
| தொலைபேசி : | 0775388471 |
| பதிப்புரிமை: | பொன்விழாச் சபையினருக்கு |
| அச்சுப்பதிப்பு : | கணபதி பிரிண்டேர்ஸ்,<br>54/2, தலங்காவல் பிள்ளையார் கோவிலடி,<br>திருநெல்வேலி. T.P: 021 321 5077 |


பொன் அகவையில் உதிக்கும்
எங்கள் பொன்விழா நாயகன்

# சரா பொன்விழாச் சபை



இடமிருந்து வலமாக
உட்கார்ந்திருப்போர் :- P. தேவராஜா, ப. தமிழ்மாறன், S. சதாசிவம், S. ஸ்ரனிஸ்லாஸ், S.C. செல்வராஜா, S. தேவநேசன், S. சர்வானந்தன்
நிற்போர் :- R. கயூரன், S. சிவபாலசுந்தர், K. இந்திரன், T. ஹரிசான்ந், K. புஷ்பராஜா, T. பாலகணேஷ், S.சிவசங்கர், R.சிவபுத்திரன், S.வினோத்குமார், I. குமரதாசன், P. உதயராசா, S. சாந்தினி

50th ANNIVERSARY
சரா பொன்விழாச் சபை

# சரா பொன்விழாச் சபை

☎ 0775388471 Email: saragoldb50@gmail.com சயன்ஸ் அக்கடமி நல்லூர், யாழ்ப்பாணம்.


## விழா அமைப்பாளர்கள்

தலைவர்: **திரு. S. ஸ்ரனிஸ்லாஸ்**
சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி

உபதலைவர்: **திரு. K. தேவநேசன்**
அதிபர், துணை நிதிச்செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

செயலாளர்: **திரு. S. சர்வானந்தன்**
பழைய மாணவன் சயன்ஸ் அக்கடமி

உபசெயலாளர்: **திரு. S. சிவபாலசுந்தர்**
வலயச்செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

பொருளாளர்: **திரு. I. குமரதாசன்**
சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி

துணைப்பொருளாளர்கள்:

**திரு. R. சிவபுத்திரன்** - ஆசிரியர் சயன்ஸ் அக்கடமி

**திரு. T. ஹரிசானந்** - ஆசிரியர் சயன்ஸ் அக்கடமி

கௌரவ ஆலோசகர்கள்:

**திரு. S. சதாசிவம்** - ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், உணவுக்களஞ்சியம்

**திரு. S. C. செல்வராஜா** - ஓய்வுபெற்ற வங்கியாளர்

உறுப்பினர்கள்: **திரு. P. தேவராஜா** (அதிபர்) மாவட்டச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

**திரு. K. புஸ்பராஜா** (அதிபர்) - ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி

**திரு. P. உதயராஜா** (பிரதி அதிபர்) - சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி

**திரு. K. இந்திரன்** - வலயச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

**திரு. T. பாலகணேஸ்** - ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி

**திரு. S. சிவசங்கர்** - ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி

**திரு. R. கயூரன்** - ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி

**திருமதி S. சாந்தினி** - ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி

இதழாசிரியர்கள்: **திரு. ப. தமிழ்மாறன்** - சிரேஷ்ட ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி

**திரு. S. விநோத்குமார்**- ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி

# பொன்விழாத் தலைவரின் உள்ளத்திலிருந்து....



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளரும் நல்லூர் - அரியாலை "சயன்ஸ் அக்கடமி"யின் நிர்வாக இயக்குனரும் அனைத்திற்கும் மேலாக எனது நண்பனுமாகிய திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் ஐம்பதாவது அகவையையிட்டு வெளிவரும் "புவனம்" பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் உளமாரப் பூரிப்படைகின்றேன்.

ஆசிரியர் சரா. புவனேஸ்வரன் அவர்களின் பல்துறை சார்ந்த விடயங்களை "புவனம்" வெளிப்படுத்தி நிற்கின்றது. புவனேஸ்வரனின் குவழையும் அவர்தம் புனிதமான ஆசிரியப்பணியின் ஆரம்பத்தையும் வளர்ச்சியையும் "புவனம்" பறைசாற்றி நிற்கின்றது. மனிதன் உருவாவதில்லை, உருவாக்கப்படுகின்றான் என்பதற்கு சரா.புவனேஸ்வரனின் வாழ்ங்கை வரலாறு ஒரு முன்னுதாரணமாகும்.

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றையவை"


அழிவில்லாது பெருகும் மேன்மையான செல்வம் கல்வி ஒன்றே. அதனைப் போல, தொடர்ந்து பயன்தரவல்ல வேறு செல்வம் காணமுடியாது.

கல்விதான் ஒருமனிதனை முழு ஆளுமை படைத்த மனிதனாக மாற்று கின்றது. கல்வியால் கிடைக்கப் பெறுகின்ற மேன்மையான மகிமையை உணராமல் இன்று எமது மாணவ சமூகம் தடம் மாறிச் செல்லுகின்ற பரிதாப நிலை யதார்த்தம். இந்நிலையில் அன்றுமுதல் இன்றுவரை கல்வியின் முன்னேற்றம் கருதி செயற்பட்டு வருகின்ற ஆசிரியர்களில் சரா. புவனேஸ்வரன் தனித்துவமானவர் என்பதனை அனைவரும் ஏற்றுக்கொள்வர். கல்விப் புலத்தில் அனைவராலும் அறியப்பட்ட இவர் சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டவராகவும் கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு ஆகியவற்றைத் தனது வாழ்வில் கடைப்பிடிக்கின்ற ஒரு மனி தனாகவும் அவரை நான் காண்கின்றேன். அவரது கல்விச் சேவை இன்னும் சிறக்கவும் அவர் வழிகாட்டலில் கல்விச் சமூகம் முன்னேறவும், அதற்குரிய உடல் - உள சுக நலன்களை இறைவன் அவருக்கு வழங்கி அவரைப் பாதுகாக்கவும் இன் நன்நாளில் பிரார்த்தித்து அவருக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

**திரு. எஸ். ஸ்ரனிஸ்லாஸ்**
தலைவர், சரா பொன்விழாச் சபை

01.06.2013

## அர்த்தம் பெறும் வாழ்வின் பயனாக
## வெளிவரும் "புவனம்"



# பொன்விழாச் செயலாளரின் உள்ளத்திலிருந்து....

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" எனும் வள்ளுவர் பெருந்தகையின் அருள்வாக்கிற்கு அமைவாக வாழ்ந்துகொண்டிருக்கும் என் அன்புக்கும் மதிப்பிற்கும் என்றும் பாத்திரமான என் ஆசான் உயர்திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களின் ஐம்பதாவது அகவையைச் சிறப்பிக்கும் முகமாக நடாத்தப்படுகின்ற பொன் விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பல்துறை ஆளுமை கொண்ட திரு. சரா புவனேஸ்வரன் அவர்களின் வாழ்க்கைத் தடங்களைப் பதிவு செய்யும் ஓர் ஆவணமாக அவரின் ஐம்பதாவது அகவையில் வெளியிடப்படுகின்ற **"புவனம்"** பொன்விழா சிறப்பு மலரின் ஊடாக எல்லோரையும் சந்திப்பதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இவரது கல்விப் பணிகள் இன்றைய சமூகத்திற்கு எந்தளவில் பயனுறுதி வாய்ந்தவை என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். இதனால் தான் இப்பொன்விழா நிகழ்வுகளையும் **"புவனம்"** பொன்விழா மலர் வெளியீட்டையும் நடாத்தத் தீர்மானித்தோம். இந்நிகழ்வுகளில் அவரது மாணவனாக உரிமையுடன் செயற்படும் "சரா பொன்விழா"ச் சபையின் செயலாளராகக் கடமையாற்றுவது மிகவும் பெருமைக்குரிய விடயமாகக் கருதுகின்றேன்.


"சரா பொன்விழாச் சபை" உருவாக்கப்பட்டு இந்நிகழ்வுகள் முன்னெடுக்கப் பட்டு வருவதில் பலர் முன்னின்று உழைக்கும் செயற்பாடுகளிலிருந்து சரா. புவனேஸ்வரன் அவர்களின் சமூகப் பணிகளின் மகத்துவம் நன்கு புலப்படுகின்றது. ஆரம்பம் தொட்டு இன்றுவரை அவரது வாழ்க்கைப் படிநிலைகளையும், அவர் ஆற்றும் சேவைகளையும் **"புவனம்"** பொன்விழா மலரின் ஊடாக இயன்றவரை வெளிக் கொண்டு வந்துள்ளோம் என்பதில் மன நிறைவடைகின்றேன்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளராக, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் சிரேஸ்ர விரிவுரையாளராக, "சயன்ஸ் அக்கடமி" கல்வி நிறுவனத்தின் நிர்வாக இயக்குனராக, வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக கல்விச் சமூகத்தில் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் வழங்கிக்கொண்டிருக்கும் சேவைகளுக்கு மதிப்பளித்து எடுக்கப்படும் பொன்விழா நிகழ்வும், வெளியிடப்படும் **"புவனம்"** பொன்விழா மலரும் அவரது வாழ்வின் அர்த்தம சுவையான விடயங்களை நிலைநிறுத்தவல்ல அழியாச் சின்னங்களாக என்றும் விளங்கும் என்னும் நம்பிக்கையில் இம்மலரினை வெளியீடு செய்வதில் மகிழ்வடைகின்றேன்.

இவரது பணிகள் மேலும் சிறப்புற அமைய எல்லாம் வல்ல இறையருளை வேண்டி அமைகின்றேன்.

என்றும் உங்கள் பணியில்
**S. சர்வானந்தன்**
செயலாளர், சரா பொன்விழாச் சபை

01.06.2013



# இதழாசிரியர்களின் இதயத்திலிருந்து

புவனம் என்றால் உலகம் என்று பொருள். "புவனேஸ்வரன்" என்பது திகழும் பொன்விழா நாயகனின் பெயராகும் அவருடைய பெயரில் அது பொதிந்துள்ளது.

தனக்காக வாழாது பிறர்க்காக வாழும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளரும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் முதுநிலை விரிவுரையாளரும், வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும், சயன்ஸ் அக்கடமியின் நிர்வாக இயக்குநரும் கல்வி மற்றும் விளையாட்டுத்துறை வழிகாட்டியாகவும் இருந்து பல்துறைப் பணிகளையும் ஆய்ந்துணர்ந்து வினைத் திறனுடன் பூரணமாகச் செய்து முடிக்கும் திருவாளர் சரா. புவனேஸ்வரனின் பொன் விழாச் சிறப்பு மலர் என்பதால் இந்நூலுக்கு **"புவனம்"** எனப் பெயரிடப்பட்டுள்ளது.

உயர்ந்தோர் - தாழ்ந்தோர், அறிந்தோர் - அறியாதோர் இன்னார் - இனியார் என்றெல்லாம் ஆராயாது எத்திறத்தார்க்கும் சார்பின்றிச் சேவையாற்றும் பொன் மனங்கொண்ட சரா. புவனேஸ்வரன் அவர்களது பொன்விழா சிறப்பு மலர் 01.06.1963இல் பிறந்து 01.06.2013இல் பொன்னகவை காணும் விழா நாயகனின் நயங்கூறும் ஆக்கங்களைக் கொண்டு வெளிவருகின்றது.

இச்சிறப்பு நூலில் பொன் விழாவையொட்டி நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரை, மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களது பெயர்ப்பட்டியலும், விழாநாயகனது பல்பரிமாண வண்ணப் படங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

அவையத்திலே முன் மாதிரியான பண்புடையோர்க்கு விழா எடுப்பது அவர்களது பணி மேலும் சிறக்க வேண்டும் என்பதற்காகவும் இளையோர் இவற்றைச் சிரமேற்கொண்டு தாமும் உயரும் வாஞ்சை பெற்றுக் கொள்ளவேண்டும் என்பதற் காகவுமேயாகும். ஆகையால் "கடமையைசெய் பலனை எதிர்பாராதே" என்ற கீதை மொழிக்கமைய மாணவர்கள் பொதுப்பணியில் கோலோச்சி அபிவிருத்தியடைந்த சமுதாயத்தை கட்டியெழுப்ப வேண்டுமென்பதே எம் பேரவாவாகும்.

திருவாளர் சரா. புவனேஸ்வரன் அவர்களின் பொன்விழாச் சிறப்புமலராக **"புவனம்"** பொலிவு பெற்றிருக்கும் வேளையில் இதற்கு உறுதுணையாக இருந்த அனைத்து உள்ளங்களையும் நினைவில் இருத்தி அமைகின்றோம்.

01.06.2013

**இதழாசிரியர்கள்**

# பொருளடக்கம்


☞ **அருளாசிச் செய்திகளும் வாழ்த்துரைகளும்**

**01. நல்லைக் குருமணியின் அருளாசிச் செய்தி**
ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம், திருஞானசம்பந்தர் ஆதீனம்.

**02. யாழ் மறை மாவட்ட ஆயரின் அருளாசிச் செய்தி**
மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

**03. கௌரவ ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி**
இ. இளங்கோவன், செயலாளர், ஆளுநர் செயலகம், வடமாகாணம்.

**04. வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி**
சி. சத்தியசீலன், செயலாளர்

**05. ஆளுமைமிக்க தொழிற்சங்கவாதி**
பேராசிரியர் க. தேவராஜா
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்.

**06. வாழ்த்துச் செய்தி**
வ. செல்வராசா,
மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்.

**07. நேரம் காலம் பாராது ஆசிரியப்பணி செய்யும் சரா மாஸ்ரர்**
திருமதி. யோகேஸ்வரி பற்குணராஜா
முதல்வர், யாழ் மாநகர சபை, யாழ்ப்பாணம்.

**08. வாழ்த்துச் செய்தி**
எஸ். மனோகரன்,
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், திருகோணமலை.

**09.** லயன். வை. தியாகராஜா **அவர்களின் வாழ்த்துச் செய்தி**

**10. பன்முகப்படுத்தப்பட்ட மாதிரி**
V. அருளானந்தம்
வட பிராந்திய முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி

**11. ஆசிரிய சமூகத்துக்கு வழிகாட்ட ஆசிகூறி வாழ்த்துகின்றேன்**
எஸ். உதயகுமார்
வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.

**12. பொன் விழாக் காணும் புவனேஸ்வரனுக்கு வாழ்த்துக்கள்**
செ. சந்திரராசா,
வலயக் கல்விப் பணிப்பாளர் வலிகாமம்.

**13. கல்விப்பணி தொடர வாழ்த்துகின்றேன்**
க. கிருஸ்ணகுமார்
வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி

**14. இலக்கை நோக்கி சிறப்பாக நகர வாழ்த்துகின்றேன்**
ஜோண் குயின்ரஸ்
வலயக் கல்விப்பணிப்பாளர், தீவகம்.

**15. பொன் விழா நாயகனை வாழ்த்துகின்றேன்**
ஏ. ஜே. குருஸ்
வலயக் கல்விப்பணிப்பாளர், மடுக்கல்வி வலயம்.

**16. வாழ்த்துச் செய்தி**
A. விஜயானந்தமூர்த்தி
வலயக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், மூதூர்.

**17. வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி**
என். விஜேந்திரன்
வலயக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை.

**18. மதி நுட்பமும் மனித நேயமும் கொண்ட செயல்வீரன்**
வே. கா. கணபதிப்பிள்ளை
அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

**19. நெருங்கிய நண்பனும் தோழனும்**
த. மகாசிவம்
சார்க் பிராந்திய ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் துணைத் தலைவரும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதம ஆலோசகரும்.

**20. கல்வி உலகுக்கோர் கலங்கரை விளக்கு**
வீ. மகாலிங்கம்
முகாமைப் பணிப்பாளர், பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

**21. அகவை ஐம்பதில் அகம் மகிழ்ந்த வாழ்த்து**
பொ. அருணகிரிநாதன்
பிரதிக்கல்விப்பணிப்பாளர், யாழ். கல்வி வலயம்.

**22. பொன் விழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்**
பொ. ரவிச்சந்திரன்
பிரதிக்கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்.

**23. வாழ்த்துச் செய்தி**
P.N.சுதர்சன்
கௌரவ அமைச்சரின் பாராளுமன்ற செயலாளர்.

**24. வாழ்த்துச்செய்தி**
இ. மா. சிவசுப்பிரமணியம்
பொன் விழா நாயகனின் ஆசிரியர்

**25. நல் வழிகாட்டியாக மிளிர வாழ்த்துகின்றேன்**
திரு. சி. சோதிலிங்கம்
பிரதி அதிபர், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

**26. வாழ்த்துச் செய்தி**

இ. அருட்செல்வன்
நிர்வாக இயக்குநர், நியூ சயன்ஸ் ஹோல்

**27. வளர்ச்சிப் பாதையிலே**

திருமதி. கலா. பிரகதீஸ்வரசர்மா
ஓய்வுநிலை, ஆசிரிய ஆலோசகர்.

**28. வாழ்த்துச் செய்தி**

அருட்திரு. ம. ஜெறோ செல்வநாயகம்
அதிபர், புனித பத்திரிசியார் கல்லூரி.

**29. வாழ்த்துச் செய்தி**

வணபிதா. S.A.பொன்சியன்
அதிபர், தி/புனித சூசையப்பர் கல்லூரி.

**30. யாழ். மத்திய கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி**

சி. க. எழில்வேந்தன்
அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

**31. வாழ்த்துச்செய்தி**

சி. தர்மரட்ணம்
அதிபர் நீர்வேலி றோ. க. த. க. பாடசாலை

**32. தெளிந்த சிந்தனையும் தூரநோக்கும் கொண்ட நிர்வாகி**

திருமதி க. சுந்தரலிங்கம்
அதிபர், இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை

**33. வாழ்த்துச்செய்தி**

திரு. க. யோகானந்தன்
அதிபர் தி/ஸ்ரீகோணலிங்க மகா வித்தியாலயம்
திருகோணமலை.

**34. கல்விக் காருண்யனின் பொன்மனச் சிந்தனைகளில்**

தொழிலதிபர் **E.S.P.** நாகரட்ணம்
முகாமைத்துவப் பணிப்பாளர் **E.S.P.N.** சக நிறுவனம்

**35. மனித நேயம் கொண்ட நிர்வாகி**

பொ. நடராசா
ஓய்வுநிலை அதிபர்

**36. பன்முக சேவையாளர்**

I.A.பரமேஸ்வரன்
தொழில் நுட்ப ஆலோசகர்

**37. பொன்விழாக் காணும் பொன் எழிலான்**

P.T.P. தஜீதரன்
கிராம சேவையாளர்.

**38. வாழ்த்துக்குரிய சரா**

S.K.சண்முகலிங்கம்
ஓய்வுநிலை அதிபர்.

**39. வாழ்த்துப்பாமாலை**

பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு
ஓய்வுநிலை பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

**40. பார் போற்ற வாழ்க**

மாலினி வெனிற்றன்
வலயக் கல்விப்பணிப்பாளர், துணுக்காய்.

**41. மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்து**

சேவா ஜோதி, வித்தியாதீபம், எம்.எம்.சியான்
வலயக்கல்விப்பணிப்பாளர், மன்னார்.

**42. வாழிய வாழிய சிறப்பெல்லாம் பெற்று**

அருட்சகோதரி எம். ஜீவந்தி
அதிபர், புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.

**43. பல்லாண்டு காலம் வாழ்க**

வீ.நடராசா
காரைதீவு.

**44. வாழ்த்துச்செய்தி**

சித்திரவேல் புலேந்திரன் (LLB)
சட்டத்தரணியும், பிரசித்தநொத்தாரிசும், கம்பனி செயலாளரும், சத்தியப் பிரமாண ஆணையாளரும், சம்பூர், திருகோணமலை.

**45. 50வது அகவை அவனியிலே தடம் பதிக்கும் சரா புவனேஸ்வரனுக்கு என் இனிய வாழ்த்துக்கள்**

க. நல்லதம்பி
நிர்வாகச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

**46. பொன் விழாக் காணும் "புவா"**

சேனையூர் இரா. இரத்தினசிங்கம்
அதிபர், தி/சேனையூர் மத்திய கல்லூரி.

**47. அன்புடன் வாழ்த்துகின்றேன்**

பா. சிவராஜா
அதிபர், யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்.

**48. வாழ்த்துப்பாமாலை**

திரு. ஞான. திருக்கேதீஸ்வரன் குடும்பம்

**49. மனம் நெகிழ்ந்து வாழ்த்தும் சயன்ஸ் அக்கடமி ஆசிரியர்கள்**

**50. மனம் நெகிழ்ந்து வாழ்த்தும் கிழக்குத் தோழர்கள்**

## ☞ பொன்விழா நாயகன் பற்றிய ஆக்கங்கள்

**01. சரா ஒரு சாகரம்**

V.T.சகாதேவராஜா (M.Ed)ADE
தலைவர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

**02. பொது நலத் தொண்டன்**

S.R. சத்தியேந்திரம்பிள்ளை
உபபீடாதிபதி, யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
இணைப்பாளர் தேசிய கல்வி நிறுவனம்.

**03. தமிழ் ஆசிரியர் சமூகத்தின் காவலன் சரா. புவனேஸ்வரன்**

சி. தேவகுமாரன் (ADE)
நிதிச் செயலாளர் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

**04. ஐம்பதுக்கு ஐம்பத்தைந்து**

முருகேசு கௌரிகாந்தன்
முதுநிலை விரிவுரையாளர், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

**05. என் மனதிற்கினிய நண்பன்**

வீ.கருணலிங்கம்
பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

**06. ஆளுமை மிக்க செயல்வீரன்**

சு. சிவபாதசுந்தரம்
அதிபர் யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம்.

**07. 50வது அகவையில் கால்பதித்துள்ள எங்கள் வெற்றியின் நாயகன் சரா**

திரு. பா. தேவராஜா
அதிபர், தி/ கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம், மூதூர், திருகோணமலை.

**08. சமூகப்பணி நாயகன்**

N. நகுலநாதன்
மாவட்டச் செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.

**09. உடற்கல்வியும் சராவும்**

நா. துஸ்யந்தன்
சிரேஸ்ர உடற்கல்வி ஆசிரியர்.

**10. ஆளுமையும் செயற்திறனும் கொண்ட நிர்வாகி**

Y. பாலசுப்பிரமணியம்
முதுநிலை கணித ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி

**11. விடா முயற்சி உணர்வாளர்**

இ. இராகவன்
அதிபர் யா/ வதிரி திரு இருதயக் கல்லூரி, கரவெட்டி.

**12. சரவணமுத்து புவனேஸ்வரன் எனக்குக் கிடைத்த நல்ல நண்பன்**

சி. சதாசிவம்
ஆலோசகர் சரா பொன்விழாச் சபை.

**13. பொன்விழா நாயகனின் பணி தொடரட்டும்**
S.C. செல்வராஜா
ஆலோசகர் சரா பொன்விழாச் சபை

**14. புலமைப் பரிசில் துறையின் கலங்கரை விளக்கு**
S. சர்வானந்தன்
செயலாளர், பொன்விழாச் சபை.

**15. பல்லாண்டு வாழிய வாழியவே**
I. குமரதாசன்
சிரேஸ்ர ஆசிரியர், சயன்ஸ் அக்கடமி

**16. எங்கள் ஆசான்**
செல்வி. தர்மிதா தர்மரத்தினம்
தரம் - 9 மாணவி, சயன்ஸ் அக்கடமி

## ☞ பல்துறை சார்ந்தோரின் ஆக்கங்கள்

**01. யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் கா.பொ.த. சா/த -2012 விஞ்ஞான பாடப் பெறுபேறு – ஓர் பார்வை**
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**02. தனியார் ரியூசன் முறை வளர்ச்சி பங்களிப்பு மற்றும் சவால்கள்**
பேராசிரியர் மா. சின்னத்தம்பி
கல்வியியற் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**03. ஆலய முகாமைத்துவத்திற்கான தலைமைத்துவம்**
பேராசிரியர் க. தேவராஜா
மனிதவள முகாமைத்துவத்துறை,
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**04. மாணாக்கரின் கல்வி மேம்பாட்டில் சமயத்தின் வகிபாகம்**
பேராசிரியர் கலாநிதி. மா. வேதநாதன்
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**05. “ஆதாம்பாலம்”, “இராமர் அணை” ஓர் புவியியல் நோக்கு**
பேராசிரியர் கலாநிதி S.T.B. இராஜேஸ்வரன்
புவியியல் துறைத் தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**06. புற்றுநோய் ஓர் அறிமுகம்**
வைத்திய கலாநிதி ந. ஜெயக்குமாரன்
புற்றுநோய் வைத்திய நிபுணர்,
யாழ். போதனா வைத்தியசாலை.

**07. கோள வெப்ப அதிகரிப்பும் அதன் தாக்கங்களும்**

திருமதி. சுபாஜினி உதயராசா
சிரேஸ்ர விரிவுரையாளர், புவியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**08. ஆரம்பக் கல்வி ஓர் பார்வை**

திருமதி. அ. வேதநாயகம்
ஓய்வுநிலை வலயக்கல்விப்பணிப்பாளர்.

**09. சிந்தைக்கு விருந்தளிக்கும் சினிமாப் பாடல்கள்**

பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு
ஓய்வுநிலை பிரதி அதிபர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

**10. STEM SELLS**

வீ.எஸ்.குணசீலன்
சிரேஸ்ர விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

**11. புலமைப்பரிசில் பரீட்சை முதல் உயர் தொழில்சார் பரீட்சை வரை பொதுஅறிவுப் பாடத்தின் முக்கியத்துவம்**

திரு. P. உமாசங்கர்
விரிவுரையாளர்,
மருதானை, தொழில்நுட்பக் கல்லூரி.

**12. கிரமமான உடற்பயிற்சியின் மூலம் ஏற்படும் உடற்றொழிலியல் மாற்றங்கள்**

திரு. பா. வாசுதேவன்
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

**13. மேடைப்பேச்சு**

திரு. நாக. தமிழிந்திரன்
சிரேஸ்ர ஆசிரியர்
யாழ். மத்திய கல்லூரி.

**14. நாட்டுநடப்பு**

விகடகவி மு. திருநாவுக்கரசு
ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி

**15. ஓட்டிசம் – ஓர் புரியாத புதிர்**

செல்வி. துவாரகா புவனேஸ்வரன்
மருத்துவ பீட மாணவி,
மூன்றாம் வருடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

☞ **பின்னிணைப்புப் பகுதி**

01. 2012 – கல்விப் பொதுத் தராதர (சா/த) பரீட்சையில் சித்தியடைந்து கௌரவிக்கப்படும் சயன்ஸ் அக்கடமி மாணவர்களின் விபரங்கள்

02. 2012 ஆம் ஆண்டிற்கான சயன்ஸ் அக்கடமியின் முதன்மை நிலை மாணவர் விபரம்
தரம் –4 முதல் தரம் 11 வரை

03. சரா பொன் விழா நிகழ்வுகளை முன்னிட்டு நடாத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களின் விபரங்கள்

04. பொன்விழா நாயகனின் வாழ்க்கைத் தடங்கள்
வர்ணப் புகைப்படத் தொகுப்பு

05. பொன்விழா மலர் அனுசரணையாளர்களின் வர்த்தக விளம்பரங்கள்

06. சரா. பொன்விழாச் சபையின் நன்றியுரை
நெஞ்சிருக்கும்வரை எம் நன்றிகள்



# புவனம்

50
Years
Golden Jubilee

## அருளாசிச் செய்திகளும்
## வாழ்த்துரைகளும்





# நல்லைக்குருமணியின் அருளாசிச் செய்தி

அன்புசார் பெருந்தகையீர்:-

திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் 50வது அகவையை அடைந்ததை யிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். புனிதமான ஆசிரியர் பணியை நிறைவாக செயற்படுத்திக் கொண்டே இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினுடைய செயலாளராகப் பணியாற்றி கோப்பாய் ஆசிரியர் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளராக ஆசிரிய சமூகத்தை உருவாக்கும் இவர்களுடைய பணி கல்வி சமூகத்தினுடைய வரலாற்று ஆவணமாகியுள்ளது. கால் நூற்றாண்டாக கல்வியே கண்ணெனப்போற்றும் கல்விப் பணியை நிறைவாகச் செய்து பொன்விழா காண்பது கல்விச் சமூகத்திற்கு மட்டுமன்றி ஏனையவர்களுக்கும் மகிழ்வினைத் தரும் செய்தியாகும். இவருடைய வளர்ச்சி அனைத்து ஆசிரியர் சமூகத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இவருடைய பணிகளை சிறப்பித்து விழாக்காணும் அனைத்து அன்பு உள்ளங்களையும் வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**இரண்டாவது குருமஹாசந்நிதானம்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**



# யாழ். மறை மாவட்ட ஆயரின் அருளாசிச் செய்தி

இலங்கைத் தமிழர் ஆசிரியங் சங்கத்தின் பொதுச் செயலாளர் திருவாளர் சரா. புவனேஸ்வரன் அவர்களின் 50வது அகவையை முன்னிட்டு அவரை வாழ்த்தி ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிரியப்பணி மிகவும் புனிதமானது. தன்னலம் மறந்து பிறர்நலம் விரும்பும் மகத்தான பணியாகும். திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் ஒரு ஆசிரியராக கல்விப்புலத்தில் காலடி பதித்து பல பதிவுகளை மேற்கொண் டுள்ளார். தனது அயராத முயற்சியினால் படிப்படியாக தனது ஆசிரியத்துவத்தை உயர்த்தியுள்ளார். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பிறர் போற்றத்தக்க வகையில் ஒரு விரிவுரையாளராகவும் சேவையாற்றி வருகின்றார். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டவராக யாழ்ப்பாணத்தில் "சயன்ஸ் அக்கடமி" என்ற நிறுவனத்தின் இயக்குநராகப் பணியாற்றி வருகின்றார். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு அவர்களின் ஒழுக்கமான நற்பண்புகளே பெரிதும் உதவக் கூடியன என்பதில் உறுதிகொண்டவராகவும் மாணவர்களின் எதிர்கால வாழ்வில் அக்கறை கொண்டவராகவும் செயற்பட்டு வருகின்றார்.

இத்தகைய ஆளுமைப்பண்புகளைக் கொண்ட ஒருவரை எமது கல்விப்புலம் பெற்றுக்கொண்டமை ஒரு பெரும் பாக்கியமே. அவர் கல்வியில் மட்டுமன்றி விளையாட்டுத்துறையிலும் அக்கறை கொண்டவராகவும் செயலாற்றி வருவதும் கண்கூடு. எனவே, இவரது சேவையால் எமது மாணவர்கள் தமது வாழ்வில் வளம் பெற்று சிறப்புற்று வாழ வழ்த்துகின்றேன். மேலும் இவர் தனது இலட்சியப் பாதையில் வீறு நடைபோட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பங்காற்ற வேண்டுமென்றும், அவர் உடல் உளநலத்துடன் வாழவேண்டும் என்றும் வல்ல தேவனை வேண்டி மனதார வாழ்த்துகின்றேன்.

**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை**
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.



# கௌரவ ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. சரா புவனேஸ்வரன் அவர்கள் பொன்விழா கொண்டாடும் இவ்வேளையில் அவர் சிறப்பினைத் தாங்கி வெளிவரும் நூல் சிறக்க வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் 25 வருட கல்விச் சேவையில் ஆசிரிய ராகக் கடமையாற்றி தற்போது கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராக கடமையாற்றிக்கொண்டிருக்கின்றார். கற்பித்தல் பணியாற்றிக் கொண்டிருக்கும் அதேநேரம் ஆசிரியர் குழாமின் உரிமைகளுக்காகவும், ஆசிரியர்களை பொருத்தமான கற்றல் சூழலில் கல்வி கற்பிக்க வேண்டும், மாணவர்களுக்கு பொருத்தமான கற்றல் செயற்பாடுகள் வாய்க்க வேண்டும் என்ற கொள்கையுடன் இலங்கை வாழ் ஆசிரியர் களின் தொழிற்சங்கமான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாள ராகக் கடமையாற்றி வருகிறார். இப்பணிக்கு மேலாக "சயன்ஸ் அக்கடமி" எனும் கல்வி நிறுவனம் ஒன்றை நிறுவி செறிவான கற்கைக்கான மாணவர்களின் தேடலை ஊக்குவிப்பதற்கான சந்தர்ப்பத்தையும் வழங்கி வருகின்றார்.

இச்சந்தர்ப்பத்தில் இவரின் சேவையை மீட்டுப் பார்க்கும்போது ஆசிரியர் களின் துன்ப துயரங்களை நன்கறிந்து அவர்களின் உரிமைக்காக அதிகாரிகளுடன் போராடும் ஒரு தொழிற்சங்கவாதியாக இவரை எல்லாச் சந்தர்ப்பத்திலும் காண முடிகின்றது. பணியினூடாக வடபுலத்தின் கல்வித்துறையை மேம்பாடடையச் செய்ய இவர் ஆற்றிவரும் சேவை பாராட்டுக்குரியதாகும்.

மேலும் இவரின் சேவை சிறப்படைந்து கல்வித்துறை மேம்படவும், பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியிருக்கும் இலங்கை ஆசிரியர்களின் காப்பாளராக, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினூடாகவும் சேவையாற்றும் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் சேவை தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்றும் இவர் இன்னும் நூற்றாண்டுவிழாக் கண்டு பல்லாண்டு வாழ இறைவன் ஆசியை இறைஞ்சி மனதார வாழ்த்துகின்றேன்.

**இ. இளங்கோவன்**
ஆளுநரின் செயலாளர்,
வட மாகாணம்.



வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரின்

# வாழ்த்துச்செய்தி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர் திரு. சரா புவனேஸ்வரன் அவர்களின் பொன்விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

அரச சேவையில் ஆசிரியராக தனது சேவையினை ஆரம்பித்து 25 ஆண்டுகள் தனது பணியினை நிறைவு செய்திருப்பதுடன் தனது சேவைக்காலத்தில் பல நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கியிருப்பது பராட்டத்தக்கதாகும். இவர் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் சிரேஸ்ட விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அக்கறையுடன் செயற்பட்டுவரும் இவர் 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கான மிகவும் பயனுள்ள வழிகாட்டல் நூல்களையும் தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றார். இவர் இன்னும் நீண்ட காலம் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து பொதுச் சேவையினை ஆற்றுவதற்கு எல்லாம் வல்ல பரம்பொருளின் அருட்காடாட்சம் கிடைக்க வேண்டிப் பிரார்த்திப்பதோடு இப் பொன்விழா மலர் சிறக்க வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

**சி. சத்தியசீலன்**
செயலாளர்,
கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை
அமைச்சு,
வடமாகாணம்.



# ஆளுமைமிக்க தொழிற்சங்க வாதி

திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களின் பொன்விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். திரு. புவனேஸ்வரன் அவர்களை இளமைப் பருவத்திலிருந்தே நான் நன்கறிவேன். அவர் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் அவரது உற்சாகமும் கற்பிக்கும் ஆற்றலும் என்னைக் கவர்ந்திருந்தது. தனது பாடத்தைக் கற்கும் எந்தவொரு மாணவனும் அப் பாடத்தில் தெளிவான அறிவைக் கொண்டிருக்க வேண்டுமென்ற புவனேஸ்வரனின் சிந்தனையே மாணவர் உலகில் அவரை தனிப்பெரும் தலைவனாக உயர்த்தியது. அவரிடம் கற்கவேண்டும் என்ற ஆவலினால் அவரது சொந்தக் கல்வி நிறுவனத்தை நோக்கி மாணவர்கள் படையெடுத்தமையை நானறிவேன். மாணவர்கள் கல்வியில் மட்டுமன்றி இணைச் செயற்பாடுகளிலும் மேலோங்கி வரவேண்டும் என்ற அவரது விருப்பமே அவரது கல்வி நிறுவனத்தைப் பிரபலமடைய வைத்தது எனக் கூறினால் அது மிகையாகாது.

திரு. சரா புவனேஸ்வரன் அவர்கள் ஆளுமை மிக்க ஆசிரியராக இருந்த காரணத்தினால் அவரது சேவையைப் பெற்றுக்கொள்ள கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நடவடிக்கை எடுத்தமை நான் கண்டு வியர்ந்திருக்கின்றேன். அங்கு மாணவர்களின் மனம் கவர்ந்த அவர் சிறந்த விரிவுரையாளர் என்ற பெயரையும் பெற்றுக்கொண்டார். அத்துடன் நல்ல தொழிற்சங்க அறிவைக் கொண்டிருந்த காரணத் தினால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், தொழிற்சங்கத்தின் செயலாளராக திரு. சரா புவனேஸ்வரனை நியமனம் செய்தது. இப்பதவியில் இருந்து அவர் ஆற்றிவரும் சேவை தொழிற்சங்க அங்கத்தவர்களிடம் அவருக்கு தனியான புகழைச் சேர்த்துள்ளது. எந்தவொரு முடிவையும் விரைவாக எடுத்து துணிவாக நடைமுறைப்படுத்தும் வலு அவருக்கு இருப்பதை பெருமையுடன் கூறுதல் வேண்டும். எது சரியானதெனத் தெரிந்தால் அதனை நடைமுறைப்படுத்த பின்னிற்காத தலைமைத்துவ இயல்பு அவரிடம் இருப்பது கண்டு உளப்பூரிப்படைகின்றேன்.

திரு சரா. புவனேஸ்வரன் அவர்களின் குடும்பம் பாராட்டுதற்குரிய பண்பு கொண்டதாகும். அவரது துணைவியார் சராவின் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக இருப்பதுடன் பிள்ளைகளின் கல்வியிலும் அக்கறை காட்டுபவராக இருக்கின்றார் இதன் காரணமாக மருத்துவ பீடத்திற்கு அனுமதிபெறும் வாய்ப்பு அவரது பிள்ளைக ளுக்குக் கிட்டியுள்ளது. மொத்தத்தில் "நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்ற முதுமொழிக்கிணங்க அவரது குடும்பம் புகழுடன் வாழ வாழ்த்துவதுடன் திரு. சரா புவனேஸ்வரன் நல்ல உடலாரோக்கியத்துடன் நீடுழி காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**பேராசிரியர் க. தேவராஜா**
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்
யாழ். பல்கலைக்கழகம்

# வாழ்த்துச் செய்தி



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர் திரு.சரா புவனேஸ்வரன் அவர்கள் ஐம்பதாவது அகவையை அடைந்ததையும் அவருக்கு பொன்விழா எடுக்கப்படுவதையும் அறிந்து பேரானந்தம் அடைகின்றேன்.

பிறருக்காக வாழுதல், பிறர் நலனுக்காக செயலாற்றுதல் என்பது தான் மிகப் பெரிய மகிழ்ச்சியை தரவல்லது. தமிழ் ஆசிரியர்களினது உரிமைகளுக்காகவும் அவர்களின் தொழில் சார்ந்த பிரச்சினைகளுக்காகவும் பணியாற்றக் கிடைத்த வாய்ப் பினை எந்த வகையிலும் மனங்கோணாது நேரிய வழியில் பிசகாது பணியாற்றிவரும் திரு. சரா புவனேஸ்வரன் அவர்களுக்கு பொன்விழா எடுப்பதென்பது சாலவும் பொருத்தமானதாகும்.

பின்தங்கிய பாடசாலைகளினது அபிவிருத்தி, கிராமிய பாடசாலைகளது செயலூக்கம், பிராந்திய ரீதியான கல்வி மேம்பாடு, கற்பித்தல் செயற்பாடுகளின் பகுப்பாய்வு, கஷ்ட, அதிகஷ்ட ஆசிரியர்களினது நலன் உள்ளிட்ட பல தரப்பட்ட செயற்பாடுகளையும் அர்ப்பணிப்புடன் செய்துவரும் சரா புவனேஸ்வரன் அவர்கள் இன்னும் பல காலம் இப்பணியினைச் செவ்வனே தொடர வேண்டும் என்பதே எனது பேரவா.

நேர்மை, நிதானம், துணிவு போன்ற பண்புகளைக் கொண்ட சிறந்த தொழிற்சங்கவாதியாக புவனேஸ்வரன் அவர்கள் விளங்குகின்றார். ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர்களது நலன்களில் மிகவும் அக்கறையுடன் செயலாற்றி வருகின்ற இவரது செயல் பாராட்டுக்குரியதாகும்.

அந்த வகையில் திரு. சரா புவனேஸ்வரன் அவர்கள் பற்றிய பல விடயங்களை யும் உள்ளடக்கிய ஆக்கங்களுடனும் பொது விடயங்கள் பலவற்றையும் உள்ளடக்கி வெளிவருகின்ற இம்மலர் சிறக்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்து கின்றேன்.

**வ. செல்வராசா**
மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
வடமாகாணம்.



# நேரம் காலம் பாராது ஆசிரிய பணி செய்யும் "சரா மாஸ்ரர்"

பொன் விழா காணும் புவனேஸ்வரன் ஆசிரியரை எல்லோரும் "சரா மாஸ்டர்" என்றுதான் அன்புடன் அழைப்பார்கள். சொந்தப் பெயரை விட புனைப்பெயரால் அழைப்பது அவரின் ஆசிரியத்துவத்துக்குக் கிடைத்த வெகுமதி ஆகும்.

இவர் தனது ஆசிரியப் பணியை முதலில் அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலையில் ஆரம்பித்து பின் முதன் முதலில் அங்கிலிக்கன் திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்ட புகழ்பூத்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று அங்கே ஆசிரியராக பணியாற்றும்போது அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் நன் மதிப்பைப் பெற்றும் கடமை நேரம் முடிவுற்ற நேரத்திலும் நேரம் பாராது பாடசாலை விளையாட்டுத்துறையை மேம்படுத்தவும் கல்வி வளர்ச்சிக்காகவும் பாடுபட்டவர். நான் வேம்படி உயர்தர பாடசாலையில் ஆசிரியராக இருந்தபோது, எங்கள் பாடசாலை விழாக்களுக்கு எல்லாம் அழைப்பு விடும்போது தவறாது வருகை தந்து ஒத்துழைப்பு வழங்கியதையும், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போது சிறந்த தீர்ப்பாளராகவும், அறிவிப்பாளராகவும் எங்களுடன் கடமை புரிந்ததையும் இந்நேரத்தில் கூறாமல் இருக்கமுடியாது.

யாழ். மத்திய கல்லூரியில் ஆசிரிய பணியை நிறைவுசெய்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் விளையாட்டுத்துறை டிப்ளோமா கற்கை நெறியைக் கற்று டிப்ளோமாதாரியாக வெளியேறி, கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரை யாளராக நியமனம் பெற்று ஆசிரிய மாணவர்களுக்கு போதனாசிரியராக இருந்து அவர்களுக்குச் சிறந்த பயிற்சியினை வழங்கி வருகின்றமை பாராட்டுக்குரியதாகும்.

திணைக்களங்களுக்கிடையே நடைபெற்ற துடுப்பாட்டங்களில் யாழ். கல்வித்திணைக்கள அணிக்காக விளையாடி சம்பியன் கிண்ணம் பெறப் பாடுபட்டவர் இத்தகைய செயலூக்கங்கொண்ட "சரா மாஸ்டர்" அவர்கள் தமிழர் ஆசிரிய சங்க பொதுச் செயலாளராகத் தெரிவு செய்தமை இவரின் பயன் கருதாப் பணியே காரணம் ஆகும்.

இவரது தூரநோக்கு தமிழ் மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவதாகும். அதற்காக நல்லூரில் "சயன்ஸ் அக்கடமி" எனும் கல்வி நிறுவனத்தை உருவாக்கி சிறப் பான சேவை செய்கின்றமை விசேடமாக குறிப்பிடக்கூடியது. பிறர்வலியை தன் வலி யாக நினைக்கும் சரா மாஸ்ரருக்கு பொன் விழா ஏற்பாடு மிகவும் பொருத்தமானதே.

**திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா** முதல்வர்
B.A (Hons), Geog.Dip-in Ed. M.Phil. JPUM
யாழ்.மாநகர சபை.
யாழ்ப்பாணம்.



# வாழ்த்துச்செய்தி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா. புவனேஸ்வரன் அவர்கள் அகவை பல கடந்து பொன்விழா கொண்டாடுவதை இட்டு உளமார மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பிட்ட காலம்வரை அவரோடு பழகியிருந்த போதும் அவரது ஆளுமைக்கூறுகளையும், முகாமைப்பாங்கையும் பல தடவைகள் கண்டிருக்கின்றேன். மேலும் எங்களோடு தொலைபேசி மூலமாக உரையாடும் வேளையிலும் இனிய தொடர்பாடல் பண்பினைக் கண்டிருக்கின்றோம். தொழிச்சங்கவாதியாக, விரிவுரை யாளராக, நல்லாசிரியனாக அவரது பணி விரிவடைந்து சென்றிருக்கின்றது. எமது கல்விச் சமூகத்திற்கு இத்தகையோருடைய பணி தேவையாக உள்ளது. காலமறிந்து சேவை செய்யும் பக்குவம் குறைவடைந்துவிடும் அவசர யுகத்திலே துடிப்புள்ள கல்விப் பணியாற்றக் கூடியவர்கள் எமது மாகாணத்திற்குத் தேவையாக உள்ளது. சரா. புவனேஸ்வரன் பல்லாண்டு காலம் வாழ்ந்து மேலும் அரும்பணியாற்ற வாழ்த்தி நிற்ப தோடு, அவரது பொன்விழா மலரினையும் விழாவினையும் எடுத்து நிற்கும் யாழ் கல்விச் சமூகத்தினரை உளமாரப் பாராட்டுகின்றேன்.

**திரு.எஸ்.மனோகரன்**
மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர்,
கிழக்குமாகாண கல்வித்திணைக்களம்,
திருகோணமலை.



சர்வதேச லயன்ஸ் கழகங்களின் மாவட்ட பிரதம இணைப்பாளரும்
இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்ட துணைத் தலைவரும்,
பிரபல சமூகசேவையாளரும், அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய
"கருமத் திருதி", "தேசமானி", "தேசபந்து"

# லயன் Dr. வை. தியாகராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி

என் அன்பிற்கும் அபிமானத்திற்குமுரியவரான "சரா" என அன்பாக அழைக்கப்படும் புவனேஸ்வரன் அவர்களுக்கு நடைபெறும் பொன்விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அளவற்ற மகிழ்வடைகின்றேன்.

இவர் கிழக்கு மாகாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் இவரை பயன்படுத்திக் கொண்டது வடமாகாணமே. ஒரு சாதாரண உடற்கல்விச் சேவையைத் தொடங்கி படிப்படியான உயர்வுகளைப் பெற்று இன்று உடற்கல்வி விரிவுரையாளராகத் திகழும் "சரா" அவர்கள் ஒரு விடயத்தை பொறுப்பேற்றால் அவ்விடயம் முடியும் வரை ஓயமாட்டார். இவ் விடயம் நேர்த்தியாகவும் திறமையாகவும் ஒழுங்காகவும் நடைபெற தன்னாலான முழுப்பலத்தையும் பிரயோகித்து பொறுப்பேற்ற விடயத்தை இனிதே நிறைவுசெய்யும் சிறந்த செயல்வீரன்.

இவருடன் பல ஆண்டுகளாக கல்விச் செயற்பாடுகளினூடாக பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. இதனால் அவரது நற்பண்புகளையும், நல்லெண்ணங்களையும், கண்ணியமான செயற்பாடுகளையும் நான் நன்கு அறிந்துகொண்டேன். மாணவர்களின் ஒழுக்கத்தில் மிகவும் கண்டிப்பானவர். ஒரு சமூக சேவையாளன். அத்துடன் ஒரு சிறந்த விளையாட்டு வீரனும் சிறந்த அறிவிப்பாளருமாவார்.

அண்மைக் காலத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் தெரிவுசெய்யப் பெற்று சிறந்த சேவையாற்றுவதை நான் பல சந்தர்ப்பங்களில் அவதானித்துள்ளேன். யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை போன்றவற்றின் நிகழ்வுகள் பலவற்றில் அவரின் ஆளுமைமிக்க செயற்பாடுகளை நேரில் கண்டுகொள்ளும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அத்துடன் கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் பல நிகழ்வுகளிலும் கலந்து எம்மைப் பெருமைப்படுத்தியுள்ளார்.

பொன் விழாக்காணும் செம்மல் "சரா" அவர்களின் சேவை தமிழ் மக்களுக்குத் தொடர்ந்தும் தேவை என்பதுடன், இவர் பல்லாண்டு காலம் சுகதேகியாக வாழ இறைவனின் ஆசிகளை வேண்டி, எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**- லயன் Dr. வை. தியாகராஜா MJF, J.P**



# பன்முகப்படுத்தப்பட்ட மாதிரி

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை செம்மையாகச் செய்துவரும் பெருந்தகை சரவணமுத்து புவனேஸ்வரன் (சரா) அவர்களின் பொன்விழா அகவைச் சிறப்புமலரில் அவரை வாழ்த்தும் சந்தர்ப்பத்தையிட்டு மனநிறைவடைகின்றேன்.

மானிட வாழ்வில் எமக்கப்பாற்பட்ட சக்தி உண்டென்பதை வெளிக்காட்டும் பிறப்பு, இறப்பு என்பனவற்றிக்கிடைப்பட்ட நிலையில் பொன் அகவை என்பது ஆக்க பூர்வமான சிந்தனையை வெளிக்காட்டும் உச்சநிலையாகும். சரா அவர்களின் பண்பு களை உணரும் வகையிலான நீண்ட நட்புரிமை எனக்குண்டு. யாழ்ப்பாணத்தில் பல காலமாக சமூக மேம்பாடு, கல்வி அபிவிருத்தி ஒழுக்கமிகு சமுதாயத்தைக் கட்டி யெழுப்புதல் முதலான பொதுநோக்குச் செயற்பாடுகளுக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றிவரும் நண்பர் சரா. புவனேஸ்வரன் அவர்களது பல்வகை செயற்பாட்டுத் திறனையும் வெளிப்படுத்தும் வகையில் இம்மலர் வெளிவருவது பாராட்டுக்குரியதாகும்.

சரா என்னும் பெருந்தகையிடம் அடியேன்கண்ட பல சிறப்புக்களில் என்னை மிகவும் கவர்ந்த நிலை "பன்முகப்படுத்தப்பட்ட மாதிரி நிலை" ஒரு புறத்தில் கற்பித்தலுக்குயிரூட்டும் சிரேஷ்ட விரிவுரையாளர், மறுபுறத்தில் கற்றல் கற்பித்தல் செயற் பாடுகளில் ஈடுபடும் ஆசிரியர் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் கௌரவ பொதுச் செயலாளர் என்னும் தொழில்சார் தகமைகளின் வெளிப்பாடுகள்.

இச்செயற்பாடுகள் சில கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் அடிப்படை களையும் வரையறைகளையும் கொண்டதாக இருப்பினும் தனது திறமையினால் அனைத்தையும் சாதகமாக்கிக் காரியம் சாதிக்கும் தனிப்பண்பை நான் வேறு எவரிடமும் கண்டதில்லை.

இவைகளுக்கு மேலான சமூகப் பொறுப்புணர்வினை வெளிக்காட்டும் வகையில் இவரினால் மேற்கொள்ளப்படும் சயன்ஸ் அக்கடமி ஓர் "இளநிலைப்பல்கலைக்கழகம்" என்பதை எமக்கெல்லாம் உணர்த்தும் வகையில் ஒழுக்கத்திலும், அறிவிலும் பொது நோக்கச் சிந்தனையுடனும் மாணவர்களை உருவாக்கி வருகிறார். இவரது முகாமைத் திறன் தலைமைத்துவத்தின் பண்பு முன்னுதாரணமாகச் செயற்படுதல், எச்செயலையும் தனித்துச் சாதிக்கும் சாதுரியம் என்பன மாணவர்களால் புதிய கோட்பாடாக மாறும் தன்மையைக் கொண்டதாக அமைந்துள்ளன.

இத்தகைய விரும்பக்கூடிய பன்முகங்களைக் கொண்ட "சரா" அவர்கள் என்றென்றும் அழியாத பண்புகளை மேலும் வெளிக்காட்டும் வகையில் பன்முகப்பட்ட மாதிரியாக வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு. V. அருளானந்தம்**
வடபிராந்திய முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி



# ஆசிரிய சமூகத்துக்கு வழிகாட்ட ஆசி கூறி வாழ்த்துகின்றேன்

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தினது பொதுச்செயலாளர் திரு. சரா புவனேஸ்வரன் அவர்களது பொன்விழாவினையொட்டி வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

திரு. சரா புவனேஸ்வரன் அவர்கள் தொழிற்சங்கப் பணியில் முழுமையாக ஈடுபட்டு ஆசிரியர்களது தொழில் மேன்மைக்காக அயராது பாடுபட்டு வருபவராவார். வலய, மாவட்ட ஆசிரியவளப் பங்கீடுகளின்போது வலயக் கல்விப்பணிப்பாளர் களுக்கு தனது ஒத்துழைப்பினை வழங்கி செயற்பட்டு வருபவராவார்.

இவர் ஆசிரியர்களது உரிமைகளையும், கடமைகளையும் பற்றி ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களது நலன்களில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டு வருபவர்.

ஆசிரியர்களது தொழில் வாண்மைத்துவமும், மாணவர்களது கல்வி அடைவு நிலைகளும், மேலும் உயர்வடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு சகலரது மத்தியிலும் எழுந்துள்ள நிலையில் ஆசிரியர்கள் அனைவரும் எமது மாணவர்களது கல்வி வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட துணிவுள்ள தொழிற்சங்கவாதியாகத் தொடர்ந்தும் பாடுபட வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் வேண்டி திரு. சரா புவனேஸ்வரன் அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து ஆசிரிய சமூகத்திற்கு வழிகாட்ட வாழ்த்துக்கூறுவதில் பெருமையடைகின்றேன்.

**எஸ். உதயகுமார்**
வலயக் கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.



## பொன்விழாக்காணும் புவனேஸ்வரனுக்கு வாழ்த்துக்கள்!

இப்புவி வாழ்வில் கடந்து செல்லும் ஒவ்வொருநாளும் மானிடர் ஒவ்வொருவருக்கும் முதுமையை அதிகரிக்கச் செய்துவிட்டுச் செல்கிறது. அதேபோல முதிர்ச்சியும், அனுபவமும், படிப்பினைகளும் அதிகரிக்கிறது; அதிகரிக்கவேண்டும். ஒவ்வொருநாளும் அர்த்தமும் மகிழ்ச்சியும் சேவைநயப்பும் நிறைந்த பொன்னாளாக அமையவேண்டும். பொன்விழாக்காணக்கூடிய அருமையான நாளை எட்டியுள்ள திரு. சரா. புவனேஸ்வரன் இப்புவி வாழ்வின் அரை நூற்றாண்டைக் கடந்து வாழ்க்கைப் பயணத் தைத் தொடர்கின்றார். பொன்விழாவை எட்டியுள்ள அவரது, ஆரோக்கியம் நிறைந்த நல்வாழ்வுக்காகவும், பூரண மனிதமாண்பு மிக்க சேவைக்காகவும் எல்லாம் வல்ல பரம்பொருளை பிரார்த்திக்கின்றேன்.

ஆசிரியராக சேவையாற்றி, ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகி ஆசிரிய சமூகத்தின் தொழில் உரிமைகளுக்காக வாதிடும் தொழிற் சங்கவாதியாகவும் திகழும் சரா. புவனேஸ்வரன் அவர்களை வாழ்த்துவோர் வரிசையில் நானும் ஒருவனாக உள்ளேன் என்பது மகிழ்ச்சியே. "எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்கிறார் தமிழ்ப்புலவர். ஆசிரியத் தொழிலும் அதன் தொழில்வாண்மையும் தமிழர் மரபில் அன்றுதொட்டு அந்தளவுக்கு உன்னதமும் மகிமையும் மிக்கதாகவே போற்றப்பட்டு வருகிறது. அவ்வாறான ஆசிரி யர் சமூகத்தின் தொழில் உரிமைகளுக்காகப் பாடுபடுகின்ற தொழிற்சங்கமாக தமிழர் ஆசிரியர் சங்கம் உள்ளது. அப்பாடுபடுதலும் இறைபணி போல உன்னதமும் உயர்வும் மிக்கது என்றே கூறலாம்.

இலங்கையிலுள்ள தொழிற்சங்கங்களுள் தமிழர் ஆசிரியர் சங்கம் தனக்கென சிறப்பான இடத்தைக் கொண்டுள்ளது. அவ்வாறான ஒரு தொழிற்சங்கத்தின் இதயம் போல இன்று செயற்பட்டு சேவை நல்கிவரும் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள். இறைவனுக்கு ஒப்பிடத்தக்க ஆசிரிய சமூகத்தின் உரிமைக்காக செயற்படும் தொழிற் சங்க செயற்பாடுகளும் அந்தளவுக்கு புனிதமும் தூய்மையும் மிக்கதாக அமைய வேண்டும் என்பதே சமூகத்தின் சகல தரப்பினரதும் எதிர்பார்ப்பாகும்.

அதனால் திரு. சரா புவனேஸ்வரனின் பணிப் பயணம் கவனம் மிக்கதாகவும் சமூகப் பொறுப்பு மிக்கதாகவும் அமையவேண்டியதாகிறது. அவ்வாறே இருக்கிறது என்றும் நம்புகின்றேன். சிறுவர்களுக்கு என்றைக்குமே மறுக்கப்படமுடியாத கல்வி உரிமையை உறுதிப்படுத்துவதில் ஆசிரியர் சமூகத்தின் பூரணமான பங்களிப்பு அவசியமானது. அவ்வாசிரியர் சமூகத்தின் தொழில் உரிமைகள் நிலை நிறுத்தப்படுதல் என்பதற்கும் சிறுவர்களின் கல்வி உரிமைக்கும் இணைபிரியாத தொடர்பு இருக்கிறது. கற்பிக்கும் ஆசிரியர்களின் உரிமைகளையும் கற்கும் சிறுவர்களின் (மாணவர்களின்) உரிமை களையும் சமமாக ஒருசேர சிந்திக்கின்ற திரு. சரா. புவனேஸ்வரன் போன்ற ஒரு தொழிற்சங்கவாதிக்கு - அவரது பொன்விழா நாளில் இதய பூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பேருவகை அடைகின்றேன்.

**செ. சந்திரராஜா**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்

# கல்விப்பணி தொடர வாழ்த்துகின்றேன்



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளரும், கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களின் பொன் விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வி எனும் பெருங்கடலில் நீந்திக் கரைசேரத் தத்தளிக்கும் மாணவர்களுக் குத் தகுந்தமுறையில் கல்வி புகட்டும் ஆசிரியப் பெருந்தகைகளை வழிப்படுத்தும் சேவைப் பொதுநோக்குக் கொண்ட சரா அவர்கள் மிகவும் உன்னதமான சேவை யாளன் அதுமட்டுமன்றி, இலங்கை தமிழர் ஆசிரிய சங்கத்தின் பொதுச் செயலாளராகச் சிறப்புப் பணியாற்றி தமிழ் ஆசிரியர்களுக்கான சேவைத் தேவைகளை நிறைவேற்றித் தமிழ் ஆசிரியர் மனங்களில் பதிந்தவர்.

கல்விப் பணி மேன்மையானதும், உயர்வானதுமாகும். அத்தகைய கல்விப் பணிக்குச் சேவையாற்றும் கல்வியாளர்கள் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லக் கூடியவர்கள் அல்லர். அவர்களின் பணி என்றென்றும் நல்லவர் மனங்களில் நிலைத்திருப்பதாகும். அத்தகையதொரு பணியாளனாகவே திரு. சரா அவர்களை நான் பார்க்கின்றேன். அத்தகைய சேவையாளர்களின் சேவையை மதித்துப் போற்றும் சமூக மனப்பான்மையை நான் மிகவும் போற்றுகின்றேன்.

அப்பணியாளர்களின் பணியை பதிந்து வைக்கும் கைங்கரியமே மலர் வெளியீடாகும். பொன்விழாச் சிறப்பு மலரை வெளியிட்டு கல்வியியலாளர்களை வாழ்த்தும் மலர்க் குழுவினரை நான் வாழ்த்துவதோடு திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களின் கல்விப் பணி மேலும் தொடர இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**சு. கிருஸ்ணகுமார்**
வலயக் கல்விப்பணிப்பாளர்,
தென்மராட்சி



# இலக்கை நோக்கி சிறப்பாக நகர வாழ்த்துகின்றேன்

அகவை ஐம்பது கண்டு விளங்கும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கௌரவ பொதுச்செயலாளரும், விரிவுரையாளருமாகிய சரா புவனேஸ்வரன் அவர்களின் பொன்விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

சாதாரண ஓர் ஆசிரியராய் தன் சேவைப்பயணத்தை ஆரம்பித்த இவர் விரிவுரையாளராகி இன்று ஆசிரிய சமூகத்தின் முக்கியத்துவம்வாய்ந்ததாக திகழுகின் றமை கண்டு மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

திறமை, துணிவு என்பவற்றை தனது அணிகலன்களாகக் கொண்டு செயற் படும் இவர் பாடசாலைகள், கல்விச்சாலைகளில் மட்டுமல்லாமல் பிரத்தியேக கல்வி நிறுவனங்களிலும் முனைப்புடன் செயற்பட்டு, அவற்றை மேம்படுத்த உழைத்து வருவதைக் காண்கின்றேன்.

“இன்று கல்வி முறைமையில் பல்வேறு இலக்குகளையும் பாடசாலை என்ற நிறுவனத்தின் ஊடாக நிறைவேற்ற வேண்டும் என்ற எதிர்பார்ப்புண்டு. காலத்துக்கேற்ப கல்வி இலக்குகளில் மாற்றம் ஏற்படும்போது அவற்றை நிறைவு செய்யும் நோக்கில் பாடசாலைச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் பாரிய பொறுப்பை ஆசிரியர்களே ஏற்றுக்கொள்ள வேண்டி உள்ளது.

புதிய நூற்றாண்டில் நிகழ்ந்துவரும் புதிய மாற்றங்களுக்கு அறிவும் தொழில்நுட்ப விருத்தியும் அடிப்படையாக உள்ளன. இவற்றை உள்வாங்கிக் கொண்டு நடைமுறைப்படுத்தும் ஆற்றல் ஒரு சில உயர் சேவையாளர்களுக்கு மட்டுமே உண்டு. ஆசிரியத் தொழில் புதுமையும் ஆக்கத்திறனும் கொண்ட பிரசைகளை உருவாக்கு வதில் முக்கியத்துவம் வாய்ந்த தொழிலாக இருப்பதனால் அத்தொழில் ஓர் உயர் தொழிலுக்குரிய பண்புகளுடன் கூடியதாக மாற்றம்பெற வேண்டிய தேவை உள்ளது.”

இவ் இலக்குகளுடன் தன் செயற்பாடுகளை நகர்த்திச்செல்வதில் முனைப் புடன் இவர் செயற்பட்டு வருவதனைக் காண்கின்றேன்.

இலங்கையின் தமிழ்க் கல்விச் சமூகத்திற்கு முக்கியமான ஒரு தொழிற்சங்க வாதியாக நின்று தொடர்ந்து தன் இலக்கை நோக்கி சிறப்பாக பணியாற்றும் சரா புவனேஸ்வரன் அவர்களின் பொன்விழாமலர் சிறக்க வாழ்த்துகின்றேன்.

**ஜோண் குயின்ரஸ்**
வலயக் கல்விப்பணிப்பாளர்
தீவக வலயம்.



# பொன்விழா நாயகனை வாழ்த்துகின்றேன்

திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் (சரா) சின்னப் பையன் போன்ற துடிதுடிப்பானவன். அவனுக்கு அகவை ஐம்பது. அவற்றில் அவன் சாதித்தவை, அடைந்து கொண்ட வெற்றிகள் மிக மிக அதிகம். அனைத்தும் அவனை நம்பிய ஆசிரிய பெருந்தகைகளுக்காகவும், வடக்கு மற்றும் கிழக்கு மாணவர்களின் நலனுக்காகவும், கல்வி அபிவிருத்திக்காகவும் அவன் மேற்கொண்ட அர்ப்பணிப்பான சேவைகளுக்காகவும் கிடைத்தவையாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண கல்வித்துறையில் எங்கு சிறுசிறு சலசலப்புக் கள் ஏற்பட்டாலும் துணிந்து அவற்றுக்காக குரல் கொடுக்கும் அஞ்சா நெஞ்சினனாக அவன் விளங்குகின்றான்.

அனைத்துக்கும் மேலாக, கொள்கைப்பிடிப்புக் கொண்டவனாகவும் கொள்கை களுக்கெல்லாம் அப்பால் நல்ல நண்பனாக விளங்குபவன் சரா. அதனால்தான் அவன் தீர்மானங்கள் எடுக்கும் முன்னர் அறிவுடையோருடனும், அனுபவமுடையோருடனும் கலந்துரையாடிப் பணி முடித்திருப்பான். அது அவனது வெற்றிப் பயணத்துக்கு நல்ல உதாரணம்.

ஓயாத உழைப்பின் காரணமாக அவன் அண்மைய நாட்களில் சற்று நோயுற்ற போது சிகிச்சை பெறும்படி ஆலோசனை வழங்கப்பட்ட போதும் "எங்கே சேர் நேரம்" என செல்லமாக மறுத்து தன் சேவையைத் தொடர்ந்து செய்யும் நற் பண்பாளன்.

அகவை ஐம்பதில் சிறப்புற வாழ்த்துவதுடன் நீண்ட, நீடிய ஆயுளை அவன் பெற்றிட எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**திரு. ஏ. ஜே. குரூஸ்**
வலயக் கல்விப்பணிப்பாளர்,
மடுக்கல்வி வலயம்.



# வாழ்த்துச் செய்தி

திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்கள் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டமை உண்மையில் தமிழ் ஆசிரியர் சமூகத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகும். 50வது அகவை நிறைவை முன்னிட்டு வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் பெரு மகிழ்வு கொள்கின்றேன். தான் இப்பொறுப்பையேற்று குறுகிய காலத்திற்குள் ஆசிரியர் சமூகத்தினதும், கல்வியுடன் தொடர்புடைய ஏனையவர்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளமை அவரின் உண்மையான சேவைக்குக் கிடைத்த பெரும் பலனாகும். "கடமையை செய் பலனை எதிர்பாராதே" என்ற பொன்மொழிக்கிணங்க தனது பணியை செவ்வனே நிறைவேற்றிவரும் "சரா" என அழைக்கப்படும் திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் தமிழ் சமூகத்திற்கு ஒரு சொத்தாகும். அன்னாரின் பணி சிறக்கவும், அவரின் வாழ்க்கை சிறக்கவும், எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அவரது குடும்பத்தினருக்கும் இந்த சமூகத்திற்கும் சேவை செய்ய "சரா" அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்து வருகின்ற மைக்கு நாங்கள் கல்விச் சமூகம் மிகவும் நன்றிக்கடன் கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

எனது மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**A. விஜயானந்தமூர்த்தி,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்
மூதூர்.



# வலயக்கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளரும், கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் விரிவுரையாளரும், எமது மண்ணின் மைந்தனுமாகிய திரு.சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களது 50வது அகவை நிறைவினை சீரும் சிறப் புடனும் அவரது குடும்பத்தாருடன் கொண்டாடி மகிழப்பிரார்த்திப்பதோடு, அவரது கல்வி சார் பணி ஆசிரிய கல்லூரியிலும், நாடளாவிய ரீதியிலும் தொடர்வதற்கும், அதன் மூலம் நீதி நியாயம் நிலைக்கவேண்டுமென்றும் அதற்காக அவர் நீடுழிகாலம் வாழ இறைவனது ஆசியும் எம்மனைவரது ஆசியும் என்றும் உரித்தாகட்டும்!

எனது தனிப்பட்ட பார்வையில் எனக்கு நல்ல ஆலோசகனாக, பாடசாலை மாணவர்களுக்கு நல்ல ஆசிரியனாக, ஆசிரியர் கல்லூரி பயிலுநர்களுக்கு நல்ல வழிகாட்டியாக பலதரப்பட்ட சமூகப் பொறுப்புடன் இயங்கும் திரு. சரா புவனேஸ்வரன் அவர்களது சமூகப் பணி எவ்வித தடைகளுமின்றி தொடரவும் அவரது வாழ்க்கை பிரகாசம் நிறைந்ததாகவும் மிளிர எனது வாழ்த்துக்களும் வேண்டுதல்களும் உரித்தா கட்டும்!

நன்றி

**என். விஜேந்திரன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
திருகோணமலை.



# மதிநுட்பமும் மனித நேயமும் கொண்ட செயல் வீரன்

திரு. சரா புவனேஸ்வரன் அவர்களது ஐம்பதாவது அகவை நிறைவடைகின்றவேளை அவரது அபிமானிகளால் வெளியிடப்படுகின்ற சராவின் சிறப்புக்களை உள்ளடக்கிய இனிய நன்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த ஆனந்தமடைகின்றேன்.

1991ஆம் ஆண்டு எனது ஆசிரிய கலாசாலைப் பணி ஆரம்பமான போது குருபக்தி நிறைந்த பண்பான, நேர்மையான, இளந்துடிதுடிப்பான அராஜகங்களைக் கண்டு வெதும்புகின்ற, கடின உழைப்புக்களை வெளிக்காட்டுகின்ற நல்லாசிரிய மாணவனாக சராவைக் கண்டேன். அன்று அவர் என்மீது கொண்ட விசுவாசமான குரு சீடர் உறவு ஆரோக்கியமாக தொடர்கின்றமை மிகவும் மகிழ்ச்சிக்குரியது. ஆசிரிய பயிற்சியின் பின்னர் யாழ். பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி சார்ந்த டிப்ளோமா நெறியினையும் பூர்த்தி செய்து யாழ். மத்திய கல்லூரியில் ஆசிரியப் பணியில் கொடிகட்டிப் பறந்த சராவை 2001ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் தேசிய கல்விக் கல்லூரியில் ஓர் உடற்கல்வி விரிவுரையாளராக மத்திய கல்வி அமைச்சினால் தெரிவு செய்வதற்கு பக்கபலமாக இருந்தேன். அங்கு சிறப்பாக செயற்பட்ட சராவின் சேவை கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு அதிஷ்டவசமாகக் கிடைத்தது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இவரது பங்கும் பணியும் மிகவும் மகத்தானது. ஆசிரிய மாணவர்களது தொழில்சார் விருத்தியில், பயிற்சிக் கூற்றில் சிறப்பாக கலாசாலை வளங்களை நவீனமயப்படுத்தும் வகையில் தனது சொந்த நிதியைக் கூட செலவிட்ட பெருந்தகையாளரா வார். ஆசிரியர்களுக்கு வினைத்திறன் கொண்ட பயிற்சிகள் வழங்க வேண்டும், அவர்களது ஒழுக்கம், செயற்பாடுகள் யாவும் யாவர்க்கும் முன்மாதிரியாக அமையப்பெற்று தலைசிறந்த ஆசிரியர்களாக வகுப்பறைகளில் இரு வழிச் செயற்பாடுகளை நிலைநாட்ட வேண்டுமென் கின்ற தீவிர எண்ணங்கொண்டவர். கண்டிக்க வேண்டியவற்றை அர்த்தமுடன் கண்டிப்பதுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது மனிதநேயப் பண்புகளை அவர் வெளிக்காட்டத் தவறியதில்லை. இவரை கலாசாலையின் அரிய சொத்தாக நான் பார்ப்பது மட்டுமல்லாது காலத்துக்குக் காலம் கலாசாலை அன்னைக்கு அவர் ஆற்றும் நற்சேவைகளை நன்றியுடன் நினைவுகூருகின்றேன்.

தற்போது ஏறத்தாழ 25000 ஆசிரியர்களை அங்கத்துவமாகக் கொண்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் பணியை ஏற்றிருக்கின்றார். காரியங்களை செவ்வனே நிறைவேற்றக் கூடிய மதிநுட்பம் வாய்ந்த ஓர் பொதுச்செயலாளர், எங்கள் கலாசாலை மூத்தவிரிவுரையாளர், எனது மாணவன் என்று கூறுவதில் பெருமையடை கின்றேன்.

சராவுக்கும் எனக்கும் இடையேயான உறவு இறைசக்தியால் உருவானது. இன்று அரைச்சதம் கடந்த சரா நிச்சயம் முழுச்சதம் கடப்பார். இவரது பெருமைகளுக்கெல்லாம் உரிமை பெறக்கூடிய வகையில் செயற்படும் திருமதி வசந்தினி புவனேஸ்வரன் அவர்களையும் பாராட்டிக் கொள்கின்றேன். இவர் குடும்பம் சீருஞ்சிறப்பும் பெற்று பாரினில் ஓங்கிட இறையாசி வேண்டிக் கொள்கின்றேன்.

**திரு. வே.கா. கணபதிப்பிள்ளை**
அதிபர்,
ஆசிரிய கலாசாலை, கோப்பாய்.



# நெருங்கிய நண்பனும் தோழனும்

திரு சரா புவனேஸ்வரன் அவர்களுக்கு பொன் விழா எடுக்கப்படுவதை அறிந்து மிக மகிழ்ச்சியடைந்தேன். திரு சரா புவனேஸ்வரன் அவர்களை 1999ம் ஆண்டில் இருந்து எனக்கு நன்றாகத் தெரியும். அன்று தொட்டு இன்றுவரை மிக நெருங்கிய நண்பனாக இருந்து வரும் சரா அவர்கள் பொது நல சமூக சேவைகளில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி வந்துள்ளார்.

**திறமையான ஒழுங்கமைப்பாளர்**

எந்த ஒரு விடயத்தையும், கூட்டங்களாயினும், விழாக்களாயினும், தொழிலுறவுப் பிரச்சினைகளாயினும் சரி, பொறுப்பெடுத்து எவ்வித சிக்கலுமில்லாது கச்சிதமாக உரியநேரத்தில் ஒழுங்கு செய்து சிறப்பாக முடித்துவைக்கும் தனியாள் திறமை அவருக்கே உரியது. இரவு பகல் பாராது, குறித்த நோக்கை அடையும்வரை சளைக்காமல் போராடும் தன்மை யாவராலும் போற்றப்படுகின்றமை கண்டு அகமகிழ்ச்சி அடைந்துள்ளேன். கூட்டங்களாயினும், விழாக்களாயினும், தொழிலுறவுப் பிரச்சினைகளாயினும் ஒழுங்குபடுத்தலின் போது நிதிப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தனது சொந்த நிதியை உடனடியாகச் செலுத்தி விடயங்களை முடிக்கும் தன்மையில், அவருக்கு நிகர் அவரே. இதனால் பொது விடயங்களுக்காக அவரது சொந்தப் பொருளாதாரம் கரைந்து செல்கின்றமையை நான் அறிவேன்.

**தொழிற் சங்கத்தில் சேவையும், தலைமைத்துவப் பண்பும்**

என்னுடனும், என் இனிய நண்பன் அமரர் த. பஞ்சலிங்கத்துடனும் இணைந்து தொழிற்சங்கப் பணியாற்றியுள்ளார். போர் உச்சமாக நடந்து கொண்ட தசாப்தத்திலேயே சராவுடன் தொழிற் சங்கப் பணியாற்றினோம். தொழிற் சங்கப் போராட்டங்களை வெற்றிகரமாக நடாத்தி முடிக்க வெளிப்படையாக முன்நின்று உழைத்த முக்கிய முன்னணித் தலைவர்களில் சராவும் ஒருவர். இப்போராட்டக் காலங்களில் உண்மையான உள்உணர்வுடன் இரவு பகலாக அடிமட்டத் தொண்டனாக செயற்பட்டவர் சரா. இது சங்க வரலாற்றிலும் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டிய விடயமாகும். இதனாலேயே கடந்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க மாநாட்டில் சங்கத்தின் பொதுச் செயலாளராக போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வரலாற்றில் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியின்றிப் தெரிவு செய்யப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். எனவே தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வரலாற்று நாயகர்களில் ஒருவர் சரா என்பது வெளிப்படை.

போர் முடிந்தாலும் நாட்டின் தேசிய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும், குறிப்பாக வடக்கு கிழக்கில் ஆட்சி ஜனநாயகத் தன்மையற்றும், மனித உரிமைகள் தொழிற்சங்க உரிமைகள் மீறப்பட்டும் நடைபெறுகின்றமை உலகறிந்த விடயம். இச்சூழலில் தொழிற்சங்க ரீதியாக அறுவடை செய்வதென்பது கல்லில் நார் உரிப்பது போலாகும். எனினும் சரா சாணக்கியமாக பல சாதனைகளைப் புரிந்துள்ளார் என்று தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். அவரது தொழிற் சங்கப் பணி, பொதுப்பணி வெற்றிபெற்று சாதனை படைக்க வாழ்த்துகின்றேன். எனது சொந்தத் தேவைகளின் நிமித்தம் விழாவில் கலந்து கொள்ள முடியாமைக்காக மிகவும் வருந்துகின்றேன். பொன் விழா எடுக்கும் அன்பர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, பொன் விழா சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

**த. மகாசிவம்**
சார்க் பிராந்திய ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் துணைத் தலைவரும்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதம ஆலோசகரும்.

50 Years Golden Jubilee

# கல்வி உலகுக்கோர் கலங்கரை விளக்கு



ஈழத்திலே அறிவுள்ள, ஆற்றலுள்ள, ஆரோக்கியமுள்ள, சிறந்த நற்பண்பு களையுடைய நாளைய தலைவர்களை உருவாக்கும் ஓர் நல்லாசிரியராக, விரிவுரை யாளராக, ஆசிரியர் சங்கச் செயலாளராக, வெற்றித்தேர்வாளராக பல்துறை வளர்ச்சிப் படிகளில் படிப்படியாக முன்னேறி இன்று கல்வி உலகின் கலங்கரை விளக்காக சுடர்விடும் வெற்றிநாயகன் திரு. சரா புவனேஸ்வரன் அவர்கட்கு பொன்விழா எடுத்து மலர் வெளியீடு செய்வது பொருத்தமானதும், பாராட்டப்பட வேண்டியதுமாகும்.

பரந்துபட்ட கல்வி உலகிற்கு வீரியமான விருட்சங்களை உருவாக்க ஆரம்பத்திலே சிறந்த நல்வித்துக்களைத் தெரிவுசெய்வதற்காக அர்ப்பணிப்புடன் செயல்படும் தீர்க்கதரிசி. மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் உயர்வான இலக்கினை எட்டிட தனக்கே உரித்தான பாணியில் சாதனை படைக்கும் ஓர் சாதனையாளன். புத்தகங்களால் வித்தகர்களை உருவாக்கும் சிந்தனையாளன். சமூகப் பணிகளையும் பல முன்னேற்றமான வேலைத் திட்டங்களையும் முன்னெடுத் துச் செயல்படுத்தும் செயல்வீரன். பல்துறைசார் அரச, தனியார் விற்பன்னர்களை உருவாக்கிய சிற்பி.

50 ஆண்டுகால வளர்ச்சிப் பாதையைக் கடந்து கால்பதிக்கும் பல்துறைசார் ஆளுமை கொண்ட கல்வி ஆசான் நீடூழி காலம் சிறப்புடன் வாழ்ந்து மென்மேலும் பல பதவிகள், பட்டங்கள் பெற்று கல்வி உலகிற்கு பெருமை சேர்க்கவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். பொன்விழா ஆண்டினையிட்டு வெளியிடப்படும் பொன்விழா மலர் வெளியீடும், பொன்விழா சிறப்பு நிகழ்வுகளும் சிறப்புற வாழ்த்து கின்றேன். இதற்காக உழைத்த அனைவருக்கும் எனது உளங்கனிந்த வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. வீ. மகாலிங்கம்**
முகாமைப்பணிப்பாளர்,
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.



# அகவை 50இல்
# அகம் மகிழ்ந்த வாழ்த்து



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச்செயலாளரும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் சிரேஸ்ட விரிவுரையாளருமாகிய எனது நண்பர் சரா புவனேஸ்வரன் அவர்கள் 50வது அகவையில் தடம்பதிக்கும் இந்த மகிழ்ச்சியான, இனிமையான நாளில் எனது அகம் மகிழ்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள் வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மிகநீண்ட தொழிற்சங்க வரலாற்றைக் கொண்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வளர்ச்சிப் போக்கில் நெருக்கடியான ஒரு சந்தர்ப்பத்தில் காலத்தின் தேவைகருதி சங்கத்தின் பிரதானமான பொதுச்செயலாளர் பதவியை துணிவுடன் ஏற்று சங்கத்தை வழிநடத்துவது போற்றுதற்குரியது. பாரம்பரியமாக எமது தமிழ் ஆசிரியர்களின் உரிமைக்காக போராடிய சங்கம் தனது தனித்துவத்தை இழக்காமல், யாரிடமும் சரணாகதி அடையாமல் ஆசிரியர்களின் நலனுக்காக உவந்தளித்த அந்தப் பணி தொடர வேண்டும்.

"சிறுமை கண்டு பொங்கும் குணம்" ஆசிரியர்களின் உரிமைக்காகப் போராடும் தீரம், தவறினை தவறென சுட்டிக்காட்டும் நக்கிரத் தனம், நேர்மைக்கும் உண்மைக்கும் தலைவணங்கும் பக்குவம், உரிமைகளை வென்றெடுப்பதற்கான தந்திரோபாய அணுகுமுறை "சரா"வின் அடையாளங்களாகும்.

"போற்றுபவன் போற்றட்டும் தூற்றுபவன் தூற்றட்டும் தொடர்ந்து செல்மின் ஏற்றமிகு இலட்சியத்தின் எல்லை நோக்கி" என்ற கூற்றுக்கு அமைய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் இலட்சியக் கனவுகள் நனவாவதற்கு துணிச்சலுடன் பயணிக்க வாழ்த்துகின்றேன்.

தோழமையுடன்
**பொன்னம்பலம் அருணகிரிநாதன்**
B.A (Hons), Dip-in Ed, M.Ed. SLPS. I, SLEAS III, J.P
பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்.





# பொன்விழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்!

கல்விப் பணியில் அயராது பாடுபடும் பொன்விழா நாயகன் திரு. சரா புவனேஸ்வரன் அவர்கள் அகவை ஐம்பதைப் பூர்த்தி செய்யும் இவ்வேளையில், அவரது ஆரோக்கியமான நல்வாழ்வுக்காக எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கிறேன்.

ஆசிரியர் சேவையில் இணைந்து எமது தமிழ் மாணவர் சமுதாயத்திற்கும், இலங்கைத் திருநாட்டின் கல்வித் துறைக்கும் தனது இளமைக்காலம் முதல் அவர் சேவை நல்கி வருகிறார். பின்னர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரை யாளராகினார். ஆசிரிய சேவையில் இருந்தபோதும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இணைந்தபோதும் தனது இளமைக்காலம் முதல் ஆசிரியர்களின் தொழில் உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்படவேண்டும் என்பதிலும் மாணவர்களின் கல்வி உரிமைகள் நிலைநிறுத்தப்படவேண்டும் என்பதிலும் உறுதியாக இருப்பவர். தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மாபெரும் தூணாக நின்று செயற்படுபவர். மிகப் பிரதானமான தொழிற்சங்கங்களில் ஒன்றான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உயிர்த்துடிப்புள்ள தொழிற்சங்கவாதி சரா புவனேஸ்வரன் அவர்களை அவரது பொன்விழாவில் வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**பொ. ரவிச்சந்திரன்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(கல்வி நிர்வாகம்)
வலிகாமம் கல்வி வலயம்.



# வாழ்த்துச் செய்தி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளராகத் திகழ்ந்து ஆசிரிய சமூகத்திற்காக அன்று தொட்டு இன்றுவரை அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்ற தொழிற்சங்கவாதி திரு. சரா புவனேஸ்வரன் அவர்களின் பொன்விழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் பேரானந்தம் அடைகின்றேன்.

தோழமையும், ஆளுமையும் மிக்க திரு. சரா அவர்கள் ஆசிரியர்கள் தொடர்பாக எழுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து அவற்றினைத் தீர்த்துவைப்பதில் மிகவும் கரிசனையுடையவராக விளங்குகின்றார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எடுத்துக் கொண்ட விடயத்தில் பின்வாங்காது செயற்படுகின்ற இவரது சேவை ஆசிரிய சமூகத்திற்கு அதிகபலமாக உள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உயரிய கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் இவரின் பங்களிப்பு அளப்பெரியது. சங்கத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்குமாக இவர் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே. பலதரப்பட்ட வேலைப்பளுக்களின் மத்தியிலும் ஆசிரியர்களின் உரிமைகள் தொடர்பில் மிகவும் அக்கறையுடன் குரல் கொடுப்பதில் எப்போதும் இவர் பின்னின்றதில்லை. மாணவர் கல்வி, ஆசிரிய இடமாற்றம், ஆசிரிய வளப்பகிர்வு போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

மேலும் பாடசாலைகளில் நிலவுகின்ற பல்வேறு தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் தனது கவனத்தைச் செலுத்துவதில் கண்ணுங்கருத்துமுடையவராக விளங்குகின்றார்.

பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்களின் நல்லுறவைப் பேணுவதிலும் மாணவர்கள் தொடர்பாக எழுகின்ற பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும் இவர் ஈடுபட்டுள்ளார். தன்னலமற்ற தொழிற்சங்கவாதியாகிய திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் பணிகளுக்கு எல்லையிடமுடியாது. துணிவும், பணிவும்மிக்க இவர் இன்னும் பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழவும் இம்மலர் சிறக்கவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

என்றும் உங்கள் அன்பன்
P.N. சுதர்சன்
கௌரவ அமைச்சரின்
பாராளுமன்ற செயலாளர்



# வாழ்த்துச்செய்தி

ஆசிரியர் திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களிற்கு ஐம்பதாவது ஆண்டு பூர்த்தி விழாவான பொன்விழாவைக் கொண்டாடுவதையிட்டு அகமிக மகிழ்ச்சியடை கிறேன்.

1983, 84ஆம் ஆண்டுகளில் சம்பூர் மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரத்தில் என்னிடம் கல்வி பயின்ற இவர் கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டுத்துறையிலும், கலைத்துறையிலும், சமய நடவடிக்கைகளிலும், சமூகப் பணியிலும் சிறந்து விளங்கியவர் என்பதை நான் நன்கறிவேன்.

இவர் ஆசிரியராகிப் பின் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகி இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளராக உயர்ந்து நிற்பதைக் கண்டு உள்ளம் பூரித்து நிற்கின்றேன்.

எவரிடத்தும் காணப்படாத சிறந்த பண்பாக இச்சந்தர்ப்பத்தில் கூறக்கூடிய விடயம் தனக்கு கல்விகற்ற குருவை மதித்தலும் மறவாமையும் ஆகும். ஆண்டாண்டு தோறும் நடைபெறும் ஆசிரியர் தினத்தில் தனது அனைத்து வேலைகளையும் பொருட்படுத்தாது நான் எங்கிருந்தாலும் அங்கு வந்து மலர்மாலை அணிவித்து, பரிசுப்பொருள் தந்து, அஸ்டாங்கமாக வீழ்ந்து வணங்கி ஆசிபெற்றுச் செல்வார். இத்தகைய செயற்பாடுதான் அவரை இந்நிலைக்கு ஆக்கியதோ என நினைப்பதுண்டு. அத்துடன் என்னை அவர் ஒரு தந்தையாகவும் கருதி நடப்பது எனக்கு மிக்க மகிழ்ச்சியானதொன்றாகும்.

நல்ல துணைவியாரைப் பெற்றதுடன் சிறந்த மக்கட் செல்வங்களையும் பெற்று இனிது இல்லறம் நடத்தும் "சரா" அவர்கள் தூங்காமை, துணிவுடைமை கொண்டு எக்காரியத்தையும் இலகுவில் செய்து முடிப்பவர்; அன்பும் அறனும் உடையவர். எவரையும் கவர்ந்திழுக்கும் பேச்சுவன்மை உடையவர்; உள்ளத்தால் பொய்யாது ஒழுகுவதனால் எல்லோரது உள்ளங்களிலும் நிறைந்திருப்பவர்.

இவ்வாறு சகலகலா வல்லவனாக விளங்கும் "சரா" அவர்கள் எதிர்காலத்தில் எல்லாச் சிறப்பும் பெற்று, சமூகத்தில் உயர்நிலை கண்டு, நூறாண்டு காலம் வாழ்க வாழ்கவென எல்லாம்வல்ல நல்லை முருகனைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.


சராவின் ஆசான்

**இமா. சிவசுப்பிரமணியம்**

271/6, நாவலர் ஒழுங்கை,

ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்.



# நல் வழிகாட்டியாக மிளிர வாழ்த்துகின்றேன்

எனது முதல் மாணவனும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை சிரேஸ்ர விரிவுரை யாளரும் இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க பொதுச் செயலாளருமாகிய சரா புவனேஸ்வரனின் பொன்விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன் உள்ள என் இனிய நினைவுகளை மீட்டுப் பார்க்கின்றேன். திருகோணமலை மாவட்டம் மூதூர் தொகுதி, சம்பூர் கிராமத்திற்கு ஆசிரிய நியமனம் கிடைத்து 15.02.1982 பாடசாலையை தரிசித்தவேளை க.பொ.த உயர்தர அங்குரார்ப்பணம் மூதூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் சம்பிரதாய பூர்வமாக வகுப்புக்களை ஆரம்பித்து வைத் தார். அப்போது க.பொ.த. உயர்தர வகுப்புக்குரிய மாணவர்களில் ஒருவராகவும், 1984இல் க.பொ.த. உயர்தரப் பரீட்சை எடுத்த நவரத்தினங்களில் ஒருவராகவும், துடிப்புள்ள இளைஞ னாக எதனையும் சாதிக்கும் வல்லமை கொண்டவராகவும், முயற்சி உடையவராகவும் எவ் வேளையிலும் ஓய்வின்றி உழைக்கும் ஆற்றல்மிக்கவராகவும் ஆசிரியர்களைப் பணிந்து சிறப் பாக யாழ்ப்பாணத்து ஆசிரியர்களுக்கு தனித்துவமாக மதிப்பு, மரியாதையை வெளிப்படுத்தி அதனூடாக தமக்கு வேண்டிய அறிவுத்திறனைப் பெற்றுக்கொண்டவர். நான் அவர் தம் சகோதரருக்கும் வழங்கிய உறுமொழியை வெற்றியாக்கி அவர்கள் முன் தலைநிமிர்ந்து நிற்ப தற்கும் எனது ஆசிரியத் தொழிலை தொடர்ந்து பயனுள்ளதும் பெறுமதி கொண்டதாகவும் அமைத்துக்கொள்வதற்குரிய காரணகர்த்தாவாக விளங்கியவர். குருவின் மீது ஒரு மாணவன் எவ்வளவு மரியாதை கொள்ள வேண்டும் என்பதற்கு இலக்கணமான சரா இன்றுவரை ஒவ் வொரு வருடமும் ஆசிரிய தினத்தன்று பாடசாலைக்கோ, வீட்டிற்கோ தேடி வந்து மாலை அணி வித்து பரிசுப்பொருள் வழங்கி ஆசிபெறும் முதல்நிலைப்பட்ட மாணவராக திகழ்கின்றார்.

2009ஆம் ஆண்டு வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் உரும்பிராயில் இயங்கிய போது சற்றும் எதிர்பாராதவேளை காலை 8 மணிக்கு தேடிவந்து வேலை நிமிர்த்தம் உடன் செல்லவேண்டும் எனக் கூறி அனைத்து மாணவர்களும் ஆசிரியர்களும் பார்த்து நிற்க மாலை அணிவித்து பரிசுப்பொருள் வழங்கி நிலத்தில் வீழ்ந்து பாதங்களைத் தொட்டு வணங்கி ஆசி பெற்ற நாள் என் வாழ்வில் என்றுமே மறக்கமுடியாததாகும். இச்செயல் தற்கால சூழலில் ஏனைய மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமைவதாகும். ஓர் ஆசிரியர் ஏணியாக செயல் படும்போது துணிந்து அவர் காட்டிய வழியில் சென்று அதில் ஏறி உயர்நிலை பெற்று இன்று ஆசிரிய கலாசாலை விரிவுரையாளராகி, இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச்செயலாளராக மிளிர்ந்து, ஆசிரியர்கள் படும் துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து அவர்களின் வாழ்வு சிறக்க நல்வழி காட்டுவதுடன் எமது தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட் டுக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்து சேவை புரியும் மாணவன் சரா உலகப்பொது மறையாம் திருவள்ளுவரின் திருக்குறளில் கூறப்பட்ட

**“ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்”** என்ற கூற்றுக்கேற்ப இன்று நாம் பூரிப்படையும் வகையில் ஒரு நிறுவனத்தை நடாத்தி அதனூடாக மாணவர்களின் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுத் திறன்கள் பேணி ஒழுக்கமுள்ள சமுதாயத்தை வழிப்படுத்துவதுடன் அவர்களை கலங்கரை விளக்குகள் போல திகழ வைக்கும் ஆசிரியர் கூட்டத்திற்கு நல்வழி காட்டுபவராக வும் மிளிர்வது எம்மைப் போன்ற ஆசான்கள் பெற்ற பெரும் பேறாகும். அவர் மேலும் தம் பணியில் சிறந்து எம் மண்ணில் நாம் தலைநிமிர்ந்து வாழ நல்வழிகாட்டியாக மிளிர வேண்டும். அதற்கு எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு. சி. சோதிலிங்கம்**
பிரதி அதிபர் யா/ வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்



# வாழ்த்துச்செய்தி

தம்பி சரா என அழைக்கப்படும் சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களுக்கு பொன்விழா எடுப்பதை அறிந்ததும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

சரா அவர்கள் இற்றைக்கு 30 வருட காலத்திற்கு மேலாக நான் அறிந்த நல்ல ஆசான்; நண்பன்; நிர்வாகி; விரிவுரையாளர். நல்லூர் சயன்ஸ் அக்கடமியினை நான் நடாத்தி வந்த காலத்தில் எனது நிறுவனத்தில் நேர்மையோடு பணிபுரிந்த சிறந்த ஆசான். 1995ஆம் ஆண்டளவில் தம்பி சராவினுடைய திறமையினை செயற்பாட்டிற்கூடாகக் கண்டு கொண்டேன். சயன்ஸ் அக்கடமியை ஒரு சிறந்த நபரிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் காத்திருந்தவேளையில் முருகப்பெருமானின் ஆசியுடன் தம்பி சராவிடம் மனமகிழ்ச்சியுடன் ஒப்படைத்தேன்.

பொன்விழா நாயகனது கட்டுப்பாடான, இறுக்கமான பண்பினால் நிறுவனம் இன்று தலைநிமிர்ந்து நிற்பதனைப் பார்த்து மனநிறைவடைகின்றேன். எல்லாத் திறமையும் எல்லோருக்கும் வந்து வாய்ப்பதில்லை. அதை இறைவன் கொடுப்பதுமில்லை. ஆனால், தம்பி சராவுக்குக் கிடைத்திருப்பது சிறந்த கொடையேயாகும். எடுத்த காரியத்தை இனிதே நிறைவுசெய்யும் ஒரு செயல்வீரன் என்பது கண்கூடு.

தனது குடும்ப அங்கத்தவர்கள் போன்றே நண்பர்களுக்காகவும், தெரியாத முகங்களுக்காகவும் உதவிக்கரம் நீட்டும் நல்ல மனிதனாகிய தம்பி சரா, கல்வியினை மட்டும் தமது சேவையாகக் கொள்ளாது பெற்றோரை இழந்த, வறுமைப்பட்ட மாணவர்களுக்கு இலவசக்கல்வி வழங்குவதிலும், இயற்கை, செயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட தமிழ் உறவுகளுக்கான நிவாரணப்பணி ஆற்றுவதிலும் என்றும் பின்னிற்பதில்லை. எல்லோரிடத்திலும் சகஜமாகப் பழகும் திறன், உதவிசெய்யும் மனப்பாங்கு என்ற காரணத்தினாலே இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் பதவி தேடி வந்தது. தமிழ் ஆசிரியர்களது நலனுக்காக எந்நேரத்திலும் தன்னை அர்ப்பணிப்புச் செய்து துணிவு, நேர்மை, திறமை, இரக்கம், கண்டிப்பான கோபம் என்பவற்றோடு பணியாற்றும் இவரது சேவை மேலும் பெருகி தமிழ் உறவுகளுக்குச் சென்றடைய நீண்ட ஆயுளைப் பெற்று தமது குடும்பத்தினருடன் சீரும் சிறப்புடன் வாழவும் பொன்விழா மலர் மெருகுபெறவும் மனமார வாழ்த்துகின்றேன்.

**இ. அருட்செல்வன்**
நிர்வாக இயக்குநர்
நியூ சயன்ஸ் ஹோல்





# வளர்ச்சிப்பாதையிலே....

திருமலை தந்த திருமகனாம் புவனேஸ்வரனை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் எனது செயலமர்விலே கண்டேன். செயலமர்வின் முதல் நாள் தொடக்கம் ஐந்து நாட்கள் வரை பாடலை எழுதி இசை அமைத்து அபிநயம் செய்து, பொம்மலாட்டமாக மேடை ஏற்றி, நிகழ்வினை ஓவியமாகவும், விளையாட்டு செயன்முறையிலும் எல்லோரையும் கவரத்தக்க வகையில் நடத்தினார். ஒரு ஆசிரியருக்கு வேண்டிய எல்லா நிறைவினையும் அவரிடத்தில் நான் கண்டேன். நாட்டுக்கூத்திலே "யானையை அடக்கிய அரியாத்தை"யின் மூலம் சிறந்த ஆளுமையை எல்லோரும் அறியக்கூடியதாக இருந்தது. வகுப்பறை செயற்பாட்டிலே மாணவர்களை மகிழ்ச்சியுடன் செயற்படச் செய்வார். பாடசாலை உடற்பயிற்சிப் போட்டிக்கு மாணவருக்கான சீருடையைத் தனது செலவினிலே தயார் செய்து மாணவரின் மனதில் இடம்பிடித்தவர். மாலை நேர வகுப்பின் மூலம் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுக்கு இலக்கணமானவர். வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவசமாக கல்விப் போதனையாற்றும் இவரது வளர்ச்சிக்கு முக்கிய பங்காளி இவருடைய மனைவி வசந்தினி என்றே கூறலாம். திருமண வாழ்விலே வசந்தம் மலர்ந்ததால் தான் ஆசிரியராக இருந்து, விரிவுரையாளராக, எழுத்தாளராக. வளர்ச்சிப் பெற்று இன்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க கௌரவ பொதுச்செயலாளராக வளர்ந்துள்ளார். இன்னும் வளர்ச்சிப் பாதையிலே எவ்வளவு கரடு, முரடு வந்தாலும் "என்னென்ன செய்தோம் என்றும் இதுவரை வாழ்விலே" என்ற பாடலுக்கு அமைய சேவைகளைத் தொடர்ந்து செயற்படவும், பொன்விழா, பவளவிழா, நூற்றாண்டுவிழா காணவும், நோய்நொடிகள் இன்றி இல்லறச் சிறப்புடனும் வாழவும் இறைவனின் அருள் என்றென்றும் கிடைக்க எனது வாழ்த்தும், ஆசிகளும்.

**திருமதி கலாபிரகதீஸ்வரசர்மா**
முன்னாள் ஆசிரியர்
புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்.
(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்)



# வாழ்த்துச்செய்தி

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களை அவரின் பொன்விழா நாளில் வாழ்த்துவதில் பேருவகை யடைகின்றேன்.

தனது ஆசிரியப்பணியில் ஒரு உடற்கல்வி ஆசிரியராக சேவையை ஆரம்பித்து தனது அயராத முயற்சியினால் படிப்படியாக முன்னேற்றத்தை அடைந்து, இன்று ஒரு உடற்கல்வி விரிவுரையாளராகவும் சேவையாற்றி வருகின்றார். எமது கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் பங்கு பற்றித் தனது சேவையை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடையும் சராவின் பணி தொடரவேண்டும்

திரு. சரா அவர்கள் வடக்கின் பாடசாலை மாணவரின் கல்வி வளர்ச்சியிலும் விளையாட்டுத்துறையின் உயர்ச்சியிலும் தனது மேலான பங்களிப்பைச் செய்துள்ளார் என்பதை இங்கு குறிப்பிடவேண்டும். அண்மைக்காலத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டு எமது பிரதேச ஆசிரியர்களுக்கு பாரபட்சமற்ற வகையில் நேர்மையான முறையில் சேவையாற்றி வருகின்றார் என்பதையும் நான் நன்கறிவேன். ஆசிரியர்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களின் நியாயமான உரிமைக்காக தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்ற சேவையாளனாகவும் அவரைப் பார்க்கமுடிகிறது.

எனவே இச்சந்தர்ப்பத்தில் அவரது சேவை மேலும் வளரவும் அதன் மூலம் எமது பிரதேச மக்கள் பயன்பெற வேண்டுமெனவும், இன்நந்நாளில் இறைவனின் ஆசியும் அருளும் பெற்று வாழவேண்டுமெனவும் வாழ்த்துகின்றேன்.

**அருட்திரு ம. ஜெறோ செல்வநாயகம்**
அதிபர்
புனித பத்திரிசியார் கல்லூரி.



# வாழ்த்துச்செய்தி

"சரா" என அன்பாக அழைக்கப்படும் திரு. சரவணமுத்து புவனேஸ்வரன அவர்களின் பொன்விழாவுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடை கின்றேன்.

1985 களிலிருந்து சரா எனக்கு நன்கு அறிமுகமானவர். கிழக்கு மாகாணத்தில் பிறந்த இவர் யாழ்ப்பாணத்தை தனது வாழ்விடமாக்கிக் கொண்டு யாழ் சமூகத்தின் பல்வேறு மட்டங்களில் தன்னை நிலை நிறுத்தியுள்ளார். இது இவரது பல்வகை ஆளுமையின் வெளிப்பாடாகும். உடற்கல்வி ஆசிரியராக தனது பணியைத் தொடங்கிய இவர் உடற்கல்வி விரிவுரையாளராக, சிறந்த விளையாட்டு வீரனாக, "சயன்ஸ் அக்கடமி" என்ற கல்வி நிறுவனத்தின் நிர்வாகியாக, சமூக சேவையாளனாக, தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராக எனப் பல்வேறு நிலைகளில் தனது ஆளுமைத் தடத்தைப் பதித்துள்ளார்.

எப்பொழுதும் சிரித்த முகத்துடனும் நகைச்சுவை பேச்சோடும் திகழ்வது இவரது சிறப்பியல்பாகும். தனது கொள்கைகளிலே எப்போதும் உறுதியாக இருப்பதும் அவற்றை செயற்படுத்துவதில் அயராது உழைப்பதும் இவரது தனித்தன்மையாகும்.

மாணவசமூகம் கட்டுக்கோப்பான முறையிலே வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியான கொள்கையுடன் அயராது உழைப்பவர். தனது கல்வி நிறுவன மாணவர்களின் ஒழுக்கம் சார் விடயங்களில் மிகக் கண்டிப்புடன் செயற்படுவர். இதன் காரணமாக யாழ் பிரதேசத்தில் இந்நிறுவனம் தனக்கென ஓர் இடத்தை பிடித்துள்ளது பாடசாலைகளால் சாதிக்க முடியாத பல விடயங்களை இவரது கல்வி நிறுவனம் சாதித்து வருவது பாராட்டுக்குரியதாகும்.

அடிக்கடி சந்தித்துக்கொள்ளாவிட்டாலும் "சரா" எனக்கு ஒரு நல்ல நன்பன் பிறரின் உணர்வுகளை மதித்து நட்போடு பழகுவதில் வல்லவர். சமூகத்தில் பல்வேறு மட்டங்களில் இருப்பவர்களோடு தன்னை அடையாளப் படுத்திக் கொள்வதில் இவருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு.

தனது 50ஆவது அகவைகொண்டாடும் திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களை மனமார வாழ்துவதோடு, அவரது கல்விப் பணியும் , சமூகப் பணியும் இன்னும் பல்லாண்டுகள் சிறந்தோங்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**வணபிதா. S. A. பொன்சியன்**
அதிபர்
தி / புனித சூசையப்பர் கல்லூரி



50 Years Golden Jubilee

# யாழ். மத்திய கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

ஐம்பதாவது அகவையை எய்திப் பொன்விழாக் காணும் சரா புவனேஸ்வரன், எனது நண்பர். இவர் மத்திய கல்லூரியின் முன்னாள் ஆசிரியராக அரும்பணியாற்றியவர். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கும் எனக்கும் ஒரு வெள்ளிவிழாக் காணும் இருபத்தைந்தாண்டு தொடர்பு இருந்துவருகிறது. அதன் பொதுச் செயராளராக சரா புவனேஸ்வரன் பொறுப்பேற்றது ,பழம் நழுவி பாலில் விழுந்ததுபோன்றது. ஆசிரிய சமூக நீதிக்காகப் பாடுபடுபவராக, எந்த அநீதிகளையும் தட்டிக் கேட்பவராக, ஆசிரியர்களின் உற்ற நண்பனாக சராவைப் பார்க்கின்றேன். சட்டத்துக்கும் நீதிக்கும் தலைவணங்கும் நற்பண்பு இவருக்கு மகுடமாகவுள்ளது.

இவர் பொன்விழாக்கண்டு மேலும் சிறப்புறும் இத்தருணத்தில் மேன்மேலும் பல உயர்வுகள் பெற்றுப் பல்லாண்டு காலம் பணியாற்ற இறைவனை இறைஞ்சி சிறப்புற்றுவாழ வாழ்த்துகின்றேன்.

**சி. க. எழில்வேந்தன்**
அதிபர்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.



# வாழ்த்துச் செய்தி

அகவை ஐம்பதில் பொன்விழாவினைக் கொண்டாடும் என் அன்பிற்கினிய நண்பன் சரா புவனேஸ்வரனுக்கு வாழ்த்துரை வழங்குவதில் யான் அகமகிழ்வடைகின்றேன்.

ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக கல்விப்பணியாற்றிவரும் விழாநாயகன் ஆரம்பத்தில் பல பாடசாலைகளில் ஆசிரியராகக் கடமையாற்றி, ஆற்றல் மிகு மாணவர்கள் பலரை உருவாக்கி சமூகத்தில் மிளிரச் செய்ததுடன், தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்கள் பலரை இலங்கை பூராகவும் சித்தியடையச் செய்துள்ளார். கல்வியோடு விளையாட்டுத்துறையிலும் மாணவர்களை மிளிரச் செய்யும் வல்லவராகத் திகழ்கின்றார்.

மாணவர்களை நன்கு வழிப்படுத்திய பலன் போலும் ஆசிரியர்களுக்கு கல்வி கற்பிக்கும் வாய்ப்பும் இவரைத்தேடி வந்தது. கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை உடற்கல்வி விரிவுரையாளராக இருந்து சிறப்புற பயிற்றுவித்து, தரமான ஆசிரியர்கள் பலரை பாடசாலைகளுக்கு அனுப்ப அரும்பணியாற்றி வருகின்றார். இவரிடம் பயின்ற ஆசிரியர்கள் பலர் தமது பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டு நிகழ்வுகளை சிறப்பாக ஒழுங்கு செய்து நடாத்துவது பாராட்டுக்குரியது. அன்புரிமையுடன் கூடிய கண்டிப் போடு பயிற்றுவிக்கப்பட்டவர்கள் இன்று நல்லாசிரியர்களாக வலம்வந்து கொண்டிருப்பது கண்கூடு. மேலும் இவ்வாறு ஆசிரியர்களை பயிற்றுவித்தவர் இன்று அந்த ஆசிரியர்களின் நலன்களைப் பேணும் சங்கமான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளராகப் பதவி வகிப்பது அவர் செய்த சேவைக்கு கிடைத்த பரிசாகும். இன்று இப்பதவியில் இருந்துகொண்டு ஆசிரியர்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமைகளை, நலன்களை என்ன நடந்தாலும், எங்கு சென்றாலும் விட்டுக்கொடுக்காது வாதாடி அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதில் அவருக்கு நிகர் அவரேதான்.

மேலும் மாணவ சமுதாயத்தின் கல்விக்கு உரமூட்டுவதற்காக யாழ் நகரில் தலைசிறந்த கல்வி நிறுவனத்தை ஆரம்பித்து நிர்வகித்து வருகின்றார். இந்நிறுவனங்களில் கல்வி பயிலும் மாணவச் செல்வங்களும் இவரைப் போலவே வேகமும் விவேகமும் உடையவர்களாகத் திகழ்வதை நாம் அவதானிக்கலாம். தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்கள் பரீட்சையில் 100% சித்தியைப் பெற்றுக்கொள்வதற்காக, பல கருத்தரங்குகளை இலவசமாக ஒழுங்கு செய்து நடாத்தி பல மாணவர்களை சித்தியடையவும் செய்து வருகின்றார்.

இவ்வாறு பல அர்ப்பணிப்பு மிகுந்த கௌரவ சேவைக்காக உழைத்துவரும் மதிப்பிற்குரிய நண்பன் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களை இந்த பொன்னான பொன்விழா நாளிலே வாழ்த்துவதுடன், இவர் தனது குடும்ப சமேதராக நோய்நொடிகளின்றி நீண்ட காலம் வாழ்ந்து நூற்றாண்டு விழாவையும் கொண்டாட வேண்டும் என்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டிக்கொள்கின்றேன்.

**திரு. சி. தர்மரத்தினம்**
அதிபர்
யா/ நீர்வேலி றோ.க.த.க பாடசாலை



# தெளிந்த சிந்தனையும் தூரநோக்கும் கொண்ட நிர்வாகி

**'தோன்றிற்புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் தோன்றாமை நன்று'**

என்ற பொய்யாமொழிப் புலவரின் வாக்குக்கமைய இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச்செயலாளரும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளரும், நல்லூர், அரியாலை சயன்ஸ் அக்கடமியின் நிர்வாக இயக்குநருமாகிய உயர்திரு சரா புவனேஸ்வரன் அவர்களின் 50வது அகவை நிறைவை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள பொன்விழா சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒவ்வொரு சாதாரண மனிதனாலும் சுதந்திரமாகவும், தற்துணிவுடனும் செயல்பட இயலுமை இருந்தும் சிலர் மட்டுமே தனித்துவமாக நிற்பதற்கான தமது திறமையை வளர்த்தெடுத்துக் கொள்கின்றனர். அந்தவகையில் நோக்கும்போது சரா புவனேஸ்வரனும் இதற்கு விதிவிலக்கானவர் அல்லர். உள்வைரமும் தொடர்பாடலில் மென்மை உணர்வும் கொண்டவர். தனது தொழிலில் உன்னதமான சுதந்திரத்தையும் வாய்ப்புக்களையும் தான்சார்ந்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க செயற்பாட்டிற்கும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை, மற்றும் நல்லூர் அரியாலை "சயன்ஸ் அக்கடமி" வளர்ச்சிக்காகவும் உண்மையான ஈடுபாட்டுடன் பயன்படுத்தி வருபவர். அதில் வெற்றியும் கண்டு கொண்டிருப்பவர்.

இத்தகைய செயல்திறன் கொண்ட நிர்வாகி பல்லாண்டு காலம் தனது குடும்ப சகிதம் வாழ்ந்து கல்விப்புலத்திற்கும், சமூகத்திற்கும் தன் உயர்ந்த சேவையை வழங்க வேண்டும் என எல்லாம் வல்ல குலதெய்வமான நல்லூரானின் பாதார விந்தங்களை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி க. சுந்தரலிங்கம்**
அதிபர்
யா/ இருபாலை சீ.சீ.த.க.பாடசாலை
கோப்பாய்.



# வாழ்த்துச்செய்தி

ஆர்ப்பரிக்கும் கடலலைகள் முத்தமிடும், செந்நெல் வயல்கள் நிறைந்த சம்பூர்ப் பெரும்பதியிலே பிறந்த நண்பன் சரா.புவனேஸ்வரன் அவர்கள் அகவை ஐம்பதில் பெருவிழாக் காண்பதனை நினைத்து உள்ளம் ஆனந்தத்தினால் பேருவகை கொள்ளுகின்றது. கிழக்கிலே, சம்பூரைப் பிறப்பிடமாக இருந்தபோதும் யாழ் அரியாலை அவரைத் தத்தெடுத்துக் கொண்டது.

பள்ளிப்பருவத்திலே துடுக்கும் கருமத்தை உடனடியாகச் செய்து முடிக்கும் ஆற்றலும் கொண்டவர். இலக்கினை அடைய எண்ணத்தாலும் செயலாலும் காலம்பாராது கடமைபுரிபவர். இதன் காரணத்தினால்தான் உடலுக்கு உரம் தரும் விரிவுரையாளராகி பின் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மதிப்பார்ந்த செயலாளராக தன்னை உயர்த்திக் கொண்டவர். தான் செல்லுமிடமெல்லாம் சிறப்பான சொல்லாடலினாலும், செயலினாலும் அனைவரது உள்ளங்களிலும் நிறைந்து நிற்பவர்.

தனக்கென தனியான பாதையை அமைத்துக் கொண்டு எத்தகைய சவால்களையும் உடைத்தெறியும் ஆற்றல் கொண்டவர். தூய சிந்தனையும் இனப்பற்றுதலும் பேச்சிலே இழையோடிச் செல்லும். நண்பர்களைக் காண்பதும் அவர்களோடு அளவளாவிக் கொள்வதும், தேவையறிந்து உதவி செய்வதுவும் இவருக்குரிய சிறப்பெனலாம். சாராவோடு இணைந்து ஊரிலே வாழ்ந்த காலங்கள் மறக்கமுடியாதவை. பிறந்த மண்ணில் மட்டுமல்லாமல்தான் வாழ்ந்துகொண்டிருக்கும் யாழ்ப்பாணத்திலும் சமூகத்தோடு இணைந்து சமூகத்திலே உன்னதமான இடத்தைப் பெற்றுள்ளார் என்பது சிறப்புக்குரியதே.

இந்தப் பொன்விழா நாளிலே அவரும், அவரது குடும்ப உறுப்பினர்களும் குறையாத செல்வத்தோடும், குன்றாத இளமையோடும் வாழ நெஞ்சார வாழ்த்துகின்றேன். அவர் நீடூழிகாலம் வாழ்ந்து தமிழ்ப்பணியும், சமூகப்பணியும் ஆற்ற காலம் கைகூட வேண்டும் என நண்பர்கள் சார்பாக வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு. க. யோகானந்தன்**
அதிபர்,
தி/ ஸ்ரீ கோணலிங்க மகா வித்தியாலயம்
திருகோணமலை.



# கல்விக் காருண்யனின் பொன்மனச் சிந்தனைகளில்...

அகவை ஐம்பதில் பொன்விழாக் காணும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவப் பொதுச்செயலாளரும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளருமாகிய உயர்திரு. சரா புவனேஸ்வரன் அவர்களின் பொன்விழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன்.

கல்விச் சமூகத்தில் சரா மாஸ்ரர் என எல்லோராலும் அழைக்கப்படும் பொன்விழா நாயகனுடன் பல வருடங்களாகவுள்ள எனது உரித்தான நட்புறவின் பேரில் அவரை வாழ்த்துவதில் மனநிறைவடைகின்றேன். நல்லூர்ச் சூழலில் மிகச் சிறப்பான முறையில் இயங்கிவரும் "சயன்ஸ் அக்கடமி" கல்வி நிறுவனத்தின் இயக்குநராக அவருக்கும் எனக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்கின்றது. எமது மாணவர்களின் ஒழுக்கமிகு கல்வியினை கட்டிக் காப்பதில் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் கொண்டிருக்கும் அதீத அக்கறை எமது சூழலிற்கு மிக இன்றியமையாததாகும். அவருடைய நிறுவனத்தில் கற்கும் க.பொ.த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறு களுடன் சித்தியடையும் மாணவர்களைக் கௌரவிக்கும் மாபெரும் கௌரவிப்பு விழா வருடா வருடம் நடைபெறுவது வழக்கம். இம் மாணவர்களைக் கௌரவிக்கும் மிகச் சிறந்த கல்வி ஊக்குவிப்பை ஒவ்வொரு வருடமும் நிறைவேற்றி வைப்பது நான் என்பதில் பெருமிதமடைகின்றேன். அது மட்டுமன்றி அந் நிகழ்வுகளில் ஒவ்வொரு வருடமும் கௌரவ விருந்தினராக நான் கலந்து சிறப்பித்துக்கொண்டிருக்கின்றேன்.

இவ்வாறு கல்விப் புலத்திற்கு அவர் ஆற்றிக்கொண்டிருக்கும் சேவைகள் மேலும் சிறப்புற அமைவதுடன் அவரின் பணிகளுக்கு மதிப்பளித்து எடுக்கப்படும் பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இறையாசியை வேண்டுகின்றேன்.

**தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரட்ணம்**
முகாமைத்துவப் பணிப்பாளர்,
ஈ.எஸ்.பி. என். சக நிறுவனம்.



# மனிதநேயம் கொண்ட நிர்வாகி

இன்று அகவை ஐம்பது காணும் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின் பொன்விழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

சரா அவர்களை அவரின் கட்டிளமைப் பருவத்திலிருந்தே நன்கறிவேன். அவர் எனது அயலவரும் நண்பருமாவார். சரா ஒரு தலைசிறந்த ஆசிரியர். தன்னுடைய மாணவரின் கல்வியிலும் ஒழுங்கு கட்டுப்பாடுகளிலும் மிகவும் அக்கறை காட்டுபவர். தன்னிடம் கற்கும் ஒவ்வொரு மாணவரைப் பற்றியும் நன்கு தெரிந்து வைத்திருப்பார். இது ஒரு ஆசிரியருக்கு இருக்கவேண்டிய முக்கிய பண்பாகும்.

இவரால் நடாத்தப்படும் "சயன்ஸ் அக்கடமி" அரியாலையிலும் நல்லூரிலும் இயங்கி இப்பிரதேச மாணவரின் கல்வி வளர்ச்சியிலும் ஒழுங்கு கட்டுப்பாடுகளிலும் சிறந்த சேவையாற்றிக் கொண்டிருக்கின்றது. பணம் உழைக்கும் நோக்கமில்லாமல் வசதி குறைந்த பல மாணவருக்கு இலவசமாகக் கற்பித்து வருகின்றமை இவரது தயாள குணத்தைக் காட்டுகின்றது.

சரா சிறந்த மனித நேயம் மிக்க ஒருவர். இவரிடம் உதவி கேட்டு எவர் வந்தாலும் மனமுவந்து உதவி செய்யும் ஒரு நல்ல மனிதர் இதனால் இவருக்கு ஏராளமான நண்பர்கள் இருக்கின்றார்கள். நான் சேவையிலிருந்த காலத்தில் எமது பாடசாலை மெய்வன்மைப் போட்டிக்கு பல வழிகளிலும் உதவி செய்தார். குறிப்பாக அணிநடை வீரவீராங்கனைகளை ஒழுங்குபடுத்துவதிலும், நிகழ்ச்சிகளை நடாத்து வதிலும் பெரிதும் உதவுபர்.

இவர் துணிவும், திறமையும் தளராத முயற்சியும் உடையவர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராக இருந்து சிறந்த சேவையாற்றும் சரா இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப் பட்டுள்ளமை இவர் மேல் ஆசிரியர்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் நட்புறவை யுமே காட்டி நிற்கின்றது. இவர் செய்யும் சேவைகளுக்கு வெகுமதியாக இவரின் மூத்த மகளின் பல்கலைக்கழக மருத்துவ பீட அனுமதி அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்தனை சிறப்பும் பெருமையும் பெற்றுள்ள சரா நீண்டகாலம் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்றும் மேலும் மேலும் சேவையாற்ற வேண்டும் என்றும், எனதும் எனது குடும்பத்தினரதும் வாழ்த்துக்களையும், ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொ. நடராசா
ஓய்வுநிலை அதிபர்.



# பன்முக சேவையாளர்

பொன்விழாக் காணும் எமது அன்புக்கும் பெரு மதிப்புக்குமுரிய உயர்திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் இன்று போல் என்றும் தனது குடும்பத்தினருடன் சகல சௌபாக்கியங்களுடன் சீரிய சிந்தனையின் செயல் வடிவமாகவும் நற்பெரும் பேறுகளும் பெற்று நற்பணியிலும் நீடூழி வாழ வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

பன்முக சேவையாளராகிய இவர் யாராக இருந்தாலும் அவர்களது தேவைகளைத் தன் தேவைபோல் கருதி தன் நலம்பாராது அவற்றை உடன் நிறைவேற்றும் இயல்புடையவர். அத்துடன் இவரது பேச்சுத்திறன், சேவை மனப்பான்மை ஏனையோருடன் பழகும் திறன், கல்விச்சேவையில் தூய்மையான உழைப்பு, எதிலும் பதற்றப்படாது துணிச்சலுடன் தெளிந்த சிந்தனையுடன் செயலாற்றும் உயர்ந்த பண்பு - இவைகளே இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டதற்குரிய காரணங் களாகும்.

இனி வருங் காலங்களிலும் எல்லாத்துறைகளிலும் சரா புவனேஸ்வரனின் பணி தொடரவும், குடும்பத்தினருடன் நிறைந்த மகிழ்வான வாழ்வு வாழவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அன்புடன் வாழ்த்துகின்றேன்.

வாழிய வாழிய பல்லாண்டு!

**I.A.பரமேஸ்வரன்**
தொழிநுட்ப ஆலோசகர்
இசுறு வேலைத்திட்டம்
கல்வி அமைச்சு,
கொழும்பு.



# பொன்விழாக் காணும் பொன்னெழிலான்

எழில் என்பது வெறும் கண்ணுக்குத் தெரியும் அழகன்று, கண் அறியாது அகத்திநின்றும் எழும் அகத்தழகே எழில். இவ்வகத்தெழில், அடக்கம், ஆளுமை, கல்வி, நற்பண்புகள் போன்ற இன்னோரன்ன குணாதிசயங்கள் கொண்டதாகும். இக் குணாதிசயங்களில் ஒருவனுக்குக் கல்வியென்பது கருவாய் வளர்ந்திட்டால் அக்கல்வி இப்பிறவியென்ன அவனது ஏழு பிறவியிலும் சிறப்பைக் கொடுத்துவிடும்.

**கற்றார்க்கு ஏழு பிறவியிலும் சிறப்புண்டாம் இதை**
**கல்லார்க்கு எப்பிறவியிலும் கண்ணில்லா வாழ்வாகிவிடும்.**

என்ற கூற்றுக்கமைய தனது 50வது அகவையை எய்தியுள்ள நல்லூர் பிரதேச செயலக பிரிவின் எனது J/92 கிராம அலுவவலர் பிரிவில் நல்ல மனிதனாக, நல் ஆசிரியனாக, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க செயலாளராக, விரிவுரையாளராக, சிறந்த சமூக சேவகனாக, விளையாட்டு வீரனாக, சிறப்பான நிர்வாகியாக, குடும்பத்தலைவனுக்கு எடுத்துக்காட்டாக எல்லாவற்றுக்கும் மேலாக சந்தன மரமாக வாழ்ந்துவரும் உயர்திரு சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களால் எனது பிரதேசம் கல்வியால் உயர்ந்த பெருமையை எண்ணி பேருவகை கொள்கின்றேன். அவர், தான் மட்டும் கற்றதுமில்லாமல் தன் கல்வியை என் கிராமத்தவர்க்கும் கற்றுக்கொடுக்கும் செயற்பாடு கண்டு உள்ளம் பூரிக்கின்றேன்.

**தாமின் புறுவது உலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்ற றிந்தார்** என்ற வள்ளுவனின் குறளமுதம் போல் தனக்கு இன்பம் தரும் கல்வியைப் பிறர்க்கும் கூறி இன்புறுவதைக் கண்டு மேலும் கல்விதனை விரும்புவர் என்ற பொருள்சார திரு.சரா. புவனேஸ்வரன் அவர்கள் எனக்கு மகிழ்ச்சியைத் தந்த கல்வியை தான் சார்ந்த என் மக்களுக்கு தான் வழிநடத்தும் ஆசிரியர்கள் வாயிலாகக் கற்றுக்கொடுத்து அதன்பால் மென்மேலும் கொள்ளும் மகிழ்ச்சி கண்டு நானும் மகிழ்கின்றேன்.

நல்லதோர் துணை நல்ல உயர்வைத்தரும்; நற்செயலோ வாழ்வில் வேண்டிய தெல்லாம் தரும். நல்ல துணைவியைப் பெற்றுயர்ந்த இந்நாயகன் தன் நற்பணி மூலம் வாழ்வினில் தான் வேண்டியதெல்லாம் பெற்று நல்ல ஞானிகளையும் கற்றாரையும் தோற்றுவிக்கும் இவர் பணி நூறாண்டு காலம் தொடர என் வாழ்த்துக்கள்.

**திரு. P.T.P. தஜீதரன்**
கிராமசேவையாளர்,
J/92 அரியாலை மத்தி மேற்கு
J/91 அரியாலை வடமேற்கு (பதில்)



# வாழ்த்துக்குரிய சரா

கல்வியே வளமான வாழ்வுக்குரிய ஒரே வழி. அறிவுடையார் எல்லாம் உடையார் என்பர். எனவே தான் திருவள்ளுவர் "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்றார். கல்வி வழங்குவோர் வணக்கத்திற்கு உரியவராக மதிக்கப்படுவர். ஒரு சமூக முன்னேற்றத்திற்கு ஆசிரியரின் பங்கும், பணியும் இன்றியமையாதவை. இதனையே ஆசிரியர் எவ்வழியோ சமூகம் அவ்வழி என்ற பொன்மொழி புலப்படுத்துகிறது. இதனடிப்படையில் தனது வாழ்வில் பொன் விழாக்காணும் சரா அவர்களிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இவருடன் ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக பழகியுள்ளேன். ஆசிரியர், ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர், தொழிற்சங்கவாதி, தனியார் கல்வி நிறுவன இயக்குநர் எனப் பல முகங்கொண்ட இவர், விளையாட்டுத்துறையின் முன்னணி ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற எண்ணக்கருவுடன் வாழ்ந்தமையால் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளராக உயர்ந்தார். மற்றவர்களின் துயரங்களை துடைப்பதில் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தமையால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் உறுப்பினராக இருந்து பின்னர் பொருளாளராகவும் தன்னலமற்ற சேவையால் போட்டியின்றி தாய்ச்சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார். மாணவர்களின் கல்வி அபிவிருத்தியையும் ஆசிரியர்களின் நலனையும் ஒற்றுமைப்படுத்தி, திணைக் களத்துடனும் அரசுடனும் பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடாத்தி அதில் வெற்றி கண்ட பெருந்தகையாளரான இவர் இலங்கையின் எப்பாகத்திலும் மாணவர்கள், ஆசிரியர்களுக்கு இடர்கள் ஏற்படும் போது அங்கு சென்று அவற்றின் உண்மைத் தன்மையை அறிந்து உரியவர்கள் மூலம் தீர்வு பெற்றுக்கொடுக்கும் நல்லெண்ணம் உடையவர். யாழ். நகரில் ஒளிர்மிகு தனியார்கல்வி நிறுவனமான நல்லூர் - அரியாலை "சயன்ஸ் அக்கடமி"யைச் சிறந்த முறையில் நிர்வகித்து மாணவர்களினது ஒழுக்க விழுமியங்களை சிறந்தமுறையில் பாதுகாத்து வருவதன் காரணத்தினால் அந் நிறுவனம் மேலும் வளர்ச்சி அடைந்து செல்கின்றது. அந்நிறுவனத்தின் பரிசளிப்பு விழாவுக்குப் பிரதமவிருந்தினராகச் சென்றிருந்தவேளையில் அங்குள்ள மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் மிகச்சிறந்த ஒழுக்க கட்டுப்பாட்டை பின்பற்றி நிற்பதை காணமுடிந்தது. இவை அனைத்தும் பொன்விழா காணும் நண்பன் "சரா"வின் வழிநடத்தலால் உருவாகியது என்பதை திடமாகக் கூற முடியும்.

அந்த வகையில் சரா புவனேஸ்வரன் அவர்களின் பொன்விழாவினை சிறப்புற முன்னெடுக்கும் பொன்விழாச் சபையினரை பாராட்டுவதோடு, தனது விரிவுரையாளர் சேவையையும் தொழிற்சங்க சேவையையும் மனம் தளராது பணிசெய்து சீரும் சிறப்புமாகப் பல்லாண்டுகாலம் வாழ மனதார வாழ்த்துகிறேன்.

S.K.சண்முகலிங்கம் J.P
ஓய்வுநிலை அதிபர், தவிசாளர்,
வேலணை பிரதேச மத்தியஸ்தர் சபை

**50 Years Golden Jubilee**



பொன்விழாக் காணும்
உயர்திரு. சரா புவனேஸ்வரன் அவர்களை வாழ்த்தி
பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு அவர்கள்
வழங்கிய

# வாழ்த்துப் பாமாலை

சரவண முத்து புவனேஸ் வரனெனும்
பரவிய புகழுடைப் பண்பினன் - உரமுடன்
அம்புவி தன்னில் ஆனவளம் பெற்றுவாழச்
சம்பூரின் காளியே யருள்.

அன்பினா லறிவினால் ஆற்றல்மிகு உழைப்பினால்
நண்புடை நல்லவரி னாசியால் - இன்பமுடன்
இல்லறத் துணையுடன் ஏற்றமிகு மக்களுடன்
நல்லறங் காண்கபல் லாண்டு.

அகவை ஐம்பதை அடைந்தநல் லாசிரியன்
நிகரிலாக் கல்விக்காய் நீடுழைத்து - இகமதிலே
முழுநிலா ஒளியதாய் முத்தமிழ் இனிமையாய்
பழுதிலாப் பணியினால் வாழ்க.

எளிமை நேர்மை எவரையும் ஈர்க்கும்
குளிர்மைச் சிரிப்பும் குலவிட - வழியினில்
தடைக்கற்கள் பலவற்றைத் தாண்டியே உயர்ந்துநின்ற
குடைதரு கொடைநிழலே வாழ்க.

தன்பிள்ளை போலவே பிறர்பிள்ளை தலைதடவி
என்பிள்ளை இதுவுமென எண்ணியே - அன்புசெய்
நல்லா சிரியத்தாய்! நன்மையே நாடுகின்ற
வல்லோய்! வாழ்கபல் லாண்டு.

## வேறு

1. மாவலி யாறு வளஞ்சுரந் தூட்ட
மரகதப் பசுமை படர்ந்திடும்
காவொலி யோடு கழனி யுழவர்
கடலினிற் பரதவ ரொலியும்
பாவொலி கூத்துப் பழங்கதை மரபும்
பத்திர காளியின் அருளும்
போயொலிக் கின்ற சம்பூர் மண்ணின்
புதல்வன் புவனேஸ் வரனே!

2. உயர்சைவ வேளாண் குலத்துக் குரியோன்
உத்தம குணங்களைக் கொண்டோன்
அயர்விலாச் சமூகப் பணியினால் கிராம
அவைதனில் முதல்வனாய்த் திகழ்ந்தோன்
வயதினில் வாலிபச் சரவண முத்துவின்
வாழ்க்கைத் துணைநலம் இரத்தினம்
பயனுடைப் பிள்ளைகள் பத்தினைப் பெற்றனர்
பக்குவப் படுத்தியே வளர்த்தனர்.

3. ஆண்கள் அறுவர்; பெண்கள் நால்வர்;
அமைந்தன இல்லறக் கனிகள்
தூண்களில் ஒன்பதாய்த் தோன்றினன் புவனேஸ்
அறுபத்து மூன்றுஆனி யொன்றில்
நீண்டநன் னெறியில் நிலைத்திடு மாறு
நித்தமும் சகோதரத் துணையுடன்
ஈண்டுற ஊரின் மகாவித் யாலயம்
இணைந்துமே கல்வியைப் பெற்றனன்.

4. நல்லா சிரியர் நாட்டிய விதைகள்
நல்லவர் மனத்துப் பயிராய்,
அல்லா தவற்றை அழிக்கவும், நன்மை
அறத்தின் வழிப்பட உழைக்கவும்,
நில்லா துலகில் நிலைத்திடுஞ் செல்வம்
நிகரிலாக் கல்வியா மென்றே
பல்லோ ருளமும் பணிந்திடும் ஆசிரியப்
பதவியில் சேர்ந்து கொண்டனன்.

5. இருபது வயதில் ஏ.எல் முடித்து
இருபத் தைந்தில் ஆசிரியன்;
வருவதும் போவதும் வாழ்க்கைத் தடத்தில்
வள்ளுவர் வகுத்த வரநெறி;
பொருவரு இளமைப் பொலிவுகண் டுள்மகிழ்
புதுமணங் கண்டிடும் பூரிப்பால்
திருவளர் வசந்தினி பொன்மகள் நன்மகள்
திருக்கரம் பற்றிட எண்ணினன்.

6. கல்வியாற் கலைகளால் கற்றவர் மெச்சிடும்
கலைஞரால் ஓங்கிடும் அரியாலை
நல்வித மாகவே நல்கிய இபோச
அலுவலர் பத்ம நாதனும்
இல்லறத் துணையாள் உமா மகேஸ்வரி
இயற்றிய நல்லறப் பயனினால்
வல்லவோ ராணுடன் மூன்று பெண்கள்
வந்து பிறந்தனர் தவமாய்.

7. இத்தரை மீதினில் பத்ம நாதனின்
இரண்டாம் மகள் வசந்தினி
உத்தம குணங்களின் உறைவிடம்; ஸ்ரான்லியில்
உயர்கல்வி பெற்றவர்; எழிலாள்;
சத்தியந் தழைத்திடும் சம்பூரின் நாயகன்
சார்ந்த உறவினர் ஆனவர்
கைத்தலம் பற்றியே கணவன் வழிச்செலும்
காந்தமும் ஊசியும் ஆயினர்.

8. தொண்ணூறு கார்த்திகை இருபத்தெட்டுத்
தொடங்கிய திருமண பந்தம்,
மண்ணீடு வாழச்செய் அரியாலைப் பதியே
வாழ்விட மானது நன்றே!
பண்ணோடு இசைபோல் துவாரகா, சஞ்சிகா
சஜீசன், தர்மிகா பிறந்தனர்.
எண்ணோ டெழுத்தும் இணையறத் தெளிந்து
ஏற்றமும் கல்வியா லடைந்தனர்.

9. அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலை
அடுத்தது மத்திய கல்லூரி
விரிவுரை யாளராய்க் கல்விக் கல்லூரி
விரும்பியே நாயன்மார் மகேஸ்வரி
அரிதுணர் உடற்கல்வி விரிவுரை யாசான்
ஆசிரிய கலாசாலை கோப்பாயில்
நெறிமுறை தவறாக் கண்டிப் புடனே
நீடுமே கற்பித் துயர்ந்தோன்.

10. பயிற்றப் பட்ட ஆசிரியன்; உடற்கல்வி
டிப்ளோமாப் பட்டம் பெற்றோன்;
உயிர்ப்புடன் ஆசிரியம் உவந்தளித் தின்ற
உண்மையாய் வாழும் மானிடன்;
விருப்புடன் இலங்கைத் தமிழர் ஆசிரியர்
சங்கத்தி லிணைந்து, உழைத்து
உருப்பெறு வண்ணம் பொதுச் செயலாள ராக
ஒளிவீசி நிற்கும் மேலோன்.

11. நல்லூரில் சயன்ஸ் அக்கடமி நிறுவி
நன்மாணவர் பலரை யுருவாக்கி,
வல்லதோர் நிர்வாகி யாக விளங்கி,
வசதிகளற்ற மாணவர்க் குதவி,
கல்விப் பணியில் கால்நூற் றாண்டுகள்
கழிந்தன; பின்னரும் ஊரில்
உள்ளவர் படிக்க இன்னொரு நிலையம்
உருவாகி இயங்கிடக் கண்டோம்.

12. காதல் மனையாள் கருத்துடன் நாளும்
கடமையில் வலதுகை யாக,
ஈதல் பிறவிக் குணமாய் அமைந்திட
ஏழை எளியர்வக் குதவ,
மோத லின்றி முறுவல் காட்டி
முயற்சியா லெவரையும் அணைத்து,
நீத மின்றிய நெறியினில் வாழும்
நேர்மையே! நீடூழி வாழ்க!

13. மருத்துவத் துறையின் மாணவி யாக
மூத்த புதல்வி விளங்கிட,
மற்றவ ரிருவரும் ஏ.எல் வகுப்பில்
மாண்புடன் கல்வி பெற்றிட,
சரித்திரம் படைப்பவள் போலத் தர்மிகா
ஒன்பதாம் வகுப்பில் கற்றிட,
உரித்துடைப் பிள்ளைச் செல்வப் பேற்றினா
லுயர்ந்தவர், பெற்றோர் வாழ்கவே!

14. ஆசிரிய வுலகில் இருபத்தைத் தாண்டுகள்
அரும்பணி ஆற்றிய நெஞ்சன்;
பேசரிய தனியார் கல்வி நிறுவனம்
பெட்புறத் தாங்கிய பெரியோன்;
வாசியுள பாங்கொக் நகர்தனில் நடந்த
ஆசிரிய மாநாட்டுப் பேராளன்;
நேசமுட னிலங்கைத் தமிழர் ஆசிரியர்
சங்கப் பொதுச் செயலாளன்.

15. நம்புதற் குரிய நல்லா சிரியன்;
நம்பில் ஒருவானய் வாழ்க!
வெம்பிடும் இலங்கைத் தமிழர் துயரம்
விரட்டிடும் பணியால் வாழ்க!
சம்பூரின் மைந்தன் சகலர்க்கும் பொதுவாய்ச்
சரித்திரம் படைத்திட வாழ்க!
கும்பிடும் நல்லூர்க் குமரனி னருளால்
குறைவின்றிப் பல்லாண்டு வாழ்க!

16. பொன்விழாக் காணும் புவனேஸ் வரனார்
பொலிவுற மகிழ்வுற வாழ்க!
மண்மிசை மனையாள், பிள்ளைகள், சுற்றம்
மாண்புற மலர்ந்திட வாழ்க!
எண்டிசை பொங்கும் இயற்றிடும் பணிகள்
ஏற்றமாய் இன்பமாய் விளங்க,
விண்மிசை யிருந்து பெற்றவர் வாழ்த்தும்
விசையினால் நலமெலாம் சிறக்க!



# பார்போற்ற வாழ்க

கல்விக்காய் காலங்களைக் கரைத்திட்ட
காலத்தால் அழியாத மனிதர்களில்
வாழ்க்கைக் காலங்கள் சமூக ஏற்றத்தில்
வரலாற்றுப் பதிவுகளாய் மாறுகின்றபோது
“தோன்றிப் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமல் நன்று”
என்ற பொய்யாமொழிப் புலவரின்
வாக்குமெய்ப்படுவது சிலரின் வாழ்க்கையிலேயே அமைகிறது
இதற்கு அக்காலங்களில் வாழும் மனிதர்கள்
அடையாளம் காணப்பட்டு அவனியில் மதிக்கப்படுவது
அரிதிலும் அரிதாகவே நடந்தேறுகிறது
இந்த அரிதை அவன் வாழும் காலத்தில்
வழங்கிக் கௌரவிப்பதே கல்விச் சமூகத்தின் சிறப்பாகும்
“சரா” என்று சரளமாக பலர் நினைவில்
சிறப்பாகப் பதிவாகி நடுநிலையில் நின்று தன்
சேவையை ஆசிரியர் சமூகத்திற்கு ஆற்றும்
இவர் போன்றோர் சிறப்புறுவது
தமிழ் சமூகத்தின் சிறப்பாகும்
நல்லாசானுக்கெல்லாம் சிறப்பாகும்
இந்த சிறப்பை சிறுவார்த்தைகளால் வடித்திட
வன்னியில் வாழுகின்ற கல்விச் சமூகத்தின் சார்பில்
எனக்களித்த சந்தர்ப்பம் அரிதிலும் அரிதாகும்
வாழ்த்துக்கள் வார்த்தைகளால் அல்ல - எம்
மாணவச் செல்வங்களின் வாழ்க்கையினை உயர்வாக்கி
சமர்ப்பிக்கின்றோம்.
நீடு வாழ்க! நீவிர் பார்போற்ற வாழ்க பல்லாண்டு.

**மாலினி வெனிற்றன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
துணுக்காய்.



# மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

புன்சிரிப்பால் உலகை வெல்லும் நாயகன்
பொன்விழாக்காணும் உமை வாழ்த்தும் வாய்ப்பை
என்பேறாய்க் கருதுகின்றேன்.

நலிவுற்ற உள்ளங்களை
உறுதிபெறச் செய்வாய்
நன்னடத்தைக் கொள்கை தனை
நாளும் விதைப்பாய்
உடல் உறுதிப்பயிற்சிகளை
உயர்வாய் வழங்கி
உள்ளங்களை வெல்வாய்
உயர்வே பெற்றும்!

சொல் எமை வாழவைக்கும்
நல்மனம் நாளும் சிறக்கும்
பிறருக்காய் குரல் கொடுக்கும்
பெருந்தன்மை உண்டு
பிரிவினைகள் விரும்பாத
பேருள்ளம் உனக்கு!

அகதிகளாய் அநாதைகளாய்
கோப்பாய் வந்த என் உறவுகளை
அரவணைத்தாய் ஆறுதல் மொழி சொன்னாய்
ஆசிரியம் சிறக்க அரும்பணி செய்தாய்
ஆற்றல்கள் அறிந்து ஆற்றுகை செய்தாய்
மாற்றமுகவர்களாய் மாற்றிவிட்டாய் நீயே!
ஏற்றமுடன் அவர்கள் வாழ
எம் பிரதேசம் பதில் சொல்லும்.
ஈராண்டு பயிற்சிக்காலம்
எல்லோர் மனம் வென்று

நல்லோர் பட்டம் பெற்ற உனை
நாளும் நான் வாழ்த்துவேன்.

ஆசிரியர் நலன் காக்க - நீ
ஆதரவும் செய்வாய்
அவை அடைத்து வியந்துபோகும்
பதில் சொல்ல முடியாது
இடமாற்றக் கொள்கைக்குப்
புது வடிவம் கொடுப்பாய்!
இடர்படும் ஆசான்களுக்கு
இணைப்புகளும் கொடுப்பாய்
துணையாள் பிரிந்திருந்தால்
துடித்துப் போவாய்
சேர்த்து வைக்கும் மன்னவனாய் - நற்
சேவை செய்வாய்.

ஆளுநரின் முன்னாலே
ஆர்ப்பரிப்பாய் நியாயங்களால்
அயர்ந்து அடைத்துப் போகும்
வாயனைத்தும்.........
சுயநலம் இல்லாத உள்ளங்கள் என்றும்
சுதந்திரமாய் வாழும்.
பிறர் நலன் காக்கும்
பேருண்மை என்றும் நிலைக்கும்.
வாழ்வின் தத்துவத்தை
வாழ்க்கையிற்காத்து
வாழ்ந்திடுவாய் ஆண்டுபல நீடூழி!
வளமுடன் நல் வாழ்த்துக்கள்.

சேவாஜோதி
வித்தியா தீபம்
**எம்.எம்.சியான்**
வலயக்கல்விப்பணிப்பாளர்
மன்னார்.



# வாழிய வாழிய! சிறப்பெலாம் பெற்று



ஆண்டவரின் சித்தத்தினால்
அன்னையவள் மடி தவழ்ந்து
அவனியிலே வந்துதித்தீர் – இன்று அகவை
ஐம்பதில் வளமுடன் வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

புனிதமலர் கல்விசார் சீர்
புதிய துறைப் புனல் நீராட
நின்பணி மேலும் சிறந்திட
நற்சிந்தனைகள் திசை விரிய
உளமகிழ்ந்து உடல்நலத்துடன்
உளநலம் மிக்கிட வாழ்த்துகின்றேன்.

பக்கச் சார்புக்குள் – உங்கள்
பணி சிதைந்திடாமல்
உண்மைக்காய் என்றும் – உமது குரல்
உரத்தொலித்திடட்டும் – எதிர்வரும்
இடர்கண்டும் கலங்கிடாமல்
உமது பணி தொடர வாழ்த்துகின்றேன்.

திறந்த மனமும் செறிந்த ஞானச்
சிந்தனையும் செயலிலாண்மையும்
கனிவோடு ஊட்டும் கண்ணியமும்
நின் வாழ்வில் நிறைக மேலும் பல்லாண்டு
வாழிய வாழிய! சிறப்பெலாம் பெற்று.

அருட்சகோதரி எம். ஜீவந்தி
அதிபர்
யாழ்/ புனித ஜோண் பொஸ்கோ



# பல்லாண்டு காலம் வாழ்க!


பார் எங்கும் புகழ் பரப்பி
பணிசெய்த மனம் விரித்து
பவ்வியமாய் வாழ்வதனை வளர்த்தாய்
பாங்குடனே நானும் அதை கண்டு கொண்டேன்.

உன் சோதரியை கரம்பிடித்தேன் நான்
உன்னை மைத்துனனாக அணைத்துக் கொண்டேன்
உண்மையில் பெற்றமகனாய் பாசத்தால்
உள்ளம் பூரிக்கின்றேன் உன் வளர்ச்சி கண்டு
கல்வியில் உன்னை வெல்ல யாரும் இல்லை
கள்ளமில்லா உள்ளமதைக் கொண்டு நீயும்
கவனமாக வென்றாய் உன் இலட்சியத்தை
காலமெல்லாம் உன் வெற்றி தொடரட்டும் என்றும்

அகவை ஐம்பது உனக்கு என்று
அன்பான மைத்துனனே எண்ணவும் முடியவில்லை
அகிலத்தில் பொன்விழாக் காணுகின்றாய்
அகமகிழ்ந்தேன் உன் அத்தானாய் நானுமே

வருடம் ஒன்று போக வயதும் ஒன்று கூடும்
வாழ்க்கையின் நியதி அது விதிவிலக்கு எதுவுமில்லை
வழங்கினேன் வாழ்த்துமடல் பல்லாண்டு நீ வாழ்க என்று
வாழ்வாய் ஐயா இன்னுமே கல்வியில் நீ உயர்ந்து.

- அன்பு அத்தான் -
**திரு. வீ. நடராசா**



# வாழ்த்துச்செய்தி

இகந்தனில் சம்பூர் எனும்
பொழில் பூமியின் ஈர மனத்தான் நீங்கள்
வந்தின்று அகவை ஐம்பதாயிற்றா?
இச் சமயம் உங்களுக்குள் அலைபோல் அடிக்குது
பொற்சூரியன் தகதகக்கும்
பொன்விழாக் காணுகின்றெந்தன் தங்கமாமாவுக்கு
தமிழ் வார்த்தைகளால் முகமன் கூறி வாழ்த்துவதில் பெருமிதம்
முகில் மழை நீங்கள் எமக்கென்றென் அன்று திருமலையிலும்
யாழிலும் தடம் பல கண்ட அசுவம் நீ
இன்றும் உன்னுடன் விசைபோட யாருண்டு இங்கு
ஆசிரியர் கலாசாலையில் நெடுந்தூரம் அரும் பணியாற்றி
மானுடர் யாவரும் மாசற்ற கல்வி பெறவேண்டுமென்று
மனங்கொண்டு சேவையாற்றுகின்ற பாசமுள்ள எந்தன் மாமா
சுழலுகின்ற பாரினில் கல்விக்காகத் தன்னை அர்ப்பணித்தாய்
வாசனையோடு உலகமே வாயார வாழ்த்த
வாழும் காலத்திலே யாவரினதும் வாழ்த்துக்கு ஆளானாய்.
நல்லமனம் கொண்டாய்
திருமலையில் மட்டுமல்ல நாடுவிட்டுப் போயினும்
அவரைக்கொண்டாடுவோர் வல்லமை பல கொண்டு வாழ்வர்
தாங்கள் யாழுக்கு வந்தபின்னர் வடக்கு மண்ணும் கொண்டாடுது
கல்லிலே உளியெடுத்து தமிழில் கவிதை வடித்து
பொன்விழாக் காணும் எங்கள் சொல்லிலும்
இதயத்திலும் நீங்கள் என்றென்றும் வாசம்
வீசுகின்ற மலர்களாய் நீடூழி வாழ
வாழ்த்தும் உங்கள் அக்காள் மகன்


**சித்திரவேல் புலேந்திரன்**
சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்,
கம்பனி செயலாளரும் ,
சத்திய பிரமாண ஆணையாளரும்.
சம்பூர், திருகோணமலை.

50 Years Golden Jubilee

# 50வது அகவை அவனியிலே தடம் பதிக்கும் சரா. புவனேஸ்வரனுக்கு என் இனியவாழ்த்துக்கள்



இரத்தினம் சரவணமுத்தின் இணையற்றபுத்திரனே
இளம் இனியாள் வசந்தினியை இனிதாகக் கரம் பற்றி
ஈரிரண்டு பிள்ளைகள்பெற்று இன்பமுடன் கல்வியூட்டி,
இதமாக தலைமகளை மருத்துவத்தில் புகுத்திவிட்டாய் !

ஆசானாகப் பதவிபெற்று ஆரம்ப கல்விபெற
ஆசிரிய பயிற்சியினை கோப்பாயில் சென்றுபெற்றாய்
அனைவரும் போற்றும் வண்ணம் கற்பித்தலைநடாத்திக் காட்டி
அறிவுதனை ஊட்டிவிட்டாய் சின்னஞ்சிறு மாணவர்கட்கு,

வெற்றித் தேர்வுதனை விரைவாக வெளியிட்டு,
விரிவுரையாளராக பலவருடம் பாரினிலே பணியாற்றி,
ஐம்பது அகவைகண்டு பொன்விழாக் கொண்டாடும்
அறிவுச் சுடரே சராபுவனேஸ்வரனே !

ஆசிரியர் தம் உரிமையை போராடி வென்றெடுக்க
இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்திலே இன்முகத்துடன் இணைந்தாய்
வசீகரிக்கும் தன் பேச்சாலும்,துணிச்சல் மிகுசெயற்பாட்டாலும்
சங்கத்தில் போட்டியின்றி இணையற்றபொதுச் செயலாளர் ஆகிவிட்டாய்,

தொய்வுநிலைகண்டு நின்ற ஆசிரியர் சங்கத்தினை
பக்குவமாய் சீர்செய்து இள உதிரம் அதில் பாய்ச்சி
ஆர்வமுடன் தொண்டர்கள் வேகமாய் பணியாற்ற
உரத்தகுரலிலே அனைவருக்கும் கட்டளை இட்டாய்
உன் பணிதொடரட்டும்.

பூவும் மணமும் பிரியாதிருப்பதுபோல் உன்
பிள்ளைகளுடனும் பிரியமானமனைவியோடும்
சங்கநண்பர்களுடனும் பலபேர் போற்றும் வண்ணம்
பல்லாண்டு வாழ்கவென்று பாவாலே வாழ்த்துகின்றேன்.
நீடூழிவாழியவே!

வாழியவாழியவாழியவே - சரா
புவனேஸ்வரன் நீடூழிவாழியவே !

க. நல்லதம்பி
நிர்வாகச் செயலாளர்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

# பொன் விழாக்காணும் "புவா"



ஆண்டுகள் ஐம்பதில்
ஈண்டுயர்வானதே
நீண்டது உன் புகழ்
நிலைத்திடும் என்றுமே.

திருமலை தந்த எம் செம்மலே
கருவறை தந்த உன் அன்னைக்கும்
ஊட்டி வளர்த்த தந்தைக்கும்
காணிக்கையாக்கினேன் என் கவி.

சம்பூர்பதி தந்த நல் வம்பனே
அன்பே, உனதுறவானதே
இன்பம் நிறைவானதே
இனிய வசந்தமுமானதே.

காலங்கள் அரைநூற்றாண்டிலும்
காவியம் தந்த எம் கார்மேகனே
கோலங்கள் பல உன் வாழ்வினில்
கோபுரக் கலசமாய் ஒளி வீசுதே.

கல்விக் கரைதனில் நீ காவலன்
கல்லூரிதனில் தினம் பாவலன்
சொல்லில் இனிய நற்சோதரன்
சோர்விலா உழைப்பிலே நீ சாதகன்.

கற்றறிஞர் சமூகத்தில்
செயலானவன்
காலமெலாம் உழைக்கும்
கர்ம வீரன் நீ.

எத்தனை சோதனை வந்தாலும்
என்றுமே சாதனை தந்த நீ.
சத்துணவானது உன் கற்றலே
சாதனையானது எம் கல்வியே.

வசந்தமாய் உன் வாழ்வு மலர்ந்திட
சுகந்தமாம் நல், துணைக்கரம் பற்றினீர்,
நலன் தரும் நல் மழலைகள்
நாட்டிடச் சாதனை தந்த நீ

கிழக்கினில் உதயமே ஆன நீ
வடக்கினில் வாழ்வுயர் ஆனதே
சிறந்திட எதிர் காலமே - தினம்
சேவையில் உயர்ந்திட வாழ்ந்திடு

முத்து நகர் தந்த எம் நித்திலமே
பத்தைந்தில் இன்று வாழ்த்துகின்றோம்
எத்திசையும் உன்புகழ் வீசிடவே
என் இதய வாழ்த்துக்கள் "சரா"
ஏற்றிடுவாய்.

உனது நண்பன்
**சேனையூர் இரா. இரத்தினசிங்கம்**
அதிபர்,
தி/சேனையூர் மத்திய கல்லூரி

Golden Jubilee 50 Years

# அன்புடன் வாழ்த்துகின்றேன்



அறிவுக்கும், ஆளுமைக்கும், ஆற்றலுக்கும்
உரித்துடைய சான்றோனே
சரா என அன்புடன்
அழைக்கப்படும் ஆசானே
புவனேஸ்வரனே!

"கல்விக்குக் கரையில..." என்ற
வளம்மிக்க வாசகத்தை
உள்ளமதிற் கொண்டு
தெள்ளத் தெளிவாக
கல்வியினை ஊட்டுகின்ற
கடமையாளன்தான் நீரன்றோ

விளையாட்டுத் துறையாயினும்
சமூக சேவையாயினும்
சளைக்காமல் பணி செய்யும்
சக்திதான் என்னவோ

பிறருடன் இன்சொல் பேசுவதும்
தவறென்றால் தட்டிக் கேட்பதும்
தங்களுக்கு இறைவன்தந்த
ஈவென்றால் மறுப்பதற்கில்லை

உங்கள் கல்விப்பணியாலும்
சமூகப் பணியாலும்
உயர்வடைந்தோர் பலருண்டு
எங்கள் சமூகம் இப்படியொரு
சான்றோனைக் காண்பதும்
பெரும் பேறன்றோ

பொன் விழா கண்டு
புதுப்பொலிவு பெற்று
புகழ் பூக்கும் நன்னாளிலே
இன்முகத்துடனும் இதயமகிழ்வுடனும்
அன்புடன் நானும் வாழ்த்துகின்றேன்.

திரு. பா. சிவராஜா
அதிபர்
யா/ நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை,
தலைவர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
நல்லூர் கோட்டம்.

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
ஆசிரியராய் , ஆசிரிய கலாசாலை, கல்வியியற் கல்லூரி விரிவுரையாளராய்
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளராய் இருந்து
கல்விப் பணியாற்றிவரும் பேராசான் சரவணமுத்து புவனேஸ்வரன் என்னும்
பொன்விழா நாயகனை வாழ்த்தி வழங்கிய



# வாழ்த்துப் பாமாலை

திருவிளங்கும் கோணேஸ்வரநாதர் அருளாட்சி செய்யும் திருகோண
மாமலைசேர் சர்வ சிறப்பும் சால்புறப் பெற்றுயர்
திருவுடையூராம் சம்பூர்தன்னில் சிறப்புறு சரணவமுத்து
தம்பதிகள் பெற்ற மைந்தன் பண்புடையான் நல்ல
அருளுடையார் கற்றவர்பால் அன்புடையான் அருங்குணத்தான்
மாண்புறு சேவையில் பெற்றான் புவனேஸ்வரன் என்னும்
திரு நாமத்தான் பொன்விழாக் காணும் நாயகனே நல்லவனாய்
நாடு போற்ற நலமாகப் பல்லாண்டு வாழி!

சீலமிகவுடையான் சிறந்த நற்பணிகளாற்றும் சிறப்புடைய
புவனேஸ்வரன் யாழ் மத்திய கல்லூரி ஆசிரியனாய்
கோலமிகு கோப்பாய் ஆசிரிய கலாசாலை, கல்வியியற் கல்லூரி
விளையாட்டுத்துறை விரிவுரையாளராய்
ஞாலமதில் புகழ்விளங்க தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்
செயலாளராகப் பணிகள் பல புரியப்பேறு பெற்றான்
காலத்தை வென்ற பணிகளால் உயர்ந்து நின்றான் கற்றவர்
போற்ற நாளும் கற்பகமாய்ப் பல்லாண்டு வாழி!

காருவந்த களனி வளம் கல்விவளம் செல்வவளஞ் சிறந்தபதியில்
வாழ்வாங்கு வாழ்ந்த புவனேஸ்வரனே "பொன்விழா" நாயகனே நின்
பேருவந்து பெரும் பணிகளுவந்து பெருமனத்தார் வாழ்ந்த
ஊன் சிறந்து உடல் சிறந்து உயிர்சிறந்து வாழி!
சீருவந்த சிறப்புக்கள் அனைத்தும் பெற்று உத்தமனாய் உலகு
போற்ற ஏற்றமுடன் பல்லாண்டு வாழி!
ஊருவந்து போற்ற வாழி! கோணேசர் அருள் பொழிய வாழி!
ஏழுலகும் புகழ் மணக்க இன்பமுடன் வாழி வாழி!

வாழத்தி வழங்கும்,
**திரு. ஞான. திருக்கேதீஸ்வரன்**
**குடும்பத்தினர்**

50 Years Golden Jubilee

# மனம் நெகிழ்ந்து வாழ்த்தும் சயன்ஸ் அக்கடமி ஆசிரியர்கள்



சாதனைகளில் சளைக்காத சரா,
சதா சிந்தனைகளில் சிறகடிக்கும் சரா
கல்வியின் கலங்கரை விளக்கமே சரா
விளங்காத புத்தகமே சரா!

**திரு. S. ஸ்ரனிஸ்லாஸ்**
வரலாறு



இரக்கத்தின் உறைவிடமே, இன்பத்தின் ஊற்றே
அகவை ஐம்பதில் தடம்பதிக்கும் இன்பம் போல்
பல்லாண்டு காலம் நீடூழி வாழ என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

**திரு. Y. பாலசுப்பிரமணியம்**
கணிதம்



உயர்விற்கு வழி காட்டும் உத்தமரே
எந்தன் உயிரினில் கலந்திட்ட ஒளி விளக்கே!
நிறைந்த நல் பொன்விழா நாள்தனில்
நின்பணி போற்றுகின்றேன்!

**திரு. I. குமரதாசன்**
தமிழ்



சம்பூரிலுதித்து நல்லூரானருளால் ஏற்றங்கண்டு
பொன்னகவை பூண்டின்று புகழ்வீசும்
எண்ணஞ்சொல் செயல்வீரனாம் - ச(ர)ா
புவனேஸ்வரனை வாழ்த்துகின்றேன்

**திரு. ப. தமிழ்மாறன்**
தமிழ்



எமது இயக்குநர் திரு. சரா புவனேஸ்வரன் அவர்கள்
பொன்விழாக் கண்டு நீடூழி நலம் வாழ
என்றும் என் நல்வாழ்த்துக்கள்!

**திரு. P. வாசவன்**
ஆங்கிலம்



எந்தக் காரியத்தையும் பயமின்றி உறுதியுடனும் உளவன்மை யுடனும் செய்து முடிக்கும் எமது பொன்விழா நாயகன் சரா புவனேஸ்வரன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

**திரு. M. பிரியந்தன்**
விஞ்ஞானம்



பொன்விழா நாயகராம் சரா. புவனேஸ்வரனே
சர்வேஸ்வரன் துணையால் (அருளால்) சந்தோஷமாக
வாழப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. V. சுந்தரராஜசர்மா**
சைவசமயம்



எல்லோருக்கும் முன் மாதிரியாகத் திகழும் எமது நிறுவன இயக்குனரை அவரது 50வது அகவையில் பாராட்டி வாழ்த்து கின்றேன்.

**திரு. J.A. மயூரேஸ்**
ஆங்கிலம்



சாதனைகளின் சரித்திரம் தான் சராசேர்
பொன்விழாக் கண்டு புதுப்பொலிவுடன் மிளிர
என் மனம் நிறைந்த நல் வாழ்த்துக்கள்!

**திரு. S. வைகுந்தநாதன்**
தமிழ்



தளராத துணிவுடன் பணி செய்யும் நாயகனே!
தம்பணி வளர்ந்து தமிழ்ப் பணி சிறக்க
அன்பு மாணவனின் கோடி வாழ்த்துக்கள்!

**திரு. S. சிவசங்கர்**
வரலாறு, புவியியல்



எடுத்த முடிவை சடுதியில் கடுகதியில் நிறைவேற்றும் பண்பை உடைய எமது பொன்விழா நாயகனைப் பாராட்டி வாழ்த்து கின்றேன்.

**திரு. T. பாலகணேஷ்**
விஞ்ஞானம்



Respective Sara sir,
I wish you to celebrate the Golden jubilee.
We was stund about your balanced personality. I wish to flourish in your future.

**P.R.Kayooran**
Maths



எந்தவொரு சவால்களையும் துணிவுடன்
எதிர்கொள்ளும் சேவையாளன்
பொன்விழாக் கண்டு சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்!

**திரு. P. உதயராசா**
கணிதம்



சயன்ஸ் அக்கடமியின் நிர்வாக இயக்குநரும்
எனது நண்பனுமான பொன்விழா நாயகன் சரா
இன்று போல் என்றும் வாழ வாழ்த்துகிறேன்!

**திரு. K. புஸ்பராஜா**
வணிகக்கல்வி



எல்லோர் மனங்களிலும் நிலையாக
என்றும் பெருமையுடன் நிறைந்திருக்கும்
நிறுவன இயக்குநரே நீடுழி வாழ்க!

**திரு. T.ஹரிஷானந்**
சுகாதாரம், உடற்கல்வி



தன்னம்பிக்கையும் தளரா முயற்சியும் கொண்டு உடல் சோர்ந்தாலும் உள்ளம் சோராது திடமாகக் கடமையாற்றுபவர்.

**செல்வி. V. தேவகி**
சைவசமயம்



அகவை ஐம்பதில் தடம் பதிக்கும் எமது இயக்குநர் அவர்கள் பல்லாண்டு காலம் நீடூழி வாழ எனது இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

**திரு. S. ரவிசங்கர்**



அகவை ஐம்பதைத் தொட்ட போதிலும்
மாறாத இளமைத் தோற்றம் கொண்டே
பார் போற்ற மேலும் பல்லாண்டு வாழ்ந்து
பணி தொடர வாழ்த்துகின்றேன்.

**திரு. R.சிவபுத்திரன்**
கணிதம், சுற்றாடல்



எடுத்த காரியத்தை நினைத்த மாத்திரத்தில் செய்து முடிக்கும்
ஆற்றல் கொண்ட பொன்விழா
நாயகரான திருவாளர் சரா புவனேஸ்வரன்
அவர்களுக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!

**திரு. S. வினோத்குமார்**
தமிழ், சைவசமயம்



அகவை ஐம்பதை தொட்டு விட்ட அன்பிற்கும்
பண்பிற்கும் முகவரியாய் நிர்வாகத்தின் நிறைகுடமாய்
எந்நாளும் திகழ்கின்ற எம் ஆசான்
வெற்றியின் சிகரங்களைத் தொட்டு
வீறுநடை போட வாழ்த்துகிறேன்.

**திரு. M. ஜெறோம்**
விஞ்ஞானம்



ஐம்பது என்னும் அகவையைத் தொட்டு
அனைவரதும் அன்பினைப் பெற்று
எட்டுத் திக்கும் புகழ் தொட்டு
வாழுங்கள் நல் ஆயுள் பெற்று

**திரு. J. ஜெயச்சந்திரன்**
சுகாதரம் உடற்கல்வி

50வது பிறந்த தினத்தை கொண்டாடுகின்ற எமது நிறுவன இயக்குநர் திரு. சரா புவனேஸ்வரன் அவர்கள் எந்நாளும் சீரும் சிறப்புடனும் மகிழ்ந்து வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு. Y. அச்சுதன்**
ஆங்கிலம்





50வது அகவையில் அடியெடுத்து வைக்கும் எமது ஆசான்
திரு. சரா புவனேஸ்வரன் அவர்களை
சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி. S. சாந்தினி**
ஆரம்பப் பிரிவு

பொன்விழாக் காணும் எம் நிறுவன இயக்குநர்
ஏணிப்படியாக நின்று ஏற்றம் காண வைக்கும் எம் ஆசான்
வாழ்வில் வளமுடன் வாழ வாழ்த்துகின்றேன்.

**திரு. Y. முகுந்தன்**
ஆங்கிலம்





சேவையே குறிக்கோளாகக் கொண்டு
செயற்படும் நிறுவன இயக்குநரே
என்றும் பல்லாண்டு வாழியவே!

**செல்வி A. யூட்மேரி**
குடியுரிமைக்கல்வி



தெளிந்த சிந்தனையுடனும் உளத்தூய்மையுடனும்
பணியாற்றுகின்ற பொன்விழா நாயகனுக்கு
எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

**திருமதி. S.தர்சினி**
ஆரம்பப் பிரிவு



பண்பின் உறைவிடமாய் பாசத்தின் இருப்பிடமாய்
ஆசிரியர்களுக்கோர் கலங்கரை விளக்காய்
நிர்வாகத்திறனுக்கோர் முன்மாதிரியாய்
இன்றுபோல் என்றும் வாழ்க!

**திருமதி. S. உதயச்செல்வி**
ஆரம்பப் பிரிவு



உங்களின் வழிகாட்டலில் கல்விகற்று
உங்களின் தலைமைத்துவத்தின் கீழ் பணிபுரியும்
இப்பிறப்பில் பெற்ற பெரும்பேறுக்காய்
இறைவனுக்கு என் நன்றிகள்
**பொன்மனச் செம்மல் பொன்விழாக்கண்டு பெரும் புகழ் ஈட்டட்டும்.**

**திரு. S. சர்வானந்தன்**



நல்லதோர் ஆசானாக, வழிகாட்டியாக
என்றும் திகழ்கின்ற பொன்விழா நாயகன்
சிறப்புடன் வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு. S. சத்தியநிர்மலன்**



ஒழுக்கத்தினை முதல் நிலையில் மதிக்கும் எமது ஆசிரியரான சரா புவனேஸ்வரன் அவர்கள் நீடூழி காலம் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**செல்வி R. சுகன்யா**
ஆரம்பப் பிரிவு

# மனம் நெகிழ்ந்து வாழ்த்தும் கிழக்குத் தோழர்கள்



எனது உறவினனாக, உள்ளத்தூய்மையுடன் என்றும் மதிப்பளித்து வாழும் சரா.புவனேஸ்வரனுக்கு என் இனிய பொன்விழா வாழ்த்துக்கள்.

**க.பேரானந்தம்**
அதிபர்,
தி/செல்வநாயகபுரம் இ.ம.வி.

என்னுடைய பள்ளித்தோழனாக, மைத்துனனாக இன்றுவரை சாதாரணமாகப் பழகும் சரா.புவனேஸ்வரனுக்கு என் மனம் நிறைந்த பொன்விழா வாழ்த்துக்கள்.

**வ.செல்வநாயகம்**
அதிபர்,
தி/மாதுமையம்பாள் வித்தியாலயம்.





என் உற்ற தோழனாக என்றும் என்னுடன் கூடிவாழும் உற்ற நண்பனான சரா.புவனேஸ்வரனுக்கு எனது குடும்பம் சார்ந்த உளத்தூய்மையான பொன்விழா வாழ்த்துக்கள்.

**பா.தேவராஜா**
அதிபர்,
தி/கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம்.

உளத்தூய்மையின் அடையாளமாக அனைவரையும் அரவணைத்து எப்பொழுதும் இணைந்து வாழும் பள்ளித்தோழன் சராவுக்கு எனது உறவு சார்ந்த பொன்விழா வாழ்த்துக்கள்.

**க.யோகானந்தன்**
அதிபர்,
தி/கோணலிங்க வித்தியாலயம்.





என்னருமைச் சோதரனாய் எப்பொழுதும் முதன்மையாகச் சாதிக்கத் துடிக்கும் சரா.புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.

**சி.தவநாதன்.**
உதவிக்கல்விப் பணிப்பாளர்,
திருமலை கல்வி வலயம்.

nான்பணியாற்றும் பாடசாலையின் பழையமாணவனும், பாடசாலைமீது பற்றுக்கொண்டவருமான பெருமைக்குரிய சரா.புவனேஸ்வரன் அவர்களுக்கு என் இனிய பொன்விழா வாழ்த்துக்கள்.

**சோ.பாக்கியேஸ்வரன்**
அதிபர்,தி/சம்பூர் மகாவித்தியாலயம்.





நல்ல விளையாட்டு வீரனும், துடிப்புள்ள நண்பனும், இன்ப துன்பத்தில் இனசனம் பாராது பங்குகொள்ளும் உளத்தூய்மை யான சரா.புவனேஸ்வரனுக்கு அன்புகலந்த பொன்விழா வாழ்த்துக்கள்.

**ம.சச்சிதானந்தம்**
அதிபர்,தி/சம்பூர் ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

சராவென்ற தந்தையின் நாமத்தை இன்றுவரை பாதுகாத்துவரும் பண்பான நண்பன் சரா.புவனேஸ்வரனுக்கு மகிழ்வுடன் எனது பொன்விழா வாழ்த்துக்கள்.

**இ.இரத்தினசிங்கம்**
அதிபர்,
தி/சேனையூர் மத்திய கல்லூரி.





முதலாவது வயதிலிருந்து கூடிவிளையாடி, ஒன்றாகக்கற்று இன்றுவரை அது தூர்ந்துவிடாமல் உயரிய நட்புரிமையுடன் உறவாடும் உள்ளன்புத்தோழன் சரா.புவனேஸ்வரனுக்கு இனிய பொன்விழா வாழ்த்துக்கள்.

**க.சந்திரானந்தம்**
பிரதிஅதிபர்,
தி/சம்பூர் ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

உறவுகளை மதித்து, சமூகத்தை நேசித்து உள்ளத் தூய்மையால் உரிமையோடு உறவாடும் அன்பு நண்பன் சரா.புவனேஸ்வர னுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.

**சி.கிருபதாஸ்**
அதிபர்,
தி/சூடைக்குடா பாரதி வித்தியாலயம்.



என்னையும், என்சார்ந்த சமூகத்தையும் மதித்து, என்மீது அளப்பரிய பற்றுதலும், நம்பிக்கையும் கொண்ட சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.

**சோ.கங்கேஸ்வரன்**
அதிபர்,
தி/கூனித்தீவு நாவலர் வித்தியாலயம்.





நல்ல நண்பனாக, ஆலோசகனாக எதையும் செய்துமுடிக்கும் ஆற்றல் உள்ளவனாக, கொடுத்தவாக்கினைக் காப்பாற்றுப வனாக வாழும் நண்பன் சரா அவர்களுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.

**க.இராசதுரை**
அதிபர், தி/ஐங்கரன் வித்தியாலயம்.

எனது தம்பியாக, நண்பனாக எப்பொழுதும் எம்மீது பாசம் கொண்டவனாக எங்கள் குலத்தின் காவலர்களுள் ஒருவனாக விளங்கும் சரா.புவனேஸ்வரனுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.

**பே.இராமநாதன்**
காவல்துறை தலைமை அதிகாரி,
திருகோணமலை.





நீண்டகாலம் அன்புத்தோழனாக, எனது மைத்துனனாக இன்பத் திலும், துன்பத்திலும் எப்பொழுதும் பங்கேற்கும் சரா.புவனேஸ்வரன் அவர்களுக்கு என்குடும்பம் சார்ந்த பொன்விழா வாழ்த்துக்கள்.

**த.கணேசலிங்கம்**
பிரதிஅதிபர்,
தி/இளக்கந்தை அ.த.க.பாடசாலை.

சமகாலத்து ஆசிரிய நண்பனாக, சமகாலத்து வளவாளத்தோழனாக என்றும் நட்புரிமையோடு உறவாடும் சரா.புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.

**ந.ஜனகன்**
சிரேஸ்ட ஆசிரியர்,
தி/அல்நூஹியா முஸ்லீம் வித்தியாலயம்.



எனது அன்புத் தம்பியாக எமது குடும்பத்தில் ஒருவனாக காணும் நேரமெல்லாம் அண்ணாச்சி என்று உரிமையுடன் அளவளாவும் சரா.புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.

**ந.இராசலிங்கம்**
பிரதம நூலகர். மூதூர், திருகோணமலை.





எப்பொழுதும் சமூகத்திற்காகச் சிந்திக்கும், தனது தந்தையாரைப் போல வாழ்ந்துகொண்டிருக்கும் சரா.புவனேஸ்வரன் அவர்களுக்கு என் உளங்கனிந்த பொன்விழா வாழ்த்துக்கள்.

**கோ.குமாரநாயகம்**
சிரேஸ்ட உத்தியோகத்தர்,
அஞ்சல் அலுவலகம், மூதூர்.

எனது தம்பியாக, என்குழந்தைகளுக்கு அன்புச் சித்தப்பாவாக எம்மோடு எப்பொழுதும் கூடிவாழும் சரா.புவனேஸ்வரனுக்கு மனம் நெகிழ்ந்த பொன்விழா வாழ்த்துக்கள்.

**சி.வில்வநாதன்**
சிரேஸ்ட ஆசிரியர்,
தி/மாதுமையம்பாள் வித்தியாலயம்.





பாடசாலைத் தோழனாக, உயிர் கொடுக்கும் நண்பனாக நல்ல மனிதனாகத் திகழும் சரா.புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.

**சி.ஜெயராஜா**
சிரேஸ்ட ஆசிரியர்,
தி/மாதுமையம்பாள் வித்தியாலயம்.

பிறப்பிலிருந்து பள்ளிப்பருவம் முதல் இன்றுவரை என்மீது அளவற்ற பாசம் வைத்திருக்கும் அன்பு உறவினன் சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.

**க.லோகராசா**
சிரேஸ்ட உத்தியோகத்தர்
நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை.திருமலை.



எனது பாசமிகு அண்ணனாக அண்ணாச்சி என்று சொல்லு மளவுக்கு உரிமையோடு உறவாடும் சரா.புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.



**சி.நாகேந்திரம்**
காவல்துறை அதிகாரி, திருமலை.



ஒன்றாகக்கற்று கலகலப்புக்கு என்றும் குறைவில்லாது எப்பொழுதும் எம்மை மகிழ்வாகப் பார்க்க விரும்பும் தம்பி சரா.புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.

**இ.காளிராஜா**
சிரேஸ்ட உத்தியோகத்தர்,

எனது அண்ணாச்சியாக பிறப்பு முதல் எம்மோடு ஒன்றியே வாழும் சரா.புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.



**சி.தில்லைநாதன்**
சிரேஸ்ட ஆசிரியர்,
தி/சேனையூர் மத்திய கல்லூரி.



நல்ல ஆசிரியராக, விரிவுரையாளராக எமக்கெல்லாம் நல்ல வழிகாட்டியாக விளங்கும் சரா.புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது பொன்விழா வாழ்த்துக்கள்.

**ம.மகேந்திரராஜா**
சிரேஸ்ட ஆசிரியர்,
தி/விக்னேஸ்வரா ம.வி.திருமலை.

எனதருமை மைத்துனனாக ஆசானாக சிறப்புடன் வாழும் சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு எமது பொன் விழா வாழ்த்துக்கள்!



**பொ. உதயகுமார்**
சிரேஸ்ட ஆசிரியர்
தி/ ஐங்கரன் வித்தியாலயம்.



பொன்விழா நாயகனுடன் சயன்ஸ் அக்கடமி ஆசிரியர் குழாம்

# புவனம்

50 Years
Golden Jubilee

## பொன்விழா நாயகன் பற்றிய ஆக்கங்கள்



# சரா ஒரு சாகரம்



**வி.ரி.சகாதேவராஜா** (M.Ed) A.D.E.
தலைவர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

மக்களுக்காக உழைப்பவர்கள் மக்கள் மனங்களில் என்றும் நிறைகின்றார்கள். அப்படிப்பட்டவர்களை வாழும்போதே மதித்து வாழ்த்திப் பாராட்டுதல் என்பது அவருக்கு மாத்திரமல்ல எல்லோருக்கும் பெருமை தருவதாகும். அந்தவகையில் சரா பொன்விழாக் குழுவினரை முதற்கண் பாராட்ட விரும்புகின்றேன்.

**"ஒரு சிறந்த மனிதன்
உலகின் அனைத்து உயிர்களுக்கும் சிறந்த நண்பனாவான்"**

மனிதர்கள் அடிப்படையில் மகிழ்வாகவும் உளத்திருப்தியுடனும் வாழவே விரும்புகின்றனர். இந்த எண்ணத்துடன் ஏனையோரும் மகிழ்வாகவும் உளத்திருப்தியுடனும் வாழ உதவுகின்றனர். அந்தச் சிலரில் நண்பன் சரா முதன்மையானவர்.

**கற்றவர்கள் அனைவரும் சிறந்த சேவையை வழங்கியதுமில்லை
சிறந்த சேவைகளை வழங்கும் எல்லோரும் கற்றவர்களுமில்லை**

ஆனால் சரா கற்றவர் மாத்திரமல்ல சிறந்த சேவையாளனுமாவான். அவரைச்சுற்றி எந்நேரமும் ஒரு கூட்டம் இருந்து கொண்டேயிருக்கும். அது அவரது ஆளுமைகளுள் ஒன்று. "அரியாலை சரா அங்கிள்" அவர்களில் மறக்கமுடியாத ஓர் ஆளுமை.

பொன்விழா தினத்தில் ஓர் உண்மையை எடுத்தியம்ப விரும்புகிறேன். நெஞ்சுரமிக்க நேர்பார்வையும் சீரிய சிந்தனையும் கொண்ட தொழிற்சங்கவாதியான நண்பன் சரா எனது நெருங்கிய உறவினன் என்பது பலருக்குத் தெரியாது. அதேவேளை வயதிலும் மூத்தவர். என்றாலும் அவர் என்னை சேர் என்றே அழைப்பது வழமை. அது அவரது நற்பண்புகளில் ஒன்று.

**வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழாதவர்**

இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் என்ற பிரமாண்டமான விருட்சத்தில் 1988 களில் இணைந்துகொண்ட யான் காரைதீவு சங்கத்தின் செயலாளராக, சம்மாந்துறை வலய உப செயலாளராக, கல்முனை மாவட்ட செயலாளராக பல பதவிகளை வகித்து 2001இல் சங்கத்தின் வருடாந்த மாநாடு திருமலையில் நடைபெற்றபோது தேர்தலில் அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் பிரசாரச் செயலாளராகத் தெரிவாகி பணியாற்றினேன்.

எனது தொழிற்சங்க வாழ்வியலுக்கு ஆணிவேராகத்திகழ்ந்த மாமேதை உயர்திரு.த.மகாசிவம் அவர்களை இத்தருணத்தில் நினைவுகூருகின்றேன். பிரசாரச் செயலாளர் என்ற பதவிக்கு புதுவரைவிலக்கணம் கொடுத்து சங்கத்தை உயிர்ப்பாக வைத்தபெருமை சகாவைச் சாரும் என்று பல முக்கிய அமர்வுகளில் அவர் கூறியமை இன்னும் எனது அடிமனதில் ரீங்காரமிட்டுக்கொண்டிருக்கிறது.

பின்னர் 2010இல் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்ற ஆட்சிமன்றக் கூட்டத்தில் பதில் தலைவராக தெரிவானேன். 03.10.2011இல் யாழ்ப்பாணம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்ற பிரமாண்டமான வருடாந்த மாநாட்டில் - தேர்தலில் கணிசமான வாக்கு வித்தியாசத்தில் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டேன். அத்தருணம் பொதுச் செயலாளராக போட்டியின்றித் தெரிவானவர் நண்பன் சரா அவர்கள். தமிழர் ஆசிரியர் சங்க வரலாற்றில் தேர்தலொன்றில் போட்டியின்றி தெரிவான பொதுச் செயலாளர் என்ற பெருமை சராவையே சாரும்.

**இதனை இவன் முடிப்பான் என்றாய்ந்து**
**அதனை அவன் கண் விடல்**

இது குறட்பா.

அதற்கிணங்க சங்கத்தின் முதுகெலும்பாகத் திகழும் பொதுச்செயலாளர் பதவியை நீண்டகாலம் அலங்கரித்த திரு.த.மகாசிவம் அவர்களின் இடத்தை நிரப்பும் ஒருவராக நண்பன் சரா தெரிவாகியமை இறைவனின் ஏற்பாடே.

உலகின் பாரிய ஆசிரியர் சக்தியான சர்வதேச கல்வியகத்தில் உறுப்புரிமை பெற்ற இலங்கையின் 06 ஆசிரிய தொழிற்சங்கங்களில் ஒரேயொரு சிறுபான்மையின மொழிவழித் தொழிற்சங்கமாக திகழ்வது இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் மாத்திரமே. பல பாரம் பரியங்களைக்கொண்ட அச்சங்கத்தின் தலைவராக தெரிவாவேன் என கனவிலும் யான் நினைத்திருக்கவில்லை.அந்த எண்ணம் கூட எனக்கு இருந்திருக்கவில்லை.

ஆனால் அது செயல் வடிவம் பெறுவதற்கு நெஞ்சுரம் கொடுத்ததில் முதன்மை யானவர்கள் திரு.மகாசிவம் அவர்களும் நண்பன் சரா அவர்களுமே. அவர்களது ஆசீர் வாதத்துடன் எனது உயிரினும் மேலான ஆசிரிய சகோதரர்கள் எனக்களித்த வரலாற்று முதிசமாக இதனைக் கருதுகின்றேன்.

எனது 25 வருட தொழிற்சங்க வரலாற்றில் எனது தலைமைக்காலத்தில் பொதுச் செயலாளராக இருக்கின்ற நண்பன் சரா தனித்துவமானவர். அவரது பிரசன்னமே என்னைத் தலைமைப்பதவி வகிக்க உந்துதலளித்தது என்றால் அதுமிகையாகாது.

19.02.2012இல் அரியாலையில் சங்கத்தின் தலைமையகத்திறப்பு விழா நடைபெற்றது. அவ்விழாவிற்கு இரவுபகலாக தனது சகாக்களுடன் தன்னந்தனியனாக நின்று தன்னை அர்ப்பணித்த சரா, கண்ணனை நிகர்த்த நெஞ்சுரம் மற்றும் வைராக்கியம் கொண்ட அசாத்திய பல்பரிமாண ஆளுமை கொண்டவராவார்.

மனிதனுக்குள் ஏலவே பொதிந்திருக்கும் பரிபூரணத்தன்மையை வெளிப்படுத்து வதே கல்வி என்று சுவாமி விவேகானந்தர் கூறுகின்றார். அதன் வெளிப்பாடாக கோப்பாய்

ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் என்ற வகிபங்கைக் குறிப்பிடலாம். அங்கு அவருக்கென்று பல விசிறிகள் இருந்தனர். அவருக்காக எதையும் செய்யக்கூடிய ஒரு கற்றவர்குழாமும் இருந்தது. அது அவரது ஆளுமைக்குக் கிடைத்த அங்கீகாரம் எனலாம்.

புலமைப்பரிசில் பரீட்சைக்கான தயார்படுத்தல் கருத்தரங்குகளை நடாத்துகின்ற பாணி அலாதியானது. யாழ்ப்பாணத்தில் அவரது வீட்டிலும் சரி, சயன்ஸ் அக்கடமியிலும் சரி மாணவர்கள் கல்வி கற்கும் ஒழுங்குச் செயற்பாட்டைக்கண்டு பிரமித்துப்போயிருக் கிறேன். அங்கே அந்த சைக்கிள்கள் வைக்கப்பட்டிருக்கும் ஒழுங்கு, அழகு பலரையும் மலைக்க வைக்கும்.

உளவியலாளர்கள் ஆளுமையின் பிரதான 5 கூறுகளை இவ்வாறு வகுத்துள்ளனர்.

1. உறுதியான மனவெழுச்சி (Emotional Stablity)
2. புறமுகமனத் தன்மை (Extraversion)
3. சிறந்த மனமுள்ள தன்மை (Openness)
4. ஒத்துப்போகும் தன்மை (Agreeableness)
5. மனச்சாட்சிக்கிணங்கச் செயற்படல் (Conscientiousness)

இந்த ஐந்து ஆளுமைக் கூறுகளும் ஒருங்கே அமையப்பெற்றதுடன் வாழ்விலும் அவற்றைக் கடைப்பிடித்துவரும் ஒருவராக நண்பன் சரா திகழ்வது பெருமை தருகிறது. சராவை நினைக்கையில் அமரர் வீ.ஆனந்தன் அவர்களின் கவிதை வரிகள் என் மனக்கண் முன் நிழலாடுகின்றன.

**என்னை இன்னொருவர் காணும்போது**
**அன்னார் முகம் மலரவும்**
**அதனறி குறியாய்**
**புன்னகை அவர் முகத்தில்**
**பூக்கவும் வேண்டும்.**
**இதுவே நான் எடுத்த பிறவிப்பயன்**

தன்னோடு பழகுபவர்களை இலகுவாக ஆட்கொண்டுவிடுகின்ற வசீகரமான அவரது கள்ளமற்ற சிரிப்பும் முன்பின் தெரியாதவர்களுடனும் கூட முதற்சந்திப்பிலேயே மிகவும் அன்னியோன்யமாக அளவளாவும் அவரது சுபாவமும் அன்புள்ளத்தின் வெளிப்பாடாகும். அவருக்கு நிகர் அவரே.

**"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று"**

என்ற வள்ளுவனின் வாக்கிற்கமைய புகழோடு வாழும் அவர் இவ் வையகத்தில் மேலும் பல சேவைகளைச் செய்து பல்லாண்டு காலம் வாழ்க என வாஞ்சையுடன் வாழ்த்துகின்றேன்.

# பொதுநலத்தொண்டன்



S.R. **சத்தியேந்திரம்பிள்ளை**
உபபீடாதிபதி
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,
இணைப்பாளர்,
தேசிய கல்வி நிறுவகம்

எனது அருமை நண்பர் சராவும் நானும் 1988ஆம் ஆண்டு ஒரே தினத்தில் ஆசிரியத் தொழிலுக்கு வந்தோம். அன்றிலிருந்து இன்றுவரை சராவின் கல்விப் பணிபற்றியும் சமூகப்பணி பற்றியும் நான் நன்கு அறிவேன். பரந்த ஆசிரிய சமுதாயத்திற்கு சரா தற்போது ஆற்றி வரும் மகத்தான பணி அனைவராலும் அறியப்பட்ட ஒன்றாகக் காணப்படுகின்றது. எனினும் கடந்த காலங்களில் சரா கல்விச் சமுதாயத்திற்கு ஆற்றிய பணிகளில் ஒருசிலவற்றையேனும் கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

இன்று வடபகுதியில் உன்னத கல்வி நிறுவனமாக விளங்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆரம்பகால வளர்ச்சியில் சராவின் பங்களிப்பும் அளப்பரியது. கல்வியியற் கல்லூரிக்கென மைதானம் ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டபோது அதற்கென பெருந்தொகை நிதி தேவைப்பட்டது. இந்த நிதியைத் திரட்டுவதற்காக மிகச்சிரமமான முயற்சியில் ஈடுபட்டோம். 2001ஆம் ஆண்டு நல்லூர், வல்லிபுரக் கோயில் ஆகிய இடங்களில் பாதாளக்கிணறு, சைக்கிள் ஓட்ட நிகழ்வைத் தொடர்ந்து இரண்டு வாரங்கள் நடத்தினோம். இந்த நிகழ்வுக்கு இரவுபகல் பாராது அவர் உதவியிருந்தார்.

2001ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் நடைபெற்ற மூன்று போட்டிகளில் யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் பங்குபற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆனால் போக்குவரத்து, தொலைத்தொடர்பு சேவைகள், நிதிப் பிரச்சனை என்பன காரணமாக முகிழ்நிலை ஆசிரியர்கள் போட்டிகளில் பங்குபற்ற முடியாதநிலை காணப்பட்டது. அப்போது நான் பீடாதிபதிக்குரிய பதிற்கடமையை மேற்கொண்டிருந்த நாட்கள், அந்த நேரத்தில் எனக்குக் கைகொடுத்தவர் நண்பர் சரா ஆவார். ஒவ்வொரு மாணவருக்கும் 2500/= கப்பல் போக்குவரத்துச் செலவாக ஏற்பட்டது. பெரும்பாலான மாணவர்கள் அந் நிதியை வழங்க முடியாத நிலையில் இருந்தார்கள். இப்பிரச்சினை பற்றி சிந்தித்துக்

கொண்டிருந்தபோது சரா வந்தார். மாணவர்களுக்கு கஷ்டம் ஏற்படுத்த வேண்டாம். மாண வர்களிடம் ஒரு சதக் காசையேனும் வாங்க வேண்டாம். தேவைப்படும் நிதி முழுவதையும் (16000/=) அன்பர்களிடமிருந்து திரட்டித் தருகின்றேன் எனக்கூறி, சொன்னதை செயலிலும் காட்டினார். 21 நாட்கள் நீண்ட பயணம் அது. திருகோணமலை, வவுனியா, கொழும்பு எனப் பயணங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அனைத்து சிரமங்களை யும் போக்குவதற்கு கடினமாக உழைத்தவர் சரா. இறுதியில் சகல போட்டிகளிலும் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி முதலாம் இடம்பெற்றதுடன் கல்வி அமைச்சால் முதன்மைக் கல்லூரியாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

சராவின் வகிபங்குகள் பன்முகப்பட்டவை. சிறந்த தலைவனாக, சிறந்த நிர்வாகியாக, சிறந்த சமூக சேவையாளனாக, சிறந்த வழிகாட்டியாக, சிறந்த குடும்பத்தலைவனாக அவர் விளங்கி வருகின்றார். தான் வகித்து வருகின்ற பொறுப்புக்களினூடாக அவர் ஆற்றி வருகின்ற சேவைகள் உன்னதமானவை.

தேசிய கல்வி நிறுவன முன்னாள் பணிப்பாளர் திருமதி லிலானி அமரசிங்க அவர்கள் சராவின் கல்வி நிலையத்திற்குச் சென்று பார்வையிட்ட பின் "இப்படி சிறந்த கட்டுக்கோப்புடன் நடக்கும் ஒரு கல்வி நிறுவனத்தை தான் முதன்முறையாக தற்போதுதான் பார்ப்பதாகக் கூறினார்."

இந்தவகையில் ஒரு சிறந்த தலைவனுக்குரிய வரைவிலக்கணமாக அவர் திகழ்கின்றார். ஆசிரிய சமூகத்தின் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு அவர்கள் கௌரவம்மிக்க பிரஜைகளாக வாழ்வதற்காக சரா மேற்கொண்டுவரும் தற்போதைய பணி பாராட்டத்தக்கது. அவரது நீண்டகால அனுபவங்களை பிரயோகிக்கும் களமாகவும் தற்போதை பணி அமைகிறது. அதன் பயன் சமுதாயத்திற்கு சென்றடைவது மகிழ்ச்சிக்குரியது. அந்தவகையில் ஆசிரிய சமூகத்தின் பாதுகாவலனாக அவர் விளங்கி வருகின்றார்.

இவரது பணிக்காக அனைவரும் ஒன்றுசேர்ந்து எடுக்கும் இந்த பொன்விழா பொருத்தமானது. பொன்விழா நாயகனுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் நிறைவான அர்ப்பணிப்பான சேவைகளை சமூகத்திற்கு ஆற்றிய அவருக்கு இப்படி ஒரு மகத்தான பொன்விழா நிகழ்வை ஏற்பாடு செய்த குழுவினருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

# தமிழ் ஆசிரியர் சமூகத்தின் காவலன் சரா புவனேஸ்வரன்



**சி. தேவகுமாரன் (ADE)**
நிதிச்செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

ஒரு மனிதன் ஐம்பதாவது அகவையை அடைவதென்பது சாதாரண விடயமாகும். ஆனால் கல்வி கேள்விகளில் உயர்ந்து சமூகப் பணிகளில் சிறந்து, குடும்ப வாழ்வில் வெற்றி யடைந்து, பலருக்கும் நன்மைகள் பல செய்து யாவரும் போற்றும் நிலையில் அகவை ஐம்பதை அடைவதென்பது நாமெல்லாம் பெருமைப்படத் தக்கதும் பாராட்டக்கூடியதுமான விடயமாக உள்ளதுடன் வாழ்த்திப் புகழ வேண்டிய ஒன்றாகவும் காணப்படுகிறது. அவ்வாறாக அகவை ஐம்பதை எட்டியுள்ள சரா புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இளமைக்காலத்தில் கல்வியில் உயர்ந்து உலகம் போற்றும் உத்தம தொழிலாம் ஆசிரியத் தொழிலில் நுழைந்து மிகவும் பிற்பட்ட கிராமப் புறப்பாடசாலைகளில் முதல் நியமனத்தைப் பெற்று, அந்த மாணவர்களை முதன் நிலைக்குக் கொண்டு வந்த வரலாற்றுப் பெருமையை எய்தியதோடு மட்டுமல்லாது, அனுபவங்கள் பல பெற்று ஆசிரியர்களை வளப்படுத்தும் உயரிய தொழிலாகிய விரிவுரையாளர் பதவியை பலரும் போற்றும் வகையில் தான்சார்ந்த கலாசாலையை முதன்மை நிலைக்குக் கொண்டுவர அர்ப்பணிப்புடன் அரும்பாடுபட்ட நின்சேவையால் நாமும் உயர்ந்து நிற்கின்றோம்.

பாடசாலையில் முதல் நியமனம்பெற்று முதன்மாதச் சம்பளத்திலேயே எமது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு சந்தாப் பணத்தை வழங்கி தான் சார்ந்த ஆசிரியர் உலகிற்கே முன்னுதாரணமான சரா அவர்கள் அன்றிலிருந்து சங்கத்தின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் ஆர்வமுடைய ஒரு தொண்டனாக திகழ்ந்து வருகின்றார். முன்னாள் துணைப்பொதுச் செயலாளர் அமரர் த. பஞ்சலிங்கம் அவர்களுக்கு உறுதுணையாய் இருந்து சங்கத்தின் மூலவேராக செயற்பட்டார். உண்மையில் சரிந்துகொண்டிருந்த சங்கச் செயற்பாடுகளை தூக்கி நிலை நிறுத்தி உயர்ந்த நிலையடைவதற்காகப்

பாடுபட்ட பலருடன் சேர்ந்து சங்கமே தானானார்.

சங்கத்தின் தேவையையும் நிலைமை யையும் நன்குணர்ந்து சங்கத்தின் பொறுப்பான பதவிமூலம் அன்றைய நிதிச் செயலாளர் பதவியை பலரின் வேண்டு கோளுக்கு இணங்கி ஏற்றுக்கொண்ட சரா அவர்கள் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும்தற்போதையசிறந்த ஆலோச கருமாகிய திரு. த. மகாசிவம் அவர்களுக்கு பக்கதுணையாக நின்று சங்கத் தைத் தூக்கி நிலைநிறுத்த அரும்பாடுபட்டார். இலங் கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கடந்த தாய்ச்சங்க மகாநாட்டை நன்கு திட்டமிட்டு உயர்ந்த தரத்திலும் பலரும் வியந்து பாராட் டும் வகையிலும் நடாத்தி தமிழாசிரியர் அனைவருக்கும் அதிபதியானார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தின் பொதுச்செயலாளர் பதவியைப் பொறுப் புணர்ந்து ஏற்றுக்கொண்ட சரா புவனேஸ்வரன் அவர்கள் சங்கத்தின் சிங்க மானார். தன்னை நாடிவரும் ஆசிரியர் களுடைய இடர்களைக் கேட்டுணர்ந்து அவர் களைச் சரியாக வழிகாட்டி இடர் களைவதில் மிக்க ஆர்வமாகச் செயற்படுகின்றார்.

தொழிற்ச சங்க செயற்பாடுகளின்போது தான் கொண்ட கொள்கையை அதிகாரி களும் தேர்ந்துகொள்ளும் வகையில் சாது ரியமாக நடந்துகொள்வார். தமிழாசிரியர் இடர் களைவதிலும் அவர்களின் பணியை உயர்த்துவதிலும் இன்று தேசிய ரீதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் போது ஊணுறக்கம் பாராது, இரவுபகல் பாராது, கடின உழைப்பின் மூலம் இலங் கைத் தீவிலுள்ள தமிழாசிரியர் அனைவரின் உயர்ச்சிக்காகப் பாடுபடுவதோடு மட்டு மல்லாது தமிழ் மாணவர் உலகின் எதிர் கால நல்வாழ்வுக்காக பல்வேறு செயற் திட்டங்களையும் தீட்டி நடைமுறைப்படுத்தி வருவது யாவராலும் பாராட்டப்பட வேண் டிய விடயமாகும்.

தமிழ்மாணவர்கள் கல்விச் செயற்பாடு களில் ஆரோக்கியம் பெறவும், தமிழாசிரியர் கள் நலன் மேம்படவும் அயராது பாடுபடும் சரா புவனேஸ்வரன் அவர்களின் எதிர்காலம் சிறக்க வும் அவரும் அவருடைய குடும்பமும் நல் வாழ்வு வாழவும் அவருடைய தொழிற் சங்க நடவடிக்கைகள் தொடர்ந்தும் வெற்றி பெறவும் எல்லாம்வல்ல இறைவனின் நல் லாசிகளை இறைஞ்சி வேண்டுகின்றேன்.

# ஐம்பதுக்கு ஐம்பத்தைந்து



**முருகேசு கௌரிகாந்தன்**
(முதுநிலை விரிவுரையாளர்)
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்
கல்லூரி.

ஐம்பது என்பது ஆகுபெயராய் (எண்ணளவை யாகுபெயர்) வாழ்த்தப்பெறுபவரையும் ஐம்பத்தைந்து என்பது வாழ்த்துபவரையும் குறிக்கும். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பேராசிரியர் துரை. மனோகரன் அவர்களது மணிவிழாவிற்காக எம்மால் எழுதப்பெற்ற அறுபதிற்கு ஐம்பது எனும் பொருளில் அமைந்த கட்டுரை இப்போது பொன்விழாக் காணும் அன்புச் சகோதரர் சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு மேற்படி தலைப்பைக் கொடுத்து எழுதச்செய்தது. எங்கள் இருவருக்கும் இடையிலான வயது வித்தியாசம் ஆக ஐந்து ஆண்டுகளே என்பதாலும் சகோதர உரிமை இருவருக்கும் உண்டு. "தம்பியை உடையான் படைகண்டஞ்சான்" என்ற பழமொழியின்படி இன்று, இங்கு எனது நெஞ்சத் துணிவிற்கு அருந்துணையாக இருக்கும் அன்புத்தம்பி சரா. புவனேஸ்வரன் அவர்களது பொன்விழாவிற்கு நல்வாழ்த்துத் தெரிவிப்பதில் மனம்நிறைந்த மகிழ்ச்சியை அடைகின்றேன்.

2010ஆம் ஆண்டு எதிர்பாராத வகையில் யான் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு விரிவுரையாளராகப் பணியாற்ற வந்தபோது காந்தம் எனக் கவர்ந்தவர் சரா. புவனேஸ்வரன் அவர்கள். இவர் என்னை மிகவும் கவர்வதற்கு பல காரணங்கள் உள்ளன. இவரின் கல்விப்பணிகளும், சிறுமை கண்டுபொங்கும் இயல்பும் என்னை இவர்பால் கவரச்செய்யும் முக்கிய காரணிகளாக அமைந்துவிட்டன. இவ்விரு காரணிகளும் எமது சமூகத்திற்கு முன்னுதாரணமாகக் காட்டத்தக்கன.

திரு. சரா புவனேஸ்வரன் அவர்களின் கல்விப்பணிகளுக்கு பலமானதொரு கல்விப் பின்னணி இருந்தது தெரிகிறது. அனலைதீவைச் சேர்ந்தவரும் நல்லூர், கொழும்புத்துறை ஆகிய ஆசிரிய கலாசாலைகளில் விரிவுரையாளராக இருந்து அந்த காலத்தில் பல தமிழ்ப் புலமையாளர்களை குருவாக்கியவருமான பண்டிதர் திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் இவரது சிறிய தந்தையார் ஆவார். தங்கு தடையின்றிப்பேசும் தமிழ்ப்பேச்சாற்றல், யாவருக்கும் விளங்கும்படியாக எழுதும் எழுத்துத்திறன், மிகவும் இனிமையாகப்பாடும் ஆற்றல் முதலானவற்றை கணபதிப்பிள்ளை பண்டிதரிடமிருந்து தான் சரா. புவனேஸ்வரன்

பெற்றிருக்க வேண்டும் என்று தோன்றுகின்றது. பண்டிதர் அவர்கள் மறைந்தபின்பு அவரது பெறுதற்கரிய ஆயிரக்கணக்கான தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களை திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் தான் கற்பித்த யாழ். மத்திய கல்லூரிக்கும். கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கும் அன்பளிப்புச் செய்தமை சரா. புவனேஸ்வரன் அவர்களின் கல்வித் தொண்டின் உச்சமானதெனக் கூறலாம்.

இவர் ஒரு முன்னுதாரணமான உடற்கல்வித்துறை விரிவுரையாளர்; ஆரம்பக்கல்வி சமூகவியல் முதலான பாடங்களின் தலைசிறந்த போதனாசிரியர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 1991 - 1992 காலப்பகுதியில் இவர் பெற்ற உன்னதமான பயிற்சியால் இத்தகுதிகளை இவர் பெற்றிருக்கவேண்டும்.

2011ஆம் ஆண்டு எம்முடன் இணைந்தும் 2012ஆம் ஆண்டு தனியாகவும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆண்டிதழான “கலைமலர்” நூலின் காப்பாளராக இருந்து உரிய மலர்கள் சிறப்பாக வெளிவரக்காணமாயிருந்தவர். 2011ஆம் ஆண்டுக் கலைமலரிலே இவரால் எழுதப்பெற்ற “வடகோவையும் தென்கோவையும்” எனும் கட்டுரை எமது இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்று மாணவர்களுக்கு மிகவும் உபயோகமானது.

“சிறுமைகண்டு பொங்குவாய் வாவாவா” என்றார் பாரதியார். இன்று எமது கல்விச் சமூகத்தின் மத்தியில் சிறுமைத்தனங்கள் மலிந்துவிட்ட நிலையில், தமது சுயலாபத்திற்காக அவற்றை மூடிமறைத்து அல்லது பூசி மெழுகி, புழுகித்திரிபவர்களின் இழிசெயலைத் தமது மூன்றாவது கண்ணால் காட்டிய பெருமை சரா. புவனேஸ்வரனுக்குரியது.

நல்ல ஆசிரியர், நல்லமனை, நல்ல மனையாள், நன்மக்கள், நல்ல நண்பர்கள், நல்ல பெரியோர்கள், சகோதரர் சராவிற்கு இறைவனால் வழங்கப்பெற்ற அருங்கொடைகள்.

**“தக்கார் தகவிலார் என்பது அவரவர்**
**எச்சத்தாற் காணப்படும்”** (குறள்: 114)

எனும் வள்ளுவர் குறளிற்கு ஏற்ப திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் நடுவு நிலையை உடையவர் என்பதற்கு அவர் பெற்றிருக்கும் பெரும்புகழே தக்க சான்றாகும். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கௌரவ பொதுச்செயலாளராக இருந்து அரும்பணியாற்றும் அருமைச்சகோதரர் சரா. புவனேஸ்வரன் அவர்கள் மேலும் பல்லாண்டு கள் குடும்பசேமத்துடன் வாழ்ந்து எமது கல்வி உலகிற்கு பெரும்பணிகளையாற்றி மணிவிழா, பவளவிழா, நூற்றாண்டுவிழா எனப் பல விழாக்களைக் கண்டு மகிழ எல்லாம் வல்ல இறையருளை வேண்டி எனது நல்வாழ்த்துக்களை மனமகிழ்வோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.



# என் மனதுக்கினிய நண்பன்



**திரு. வீ. கருணலிங்கம்**
பிரதி அதிபர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற திருகோணமலை மண்ணிலே பிறந்தவர் நண்பர் சரா. புவனேஸ்வரன் அவர்கள். இளமையிலே வறுமையாக இருந்தாலும் எளிமையாக வாழ்ந்து பல தடைகளையும் தாண்டி கல்வி உலகில் கால் பதித்தவர். பள்ளிப் பருவத்திலே இணைப் பாடவிதான செயற்பாடுகளில் சாதனைகள் பல படைத்து சகலகலா வல்லவனாகத் திகழ்ந்தவர். இவர் கல்விப்புலத்தில் கொண்ட ஈடுபாட்டினால் 1988இல் ஆசிரியத் தொழிலை ஏற்று பாடசாலைகளில் நல்லாசிரியராகப் பணியாற்றினார். இவரது பணியில் முதலாவது படிநிலையில் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு ஆரம்பக்கல்வி பயிற்சி ஆசிரிய மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்டு 1991/1992 காலப்பகுதியில் எனது மனதுக்கினிய நண்பனாக உறவு கொண்டார். நேர்மை, சொல்லாடல், தற்துணிவு என்பவையே இவரோடு நண்பனாக உறவு கொள்ள வைத்தது. கலாசாலை வாழ்விலே எந்தவகையான செயற்பாடுகளானாலும் சரி சரா புவனேஸ்வரன் அவர்களது தொழிற்பாடு பெரும் பிரதிபலிப்பாக இருக்கும். பேச்சுவன்மை, இனிமையான இசையமைப்பு, துணிச்சலான நாடகப் பாத்திரப் படைப்பு என்றவாறு பல்துறைப் பரிமாணங்களிலே சிறந்து விளங்கிய ஒரு சகல கலாவல்லவன் என்றே நான் பார்க்கின்றேன். தற்போது பக்கத்திலிருந்து உற்று உற்றுப் பார்த்தாலும் நம்ப முடியவில்லை என்னால். வயதைத்தவிர எந்த மாற்றமும் தெரியவில்லை. உடல், உள்ளம், உணர்வு, உறுதி, சிந்தனை, செயல், திறமை, பேச்சு, எழுத்து, பழக்கம், நெருக்கம், பண்பாடு எவுதும் மாறவில்லை. இவரிடம் மயிலின் மென்மையும் இருக்கும், மலையின் உறுதியும் இருக்கும். இசையின் அசைவும் இருக்கும் இடியின் ஒசையும் இருக்கும் எல்லாமே அன்று போலத்தான் இன்றும்.

குருசீட உறவினை இன்று நிலையான தாக கட்டிக் காத்து வருகின்ற பெருமையையும் கொண்டவர் சரா புவனேஸ்வரன் அவர்கள். எந்த விரிவுரையாளராயினும் சரி அன்று போல் இன்றும் இணைபிரியாத உறவுகள் போல் தொடர்ந்தும் அவர்களோடு அன்பு கலந்து நல்ல மதிப்பினைப் பெற்று வருகின்றார். கலாசாலைக் காலங்களிலே இவரது சொல், செயல், தொழிற்பாடு யாவும் இன்றும் மனதில் ஊசலாடிக் கொண்டே இருக்கின்றது.

பயிற்சிக்காலம் முடிவடைந்து பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டபோது யாழ்ப்

பாணத்தில் கிழக்கு அரியாலையில் உள்ள பாடசாலையில் நியமிக்கப்பட்டார். அங்கு அதிபர், ஏனைய ஆசிரியர்களோடு ஒரு மித்து சொல்லாலும் செயலாலும், முகா மைத்துவம் செயற்பாடுகளில் ஈடுபட்டு பாட சாலையைத் தரமுயர்த்தும் முயற்சியில் அதிக பங்களிப்புக்களை முழுமனதோடு செய்தார். பின்னர் இவரது விளையாட்டுத் திறத்தினாலும் தரமான விளையாட்டுச் சான்றிதழினாலும் யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டு உடற்கல்வி ஆசிரிய ராக பரிணமிக்கத் தொடங்கினார். எந்தப் பாடசாலைகளிலும் விளையாட்டு விழா என்றால் அங்கு சராவினுடைய நாமம்தான் ஒலிக்கும். அந்தளவிற்கு உடற்கல்வித்துறை யிலே செயன் முறை ரீதியாகவும், கோட் பாட்டு ரீதியாகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து தன் வீட்டையும் மறந்து தன் வாழ்வை அர்ப் பணித்தவர்.

சரா புவனேஸ்வரனுடைய அறிவு, ஆற்றல், ஆளுமை என்பவற்றை ஆராய்ந்த யாழ். மத்திய கல்லூரிச் சமூகம் அவரை உடற்கல்வி ஆசிரியராக உள்வாங்கிக் கொண்டது. அங்கு பல்லாயிரக்கணக்கான மாணவ பரம்பரையினரை விளையாட்டுத் துறையிலே மேலோங்க வைத்த பெரு மையை இன்றும் அவரிடம் கற்ற மாணவர் கள் மூலம் அறிந்து கொள்கின்றேன். உடற் கல்விப்பாடத்தில் இத்தகைய இளமைத் துடிப்புடைய, புலமையுள்ள ஆசிரியர் என்ற செய்தியை கேள்வியுற்ற யாழ் தேசிய கல்விக் கல்லூரி பீடாதிபதி அவர்கள் ஆரம்பகால விரிவுரையாளர்கள் தெரிவிலே இவரது பெயரையும் சிபார்சுசெய்து கொண் டார். பின்னர் 2000ஆம் ஆண்டிலே கல்விக் கல்லூரி விரிவுரையாளராக பதவி உயர்வு பெற்று உடற்கல்வித்துறையை அலங்கரித்த பெருமைக்குரியவராகக் காணப்பட்டார். தொடர்ந்து இவரது நேர்மைக்கும் தியாகத் திற்கும் ஏற்றாற்போல் முகாமைத்துவம் எதிர் வாதம் பேசியதால் மாற்றலாகி கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.அன்றிலிருந்து தொடர்ந்து எமது நட்பு வலுவடைந்தது. கலாசாலையின் கல்வி நடவடிக்கைகளிலே தன்னை முழு மையாக அர்ப்பணித்துக் கொண்டு எந்தப் பாட விதானமானாலும் சரி, உறுதியாக தொழிற்படக்கூடிய வல்லமையை இறைவன் இவருக்குக் கொடுத்திருக்கின்றார் என்றே நான் கருதுகின்றேன். அந்தவகையில் சிறந்த குரல்வளமும், துணிச்சலும் அசை யாத நம்பிக்கையும் இவரிடம் குடிகொண் டது. கலாசாலையின் எந்தத் தேவையானா லும் சரி, உடனடியாகத் தன்னுடைய பணத் தையே செலவழித்து நிலமைகளை உடன் சீர்செய்து விடும் துணிவுகொண்டவர். நேர்மையாக செயற்படுபவராதலால் எவருக் கும் அஞ்சமாட்டாதவர். கலாசாலை விளை யாட்டுப் போட்டி என்றால் வீட்டையே மறந்து மைதானத்தையே வாழ்விடமாகக் கொண்டு வாழ்ந்திடுவார். அப்படியாக இவரது விளை யாட்டுப்போட்டி நிர்வாக முறைமை பாராட் டக் கூடியதாக இருக்கும். திட்டமிடல், ஒழுங் கமைத்தல், வழிப்படுத்தல், நடைமுறைப் படுத்தல் என்றவாறாக சீராக எல்லா ஆளணி யினரையும் அன்பாக அரவணைத்து பெருந் திருவிழா ஒன்றை சாதுரியமாக நடாத்தி விடுவார். இது கலாசாலைக்கு ஒரு பெரும் புகழையும் மதிப்பையும் மேலோங்கச் செய்துவிடும்.

மேலும் இவரது பிரத்தியேக பணியிலே தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் இயக்கு நராக தொழிற்பட்டு வருகின்றார். ஏறக்

குறைய 1500 மாணவர்களைக் கண் காணித்து சிறந்த முகாமைத்துவ அம்சங்க ளோடு மாணவர்களுடைய கல்விப் பசியைப் போக்கி வருகின்ற மாமனிதனாக நான் அவரைப் பார்க்கின்றேன். இதுதவிர நாடளா விய ரீதியில் தரம் 5 மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சையின் முன்னோடி பரீட்சை களையும் கருத்தரங்குகளையும் நடத்தி வரு கின்றார். இப்பரீட்சை பல பிரதேசங்களிலும் பெரும் பாராட்டினை பெற்று வருகின்றார். கணிணி அறிவும், ஆங்கில ஆற்றலும், மொழித்தேர்ச்சியும் கொண்ட பல் புலமை யாளனாகத் திகழ்ந்து, மாணவ சமுதாயத் தின் நன்மதிப்பை பெற்று வருகின்றார். தனது தனியார் நிறுவனத்தில் பரிசளிப்பு விழா ஏற்பாடுகளை மேற்கொள்கின்றபோது அவற்றை பார்ப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அங்கு இவரது சிறந்த முகா மைத்துவத்தினால் பெற்றோர், பாதுகாவல ரின் ஒத்துழைப்பும் கற்பிக்கின்ற ஆசிரியர் களின் தொழிற்பாடுகளையும் கண்டு நான் நெகிழ்ந்திருக்கின்றேன். சரா புவனேஸ்வர னின் ஆளுமை வெளிப்பாடே இதற்குக் காரணம் என நான் அறுதியிட்டு கூறவிரும்பு கின்றேன்.

மேலும் இவருடைய கல்விப் பணிகள் சமூகத்தையும், நாட்டையும், தேசத்தினை யும் கட்டியெழுப்புவதை அவதானித்த ஆசி ரிய சமூகம் இவரை இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கத்தின் பொதுச்செயலாளராக நியமிக்க ஆவண செய்துள்ளது. தற்போது அப்பதவியை வகித்து பல ஆயிரம் ஆசிரியர் களை அங்கத்தவராக உருவாக்கி ஆசிரிய நலனோம்பலில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு துணிச்சலான செயல் வீரனாக பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார். இத்த கைய நற்சேவையை வழங்கி வருகின்ற நண்பனுக்கு இன்று 50வது அகவை பூர்த்தி யாகிப் பொன்விழா எடுக்கப்படுவதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இவர்களது மனம் போல நல்மக்கள் நால்வரைப் பெற்று அவர் களும் கல்வியில் சிறந்தோங்கி தாய் தந்தை யருக்கு பெருமையைத் தேடிக் கொடுத்த வண்ணம் உள்ளனர். அதற்குச் சான்றாக சிரேஷ்ட புத்திரி மருத்துவபீட மாணவியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூன் றாம் வருடத்தில் கற்பதனைக் குறிப்பிட லாம்.

என் நண்பனுக்கு நாம் பொன்விழா எடுக் கின்றோம். இந்த விழா அவரது சாதனைக் கும், கடின உழைப்பிற்கும் சமூகத் தொண் டிற்குமேயாகும். எனவே இன்றைய பொன் விழா நாளைய மணிவிழாவாகி பவள விழா வாகி நூற்றாண்டு விழாவாகி மேலும் நமக் கெல்லாம் பெருமை சேர்க்கவேண்டும் அவர் எந்தவித நோய் நொடியின்றி சீரும் சிறப்புடனும் வாழவேண்டும் என்று நயினை நாகபூஷணி அம்பாளின் இறையாசியை வேண்டி என்றும் நேசிக்கின்ற எனது மனதுக் கினிய நண்பனான சரா புவனேஸ்வரன் அவர் களை வாழ்த்தி பெருமை பெறுகின்றேன்.

# ஆளுமைமிக்க செயல்வீரன்




**திரு. சு. சிவபாதசுந்தரம்**
அதிபர்
யா/ வண் நாவலர் மகாவித்தியாலயம்

தனது 50வது வயதை பூர்த்திசெய்து பொன் விழாவைக் காணும் திருவாளர் சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளையில் பொன்விழாவையொட்டி வெளியிடப்படுகின்ற மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். முழுமையான ஆசிரியரான சரா புவனேஸ்வரன் அவர்களிடம் ஆசிரியருக்குரிய அர்ப்பணிப்புடனான பண்புகள் அனைத்தும் உண்டு. மாணவர்கள் அவரிடம் மிகுந்த நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப் பட்டதை அவரது வகுப்பறைக் கற்பித்தலில் நான் கண்டேன். கற்பித்தல் நுட்பங்கள் அவரிடம்ஊறிவிட்டனவாக காணப்பட்டன. சுறுசுறுப்பாகவும், நிதானத்துடனும், மிக நுணுக்கமாகவும் எந்த விடயங்களையும் அறிந்து செயற்படும் பண்பாளர் அவர்.

ஆசிரியராக பல பாடசாலைகளில் பணியாற்றிய விழா நாயகன் இன்று கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் சிறந்த விரிவுரையாளராக, மாணவர் மனதைக் கவரும் நாயகனாக சிறந்து விளங்குகிறார். கல்லூரி நிர்வாகத்துடனும், சக ஆசிரியர்களுடனும் தோளோடு தோளாய் நின்று கலாசாலையின் பாட, இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும், மாணவ ஆசிரியர்களது ஒழுக்கம், கலாசார விழுமியங்களைக் கட்டிக் காப்பதிலும் முன்னின்று உழைக்கும் நல்லாசிரியராக மிளிர்கின்றார். மாணவர்களது உள உடல் விருத்திக்கு உந்துசக்தியாக விளங்கக்கூடிய விளையாட்டுத்துறையை வளர்ப்பதிலும், நுட்பங்களைப் புகுத்துவதிலும், மாணவர்கள் விரும்பிக் கற்கும் ஒரு பாடமாக அத்துறையை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். விழாநாயகன் கலாசாலையின் சகல விடயங்களிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கலாசாலையின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் திருப்தி கண்டவர். கலாசாலையின் நிகழ்வுகள் அனைத்திலும் இவர் கைவண்ணம் இல்லாமல் இருப்பதில்லை. அந்த அளவுக்கு பற்றுக்கொண்டவராக செயல்படும் செயல்வீரர்.

கலாசாலை விரிவுரையாளராக செயல்படுகின்ற இவ்வேளையிலும்கூட இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளராகப் பணியேற்று திறம்பட செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். சிறந்த ஆசிரியர் ஒருவராலேயே சிறந்த நிர்வாகியாக இருக்க முடியும் என்ற கருத்துக்கிணங்க ஆசிரியர், அதிபர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை தீர்த்துவைப்பதிலும், ஆற்றுப்படுத்துவதிலும் வெற்றிகண்டு வருகிறார். புரையோடிப்போய் இருந்த ஆசிரிய அதிபர் இடமாற்றங்கள் இவரின் உறங்காத செயலூக்கத்தினால் நகர்த்தப்பட்டுக் கொண்டிருப்பதை பலர் பாராட்ட நான் கேட்டிருக்கின்றேன். உயர்மட்டங்களோடு துணிச்சலுடன் எதிர்வாதம் செய்து உரியவர்களுக்கு உரிய உரிய வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக்கொடுத்து, சலிப்பில்லாத, மனத்தைரியத்தை உண்டாக்கி, ஏமாற்றங்களைக் களைந்து, பலரது வாழ்க்கையில் விடிவை ஏற்படுத்திக் கொடுத்துள்ள இவரின் சேவையை மனதார பாராட்டுவதோடு அதிபர் என்ற ரீதியில் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொன்விழா நாயகன் சிறந்த ஆசிரியராக, சமூகத்தொண்டனாக, தொழிற்சங்க வாதியாக, சமய விழுமியங்களை கட்டிக்காக்கும் சமய தொண்டனாக, ஒழுக்கம், கட்டுப் பாடு போன்ற பண்பாடுகளில் உதாரணபுருஷராக, கல்வியியலாளர் மத்தியில் சிறந்த பண்பாளனாகத் தொடர்ந்து பணிசெய்யக்கூடிய உடல் உள ஆரோக்கியத்தை எல்லாம் வல்ல இறைவன் வழங்கவேண்டுமென்று இறையாசி வேண்டுவதோடு, குடும்ப அங்கத்த வர்களோடு சிறப்பாக வாழ்ந்து மணிவிழா, பவளவிழா, நூற்றாண்டுவிழாவைக் காண வேண்டும் என்று மனதார வாழ்த்துகின்றேன்.



# 50வது அகவையில் கால் பதித்துள்ள ஏங்கள் வெற்றியின் நாயகன் சரா

**பா. தேவராசா**
அதிபர்
தி/கங்குவேலி அகத்தியர் வித்தியாலயம்
மூதூர், திருகோணமலை.

அமரர்களான நா. சி. சரவணமுத்து, இரத்தினம் தம்பதிகளுக்கு 1963ஆம் ஆண்டு ஆனி மாதம் முதலாந் திகதி ஒன்பதாவது குழந்தையாகப் பிறந்தவர்தான் சரா புவனேஸ்வரன் அவர்கள். ஆண் பிள்ளைகளில் கடைசியாகப் பிறந்ததால் செல்லமாகவும், செழிப்போடும் வளர்க்கப்பட்டார். சிறு வயதில் இருந்தே அதிக துடிப்பும், துரிதமும் "குழப்படிக்காரன்" என்ற பட்டத்தைக் கொடுத்தாலும் அன்றைய குழப்படிகள்தான் இவர் இன்று சமூகத்தில் சகல துறைகளிலும் ஏற்ற நல்ல மனிதனாக வருவதற்கு வாய்ப்பாக அமைந்தது.

அமரர் நாகநாதி சிவம்பு சரவணமுத்து அவர்கள் யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாயில் பிறந்து தனது தொழில் நிமித்தம் திருகோணமலை சம்பூர் என்னும் கிராமத்தில் குடியமர்ந்து பத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தார். இவர் தான் வாழ்ந்த ஊரிற்காகவும், சமூகத்திற்காகவும் தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்து வாழ்ந்தமைக்கு இன்றும் பல சான்றுகள் உள்ளன. மூதூர் பிரதேசத்திலேயே முதன் முதலாக சம்பூர் பாடசாலையினை மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்துவதற்கு அரும் பாடுபட்டார். அதில் வெற்றியும் கண்டார். அப் பாடசாலைக்கென தனது சொந்த நில புலங்களை வழங்கியதோடு, அண்டை அயல் கிராமங்களின் உயர்விற்காகவும் உழைத்த உத்தமராவார்.

அவரைப் போன்றே சரா புவனேஸ்வரன் அவர்களும் சமூகத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற துடிப்புள்ள மனிதர். அநீதிகளைக் கண்டு கொதிப்படைந்து நீதி கிடைக்கும் வரை விடாப்பிடியுடன் செயற்படுபவர்.

சம்பூர் மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தர வகுப்புக்களை தொடங்க வேண்டுமென்று தந்தையின் பாணியில் நின்று அதனை உருவாக்கி இன்று பல கல்வியியலாளர்களும், தொழில் வல்லுனர்களும், சமூக சேவகர்களும் அங்கு உருவாகுவதற்கு வித்திட்டவராவார்.

சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்ததோடு மட்டுமல்லாமல் அடுக்கடுக்காக நான்கு சகோதரர்களையும் இழந்தபோதும் அத்துன்பங்களை தன் மனதினுள் புதைத்து, தளர்ந்து விடாது தனது நேரிய பாதையினூடாக பயணித்து வெற்றி கண்டவர். தமக்காக வாழாது பிறருக்காக வாழ வேண்டுமென்ற உயரிய நோக்கம் கொண்டவர். "கடுமையான கோபக்காரன்" என்று பலர் சொன்னாலும் கூட தூய அன்போடு உண்மையான பரிவு காட்டி எவருக்கும் உதவும் மனிதராக, உற்ற நேரத்தில் தோள் கொடுக்கும் தோழனாக உறவினனாக வாழ்பவர்தான் எங்கள் சரா. கல்வி கற்கும் காலத்திலேயே சகல துறைகளிலும் முத்திரை பதித்தவர். விளையாட்டுத்துறையில் இவருக்கு இருந்த நாட்டமும், திறமையும் இவரது வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன. 1991 - 1992களில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி ஆசிரியராக இருந்தபோது ஏறத்தாழ எண்ணூறு மாணவர்கள் அங்கு கல்வி கற்றனர். அவ்வாண்டில் நடைபெற்ற கலாசாலை விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் ஓட்ட நிகழ்வில் புதிய சாதனையை நிலை நாட்டினார். அந்த ஆண்டில் ஐந்து தனிநபர் போட்டிகளில் முதலிடம் பெற்று முதன்மை வீரராகவும் தெரிவானார். இவரின் 100மீற்றர் ஓட்டத்தினைப் பார்ப்பதற்காக கலாசாலை மைதானம் முழுவதும் இரசிகர்கள் ஆவலோடு சூழ்ந்திருக்கும் காட்சியினை இப்போதும் நினைத்துப் பார்க்கிறேன்.

1988ஆம் ஆண்டு தனது ஆசிரியப் பணியை அரியாலை கிழக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பித்து அங்கு நன் மாணாக்கர்கள் பலரை உருவாக்கி, பின் யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை மாணக்கர்கள் பலரை உடற் கல்வித்துறையில் சாதனையாளர்களாக்கினார். யாழ். மத்திய கல்லூரியில் பத்து ஆண்டு கள் ஆசிரியராக பணியாற்றிய காலத்தில் அக் கல்லூரி பல சாதனைகளைப் படைப்பதற்கு உறுதுணையாக நின்றார். பின்னர் யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியில் விரிவுரை யாளராக இணைந்து பல நற்பணிகளைச் செய்து தற்போது கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றும் இவர் செழிப்பு மிக்க ஆசிரிய சமூ கத்தை உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது. இருபத்தைந்து ஆண்டுகளாக அரசாங்க ஆசிரியத்துறையில் கடமையுணர்வோடு தொழிற்பட்டு வரும் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களிடம் சிறப்புப்பெற்று நிற்கும் மேலானதொரு பண்பினைக் கண்டு வியப் படைந்தேன். தன்னை இன்றைய நிலைக்கு வளர்த்துவிட்ட ஆசிரியப் பெருந்தகைகளான திரு. இ.மா.சிவசுப்பிரமணியம், திரு. சி. சோதிலிங்கம் ஆகியோரையும் மற்றும் வாய்ப்புக் கிடைக்கும் போது ஏனைய ஆசிரியப் பெருந்தகைகளையும் தனக்கு ஆசிரியத் தொழில் கிடைத்த காலம் தொடக்கம் ஒவ்வொரு வருடமும் ஆசிரியர் தினத்தன்று அவர்களது இல்லம், சென்று மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி ஆசீர்வாதம் பெறுவதனை தனது முக்கிய கடமையாக பேணிவருவது குறிப்பிடத்தக்கது. இன்றைய காலத்தில் இப்படியான மாணவர்கள் இருக்கின்றார்களா? என்று கேட்கத் தோன்றுகிறது. இவர் ஆசிரியத் தொழில் கிடைப்பதற்கு முன்னரே தன்னை ஒரு ஆசிரியராக தடம் பதித்து இவ் வருடத்துடன் இருபத்தேழு ஆண்டுகளாகின்றன.

எதிலும் சளைக்காத இவர் "சயன்ஸ் அக்கடமி" கல்வி நிறுவனத்தை வழிப்படுத்தி அதனூடாக பல நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கி நல்ல மனிதர்களாகவும், சமூகத்தில் உயர்ந்தவர்களாகவும், உயர் தொழில் வகிப்பவர்களாகவும் ஆக்கிய பெருமை

இவரைச் சாரும். மருத்துவர்கள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர்கள் என இவரால் உருவாக்கப்பட்டவர்கள் மிகப்பலராவார்.

இவரால் கட்டிக்காக்கப்படும் "சயன்ஸ் அக்கடமி" நிறுவனம் பற்றி பலர் வாயில் விரல் வைத்து பேசுவதை கேட்டிருக்கிறேன். தனக்கென ஒரு தனித்துவமும், கடமை கண்ணியம், கட்டுப்பாடு என்ற எல்லைக் கோட்டைத் தாண்டாமல் அந் நிறுவனம் சிறப்பாக நடைபெறுவதை நாம் இன்றும் காணலாம்.

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையினை யாழ் மத்திய கல்லூரியில் தொடங்கி இன்றுவரை சளைக்காமல், தனித்துவமான பாணியில் வினாப்பத்திரங்களையும் நூல்களையும் வெளியிட்டு வருவது இவரின் அதீத திறமையின் வெளிப்பாடெனலாம். இன்று நாடு முழுவதும் தவழுகின்ற "வெற்றித்தேர்வு" வினாப் பத்திரத்தின் சொந்தக்காரரும் இவரே.

சகல துறைகளிலும் வல்லமை படைத்த சரா அவர்களோடு நல்ல நண்பனாக, மைத்துனனாக, ஆலோசகராக பல முகங்களோடு பழகியிருக்கிறேன். கற்பித்தல்துறை, விளையாட்டுத்துறை, கலைத்துறை, கவிதைத்துறை, கணினித்துறை, நாடகத்துறை என எல்லாத் துறைகளிலும் தன்னை இனங்காட்டி, புகுந்து விளையாடக்கூடிய வல்லமை நிறைந்தவர். அது மட்டுமல்ல இன்னும் சில விசேட துறைகளிலும் அவர் பெற்றுள்ள பாண்டித்தியத்தினையும் குறிப்பிட்டாக வேண்டும். அறுசுவை உணவை மணக்க மணக்க தயாரிப்பதுடனன்றி தித்திக்கும் ஒடியற்கூழினையும் காய்ச்சித் தந்து எங்களையெல்லாம் வாய்பிளக்கச் செய்யும் கைதேர்ந்த சமையற் கலை வல்லுனரும் கூட. அத்துடனன்றி இன்னும் ஒரு சிறப்பான கலை இவரிடம் உண்டு. தனது வசீகரமான பேச்சு வல்லமையால் சகலரையும் தன்பால் ஈர்க்கும் கவர்ச்சியால் மேடைப் பேச்சுக்களிலும் சிறந்த பேச்சாளனாக தன்னை முத்திரை பதித்துக் கொண்டவர். இவரை அரசியலில் ஈடுபடாத அரசியல்வாதி என்று குறிப்பிடுவது சாலவும் பொருத்தமாகும்.

ஐம்பதாவது அகவை காணும் சரா அவர்கள் இன்று பெரு விருட்சமாக வளர்வதற்கு அவரின் அர்ப்பணிப்பான சேவையும், நேர்மையான செயற்பாடுகளும், செம்மையான வழிமுறைகளும் மட்டுமன்றி அவருக்குக் கிடைத்த நல்ல மனையாளும், சகோதரர்களும், நற்பண்புள்ள நண்பர்களுமே காரணமாகும்.

இருபத்து மூவாயிரம் ஆசிரிய அங்கத்தவர்களைக் கொண்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொறுப்பு வாய்ந்த பதவியான பொதுச் செயலாளர் பதவிக்கு இவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டபோது ஆச்சரியமடைந்தேன். ஏனெனில் காலம் கால மாக பெரும் போட்டிகளோடு தெரிவுசெய்யப்படும் இந்தப் பொதுச் செயலாளர் பதவிக்கு இவர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டமை அனைத்து தமிழ் பேசும் ஆசிரியர்களும் கொடுத்த சிறப்பான அங்கீகாரம் எனலாம்.

எந்தவொரு ஆணின் உயர்விற்கும் பின்னால் நிச்சயம் ஒரு பெண் இருப்பாள் என்ற முதுபெரும் அனுபவத் தீர்ப்பிற்கிணங்க நல்ல மனையாள் கிடைத்தது இவருக்கு

ஆண்டவன் கொடுத்த உயர்வான பரிசு. எப்போதும் இன்முகத்துடன் எல்லோரையும் வரவேற்று, அடைக்கலம் கொடுத்து இல்லையென்றாது உணவளிக்கும் திருமதி வசந்தினி புவனேஸ்வரன் அவர்களின் இன்முகமும், இரந்தூட்டும் பண்பும் சராவிற்கு கிடைத்த இன்னுமொரு சான்றிதழ். இளமைக் காலத்திலிருந்தே சராவின் வாழ்வில் ஏற்பட்ட சோதனைகளும், வேதனைகளும், இழப்புக்களும் இவரை ஒரு மூலையில் கொண்டு முடக்கிவிடாமல் உற்ற துணையாக இருந்து இவரின் இன்றைய வளர்ச்சிக்கு இட்டுச் சென்ற பெருமைக்குரிய சீமாட்டி இவரது வாழ்க்கைத் துணைவியே. தான் கைப்பிடித்த கணவனதும், இல்லறத்தில் ஈன்றெடுத்த நான்கு பிள்ளைச் செல்வங்களினதும் சிறப்பான வளர்ச்சியில் கரிசனையோடு செயற்படும் இந்த உத்தமி இரவில் அதிகமாக தூங்கியதை என்னால் காணமுடியவில்லை. இத்தனை சிறப்புக்களும் வாய்ந்த தம்பதிகளை இல்லறத்தில் இணைத்து வைத்து திருமணத்தினையும் நடாத்தி வைத்த பாக்கியம் எனக்குண்டு. இத்தம்பதிகளுக்கு துவாரகா, சஞ்சிகா, சஜீசன், தர்மிகா என்ற நான்கெழுத்துப் பெயர் கொண்ட நான்கு நல்ல பிள்ளைகள் கிடைத்தமை இவர் ஆற்றிய பணிகளுக்குக் கிடைத்த வெகுமதியாகும்.

சராவைப்பற்றி இன்னுமொன்று சொல்லவேண்டும். 1984களில் பல்கலைக்கழக அனுமதி கிடைத்த எனக்கு அதனை கற்று முடிக்கக் கூடிய சூழல் இருக்கவில்லை. பட்டப் படிப்பையே வேண்டாமென்று கை கழுவிவிட்ட என்னைத் தனது அதீத முயற்சியால் இருபது ஆண்டுகளில் பட்டதாரியாக்கிய மகான் சராதான். இதற்காக அவர் எடுத்த முயற்சிகளுக்கும், பட்ட கஸ்ரங்களுக்கும் நான் என்றும் கடமைப்பட்டவன். மற்றவர்களை மகிழ்வித்து அம்மகிழ்ச்சியை தனதாக்கி உவகையடைகின்ற அபரிமிதமான உள்ளம் படைத்த ஒரு மாமனிதர் சரா. அவரிடமிருந்து நான் நிறையவே கற்றிருக்கிறேன். இன்னும் அனேகம் கற்க வேண்டியவைகள் உள்ளன.

சராவைப்பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாம். பக்கங்கள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளதால் பல பாகங்களை விட்டுச் செல்கிறேன். இன்னும் இவரது பணி தொடர்ந்து பல வரிகள் எழுதுவதற்கு வாய்ப்புக்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சரா அவர்கள் நீடூழி காலம் மனைவி, பிள்ளைகளோடு வாழ வேண்டுமென வாழ்த்தி அருள் மிகு சம்பூர் பத்திரகாளி அம்பாளின் துணையினை வேண்டி நிற்கிறேன்.

50 Years Golden Jubilee

# சமூகப்பணி நாயகன்



**திரு. ந. நகுலநாதன்**
பிரதி அதிபர்,
யா/ நாவாந்துறை றோ.க.த.க. பாடசாலை.
மாவட்டச் செயலாளர்,
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

பொன் விழாக்காணும் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளரும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளருமான திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கட்கு என் இதயம் கனிந்த பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதிலே மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கும் எனக்குமிடையில் நீண்டகால நட்புண்டு. அவர் ஓர் சகல துறை ஆற்றலாளர், பல் பரிமாண, சமூக மனிதாபிமானப் பணியாளர் என பல வகைகளில் தன்னை சமூகத்திற்காக அர்ப்பணித்தவர். ஓய்வின்றி பிறருக்காக உழைப்பவர் - உதவுபவர். ஓர் ஆசிரியராக கால் நூற்றாண்டுக்கு முன் கல்வியுலகில் தடம்பதித்த சரா புவனேஸ்வரன் அவர்கள், மாணவர் மனங்களில் ஆழப்பதிந்த கல்வி வழிகாட்டி, சக ஆசிரியர்களின் தேவைகள் - உணர்வுகளில் என்றும் பங்கேற்கும் தோழன். இன்று அவர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளராகவும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளராகவும் விளங்குவது பெருமைக்குரியதாகும். கடின உழைப்பு, அர்ப்பணிப்பு, நுண்ணறிவுமிகு திட்டமிடல், சிறந்த சமூகத் தொடர்பாடல், எதையும் தாங்கும் இதயம் என்பனவே அவர் வெற்றியின் அடித்தளங்கள்.

தமிழர் ஆசிரிய சங்கத்தின் நீண்டகால உறுப்பினரான சரா ஆசிரியர்கள் - மாண வர்கள் நலன்களில் அக்கறை மிக்கவராகவும், அநீதிகளுக்கெதிராக என்றும் குரல் கொடுப்ப வராகவும் விளங்குகிறார். திரு. சரா அவர்கள் தன் குழுமத்துடன் இணைந்து தரம் 5 மாணவரின் கல்விப் புலமையை புடமிடும் வகையில் பயிற்சிக் கையேடுகளை வெளியிடுவதுடன், விசேட வழிகாட்டல் பாசறைகளையும் நாட்டின் பல பாகங்களிலும் குறிப்பாக வட-கிழக்கு மாகாணங் களிலும், மலையகப் பகுதிகளிலும் பல ஆண்டுகளாக நடாத்தி வருவது பாராட்டத்தக்கது. கலை மற்றும் விளையாட்டுத்துறைகளிலும் ஆர்வம்மிக்க பொன்விழா நாயகன் பாரம்பரிய கலை வடிவங்களில் தேர்ச்சிமிக்கவர். நகைச்சுவையுணர்வால் தன்னை சூழவுள்ளவர்களை எப்போதும் கலகலப்பாக வைத்திருப்பவர். கரப்பந்தாட்டம், துடுப்பாட்டம் போன்ற பெருவிளை யாட்டுக்களிலும், மெய்வன்மைப் போட்டிகளிலும் நிபுணத்துவம் மிக்கவர். நீண்டகாலமாக உயர்மட்ட மெய்வன்மைப் போட்டிகளில் ஆரம்பிப்பாளராக பணியாற்றி பலரது மதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்றவர்.

தன் சொந்த வருமானத்தில் வசதி குறைந்த மாணவருக்கு உதவுவதிலும், ஆர்வ முள்ள மாணவரை ஊக்கவிப்பதிலும் என்றும் முன்னிற்பவர். பாதிக்கப்பட்ட இடருற்ற ஆசிரியர் களுக்கு நேரகாலம் பார்க்காது உதவிடத்துடிப்பவர். தன்னுடல் நலனைக்கூடக் கருதாது நீண்ட தூரப் பயணங்கள் மேற்கொண்டு ஆசிரியர் நலன்களுக்காக வாதிட்டவர். உரிமை வாழ்வையும், கலாசார விழுமியங்களையும், ஒழுக்க நெறிகளையும் சகலரும் பெற்றிட ஒழுகிட உழைப்பவர். பொன்விழா காண்பதற்கு முன்பே பல சாதனைகளையும் பெருமைகளையும் பெற்ற திரு. சரா. புவனேஸ்வரன் அவர்கள் எம் இளைய தலைமுறையினருக்கு சிறந்த முன்னுதாரணமாவார். இத்தருணத்தில் இவர் பணி சிறப்புறத் தொடரவும், உடல் உள நலன்கள் மேம்படவும், குடும்ப உறவுகளுடன் சகல வளங்களும் பெற்று மகிழ்வுடன் நீடூழி வாழவும் இறையருள் இறைஞ்சி வாழ்த்துகிறேன்.



# உடற்கல்வியும் சராவும்

**நா. துஸ்யந்தன்**
சிரேஸ்ர உடற்கல்வி ஆசிரியர்.

உடற்கல்வித் துறையிலே ஒருவர் தன்னை இணைத்துக் கொள்வதானது அத்துறையிலே அவருக்கு இருக்கும் ஆர்வத்தைப் பொறுத்தேயாகும். சிறுவயதிலிருந்தே இத்துறையில் ஈடுபடும் ஒருவராலேயே அத்துறையில் பிரகாசிக்கமுடியும். உடற்கல்விப் பாடத்தைக் கற்பதோடு, விளையாட்டுக்களிலே தன்னை ஈடுபடுத்தி அதன்மூலம் தான் இத்துறைக்கு ஏற்றவனா என்பதை சமூகத்தின் மத்தியிலே அங்கீகாரப்படுத்துவதற்கான காலமாக இளமைப் பருவம் கருதப்படுகின்றது. அப் பருவத்திலே அந்த அங்கீகாரம் பெற்ற ஒருவராற்றான் பிற்காலத்தில் இத்துறையில் பிரகாசிக்க முடியும்.

சிறந்த வீரனாக, நல்ல ஆசானாக, சிறந்த பயிற்றுவிப்பாளனாக காணப்படும் போதே பிரகாசிப்பு என்பது ஏற்படுகின்றது. இதில் ஒன்று குறையும் போதும் பிரகாசிப்பு முழுமை பெறாது. ஆனால் ஒவ்வொன்றிலும் தனித்தனியாகப் பிரகாசிப்பவர்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். ஆனால் அவர்கள் உடற்கல்வித்துறையில் பிரகாசிக்க முடியாது.

“விளையும் பயிரை முளையிலே தெரியும்” என்பதைப் போல மாணவப் பருவத்திலே சரவணமுத்து புவனேஸ்வரன் தன்னை ஓர் சிறந்த விளையாட்டு வீரனாக கிழக்கு மாகாணத்திலே திருமலை நகரத்திலே சமூகத்தின் மத்தியிலே தனது பெயரைப் பதிவு செய்தவராவர். அவரது தந்தையார் (செயமன்) தவிசாளர் சரவணமுத்து அவர் எவ்வளவு பிரபல்யமுடையவரோ அதற்கு ஏற்றாற்போல் விளையாட்டு வீரனாக புவனேஸ்வரன் பிரபல்யமானான்.

தனது இத்துறை ஆர்வத்தின் மூலம் ஆசிரியத் தொழிலைத் தேர்ந்தெடுத்தால் தான் ஆசானாக, பயிற்றுவிப்பாளனாக வரமுடியும் என்பதை உணர்ந்து இத்தொழிலை தேர்ந்தெடுத்து, யாழ்ப்பாணம் அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை யில் ஆசிரியராக முதலிலே தனது தொழிலை ஆரம்பித்து மாணவர்களிற்கு சேவையாற்றிக் கொண்டிருக்கும்போது இத்தொழிலில் அங்கீகாரம் பெற ஆசிரிய பயிற்சிக் கலாசாலை யில் பயிற்சியை பெறுவதற்காக ஆசிரிய மாணவனாக உட்புகுந்து சிறந்த ஆசானான

திருவாளர் யதுர்குலசிங் என்பவரது நேரடியான வழிகாட்டலிற்குள்ளானார். திரு.யதுர்குலசிங்கைப் பற்றி நான் கூற வேண்டியதில்லை. யாழ்ப்பாணத்தில் இத்துறையில் உள்ள அனைவருக்கும் அவரைப்பற்றி நன்கறிவர். ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் அவரின் வழிநடத்தலில் வந்தவர்கள் எதையும், சரியாகத் தான் செய்வதோடு தன்னிடம் பயிலுபவர்களை சரியாகச் செய்விப்பவர். அவரின் நேரடி கண்காணிப்பில் கலாசாலையின் உடலாளர் மன்ற செயலாளராக சிறப்புற்று செயற்பட்டு பாராட்டுப்பெற்றார்.

பயிற்சியை முடித்து முன்னைய பாடசாலையில் தனது சேவையை மாணவர்களுக்கு ஆற்றிக்கொண்டிருக்கையில் அதிபர் வரிசையிலே தனது பெயரைப் பதித்த திரு. நாக. சண்முகநாதபிள்ளையின் வற்புறுத்தலினால் யாழ். மத்திய கல்லூரிக்கு உடற்கல்வி ஆசிரியராகத் தன்னை இணைத்துக் கொண்டார். அங்கு பல அணிகளை பயிற்றுவித்து குறிப்பாக கரப்பந்தாட்ட அணியை தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு கொள்ளச் செய்ததன் மூலம் தனது பெயரை நிலை நாட்டிக்கொண்டவேளை முதல் முதலாக யாழ் பல்கலைக்கழகத்தில் உடற்கல்வித்துறைக்குப் புதிய பயிற்சிநெறி உருவாக்கப்பட்டு உடற்கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு எழுத்துப் பரீட்சை, செய்முறைப்பரீட்சை, நேர்முகத் தேர்வு என அனைத்துத் தேர்வுகளிலும் தேறி ஆசிரியர் என்ற ரீதியில் வயதையும் மறந்து இளம் மாணவனாக அப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து "நல்ல ஆசிரியன் எப்போதும் மாணவனாக இருக்கவேண்டும்" என்ற கூற்றினை நிரூபித்து மீண்டும் யாழ் மத்திய கல்லூரியில் தனது பணிக்குத் திரும்பினார்.

உடற்கல்வித்துறையிலே சிறப்புறச் செயற்படுபவர்களிடம் வேறும் பல திறமைகள் ஏற்பட்டுவிடும். அந்த வகையிலே பல்கலைக்கழக மாணவனாக இருந்தபோது மாணவர் சங்கத்தால் பிரபல பாடகர்களை அழைத்து இசைவிருந்து ஏற்பாடு செய்யப்பட்டபோது, அந் நிகழ்விலே தான் ஓர் சிறந்த பாடகன் என்பதை நிரூபித்துப் பாராட்டுக்களைப் பெற்றார்.

ஆசிரியர்களை உருவாக்குவதில் இன்று முக்கியமான பங்கை கல்வியியற் கல்லூரிகள் வகிக்கின்றன. பல பாடத்துறைகளைச் சார்ந்த மாணவர்களுக்கு பொதுப் பாடமாக உடற்கல்விப் பாடம் அமைவதனூடாக உடற்கல்விக்கு உள்ள முக்கியத்துவம் உணரப்படுகின்றது. அந்த முக்கிய உடற்கல்விப் பாடத்தை போதிப்பதற்கு யாழ். கல்வியியற் கல்லூரியில் ஐந்து வருடங்களாக போதனாசிரியராக கடமையாற்றி அதன்பிறகு ஆசிரிய மாணவர்களுக்கு உடற்கல்வி போதனாசிரியராக கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கடமையாற்றிக் கொண்டிருக்கும்போது அவரது பொறுப்பு மேலும் அதிகமாகியது.

மைதானத்தில் விளையாட்டில் ஈடுபடும் ஒருவனால் தான் நல்ல தலைவனாகவும் நல்ல நிர்வாகியாகவும் செயற்படமுடியும். அந்த வகையிலேயே மிகப் பெரிய ஆசிரிய தொழிற்சங்கத்தின் கௌரவ பொதுச் செயலாளர் பதவி அவரைத் தேடி வந்துள்ளது. அந்த வகையில் சிறந்த உடற்கல்வியியலாளனான புவனேஸ்வரன் அவர்களின் சேவை எல்லாப் பணிகளிலும் என்றும் நிலைக்கவேண்டும் என்பதே எனது அவாவாகும்.

50 Years Golden Jubilee



# ஆளுமையும் செயற்திறனும் கொண்ட நிர்வாகி

**திரு. Y. பாலசுப்பிரமணியம்**
முதுநிலை கணித ஆசிரியர்
சயன்ஸ் அக்கடமி

"எழுத்தறிவித்தவன் இறைவனாவான்" என்பது ஔவைப் பிராட்டியின் அருள்வாக்கு. இத்தகைய இறைவன் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரிகின்ற இடமே ஆலயமாகும். அந்த வகையில் இலங்கைத் திருநாட்டின் வடக்கே பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் நல்லைக் கந்தன் ஆலயத்திற்கு அருகாமையிலும், பல கற்றறிந்த அறிஞர்களையும் பெரியோர்களையும் கொண்டமைந்த அரியாலை மண்ணிலும் மிடுக்குடன் நிமிர்ந்து நிற்கும் கல்வி நிறுவனமாக மிளிர்வதே "சயன்ஸ் அக்கடமி" நிறுவனம் ஆகும்.

கல்வித் தெய்வத்தின் திருவுருவத்தை சின்னமாகவும் "எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே" என்பதனை மகுட வாசகமாகவும் கொண்டு இன்றைக்கு மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கல்விப் பணியாற்றி வருகின்ற இந்நிறுவத்தின் இயக்குநர் திரு. சரா புவனேஸ்வரன் அவர்களின் பொன்விழா நிகழ்வானது எமக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.

சுமார் ஆயிரத்திற்கு ஐந்நூறுக்கு மேற்பட்ட மாணவ மணிகளை கொண்டமைந்த எமது நிறுவனத்தில் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் கற்பித்தல் பணியில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். மாணவர்கள் மத்தியில் அறிவுசார் மேம்பாட்டினை மட்டும் ஏற்படுத்துவதன்றி தலைமைத்துவப்பண்பு, ஆளுமை விருத்தி, நிர்வாகத்திறன் போன்ற பல பண்புகளை வளர்த்துக்கொள்வதிலும் சிறந்த களமாக இந் நிறுவனம் விளங்குகின்றது. இங்கு கல்வி கற்கின்ற காலத்தில் மாணவர்கள் பெற்றுக்கொள்ளுகின்ற பல்வேறுபட்ட அனுபவங்களினால் எதிர்காலத்தில் அவர்கள் சிறந்த நற்பிரஜைகளாக உருவாகுவதற்கு வழியேற்படும் என்பதில் எவ்விதமான ஐயப்பாடுமில்லை. இதற்குச் சான்றாக இங்கு பயின்ற யா / சுண்டுக்குளி மகளீர் கல்லூரி மாணவியாகிய செல்வி சுவேதா பாலசுப்பிரமணியம் அவர்களை குறிப்பிடலாம். இவர் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் உயர் புள்ளி பெற்று பொறியியல் பீடத்திற்குத் தெரிவானார். பௌதீகவியல் பாடத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று 2006ம் ஆண்டில் சிங்கப்பூரில் இடம்பெற்ற பௌதீகவியல் ஒலிம்பியாட் போட்டியில் இலங்கை சார்பாக பங்கு பற்றிய ஒரேயொரு தமிழ் மாணவி என்ற பெருமையைத் தட்டிக்கொண்டார். இவ்வாறாக எத்தனையோ பல மாணவர்களை

சாதனையாளர்களாக்கிய பெருமை எமது நிறுவனத்தையே சார்ந்ததாகும். இன்று எமது நாட்டிலும் சரி புலம்பெயர் நாடுகளிலும் சரி பெருமளவு மாணவ மாணவியர்கள் வைத்தியர்களாகவும் பொறியியலாளர்களாகவும், உயர்நிலை அதிகாரிகளாகவும் மற்றும் கல்வியியலாளர்களாகவும் மிளிருகின்றமை யாவரும் அறிந்துகொண்டதே.

இத்தகைய சிறப்புக்களைக் கொண்டமைந்த எமது நிறுவனத்தின் பெருமைக்கும் உயர்வுக்கும் காரணகர்த்தாவாக விளங்குபவர் நிறுவன இயக்குநராகிய திரு. சரா புவனேஸ்வரன் அவர்கள் ஆவார். இவர்தம் அசைக்க முடியாத நம்பிக்கையும் சிறந்த நிர்வாகக் கட்டமைப்பும் உன்னதமான ஒழுக்கம் பண்பாடும், இறுக்கமான கட்டுப்பாடுகளுமே இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காரணமாக அமைந்துள்ளது.

இயற்கை எழில் பொங்கும் திருகோணமலை மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட எமது இயக்குநர் அவர்கள் யாழ்ப்பாண மண்ணில் வசிக்க வந்த காலந் தொடக்கம் கல்விப் புலத்திற்கு ஆற்றிவருகின்ற சேவைகள் அளவிடமுடியாதவை ஆகும். உயர் கல்வியை பெற்று சிறப்பான ஆளுமைமிக்கவராக விளங்கும் இவர் ஆசிரியத் தொழிலில் இணைந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றார். கல்வி, செல்வம், வீரம் என்பன ஒருங்கே அமையப் பெற்ற அரியாலையூரில் கற்றறிந்த குடும்பத்தில் வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுத்து இல்லறவாழ்வில் இனிதுடன் திகழ்கின்றார். இதன் நற்பேறாக அறிவிலும், ஆற்றலிலும், பண்பிலும் சிறந்த பிள்ளைகளை செல்வங்களாக பெற்றுள்ளார். இவர்தம் சிரேஸ்ர புத்திரி அவர்கள் எமது நிறுவனத்தில் கல்வி பயின்று வேம்படி மகளீர் உயர்தர பாடசாலையில் இருந்து மருத்துவ பீடத்திற்கு முதலாம் முறையிலேயே அதிவிசேட சித்தியடைந்து தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்னும் சான்றோரின் கருத்திற்கு இசைவாக தான் கற்றறிந்த கல்வியினை எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்ற சிறந்த பண்பு இவரிடம் மேலோங்கி இருந்தமையால் அரியாலையில் ஸ்ரார் (STAR) கல்வி நிலையத்தை பல மாணவர்களையும் புலமை மிக்க ஆசிரியர்களையும் கொண்டு சிறப்பாக இயக்கி வந்தார். இவ்வேளையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்கள் எல்லோரும் இடம்பெயர்ந்து செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக எமது கல்விப் பணியில் சிறிய தடங்கல் நிலை ஏற்பட்டது. ஆயினும் 1996ஆம் ஆண்டு நாம் மீண்டும் மீளக் குடியமர்ந்த நிலையில் எமது கல்வி நடவடிக்கைகளும் தொடர ஆரம்பித்தன. "கல்வியே எமது அழியாச் சொத்து" என்ற நிலையிலும் அனேக பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு அமைவாகவும் நல்லைக்கந்தன் ஆலயத்திற்கு அருகாமையில் மிகவும் அமைதியான சூழலில் "சயன்ஸ் அக்கடமி" என்ற நிறுவனத்தை இயக்கி பெற்றோர்களினதும் கல்வியாளர்களினதும் ஆதரவுடன் நிர்வகித்து வருகின்றார். இதனை அறிந்த அரியாலை மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேச மக்கள் அரியாலையிலும் ஒரு கல்வி நிறுவனத்தை ஆரம்பிக்குமாறு இயக்குநர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். இதற்கமைவாக ஸ்ரான்லிக் கல்லூரியிற்கு அருகாமையில் அரியாலை "சயன்ஸ் அக்கடமி" என்ற நிறுவனத்தை ஆரம்பித்து இப் பிரதேசம் சார்ந்த மக்களின் பேரவாவைப் பூர்த்தி செய்தார். இந்நிறுவனம் அன்று தொட்டு இன்றுவரை பல நூற்றுக்கணக்கான மாணவர்

களைக் கொண்டு மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றது. மேலும் இவ்விரு நிறுவனங்களிலும் பெற்றோரை இழந்து நாதியற்றுவாழும் பிள்ளைகளுக்கு இலவசமாக கற்பிக்கின்ற செயற்பாடுகளையும் இவர் மேற்கொண்டு வருகின்றார்.

கல்வித்துறைசார் நலன்களில் மட்டுமன்றி சமூக நலன்களிலும் அக்கறையுடன் திகழ்ந்த இயக்குநர் அவர்கள் 2000ம் ஆண்டளவில் இடம்பெற்ற இடப்பெயர்வின் போது அரியாலைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை நல்லூரியில் இயங்கி வரும் எமது நிறுவனத்தில் தங்கவைத்து அவர்களுக்குத் தேவையான சகல வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுத்தார். இச் செயற்பாடானது எமது நிறுவன இயக்குநர் அவர்களின் முன்மாதிரிச் செயற்பாடுகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு எமது சமூகத்தையும் பாதுகாப்பது அவசியமானது என்பதனை இவருடைய இச் செயற்பாடுகள் உணர்த்தி நிற்கின்றன. இத்தகைய உயர்ந்த பண்புகள் இன்று விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரிடத்தில் மட்டுமே காணக் கூடியதாக இருக்கின்றது, அடுத்து இவர் எமது நிறுவனத்தில் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் நலனில் அதிக அக்கறையுடையவராக விளங்குகின்றார். ஆசிரியர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளில் பங்கேற்றுக்கொள்வதுடன் அவ்வப்போது சிறந்த ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி வருகின்றார். எடுத்துக்காட்டாக ஒரு தடவை யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக யாழ்ப்பாணம் ஏனைய மாவட்டங்களுடன் தொடர்புகள் அற்று பொருளாதார சிக்கல்களை எதிர்நோக்கியிருந்தது. குறிப்பாக எரிபொருள் தட்டுப்பாடு மிகவும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது. இவ்வேளையில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்பதற்கமைய எமது நிறுவனத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மானிய விலையில் எரிபொருளைப் பெற்றுக்கொடுத்தமையை நாம் மறந்துவிடமுடியாது. இவ்விடயமானது இவரின் சிறப்பானது கல்வி நிறுவனத்தோடு மட்டுமன்றி ஏனைய இடங்களிலும் வியாபித்து இருந்தமையை புலப்படுத்துகின்றது. இதற்குக் காரணம் இவரின் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்ற மாணவர்கள் பலர் அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களில் உயர்பதவிகள் வகிக்கின்றமையே ஆகும்.

"ஆல்போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி" நிற்கும் எமது நிறுவனத்தில் இயக்குநர் அவர்களின் வழிகாட்டலின் கீழ் ஆசிரியர் தினவிழா, வாணிவிழா, பொங்கல் நிகழ்வு மாணவர் கௌரவிப்பு விழா, கணிப்பீட்டறிக்கையும் பரிசில் வழங்கும் நிகழ்வும் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த எமது நிறுவனத்தின் இயக்குநர் அவர்களுக்கு பொன்விழா எடுப்பதென்பது பொருத்தமானதொன்றே. இப் பொன்விழா நிகழ்வை எண்ணி எமது ஆசிரியர் குழாம் பெருமையடைகின்றது, பொன்விழா நாயகன் மென்மேலும் சிறப்புக்கள் பல பெற்று அவர்தம் நற்பணிகள் தொடர வாழ்த்துகின்றோம்.

# விடாமுயற்சி உழைப்பாளர்



**திரு. இ. இராகவன்**
அதிபர்
யா/வதிரி திருஇருதயக் கல்லூரி,
கரவெட்டி.

ஆற்றல், ஆளுமை, அர்ப்பணிப்பு இவை எல்லோரிடமும் இயல்பாய் இருக்கும். இவை இருந்துவிடுவதால் மாத்திரம் ஒருவர் உயர்ந்துவிட முடியாது. தொடக்கப்பள்ளிமுதல் இலக்குவெறி, வேட்கை உள்ளிருந்து கனல வேண்டும். அதற்கான களம் அமைய வேண்டும். அமைந்த களத்தை உரியமுறையில் பயன்படுத்தி அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருப்போரைத்தான் சாதனையாளர் என்கின்றோம். அந்தவகையில் தான் அனைத்துத் துறைகளிலும் ஒளிவீசும் சரா புவனேஸ்வரன் அவர்கள் பொன்விழாக் காண்பதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. இந்த வயதுக்கு அவரது சேவைச் சாதனைகள் அளப்பரியன.

"வெற்றித்தேர்வு" எனும் மகுடத்தின் பின்னின்று அணு அணுவாய் மாணவரை செதுக்கி புடம்போட்டு புலமைப்பரிசில் பரீட்சையில் பயமின்றி, நம்பிக்கையுடன் பரீட்சைக்கு தயார்ப்படுத்த "சரா" அவர்கள் பட்ட, படுகின்ற செயலூக்கங்கள் அளப்பரியன. வினாத்தாள்களை நேர்த்தியாகவும், கனதியாகவும் கவர்ச்சியாகவும், அழகுறவும் வடிவமைப்பது மட்டுமன்றி காலம் தவறாது குறிப்பிட்ட காலப்பகுதியில் நிறைவுசெய்யக் கூடிய வகையில் திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றார். வேலைப்பழு என்பது வீண்வார்த்தை. "முயன்றால் முடியாதது எதுவுமில்லை" என்பதற்கு இலக்கணம் வகுத்து செயற்படுகின்ற செயல்வீரர். புலமைப்பரிசில் பரீட்சை அண்மிக்கும்போது மலையகம், கொழும்பு, வவுனியா, கிழக்கு மாகாணம் என எல்லா இடங்களும் தமது வளவாளர் குழாமை அழைத்துச் சென்று பயனுறு கருத்தரங்குகளை நடாத்தி ஐயங்களைத் தீர்த்து வைத்து ஒவ்வோர் ஆண்டும் தமிழ் மாணவரை முன்னோக்கிச் செலுத்தும் படிக்கல்லாகத் திகழ்கிறார்.

சுயகற்றல், வினைத்திறனும், விளைதிறனும் கொண்ட இவரது மகத்தான முயற்சி தமிழர் ஆசிரியர் சங்க பிரவேசத்தால் பாதிக்கப்பட்டுவிடுமோ எனப்பலரும் ஏங்கிய போதிலும் "வெற்றித்தேர்வு" செயற்பாடுகளும் மாணவர்களுக்கான கல்விப்போதனைகளும் மேலும் சிறப்புடன் நடைபெறுவது பாராட்டுக்குரியதாகும்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளை உள்வாங்கியதன் விளைவே எங்கள் மத்தியில் மகத்தான ஒரு தொழிற்சங்கவாதி உருவாகக் காரணமாகியது. அடிக்கடி அதியுயர் கல்விக் கூட்டங் களில் கலந்து கொள்ளும் ஒரு அதிகாரி என்னை அடிக்கடி சந்தித்து கதைக்கும்போது "யார் இந்த சரா புவனேஸ்வரன் பயமின்றி திடமுடனும் துணிவுடனும் ஆசிரியர் பிரச்சினைகளை மிகச் சரியான சிறந்த புள்ளி விபரத்துடன் அனைவரின் கருத்தையும் கவரும் வகையில் அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்து உதறுகிறார்" என ஆச்சரியமாகக் கூறியது வியக்கக் கூடியதாக இருந்தது.

தன்னை, தனது குடும்பத்தை மறந்து ஆசிரியர்களின் பிரச்சினைகளை முழுமை யாக உள்வாங்கி நித்திரையின்றி நோய்வாய்ப்படுகின்ற அளவிற்கு தன்னை அர்ப்பணித்து வாழ்கின்ற ஒருவராக சராவைக் காண்கின்றேன். எக்காலத்திலும் தனது உடல்நலத்தைப் பேணி இளம் வயதில் தனக்கெனத் தனியிடத்தை பதித்து அச்சமின்றி ஓயாது நடைபோடும் துணிச்சல்மிகு சராவை வாழ்த்துகின்ற சந்தர்ப்பத்தை பெரும்பேறாகக் கருதுகின்றேன்.

காலதேவனின் பயண வேகத்திற்கு சளைக்காது சாதித்தவர் பலர். அவர்களது சாதனைப் பெறுமானம் தேவைக்கும், இடத்திற்கும், நேரத்திற்கும், செயலுக்கும் ஏற்ப வேறுபடலாம், மதிக்கப்படலாம். ஆனாலும் அவரவர் அளவில் அவை எல்லாம் சாதிப்புக்கள்தான். அச்சாதிப்புக்களுக்காக அவர்கள் சிந்திய இரத்த வியர்வைகள், எதிர்கொண்ட சவால்கள், நிகழ்த்திய போராட்டங்கள், செய்த தியாகங்கள் காலம் கடந்தே வரலாறுகள் ஆகின்றன. சாதிக்கத் துடிப்போர்க்கு இச்சாதனையாளனின் சமூகப் பெறுமானம் எடுத்துக்காட்டான வரலாறாகும். இதனைக் கால ஓட்டத்தில் கலைந்து போகாமல் இருக்கும் வகையில் பதிவுசெய்யவேண்டும் என்ற இச்சிந்தனையை சிரமேற்கொண்டு செயற்படும் சராவின் பொன்விழா மலர்க்குழுவினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆசிரியப் பணிதாண்டி அரச பதவி வரையறைகளை மீறி மானிடத் தன்மையால் செய்யும் தொண்டுகள் மற்றையோர்க்கு முன் உதாரணமாய்த் திகழும் அந்தவகையில் நற்பண்பாளர் திரு. சரா புவனேஸ்வரன் அவர்களை பொன்விழாக் காலத்தில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

50 Years Golden Jubilee



# திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் எனக்குக் கிடைத்த நல்ல நண்பன்

**திரு. சி. சதாசிவம்**
ஆலோசகர் பொன்விழாச் சபை,
முன்னாள் தலைவர், செயலாளர்
அரியாலை சனசமூக நிலையம்
முன்னாள் செயலாளர் அ. ஐக்கிய கழகம்
ஸ்தாபகர், கச்சேரி கிழக்கு ச.ச.நிலையம்

அகவை ஐம்பதைக்காணும் நண்பர் சரா. புவனேஸ்வரன் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

சகல துறைகளிலும் திறமைமிக்கவராக விளங்கும் இவருடன் கிடைத்த நட்பிற்காகப் பெருமையடைகின்றேன். நண்பர்கள் என்பதற்கு உண்மையான வரைவிலக் கணமாக விளங்கும் சரா. புவனேஸ்வரனுடன் 1990ஆம் ஆண்டு நண்பனாகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 23 ஆண்டுகள் இவருடன் நட்புக்கொண்டதால் ஏராளமான விடயங் களை நானும் கற்றுக்கொண்டேன். அந்த நாளில் இருந்து என்னுடையதும், எனது குடும்பத் தினதும் இன்பதுன்பங்களில் பங்கெடுத்து என்னை எப்பொழுதும் இளைஞன்போன்று துடிப்புடன் செயற்படவைப்பவர் இவர்.

இவருடன் எங்கு சென்றாலும் ஏதாவது ஒரு கலையைக் கற்கும் வாய்ப்புக் கிடைக் கும். இவருக்குத் தெரியாத விடயம் என்னவென்று இப்பொழுதும் தேடுகின்றேன். வாழ்க்கை அனுபவம் இல்லாமல் வாழ்வியலில் தோற்றுப் போனவர்களையும், வாழ்க்கையில் பெற வேண்டியவற்றை பெறமுடியாமல் காலம் கடந்து தவிப்பவர்களையும் நான் அனுபவரீதி யாகக் கண்டிருக்கின்றேன். அவர்களின் துன்பக்கதைகளைக் கேட்டு சராவுடன் பகிர்ந் திருக்கின்றேன். எதனையும் திட்டமிட்டு சஞ்சலமில்லாமல் வெற்றியுடன் செய்துமுடிக்கும் ஆற்றல்மிக்கவர்தான் சரா. ஒரு நிகழ்வினை ஒழுங்கமைப்பதாக இருந்தாலும், அதனை நடைமுறைப்படுத்துவதென்றாலும் சராவிடமே ஆலோசனை பெறும் அளவிற்கு அவரின் பணி சிறப்பானதாக இருக்கும்.

அரியாலை கிராமத்தைப் பொறுத்தவரையில் 1988ஆம் ஆண்டு அரியாலை சனசமூக நிலையத்தின் நிரந்தர அங்கத்தவரான சரா. புவனேஸ்வரன் நிலையத்திற்காக தனது முழுமையான பங்களிப்பினை ஆற்றிவருகின்றார். இவரது சேவையினைப்பாராட்டி சனசமூக நிலையத்தினர் பிரதம விருந்தினராக அழைத்து கௌரவித்தமையை இப்பொழு தும் மறக்கமுடியாது. அரியாலை ஐக்கிய கழகத்தின் செயலாளராக இருந்து பலபணிகளை முன்னெடுத்து எமது கிராமத்தின் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காகப் பாடுபட்டு பல வீரர்களை உயர்வடையச் செய்துள்ளார்.

இவரால் இயக்கப்படுகின்ற "சயன்ஸ் அக்கடமி" என்னும் கல்வி நிறுவனம் பற்றி உயர்வாகப் பேசாதவர்களே இல்லை. நிர்வாகத்திறன், பேச்சாற்றல், எழுத்தாற்றல், கவியாற்றல், கணிணியாற்றல், ஒழுங்கமைக்கும் திறன், முடிவெடுக்கும் ஆற்றல், உதவி செய்யும் பண்பு, கருணை காட்டும் குணம், சொல்வலிமை, நேரிய சிந்தனை போன்ற பல குணாம்சங்களைக் கொண்ட சரா. புவனேஸ்வரனிடம் நான் கற்பதற்கு இன்னும் ஏராளமான விடயங்கள் உள்ளன. இதைவிட "சயன்ஸ் அக்கடமி" நிறுவனத்திற்குக் கிடைத்த ஆசிரியர்கள் சராவிற்குக் கிடைத்த இன்னுமொரு பேறாகும். எல்லோரும் சேர்ந்து செயற்படும் விதம் பாராட்டுக்குரியது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான செயலமர்வுகளை நடாத்துவதற்கு இவருடன் நாட்டின் அனைத்துப்பாகங்களுக்கும் சென்றிருக்கின்றேன். தொடர்ந்து ஐந்து மணித்தியாலங்கள் இவர் கற்பிப்பதனைப் பார்த்து பல தடவைகள் வியந்திருக்கின்றேன். ஒரு மண்டபத்தில் ஆயிரம் பிள்ளைகளை உள்ளடக்கி ஐந்து மணிநேரமும் எந்தவொரு பிள்ளையின் கவனமும், கரிசனையும் எங்கும் கலைந்துவிடாமல் இரசனையுடன் இவர் கற்பிக்கும் ஆற்றல் கண்டு பலரிடம் கூறியிருக்கின்றேன். அத்தனை மாணவர்களின் கண்களும் இவரிடமே இருக்கும். நவீன தொழில்நுட்பத்துறைகளுக்கூடான இவரது கற்பித்தல் கண்டு பல பெற்றோர்கள் வியந்து நின்றதனை பல தடவைகள் அவதானித்துள்ளேன். கடந்த 15 வருடங்களாக இரவு முழுவதும் விழித்திருந்து வெற்றித்தேர்வு என்னும் வினாப்பத்திரத்தை தயாரித்து நாட்டில் உள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் வழங்குவதனைப் பெருமையுடன் பாராட்டுகின்றேன்.

இவரிடம் உள்ள பல்துறை ஆற்றல்களுக்கு ஒரு உதாரணத்தை இங்கு சொல்ல விரும்புகின்றேன். இவர் அரியாலை ஐக்கிய கழகத்தின் செயலாளராக இருந்தபோது கண்டி வீதியில் ஒரு காணி பெறப்பட்டது. அன்றைய நாள் அக்காணியில் நற்காரியம் செய்வதற்கு தேங்காய் இல்லாமல் இருந்தது. நாங்கள் அனைவரும் அங்கலாய்த்து நின்றபோது அருகில் இருந்த தென்னைமரம் நோக்கி சராவிடம் இருந்து ஒரு கல் மேலே சென்றது. அங்கிருந்து ஒரே தடவையில் இரண்டு தேங்காய்கள் கீழே விழுந்தன. நாம் எல்லோரும் அதிசயித்துப் போனோம். அதற்கு அவர் சொன்ன அர்த்தம் விளையாட்டாகக் கற்பதனை வாழ்வியலுக்கும் பயன்படுத்த வேண்டும். அத்தோடு எனது வீட்டில் இருந்த தொலைபேசி பல நாட்கள் செயலிழந்து இருந்தது. நான் எவ்வளவோ முயற்சிகள் செய்தும் பலன் கிடைக்கவில்லை. சரா வீட்டிற்கு வந்தபோது "தொலைபேசி செயலிழந்து உள்ளது" என்று சொன்னேன். மறுநிமிடம் தொலைபேசி செயற்பட ஆரம்பித்தது.

இவரின் இத்தகைய சிறப்புக்களுக்கு அவரின் துணைவியான திருமதி வசந்தினி புவனேஸ்வரன் முழுக்காரணம் என்பதனை இங்கு சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். இவரது குடும்பத்தாரோடு மிகவும் நெருக்கமான நட்புறவோடு பழகும் நான் இவரின் துணைவி யாரிடம் அழகிய பல பண்புகளை அவதானித்துள்ளேன். என்னை ஒரு தந்தையாக, நண்பனாக, அண்ணனாக பல கோணங்களில் அனுசரித்துப் பழகுவதனையும் இவரது குழந்தைகள் நட்புரிமையோடு என்னோடு உறவாடுவதனையும் என்னால் எளிதில் மறந்துவிடமுடியாது.

இவரோடு பழகும் நண்பர்கள் பலரைப் பார்த்திருக்கின்றேன். அனைவருமே இவரின் குணமொத்தவர்களாகவே இருக்கின்றார்கள். இவரால் வளர்த்தெடுக்கப்பட்ட நல்ல மாணாக்கர்களுள் சர்வானந்தனைப் பார்க்கின்றேன். சராவிடம் உள்ள அத்தனை பண்புகளையும் இவன் கொண்டிருப்பது சராவிடம் கற்கும் பிள்ளைகள் எப்பொழுதும் துடிப்புள்ளவர்களாகவும், நல்லவர்களாகவும் வருவார்கள் என்பதற்கு சான்றாகும்.

இத்தகைய பல்துறைப்பண்பு கொண்ட நல்ல நண்பன் சரா. புவனேஸ்வரன் தனது ஐம்பதாவது அகவையில் சிறந்து மேலோங்க எல்லாம்வல்ல நாராயணக் கடவுளை வேண்டி நிற்கின்றேன்.



# “பொன்விழா நாயகனின் பணி தொடரட்டும்...”

**திரு. சி. செல்வராசா** J.P
முன்னாள் வங்கியாளர்,
பொன்விழாச் சபை ஆலோசகர்.

அரியாலை மண்ணில் பிறந்தவர்கள் தாம் பிறந்த மண்ணின் பெருமையை நிலைநாட்ட பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்கள். கல்வித்துறை, கலைத்துறை, விளையாட்டுத்துறை, அரசியல்துறை எனப் பலதுறைகளிலும் தேசிய, பிரதேச மட்டங்களிலும் இவர்கள் தடம்பதிக்கத் தவறவில்லை. இம்மண்ணில் வாழ்வியல் தேடி வந்தவர்களும் இம்மண்ணுக்குப் பெருமை தேடித் தந்துள்ளார்கள். அந்தவகையில் பொன்விழா நாயகன் சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்கள் இம்மண்ணின் புகழ்பூத்த நாயகனாகவே விளங்கி வருகின்றார்.

**‘தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலில் தோன்றாமை நன்று’**

என்ற குறள்மொழிக்கமைவாக சகல வழிகளிலும் புகழொடு வாழ்ந்து வருபவர் சரா புவனேஸ்வரன் என்றால் அது மிகையாகாது. கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுமிவர் சமுகத்தோடு ஒன்றி வாழ்வதோடு மட்டுமல்லாது தன்னோடு இணைந்த ஆசிரிய சமுகத்திற்காகவும் தன்னை அர்ப்பணித்து வருகின்றார். இதன் காரணமாக ஆசிரியர் சமுகம் இவருக்கு வழங்கிய மகுடமே இலங்கைத் தமிழாசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் பதவியாகும்.

நான் அரியாலை மண்ணில் வாழ்பவன். “சரா” என்னும் சரவணமுத்து புவனேஸ்வரன் எம் மண்ணில் எவ்வாறு செயற்பட்டார். எவ்வாறு வாழ்ந்து வருகின்றார் என்பது பற்றி குறிப்பிட வேண்டிய அவசியம் உள்ளது. கிழக்கு மாகாணத்தில் பிறந்த இவர் தனியே கிழக்கு மாகாணத்திற்கு மட்டும் உரித்தானவரல்ல. இவரது பூர்வீகம் வடக்கு மாகாணத்துடன் நீண்ட தொடர்புடையது. அதன் காரணமோ? தெரியவில்லை. அவர் அரியாலை மண்ணை வாழிடமாக நாடி வந்தமையாக இருக்கலாம். வாலிபப் பருவத்தில்

அரியாலை வந்த இவர் அரியாலை மக்களோடு இணைந்து பல துறைகளிலும் செயற்பட ஆரம்பித்தார். விளையாட்டுத்துறையில் மிகு ஆர்வம் கொண்ட காரணத்தால் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தில் ஓர் உறுப்பினராக இணைந்து தன்னிகரில்லாத் திறமைகளை வெளிக்கொணர்ந்தார். இதன் காரணமாக அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் பொருளாளர், செயலாளர் ஆகிய பதவிகளைப் பெற்று அரியாலை சமுகத்திற்கு பெருமை தேடித்தந்தார். இவர் பதவி வகித்த காலங்களில் பிரதேச ரீதியான விளையாட்டுக் களில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் தொடர்ந்து முன்னிலை வகித்தது. மேலும் அரியாலை சனசமூக நிலைய வளர்ச்சியிலும் இவர் அதீத பங்கு கொண்டார். நிலையத்தின் வளர்ச்சிக்காக இன்றும் நிதி வழங்கி செயற்பட்டு வருகின்றார்.

அரியாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முக்கிய கவனம் செலுத்திய வர்களில் இவரும் ஒருவராவார். அரியாலையில் சயன்ஸ் அக்கடமியை ஆரம்பித்து மாணவர்களின் கல்வியை ஊக்குவித்து வருகிறார். தனியார் கல்வி நிலையமாக இருந்தாலும் மாணவர்களின் ஒழுக்கநெறியைப் பின்பற்றி கல்வியை முன்னிலைப்படுத்திக் கற்பித்தலை மேற்கொண்டு வருகின்றார். வசதிகுறைந்த மாணவர்களைக் கல்வியில் ஊக்குவிக்கும் பொருட்டு அரியாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து அவர்களுக்கான வசதிகளை இன்றுவரை செய்து வருகின்றார். எடுத்த பணிகளைக் கனகச்சிதமாகச் நிறைவேற்றும் ஆற்றல்மிக்கவரான இவர் பொன்விழாக் காண்பதில் நாம் அனைவரும் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதோடு அவரின் பணி மேன்மேலும் சிறக்க எல்லாம்வல்ல சித்திவிநாயகரை வேண்டுகின்றோம்.



# புலமைப் பரிசில் துறையின் கலங்கரை விளக்கு


**திரு. S. சர்வானந்தன்**
செயலாளர்,
சரா பொன்விழாச் சபை.

**அறிமுகம்**

கல்வி உலகில் பிரவேசிக்கும் ஓர் மாணவக் குழந்தை தேசிய ரீதியில் எதிர் கொள்ளும் முதலாவது போட்டிப் பரீட்சை தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை ஆகும். இது மாணவர்களைப்பாடசாலைகளுக்குத் தேர்ந் தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வாங்குவதற்குமாக அரசாங்கத்தால் நடாத்தப்படுகின்ற ஓர் போட்டிப் பரீட்சை யாகும். இப் பரீட்சையில் மாவட்டக் கோட்டா அடிப்படையில் வெட்டுப்புள்ளிகள் நிர்ண யிக்கப்பட்டு இதில் மாணவர்களின் அடைவு மட்டம் வெளிக்கொணரப்படுகின்றது. அதா வது குறித்த வெட்டுப்புள்ளி மேற்பட்ட புள்ளிகளைப் பெறும் மாணவர்கள் இப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களா வர். இவ் வெட்டுப்புள்ளி மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடுகின்றது. அதாவது கல்வி அபிவிருத்தியில் முதன்மை வகிக்கும் மாவட் டங்களை சேர்ந்த மாணவர்கள் கூடிய வினைத்திறன் கொண்ட வர்களாகவும் இப் பரீட்சைக்குப் போதியளவு தயார்படுத்தல் களை மேற்கொள்பவர்களாகவும், அதிக தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருப்பதனால் இப் பரீட்சையில் அவர்கள் பெறும் புள்ளி களின் வீச்சு உயர் வாகக் காணப்படுகிறது. எனவே இம் மாவட்டங்களுக்கான வெட்டுப் புள்ளிகளும் சற்று உயர்வாகவே காணப்படு கிறது. இதனால் சராசரியாக 150 புள்ளி களைப் பெறுகின்ற மாணவர்கள் கூட சித்தியடையத் தவறுகின்றனர். எனவே, இப் பரீட்சையில் சித்தியடைய வேண்டிய கட்டா யம் மாணவர்களுக்கு இருக்கின்றது. ஏனெனில், இதன் மூலமாகவே பாடசாலைத் தெரிவுகள் இடம்பெறுகின்றன. எனவே தரம்5 புலமைப் பரிசில் பரீட்சை என்பது இன்று பெற்றோர்கள் மத்தியில் சமூக ரீதியாக ஏற்பட்டிருக்கும் ஓர் போட்டிப் பிரச்சினை என்றே கூறலாம்.

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்குரிய வயதெல்லை 10 வருடங் கள் ஆகும். இவ் வயதில் மாணவர்கள் சுயமாக தேடிக்கற்கும் பக்குவத்தைப் பெறமுடியாதவர்களாக இருக்கின்றனர். அதிலும் கட்டாயத்தின் பேரில் எதனைப் படிக்கின்றோம், எதற்காகப் படிக்கின்றோம் எனப் புரியாத நிலையில் முற்றுமுழுதாக இன்னொருவரின் வழிகாட்டலில் இப் பரீட்சையை எதிர்கொள்கின்றனர். எனவே, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையைப் பொறுத்தமட்டில் மாணவர்கள் ஆசிரியர் களையே முழுமையாக நம்பியிருக்கின்றார் கள் என்பது யாவரும் அறிந்ததே. இதற்கு

ஊக்கமும், புதிய தேடலும் சாதிக்க வேண்டும் என்ற சிந்தனையுமுள்ள துடிப்புள்ள ஆசிரியராலேயே மாணவர்களை முழுமையாகத் தயார்படுத்த முடிகின்றது. இதற்கு முற்று முழுதான தகைமை பெற்ற ஒருவராக திரு. சரா அவர்களை எல்லோரும் எதிர் பார்க்கின்றனர். ஆரம்பக் கல்வி நியமனத்தைக் கொண்ட திரு. சரா அவர்கள் தனது நியமனக்காலம் தொடக்கம் இன்றுவரை புலமைப் பரிசில் துறைக்கு ஆற்றிவரும் பணிகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரை யின் நோக்கமாகும்.



அரியாலை கிழக்கு அ.த.க. பாடசாலையில் ஆரம்பப் பிரிவு ஆசிரியராக 1988ம் ஆண்டு நியமனம் பெற்ற திரு. சரா அவர்கள் தனது கல்விச் சேவையில் யாழ் மத்திய கல்லூரி ஆசிரியராக இணைந்து கொண்டார். மத்திய கல்லூரியில் இவரின் ஆற்றுகையில் அதிக புள்ளிகளுடன் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இவரின் அதீத திறமைக்கான சான்றுகள் எனலாம். ஒரு ஆசிரியர் எவ்வாறெல்லாம் செயற்பட வேண்டுமோ அவ்வாறெல்லாம் செயற்படும் கடமையுணர்வு கொண்டவராக விளங்கும் இவர் ஓர் கண்டிப்பான ஆசிரியராகத் தன்னை தடம்பதித்துக் கொண்டார். இவரின் கண்டிப்பான கற்பித்தல் பாணியே இவரின் மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறவும், பரீட்சைகளில் சித்தி பெறவும் உந்துதல் அளித்தன. பல வருடங்கள் புலமைப்பரிசில் ஆசிரியராக கடமையாற்றிய இவர் யாழ் மத்திய கல்லூரியில் உடற்கல்வித் துறையிலும் விளையாட்டுத் துறையிலும் அதிக ஈடுபாட்டுடன் தொழிற் பட்டதையும் மத்திய கல்லூரியின் பழைய மாணவனாகிய நான் நினைவு கூறுவதில் பெருமிதம் அடைகின்றேன். எனினும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை தான் இவரின் சீரிய நோக்காகத் திகழ்ந்தது. அதிலும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களை இவர் அன்புடன் அணைத்து வாழ்த்துவதுடன் அவர்களை தனக்கு மிகவும் பிடித்தமான மாணவர் பட்டியலில் இணைத்து விடுவார். இதுவே இத்துறைக்கும் இவருக்குமான அதீத ஈடுபாட்டின் நிலையான வெளிப்பாடாகும். இது போன்றே நானும் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இவருடன் மகத்தான ஓர் ஆசிரிய மாணவ உறவை உருவாக்கிக் கொண்டேன் அன்று முதல் இன்றுவரை. திரு.சரா அவர்கள் மத்திய கல்லூரியில் எனக்கு வழங்கிய சிறப்பான அங்கீகாரம் தான் என்னை கல்லூரிக் காலத்தில் சிறப்புடன் மிளிர்வதற்கு வழியமைத்தது எனலாம்.

பிற்பட்ட காலங்களில் உடற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியை முடித்து உடற் கல்வித்துறை விரிவுரையாளராக சென்ற பின்னர் தன்னுடைய புலமைப்பரிசில் துறையைக் கட்டிக் காப்பதற்காக அவர் கையாண்ட கருவி தான் அவருடைய "வெற்றித்தேர்வு" எனலாம். இன்று நாடளாவிய ரீதியில்

வெற்றித்தேர்வு வினாப்பத்திரத்துக்கு கிடைத்துள்ள மிகப் பெரிய அங்கீகாரம் திரு. சரா அவர்களின் தேடலுக்கும், முயற்சிக்கும், இத்துறையில் அவர் கொண்டிருக்கும் ஈடுபாட்டிற்கும் பாண்டித்தியத்திற்கும் கிடைத்துள்ள அங்கீகாரமாகக் கருத முடியும். 2004ம் ஆண்டு பிற்பகுதியில் தரம் 5 மாணவர்களுக்கான "வெற்றித்தேர்வு" எனும் மாதிரி வினாப்பத்திரத்தை தயாரித்து வெளியிட்டபோது மிகக் குறைவான பிரதிகளே வெளிவந்து கொண்டிருந்தன. எனினும் மனம் சளைக்காமல் தொடர்ந்து இப்பணியை முன்னெடுத்தார். பல நெருக்கடிகள் உருவாகிய போதும் அவரது தளராத மனநிலையால் வெற்றித்தேர்வு படிப்படியாக வளர்ச்சி காண ஆரம்பித்தது. அக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் அச்சிடுவதற்கு தாள்கள் (Paper) பெரும் தட்டுப்பாடக இருந்தது. எனினும் கொழும்பில் இருந்து அச்சிட்டு விமானம் மூலம் பொதியாக யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவர அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டு அதிலும் வெற்றி கண்டார்.

எடுத்த முயற்சியை கைவிடாது செய்து முடிக்கும் திறன்படைத்த திரு. சரா அவர்களின் திறனால் வெற்றித்தேர்வு யாழ். மாவட்டத்தில் பிரபல்யம் பெறத் தொடங்கியது மட்டுமன்றி வெகுவிரைவிலேயே வெற்றித்தேர்வுக்கு தனியான ஓர் அங்கீகாரத்தை நிலை நாட்டவும் முடிந்தது. ஒவ்வொரு வருடமும் தரம் 5, தரம் 4 மாணவர்களுக்காக மொத்தம் 35 வினாப்பத்திரங்களை வெளிவிடும் இவர் இப்பணியில் முழுமையாகத் தன்னை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தியதால் தான் அதில் அவரால் வெற்றியையும் அடையமுடிந்தது. வினாத்தாள் தயாரித்தல், கணணிப் பதிப்புச் செய்தல் செவ்வை பார்த்தல், அச்சிடல், தரம் பிரித்தல் விநியோகித்தல் என அனைத்துப் பணிகளையும் ஓய்வு உறக்கமின்றி நேரடியாகத் தானே நிறைவேற்றிக் கொண்டதை எம்மால் நேரே காணமுடிந்தது. ஒரு வினாப்பத்திரம் வெளியிடுவ தற்கு வாரத்தில் இரண்டு தினங்கள் முழுமையாக நித்திரை முளிப்பதாக அவரின் துணைவியார் அடிக்கடி சொல்வதும் இங்கு குறிப்பிடவேண்டிய விடயமாகும். ஏனெனில் இப்பணியில் அவரும் துணைவியாரும் ஈடுபடுவது மிக முக்கியமான அம்சமாகும். அன்று முதல் இன்றுவரை இப்பணியில் எவ்வித சலனமுமின்றி முன்னேற்றப்போக்குடன் நகர்வதை மனநிறைவுடன் குறிப்பிட முடிகிறது. அத்துடன் ஆரம்பப்பிரிவு மாணவர்கள் அனைவருக்குமே இப்பொழுது வெற்றித்தேர்வு வெளிவந்து நாடு முழுவதும் உள்ளோர் பயனடையக் கூடியதாக இருக் கின்றது.

தரம் 01 முதல் தரம் 05 வரையான எல்லா வகுப்புகளிற்கும் வெற்றித்தேர்வு வழிகாட்டிகளும், மாதிரி வினாப்பத்திரங்களும் உரிய காலத்தில் உரிய பாட விதானங்களைத் தழுவி தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதுவும் ஓர் புதிய முயற்சி என்பதுடன் அவரின் நீண்ட பயனுறுதியான செயற்பாடாகவும் கருதமுடிகிறது. ஏனெனில் மாணவர்கள் தரம் 01 இலிருந்து முறையாக வழிப்படுத் தப்பட வேண்டும். ஆரம்பக்கல்வினைத் திறனுடையதாக அமைய வேண்டும் என்பதற்காகவே இதனை ஆரம்பித்து வழிநடாத்துகின்றார். இதன் மூலம் மேலும் தன்னை சார்ந்த மாணவர்களின் அடைவு மட்டத்தையும் பெறுபேறுகளையும் நன்கு உயர்த்த முடியும் என்பது அவரது நம்பிக்கையாகும்.


இதுவரை காலமும் 500 ற்குமதிகமான புலமைப்பரிசில் மாதிரி வினாப்பத்திரங்களை வெற்றித்தேர்வு எனும் பெயரில் தயாரித்து வெளியீடு செய்த ஆசிரியர் சரா அவர்கள் தற்பொழுது காலத்தின் தேவை கருதியும், மாணவர்களின் நன்மை கருதியும் வெற்றித் தேர்வு வினா விடைத் தொகுப்பு வழிகாட்டி நூல், வெற்றித்தேர்வு கற்றாடல் சார் செயற்பாடுகள் எனும் நூல் என்பவற்

றையும் தயாரித்து வெளியிட்டிருக்கின்றார். இவை அவரது இருபத்தைந்தாண்டு கால புலமைப் பரிசில் துறையின் அனுபவத் திரட்டுக்கள் என்றால் அது மிகையாகாது.

மாணவர்கள் வினாத்தாள் IIல் எப் பொழுதும் தெளிவாகவும் திருத்தமாகவும் விடையளித்தல் வேண்டும் என்பதில் ஆசிரியர் சரா அவர்கள் மிகவும் உறுதியாக விளங்குபவர். இதனால் தான் வினாத்தாள் II ற்கான முற்று முழுதாக பாடவிதானங்களை தழுவி தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம் போன்ற விடயங்களை

விதானத்தை உள்ளடக்கிய இந்நூல் மிகவும் பயனுறுதி வாய்ந்ததென்பதற்கு 2012 புலமைப்பரிசில் பெறுபேறுகள் சிறந்த சான்றாக அமைகின் றன.

இது போலவே மாணவர்களும், போதிக் கும் ஆசிரியர்களும் மிகவும் இடர்படும் ஓர் விடயம் சுற்றாடல் சார் செயற்பாடுகளாகும். தெரிந்தால் மட்டுமே விடையளிக்க முடியும் என்ற நிலையில் உள்ள பல மாணவர்கள் கூடியளவு புள்ளிகளை இப் பகுதியில் இழப்பதனால் சித்தியடையத் தவறு கின்றனர் என்பதையும் எல்லோரும் அறிவர்.



உள்ளடக்கி வெற்றித்தேர்வு வினாவிடைத் தொகுப்பு நூலினை ஆக்கவேண்டும் என அவர் முயற்சித்தார். கனகாத்திரமான, அடிப் படை எண்ணக்கருக்களுடன், பரீட்சை நோக் காகக் கொண்டு, முழுமையான பாட

இதன் வெளிப்பாடாக கடந்த பல வருடத் தேடல், முயற்சியின் வெளிப்பாடு, ஆசிரிய ரின் 25வது வருட ஆசிரிய சேவை வாண் மைத்துவம் என்பன தான் "வெற்றித்தேர்வு" சுற்றாடல் சார் செயற்பாடுகள் நூலின்

பிரசவமாகும். மிகக் கடுமையான உழைப்பு, சிரமமான தேடல், அறிவுபூர்வமான ஆக்கம் என்பனவற்றை உள்ளடக்கி வெற்றியை நோக்காகக்கொண்டு இந்நூல் வெளிவந்துள்ளது. இந்நூல் நிச்சய மாக மாணவர்களிடம் பாடத்துறையில் மிகவும் முன்னேற்றகரமான தேர்ச்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.



**ஆசிரியரின் செயலமர்வுகள்**

தரம் 5 புலமைப்பரிசில் நெருங்கும் காலத்தில் வெற்றித்தேர்வு செயலமர்வுக்கான எதிர்பார்ப்புகள் மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் நாடளாவிய ரீதியில் அதிகமாகக் காணப்படும் நிலையில் உண்மையில் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெறும் செயலமர்வுகளில் ஆசிரியர் சரா அவர்களால் வழங்கப்படுகின்ற விசேட கையேடுகளுக்குத் தனியான "மவுசு" உண்டு என்றால் மிகையில்லை. "இம்முறை எதனை நான் எதிர்பார்க்கின்றேன்" என்பதுதான் செயலமர்வுகளில் ஆசிரியரது எண்ணக்கருவாக அமைகின்றது. இதன் அடிப்படையிலேயே அவர் தயாரிக்கும் வினாக்களும் பாடக்குறிப்புக்களும் அடங்கும். அது இறுதிப் பரீட்சையில் மாணவர்களுக்கு கைகொடுக்கும் மிகச் சிறந்த வழிகாட்டியாக அமைந்து விடுகிறது. இதனால் தான் ஒவ்வொருவருடமும் அவரின் செயலமர்வுக்கு இந்தளவிற்கு எதிர்பார்க்கை எழுகின்றது.

அத்துடன் செயலமர்வை நடாத்திச் செல்லும் பாங்கு அவரின் தனிப்பாணி என்று சொல்வதே மிகப் பொருத்தமாகும். தரம் 5 மாணவர்கள் ஐந்து மணிநேரம் சலிக்காமல் செயலமர்வில் கலந்துகொள்வதற்கு ஆசிரியரின் சளைக்காத கற்பித்தல் அவசியமாகிறது. மாணவர்கள் எதை விரும்புவார்கள், எதை எதிர்பார்க்கிறார்கள், அவர்களை கவரக்கூடிய வழிமுறைகள் எவை என்பவற்றை அவதானித்து அவற்றை தனது பாணியில் சேர்த்துக் கொண்டு மாணவர்கள் உச்சப் பயன்பாட்டை அடையும் வகையில் இவரது செயலமர்வுகள் அமைந்துவிடுகின்றது.

இவரது செயலமர்வு புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் I பகுதியையே மையப்படுத்தி அமைகின்றது. மாணவர்கள் விடையளிப்பதில் பல பிரச்சினைகளை எதிர்கொள்வதும், புள்ளிகளை இழப்பதும் இப்பகுதியில் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் தான் ஆசிரியர் இப்பகுதிக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றார். வினாத்தாள் Iல் வருகின்ற வினாக்கள் மாணவர்களின் பல்வேறு விதமான ஆற்றல்களை பரிசோதிக்கும் விதமாக அமைகின்றன. இவ்வினாக்களுக்கு இலகுவில் விடையளிப்பதற்கு மாணவர்கள் சில நுட்பங்களை கையாளும் போதே அது சாதகமாக அமைகின்றது. உரிய நேரத்திற்குள் இவ்வினாக்களுக்கு விடையளிக்க வேண்டுமெனில் அதற்கான நுட்பமுறைகளை நிச்சயமாக கையாளவேண்டும் என்பதில்தான் மாணவர்களின் பெறுபேறு தங்கியுள்ளது. இவற்றைக் கவனத்திற்கொண்டு மாணவர்கள் இலகுவில் விளங்கிக்கொள்ளக் கூடியவாறு அவ்

நுட்ப முறைகளைத் தெளிவுபடுத்துவதுடன் அவ்வாறான வேறு வினாக்களை மாண வர்கள் சந்திக்கும் போது இம்முறைகளை கையாளக்கூடியதாகவும் இவரது வழப் படுத்தல்கள் அமைகின்றன. நவீன தொழில் நுட்பத்துறையில் கணணியில் அவரது அதீத ஆற்றலுடன் அனைத்து வினாக்களுக்குமான விளக்கங்களையும் இலகு வழிகளையும் POWER POINT தொழில் நுட்பம் மூலம் பிரமாண்டமான வெண்திரையில் பல்லூடக விரியலாக்கி மூலம் செயலமர்வுகள் காலம் காலமாக நடந்தேறுவது வழக்கமாக மாறி விட்டது.

ஒரு வருடத்தில் நாடு பூராகவும் 5000ற்கும் அதிகமான மாணவர்கள் இச் செயலமர்வில் கலந்துகொண்டு பயன் பெறுகின்றனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, திருகோணமலை, மூதூர், மட்டக்களப்பு, காரைதீவு, நுவரெலியா, கொழும்பு, ஹட்டன், பண்டாரவளை என்பன இவரது செயலமர்வுகளை ஒவ்வொரு வருட மும் தவாறது ஒழுங்கு செய்யும் பிரதேசங்க ளாகும். சில இடங்களில் வறிய மாணவர் களின் நன்மை கருதி இலவசமாகச் செயலமர்வுகள் நடாத்தப்படுவதும் குறிப் பிடத்தக்கது. இச் செயலமர்வில் இன்னு மோர் முக்கியமான அம்சமாக விளங்குவது தான் தேசிய மட்டத்தில் முதலிடம் பெறுவது யார் என்பது. இதற்கும் வெற்றித்தேர்வு செயலமர்விற்கும் நிறையவே தொடர்புகள் இருக்கின்றன. ஏனெனில் தேசிய ரீதியில் முதலிடம் பெறும் மாணவன் / மாணவி நிச்சயமாக இவரது செயலமர்வில் கலந்து கொள்வதுடன் ஆசிரியர் செயலமர்வில் நடாத்தும் பரீட்சையில் அதிகூடிய புள்ளி களைப் பெற்று செயலமர்வில் பரிசில் பெறுப வராகத்தான் இருக்கமுடியும்.

அந்த வகையில் 2008ல் செல்வன் த.பாசுபதனில் இருந்து 2012ல் செல்வன். பா.அபிராம் வரை இச்சாதனை தொடர்கிறது. அனைவருமே இவரது செயலமர்வில் கலந்து கொண்டு இவரால் முதன்மை மாணவர்களா கத் தெரிவு செய்யப்பட்டவர்களே.

**முடிவுரை**

திரு. சரா அவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்து வதில் தனக்கென ஓர் நேர அட்டவணையைக் கொண்டு இயங்கி வருபவர். உரிய காலத் தில் உரிய வினாக்களுடன் வினாத்தாள் களை தயாரித்து வெளியிடுதல், பாடசாலை களுக்கு நேரடியாக உரிய நேரத்தில் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல், நேர காலம் பராது வினாக்களில் எழுகின்ற சந்தேகங்களைத் தீர்த்து வைத்தல் தெளி வான விளக்கங்களை வழங்குதல், புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மேலதிக வழி காட்டி நூல்களைத் தயாரித்து வெளியிடுதல், நேரடியாக நாட்டில் பல பாகங்களிலும் உள்ள மாணவர்களை செயலமர்வு வாயி லாக சந்தித்து அவர்களுக்கு மேலும் விளக்க மளித்தல், மாணவர்களின் நிலையை அறி யக்கூடியதாக அவரது இறுதி மாதிரி வினாப் பத்திரத்தை வெளியிடுதல், சித்தியடையும் மாணவர்களைக் கௌரவித்தல் முதலான செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றி வருகிறார். எனவே, இத்துறைக்கு தன்னால் ஆன பணிகளை மனநிறைவுடனும், மகிழ் ச்சியுடனும், சமூக உணர்வுடனும் ஆற்றி வரும் திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் (சரா) அவர்கள் புலமைப்பரிசில் துறையில் ஓர் கலங்கரை விளக்காக ஒளி வீசுகின்றார் என்பது மறுக்கப்படாத பேருண்மையே யாகும்.

* * *

# பல்லாண்டு வாழிய வாழியவே!



**ஐ. குமரதாசன்**
சிரேஷ்ட ஆசிரியர்
அரியாலையூர்
(கவிஞர் ஐயாத்துரையின் மைந்தர்)

*நற்றமிழ் மிளிரும் நயமுறு திருமலை*
*பெற்றநல் மைந்தன் புவனேஸ்வரனே!*
*கற்றவர் போற்றும் கல்வியில் உயர்ந்த*
*நற்கலா சாலையின் விரிவுரையாளரே*
*உற்றவூர் தனிலும் உயர்வுறு நல்லையிலும்*
*உயர்பணி யாற்றிடும் நிறுவனமுதல்வரே*
*பற்றுயர் தமிழர் ஆசிரியர் சங்கத்தின்*
*நற்பொதுச் செயலரே நிறைவுடன் வாழியவே!*

*கனிவுயர் குடும்பத் தலைவராய் மிளிர்ந்து*
*அறிவுசார் மக்கள் தனைப்பெற்றார்*
*பணிவுறும் மாணவர் மனங்களில் நிறைந்து*
*பயன்மிகு பணிகள் ஆற்றிடுவார்*
*கனிவுயர் ஆசிரியர் குறைகளை போக்கும்*
*காப்புயர் தெய்வமாய் திகழ்பவரே*
*ஆனியாம் திங்கள் பொன்விழா கண்டீர்*
*அவனியில் பல்லாண்டு வாழிய வாழியவே!*

*வளமிகு கல்விப் பணிதனில் இணைந்து*
*வெள்ளிவிழா கண்ட நாயகனே!*
*அழகொளிர் இலங்கைத் தீவினில் வாழும்*
*ஆசான்கள் மனங்களில் நிறைந்தவரே*
*புகழது விரும்பா பொற்புயர் சேவைகள்*
*புவிதனில் ஆற்றிடும் பெரியோனே*
*உளமது உவந்திட பொன்விழா எடுத்தோம்*
*உயர்வொளியே பல்லாண்டு வாழிய வாழியவே!*

# எங்கள் ஆசான்



செல்வி தர்மிதா தர்மரத்தினம்
தரம் 9

ஆறுமுகன் கோவிலருகில் அருமையான நாளுமிது
அன்புச் சராசேரின் ஐம்பதாவது அகவை இன்று
ஆயிரம் பேர் வந்துநின்று ஆசிகள் வழங்கிடினும்
ஆசான் புகழ் கூறிடுவேன் அருமையாகச் செவிமடுப்பீர்.

ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்து மூன்றினிலே
அழகான திருமலையில் முத்தாக அவதரித்து
ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்து எட்டிலே
அரியாலை தன்னில் சொத்தாக இணைந்து கொண்டார்.

ஆரம்பக்கல்விக்காய் சம்பூரில் இணைந்த இவர்
அரிய பல சாதனையுடன் அங்கிருந்து வெளியேறி,
அரசாங்க ஆசானாய் அரியாலையில் சேவையாற்றி
அங்கிருந்து மத்திய கல்லூரிக்கு மாற்றம் பெற்றார்.

அவர்தம் திறமையாலே கல்வியற் கல்லூரியிலும்
ஆசிரிய கலாசாலையிலும் அரியகல்வி புகட்டிநின்றார்.
அன்னை தந்தை இவருக்கிட்ட புவனேஸ்வரன் எனும் நாமம்
அன்பாகப் பழகுவதால் "சரா" எனவே குறுகியது.

அரிய சொத்தாம் அக்கடமிகளின் அதிபதியும் ஆகியவர்
அனுதினமும் அதை வளர்க்க அரும்பாடு படுகின்றார்.
அங்கிருக்கும் ஆசான்கள் மாணவர்கள் யாவரையும்
அன்புரிமையுடனே தனது பக்கம் ஈர்த்துக்கொண்டார்.

அழகான அறிவுள்ள அன்பான துணையைப் பெற்று
அமைதியான செல்வங்கள் நால்வருக்கும் தந்தையானார்
அவனியிலே உயர்ந்தவராய் அவர்களையும் ஆக்கிவைக்க
அருமையான அப்பாவாய் நாளும் வழி காட்டுகின்றார்.

ஆசிரிய சங்கத்திலே செயலாளராய் பதவியேற்று
அரிய சாதனைகளை அடுக்கடுக்காய் குவிக்கின்றார்.
ஆசிரியர் தமதிடரை அவரிடம் கூறிவைத்தால்
அவர் இவரெனப் பாராது அனைவருக்கும் உதவுமிவர்

அகவை நூறு கண்டு அவனியிலே வாழ்வதற்கும்,
ஆனந்தமாய் இல்லறத்தில் ஐஸ்வர்யம் பெறுவதற்கும்,
அன்பான என் குடும்பம் அன்புமலர் தூவிநின்று
ஆசீர்வதிக்கின்றோம் ஆசானே நீர் நீடு வாழி.

# புவனம்

50 Years
Golden Jubilee

## பல்துறை சார்ந்தோரின் ஆக்கங்கள்



# யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் க.பொ.த. சா/த - 2012
# விஞ்ஞான பாடப் பெறுபேறு - ஓர் பார்வை



**பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை**
முன்னாள் துணைவேந்தர்
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திரு சரா புவனேஸ்வரன் அவர்கள், ஆசிரியராகவும், தொழிற்சங்க பிரமுகராகவும், விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் கரிசனை கொண்டவராகவும் இருப்பதால், அவரது 50வது அகவை நிகழ்விற்கு, இக் கட்டுரை சமர்ப்பணமாகிறது.

நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு விஞ்ஞானக் கல்வியின் தரம் பரவலாக்கல் முக்கிய இடம் வகிக்கின்றது.

விஞ்ஞானக் கல்வியில் பின்னடைவு ஏற்படுமிடத்து அபிவிருத்தி, மேம்பாடு பின் தள்ளப்படும். இன்று வளர்ச்சியடைந்த நாடுகள் கூட விஞ்ஞானக் கல்வியில் கூடிய கரிசனை செலுத்தத் தவறிவிட்டன என குறை கூறப்படுகின்றது.

இதனால் அந் நாடுகள் தங்களுக்குத் தேவையான பல மட்ட விஞ்ஞான வேலை படையை பிற நாடுகளில் இருந்து வரவழைக்க வேண்டியுள்ளன.

இங்கிலாந்து, ஜேர்மன், ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற

**அட்டவணை - 1**

| கோட்டம் | பரீட்சைக்குத் தோற்றியோர் | ஏ | பி | சி | எஸ் | டபிள்யூ |
|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1331 | 158 | 164 | 219 | 365 | 425 |
| நல்லூர் | 1099 | 131 | 129 | 219 | 356 | 264 |
| கோப்பாய் | 622 | 14 | 29 | 79 | 225 | 276 |
| வலயம் | 3052 | 303 | 322 | 517 | 946 | 964 |

நாடுகள் பல, இந்தியா மற்றும் வளர்முக நாடுகளில் இருந்து விஞ்ஞானத்துறை சார்ந்த புலமையாளர்கள் மற்றும் ஆளணியினரை வரவழைத்துள்ளனர்.

மேலும் விஞ்ஞான பாடத்தில் சித்தி பெறாது விட்டால் கணிதத் துறையையும் தெரிவுசெய்ய முடியாது. பாடசாலை மட்ட வேலைகளில் இருந்து விஞ்ஞான பாடத்திற்கு சில புள்ளிகள்

**அட்டவணை - 2**

| | தமிழ் | கணிதம் | விஞ்ஞானம் | வரலாறு | ஆங்கிலம் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 83.00 | 66.45 | 68.55 | 67.79 | 49.87 |
| வலிகாமம் | 77.99 | 56.13 | 54.91 | 58.37 | 28.81 |
| வடமராட்சி | 82.47 | 61.87 | 62.77 | 64.69 | 38.35 |
| தென்மராட்சி | 80.27 | 57.01 | 61.12 | 56.86 | 34.17 |
| தீவுகள் | 70.36 | 45.23 | 42.91 | 42.56 | 13.19 |
| கிளிநொச்சி | 71.13 | 41.45 | 42.16 | 44.78 | 14.08 |
| மன்னார் | 85.00 | 62.65 | 62.08 | 70.16 | 38.42 |
| மடு | 78.22 | 43.58 | 50.77 | 55.83 | 18.82 |
| வவுனியா வடக்கு | 76.79 | 39.27 | 43.80 | 58.81 | 13.09 |
| வவுனியா தெற்கு | 87.78 | 60.49 | 64.29 | 69.38 | 34.24 |
| முல்லைத்தீவு | 72.99 | 45.50 | 43.40 | 42.51 | 13.45 |
| துணுக்காய் | 72.90 | 39.34 | 34.62 | 43.58 | 6.82 |
| மாகாணம் | **79.80** | **55.57** | **56.66** | **59.45** | **30.73** |

தரவு - வடக்கு மாகாண சபை - கல்விப் பிரிவு

வட மாகாணத்தில் 12 கல்வி வலயங்கள் (அட்டவணை 2) இருக்கின்றன. இவ் வலயங்களுள் விஞ்ஞானக் கல்வியில் யாழ்ப்பாண கல்வி வலயம் முக்கிய இடத்தைவகிக்கின்றது.

க.பொ.த உ/த வகுப்பில் உயிரியல் விஞ்ஞானம் கற்க க.பொ.த. சா/த பரீட்சையில் கணிதம் உட்பட ஆறு பாடங்கள் சித்தியடைந்து இதில் விஞ்ஞானம் உட்பட மூன்று பாடங்களில் "சி" சித்தி பெற்றிருக்க வேண்டும் வழங்கலாம். எனினும் "சி" சித்தி அடையாதவர்களை இப் பிரிவில் சேர்ப்பது குறைவு.

மருத்துவம், பல் மருத்துவம் இணைந்த மருத்துவக் கற்கைகள், மிருக வைத்தியம், சித்த வைத்தியம் மற்றும் பல்வேறு விவசாய, சூழலியல் கற்கைகள், உயிரியல் விஞ்ஞானப் பாடக் கற்கைகள் கற்க க.பொ.த உ/த உயிரியல் விஞ்ஞானப் பிரிவு மாணவராக இருக்க வேண்டும்.

தமிழ் மாணவர்கள் மத்தியில் உயிரியல் கற்றும் எண்ணிக்கை குறைந்து வருவது கவலை தருவதாக உள்ளது. பல்வேறு தொழில் துறைகளில் வேலை வாய்ப்புக்கள் உயிரியல் விஞ்ஞான துறையினருக்கு இருந்தும் இத்துறை சார்ந்தவர்கள் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் பதவிகளை நிரப்ப முடியாதுள்ளது.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் என மூன்று கோட்டங்கள் உண்டு. இக் கல்வி வலயத்தில் க.பொ.த சா/த 2012 பரீட்சைக்கு 3173 பேர் விண்ணப்பித்து 3052 பேர் பரீட்சைக்குத் தோற்றினர்.

கோட்ட அடிப்படையில் வலயத்தின் பெறுபேறுகள் அட்டவணை 1இல் தரப் பட்டுள்ளன.

யாழ்ப்பாண வலயத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய 3052 பேரில் 2088 பேர் (68.5%) விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந் துள்ளனர். இவர்களுள் 1142பேர் (37.42%) சி யும் அதற்கு மேல் தரங்களும் பெற்று க.பொ.த உ/த விஞ்ஞானம் கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இவ் வலயம் வட பகுதியின் கல்வியில் சிறந்த வலயமாக இருப்பினும் இதன் விஞ்ஞா னப் பாடப் பெறுபேறு தேசிய மட்ட சராசரியை ஒத்து இருக்கிறதேயல்லாமல் அதற்கு மேல் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2009இல் 52.7% இருந்த பெறுபேறு 2010இல் 61.72% ஆகவும் 2011இல் 62.3% ஆக வும் 2012இல் 68.4% ஆகவும் உயர்ந்து வந் துள்ளது பாராட்டத்தக்கது.

2012 க.பொ.த சா/த வினாத்தாளில் ஏற்பட்ட பிழைகள் காரணமாக 19 வினாக்களுக் குப் புள்ளிகள் கொடுக்கப்பட்டதும் பெறுபேற்று உயர்வுக்கு பங்களித்திருக்கலாம்.

மேலும் வலயத்துக்குள் கோட்ட அடிப்படையில் வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம். யாழ்ப்பாணக் கோட்டத்தில் சி யும் அதற்கு மேல் தரங்களில் 541பேர் (40.65%) நல்லூரில் 479 (43.59%), கோப்பாய் 122 பேர் (19.61%) உயிரியல் விஞ்ஞானக் கற்கத் தகுதி பெறுகின்றனர்.

இவ்வெண்ணிக்கையும் க.பொ.த. உ/த கற்க ஏனைய க.பொ.த. சா/த நிபந்தனை களைப் பூர்த்தி செய்யுமிடத்தே பொருந்தும். மேலும் தகுதி பெற்றவர்களில் விஞ்ஞானக் கல்வியை கற்க சிறு பிரிவினரே முன்வருவதும் கவலைக்குரிய விடயமாகும்.

வடமாகாணத்தில் வலய மட்டத்தில் 5 பாடத்துக்குரிய சித்தி பெறுபேறுகள் விகிதத் தில் (அட்டவணை 2) தரப்பட்டுள்ளன. சமய பாடப் பெறுபேறுகள் எல்லா வலயங்களிலும் மிகவும் உயர்வாக இருப்பதால் இங்கு சேர்க் கப்படவில்லை.

அட்டவணை 2இன் தரவுகளில் கணிதம், விஞ்ஞானம் இரண்டிற்குமிடையில் பெறுபேறுகளில் தொடர்பு காணப்படுகின்றது. இங்கு தரப்பட்ட தரவு சித்தியை குறிப்பதாக இருக்கின்றது. சி சித்தியும் அதற்கு மேல் தரவு கள் இருந்தாலே க.பொ.த. உ/த உயர்தர கற்க கூடிய உண்மை நிலையை பிரதிபலிக்கும். தீவுகள், கிளிநொச்சி, வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களில் விஞ்ஞானப் பெறுபேறு மிகவும் குறைவாக உள்ளது.

யாழ்ப்பாண கல்வி வலயத்தில் பாடசாலை மட்ட பெறுபேறுகள் அட்டவணை 3 இல் தரப்பட்டுள்ளன. மொத்தம் 59 பாடசாலைகளில் 9 பாடசாலைகள் 100 மாணவர்களுக்கு மேல் பரீட்சைக்கு அனுப்பியிருந்தனர்.

இந்த 9 பாடசாலைகளில் இருந்து 1608 பரீட்சார்த்திகள் தோற்றி அவர்களுள் 940 பேர் சி சித்தியும் அதற்கு மேலும் பெற்றுள்ளனர். 1608 பேரில் 1370பேர் (85.20%) சித்தி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மிகுதி 50 பாடசாலைகளிலிருந்து 1444 பேர் பரீட்சைக்குத் தோற்றி 199 பேர் மாத்திரம் சி யும் அதற்கு மேல் தரங்களிலும் சித்தி பெற்றுள்ளனர். 1444 பேரில் 726 பேர் சித்தி பெறவில்லை.

வேம்படி மகளிர் கல்லூரி (99.15%) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (98.33) சித்தி பெற்றுள்ளன. 6 பாடசாலைகளில் ஒருவராவது சி சித்தி பெறவில்லை.

பாடசாலை மட்ட பெறுபேறுகளை நோக்கும்பொழுது யாழ் வலயம், நல்ல ஆசிரிய வளம், விஞ்ஞான ஆய்வு கூட வசதிகள், ரியூசன் வசதி, பாடசாலைகளின் நீண்ட கல்விப் பாரம்பரியம் கொண்டிருந்த நிலையில் பிரபல பாடசாலைகள் உட்பட பல பாடசாலைகள் நல்ல பெறுபேறுகளைத் தரத்தவறிவிட்டன.

இங்கு எஸ் சித்தியும் டபிள்யூ சித்தியையும் சேர்த்து பார்க்குமிடத்து பெறுபேறுகள் திருப்தி தருவதாக இல்லை. 1996ஆம் ஆண்டிலிருந்து இடப்பட்ட உள்ளீடுகளுக்கு ஏற்ப பெறுபேறுகள் அமையவில்லை. சி யும் அதற்கு மேல் தர பெறுபேறுகள் குறைவாக இருப்பது உயிரியல் விஞ்ஞான பிரிவில் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பதை தடையாக இருக்கும்.

யாழ்ப்பாணத்திலும், வட மாகாணத்திலும் விஞ்ஞானம், கணிதம் பிரிவுகள் கற்பிக்கும் பாடசாலைகள் எண்ணிக்கை, வகுப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். விஞ்ஞானக் கல்வி வளர்ச்சிக்கும் விரிவாக்கத்துக்கும் கல்வித் துறையினர் கூடிய முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

நாட்டின் வளர்ச்சிக்கு விஞ்ஞானம், கணிதம் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையையும், கல்வித் தரத்தையும் உயர்த்துவது காலத்தின் தேவையாகும். இதை அடைவதற்கு சகல தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும்.

| | Name of the School | No.sat | A | B | C | S | W | %Passed |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | J/ Vembady Girls High School | 234 | 95 | 69 | 44 | 24 | 2 | 99.15 |
| 1 | J/ Columbuthurai Hindu M.V | 16 | 0 | 2 | 3 | 9 | 2 | 99.15 |
| 19 | J/ Chundukuli Girl's College | 125 | 19 | 23 | 35 | 29 | 19 | 84.8 |
| 18 | J / St. John's College | 157 | 22 | 24 | 40 | 43 | 28 | 82.17 |
| 20 | St.Patricks College | 156 | 13 | 21 | 29 | 44 | 49 | 68.59 |
| 4 | J/ Holy Family Convent | 118 | 3 | 5 | 16 | 56 | 38 | 67.8 |
| 15 | J/ St. James Girls School | 46 | 1 | 1 | 9 | 18 | 17 | 63.04 |
| 2 | J/ Central College | 150 | 3 | 14 | 26 | 51 | 56 | 62.67 |
| 21 | J/ Osmania College | 15 | 0 | 1 | 1 | 7 | 6 | 60 |
| 14 | J/ Pasai St. Antorys Girls | 22 | 0 | 0 | 2 | 11 | 9 | 59.09 |
| 12 | J/ Nallur South Vigneswara | 10 | 0 | 1 | 1 | 3 | 5 | 50 |
| 22 | J/ St. Rochs Vid | 14 | 0 | 0 | 1 | 6 | 7 | 50 |
| 17 | J/ Van Navalar Vid | 21 | 1 | 0 | 2 | 7 | 11 | 47.62 |
| 6 | J/ Sanmarga M.V | 10 | 0 | 0 | 1 | 3 | 6 | 40 |
| 5 | J/ Vaitheeswara College | 52 | 0 | 1 | 4 | 15 | 32 | 38.46 |
| 13 | J/ Navanthurai R.C.T.M.S | 46 | 0 | 0 | 1 | 15 | 30 | 34.78 |
| 11 | J/ Kottad Namasivaya Vid | 19 | 0 | 0 | 1 | 5 | 14 | 26.32 |
| 7 | J/ St. charles M.V | 67 | 1 | 2 | 3 | 11 | 50 | 25.37 |
| 16 | J/ St. Marys Vid. | 21 | 0 | 0 | 0 | 5 | 16 | 23.81 |
| 8 | J/ St. James Boys School | 12 | 0 | 0 | 1 | 1 | 10 | 16.67 |
| 10 | J/ Col. Duraiyappah Vid | 8 | 0 | 0 | 0 | 1 | 7 | 12.5 |
| 9 | J/ Cot. St. Josephs Vid | 12 | 0 | 0 | 0 | 1 | 11 | 8.333 |
| | **Total** | **1331** | **158** | **164** | **219** | **365** | **425** | **68.07** |
| 24 | J/ Hindu College | 239 | 84 | 59 | 60 | 32 | 4 | 98.33 |
| 25 | J/ Jindu Ladies College | 226 | 19 | 40 | 70 | 75 | 22 | 90.15 |
| 26 | J/ Kokuvil Hindu College | 230 | 23 | 20 | 64 | 76 | 20 | 90.15 |
| 32 | J/ Kokuvil Namagal Vid | 12 | 0 | 0 | 1 | 9 | 2 | 83.33 |
| 31 | J/ Kokuvil Ramakrishna Vid | 9 | 0 | 0 | 1 | 6 | 2 | 77.78 |
| 33 | J/ Kokuvil Gnanapanditha Vid | 11 | 0 | 1 | 0 | 6 | 4 | 63.64 |
| 23 | J/ Canagaratnam M.M.V | 83 | 0 | 1 | 4 | 43 | 35 | 57.83 |
| 39 | J/ Periyapulam M.V | 56 | 3 | 0 | 4 | 25 | 24 | 57.14 |
| 29 | J/ Ariyalai Sri Parwthy Vid | 20 | 1 | 2 | 1 | 7 | 9 | 55 |
| 35 | J/Kondavil Ramakrishna M.V | 35 | 0 | 2 | 2 | 15 | 16 | 54.29 |
| 28 | J/Muthuthamby M.V | 59 | 1 | 0 | 4 | 26 | 28 | 52.54 |
| 30 | J/Kantharmadam Saivapiraga | 8 | 0 | 0 | 0 | 4 | 4 | 50 |
| 36 | J/ Nallur HinduTamil Mixed | 13 | 0 | 1 | 2 | 2 | 8 | 38.46 |
| 34 | J/Kondavil Hindu M.V | 39 | 0 | 2 | 2 | 10 | 25 | 35.9 |
| 27 | J/ Seguntha Hindu College | 33 | 0 | 1 | 2 | 8 | 22 | 33.33 |
| 40 | J/Uyarapulam M.V | 9 | 0 | 0 | 0 | 3 | 6 | 33.33 |
| 38 | J/ Nayanmarkattu Maheswary | 17 | 0 | 0 | 1 | 4 | 12 | 29.41 |
| 37 | J/ Nallur Station C.C.T.M.S | 12 | 0 | 0 | 0 | 3 | 9 | 25 |
| 41 | J/ Kondavil Paramsothy Vid | 9 | 0 | 0 | 1 | 1 | 7 | 22.22 |
| 42 | J/ Elayathamby Hindu Vid | 6 | 0 | 0 | 0 | 1 | 5 | 16.67 |
| | **Total** | **1099** | **131** | **129** | **219** | **356** | **264** | **75.98** |
| 58 | J/ Vatharawatha vigneswara | 12 | 0 | 1 | 2 | 7 | 2 | 83.33 |
| 56 | J/ Puthakaladdy Sri Vishnu Vid | 11 | 0 | 0 | 3 | 6 | 2 | 81.82 |
| 45 | J/ Idaikadu M.V | 26 | 3 | 8 | 5 | 5 | 5 | 80.77 |
| 53 | J/ Ava. Nadaraja Ramalinga Vid | 49 | 1 | 2 | 15 | 19 | 12 | 75.51 |
| 52 | J/ Atchelu Saivapiragase Vid | 14 | 0 | 0 | 3 | 7 | 4 | 71.43 |
| 51 | J/ Atchuvely Saraswathy Vid | 6 | 0 | 2 | 1 | 1 | 2 | 66.67 |
| 49 | St. Theresa Girls School | 50 | 0 | 1 | 6 | 25 | 18 | 64 |
| 59 | J/ Urumbirai Saivathamil Vid. | 35 | 3 | 1 | 5 | 13 | 13 | 62.86 |
| 47 | J/ Sri Somaskanda College | 81 | 4 | 3 | 9 | 31 | 34 | 58.02 |
| 55 | J/ Kopay Saravanapavanantha | 16 | 1 | 2 | 1 | 5 | 7 | 56.25 |
| 50 | J/ Kopay M.V | 18 | 0 | 1 | 1 | 8 | 8 | 55.56 |
| 44 | J/ Attiyar Hindu College | 59 | 0 | 2 | 5 | 24 | 28 | 52.56 |
| 43 | J/ Atchuvely Central College | 87 | 1 | 2 | 12 | 26 | 47 | 47.13 |
| 46 | J/ Kopay Christian College | 85 | 1 | 3 | 8 | 27 | 46 | 45.88 |
| 57 | J/ Urelu Ganesha | 19 | 0 | 1 | 1 | 6 | 11 | 42.11 |
| 54 | J/ Ava. Mahajana Vid | 11 | 0 | 0 | 1 | 3 | 7 | 36.36 |
| 48 | J/ Urmbirai Hindu College | 43 | 0 | 0 | 1 | 12 | 30 | 30.23 |
| | **Total** | **622** | **14** | **29** | **79** | **255** | **276** | **55.79** |



# தனியார் "ரியூசன்" முறை : வளர்ச்சி, பங்களிப்பு மற்றும் சவால்கள்


**பேராசிரியர் மா. சின்னத்தம்பி**
கல்வியியல் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.


**அறிமுகம்**

பாடசாலைக் கல்விமுறையின் பலவீனங்களை ஈடுசெய்யும் நோக்கிலும் மெல்லக் கற்கும் மாணவர்களை மையப்படுத்தியும், இலவசக் கல்வியின் நன்மைகளை போட்டியிட்டு கைப்பற்ற உதவுவதாயும் தனியார் ரியூட்டரிகள் வளர்ந்து, பரவி வந்துள்ளன.

வகுப்பறைகளை மாத்திரம் வைத்துக் கொண்டும், சோதனைகளை மையப்படுத்தியும் இவை தொழிற்படுகின்றன.

கல்வி தொடர்பான பல பிரதான முடிவுகள் கல்வியாளர்கள், கல்வி உளவியலாளர், கல்வி நிர்வாகிகள், பிள்ளைகளின் பெற்றோர் என்போரிடமிருந்து படிப்படியாக கைநழுவி ரியூட்டரிகளின் கையில் வலுவாகச் சிக்கியுள்ளன.

பாடசாலைக் கல்வியை வேறு மாதிரிகளில் திரும்பவும் கற்பிப்பதால் நன்மை பெறும் கல்வி வணிக நிறுவனங்கள் இலங்கை முழுவதும் செயற்பட்டு வருகின்றன.

பரீட்சையில் நிலவும் போட்டிகளில் ஓடி வெற்றி பெறுவதற்கு உதவுவது இவற்றின் பணியாகவுள்ளது.

ஐந்தாம் வகுப்பு, பதினோராம் வகுப்பு, பதின்மூன்றாம் வகுப்பு என்ற மூன்று நிலைகளில் தேசிய பரீட்சைகளில் மிகவும் குறைந்த சதவீதத்தினரே சித்தியடையும் பலவீனமான தேசிய கல்வி ஏற்பாடு ரியூட்டரிகளை இன்றியமையாத சமாந்தரமான கல்வி ஏற்பாடாக மாற்றியுள்ளது. இந்த பின்னணியில் இலங்கையின் "ரியூட்டரிகள்" தொடர்பான வளர்ச்சி அவற்றின் அமைப்பு, மாதிரிகை, அவை உருவாக்கும் சமூக விளைவுகள், அவற்றினால் கிடைக்கும் சமூக நலன்கள் தொடர்பான பல்வேறு அம்சங்களையும் நடுநிலையுடனும் தர்க்கரீதியாகவும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**முன் ஆய்வுகள்**

1994இல் இலங்கையின் தனியார் "ரியூசன்" முறையின் பன்முக அம்சங்கள் பற்றி பல்வேறு கல்வியாளர்களும், பேராசிரியர்களும் ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

"ரியூசன்" போதனை முறையின் நிலைமை பற்றிப் பேராசிரியர் "ஆரியதாஸ டி சில்வா" விரிவாக ஆராய்ந்தார். "ரியூசனில்" பிள்ளைகள் செலவிடும் நேரம், நேரவிரயம் போன்ற அம்சங்களை ஆழமாக ஆய்வு செய்துள்ளார்.

இலங்கையில் "ரியூசன்" முறையின் தோற்றம் பற்றி பேராசிரியர் சந்திரா குணவர்தனா ஆராய்ந்துள்ளார். "ரியூசனுக்கு" செல்வதற்கான பல்வேறு குறிக்கோள்களுடனும் "ரியூசன்" வளர்ந்த முறை பற்றி அவர் தெளிவுபடுத்தினார். பரீட்சை சித்திகளின் முக்கியத்துவம் எவ்வாறு தனியார் "ரியூட்டரிகளின்" வளர்ச்சியை வடிவமைத்தது என்பது பற்றியும் "நாணயக்காரவும்", "மகிந்த ரணவீரவும்" ஆழமாக ஆராய்ந் தனர்.

போட்டிப் பரீட்சைகளினால் பிள்ளைகளின் மன அழுத்தம் எவ்வாறு வலிமையுடன் உருவாகிறதென்பது பற்றியும் "ரியூசன்" முறை பிள்ளைகளில் எவ்வாறு அதிக அழுத்தத்தை தீவிரப்படுத்துகிறதென்பதையும் "வைத்திய கலாநிதி எச்.ரி. விக்கிரமசிங்க" தெளிவுபடுத்தியுள்ளார்.

"ரியூசன்முறை" மாணவர் மற்றும் பெற்றோர் பார்வையில் அவசியமாயிருந்தாலும் பாடசாலை முறைமைக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாகவும் கல்வி முறையை பல முறைகளில் சிதைப்பதாகவும் புதிய கல்விச் சட்டமுன்மொழிவு (New Education Act for General Education in Sri Lanka 2009:129) குறிப்பிடுகிறது.

**அரசிடமிருந்து தனியாருக்கு மாறுதல்**

இலங்கையின் முன்பிள்ளைப் பருவ கல்வியிலிருந்து பல்கலைக்கழக கல்வி வரை தனியார் துறையினரின் பங்குபற்றல் கணிசமானளவில் காணப்படுகின்றது.

கல்வி வழங்கும் பொறுப்பை அரசாங்கம் தன்னுடையதாக ஏற்கும் பழக்கம், மற்றும் கடப்பாடு சுதந்திரத்துக்கு முன்பிருந்தே தொடங்கிவிட்டது. நாட்டில் கீழ்ப்படிவுள்ள குடிமக்கள், மென்மையான நடத்தைகளுடன் அரசின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாழ்வது தமது ஆளுகைக்கு வசதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்கும் என்று கருதியே வரலாற்றுக்காலத்திலிருந்தே "பிஸ்மாக்" போன்ற ஆட்சியாளர்கள் கல்வியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். கம்யூனிச நாடுகளிலும் இதே எதிர்பார்க்கைகளுடன் தமக்குரிய மாதிரியில் குடிமக்களை உருவாக்கவும் தமது தேவைகளுக்கேற்றதாக அவர்களது நடத்தைகளை வடிவமைக்கவும் கல்வி நிறுவனங்களை தமது விருப்பத்தின்படி உருவாக்கி கண்காணித்து வந்துள்ளனர்.

இதே மாதிரியில் இலங்கையிலும் முரண்பாடில்லாத மென்மையான போக்குகள் கொண்ட சிந்தனையும், உணர்வும், செயலும் கொண்ட குடிமக்களை வளர்த்தெடுப்பதற்குரிய மாதிரியை உருவாக்கும் எண்ணத்துடன் போர்த்துக்கேயருக்குப் பின்பு ஒல்லாந்தரும், பின்பு 150 வருடகாலம் பிரித்தானியரும் மதசபையினருக்கு அனுமதியும் உதவியும் வழங்கி கல்வியைத் தமது மேற்பார்வையில் நிர்வகித்திருந்தனர்.

1943இலிருந்து இலவசக் கல்வியை அறிமுகப்படுத்துவதிலும் தாய்மொழியில் கல்வியூட்டுவதிலும், கட்டாய பாடசாலை வருகையை நடைமுறைப்படுத்துவதிலும் இலங்கை அரசாங்கங்கள் அதிக அக்கறை காட்டின. பல்வேறு நலனோம்பு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் கல்வித் துறையை கவனமாக கையாண்டன.

எனினும், 1960இல்தான் பாடசாலைகளை முழுதாக அரச பொறுப்பில் ஏற்கத் தொடங்கிற்று. எனினும் ஆற்றல்மிக்க கிறிஸ்தவ மிஷனரியின் பாடசாலைகளையும் மிகவும் பலவீனமான பெருந்தோட்டப் பாடசாலைகளையும் அப்போதைய அரசாங்கம் கண்டுகொள்ளவில்லை.

இதன்பின்பே கல்வி மீதான அரசின் முழுமையான கட்டுப்பாடு பாடசாலைக் கல்வி தொடர்பாக ஏற்படலாயிற்று. 1940களிலிருந்து பல்கலைக்கழகங்களையும் தொடங்கி அதிலும் தனது பங்களிப்பை உறுதி செய்திருந்தது.

இவ்வாறு ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் பாடசாலைக்

கல்வியில் அரசாங்கத்தின் கட்டுப்பாடு மிகவும் நல்ல நோக்கங்களுடனும் அதிக அரச நிதிச செலவுடனும் நிலவி வந்துள்ளது. 2011 இல் கூட இலங்கை அரசாங்கம் 121.3பில்லியன் ரூபாவை அதாவது, 121300 மில்லியன் ரூபாவை பொதுக்கல்வி மற்றும் உயர்கல்வி யில் செலவிட்டது.

இவ்வாறு இலங்கையின் வெகுசன தொடர் புகளில் வலுவானதும் மனிதவள விருத்தியில் உணவு, ஊட்டம், சுகாதாரம் என்பவற்றுடன் இணைந்ததுமான கல்வித்துறை அரசின் கட்டுப்பாட்டிலிருந்தே வருகின்றது.

1970களின் பின்பிருந்தே தனியார் கல்வி நிறுவனங்கள் - "ரியூசன்"நிலையங்கள் படிப்படி யாக வளரலாயின. இன்று அரச கல்விமுறைக்கு சமாந்தரமாகவும், பரவலாகவும், சமூக அங்கீகாரம் பெற்றதாகவும் வளர்ந்துள்ளன. இது தற்போது அரச பாடசாலைக் கல்வி முறை யில் அதிக செல்வாக்குச் செலுத்துவதாகவும் உயர்கல்வியில் அரச கல்வி முறையுடன் வலு வாக போட்டியிடுவதாகவும் மாறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும்.

**தனியார் துறையின் கல்வி மாதிரிகை**

இலங்கையின் தனியார், கல்வித்துறை யினர் பல்வேறு வகைப்பட்ட கல்விப் போதனை களில் ஈடுபட்டு வருகின்றனர். அவை

- ✦ முன்பிள்ளைப்பருவ கல்வி
- ✦ பாடசாலைக் கல்வி
- ✦ விவசாய மற்றும் தொழில்நுட்ப கல்வி
- ✦ தொழிற்பயிற்சி மற்றும் தொழில்சார் கல்வியும்
- ✦ தொழில்வாண்மைக் கல்வி (Professional Education)
- ✦ பல்வேறு மாதிரிகளில் பல்வேறு மொழிகள் கற்பித்தல்
- ✦ பல்கலைக்கழக மட்டக்கல்வி
- ✦ கணணிசார் பல்வேறு தகைமைகளுக்கான கல்வி

பொதுவாக தனியார் கல்வி மேற்கொள்ளப் படும் நிறுவன மாதிரிகைகள் பின்வருமாறு காணப்படுகின்றது.

- ✦ தனியார் பாடசாலைகள்
- ✦ தனியார் சர்வதேச பாடசாலைகள்
- ✦ தனியார் "ரியூசன்" நிலையங்கள்
- ✦ தனியார் வெளிநாட்டு பல்கலைக்கழகங் களின் கற்பித்தல் நிலையங்கள்
- ✦ தனியார்துறை பல்கலைக்கழகங்கள் (தொடக்கநிலை)
- ✦ ஒழுங்கேதுமற்றவகையில் தொழில் பயிற்சி வழங்கும் மையங்கள்

இவற்றில் பாடசாலை மட்டக் கல்வி யில் பங்கேற்கும் "ரியூசன்" கல்வி நிலையங் கள் பற்றியே அதிக கவனம் இங்கு செலுத்தப் படுகின்றது.

தனியார் "ரியூசன்" நிலையங்களின் பரவல், வளர்ச்சி, பங்களிப்பு என்பன பற்றிய அவ தானங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

தனியார் "ரியூசன்" நிலையங்களின் தொழிற் பாடு தொடர்பாக பின்வரும் அம்சங்கள் அதிக கவன ஈர்ப்பைப் பெறுகின்றன.

i) பாடசாலையில் கற்பிக்கும் அதே கலைத் திட்டத்தை -அதே பாடங்களைக் கற்பித்தல்.
ii) பாடசாலைகளில் கற்கும் அதே பிள்ளை களுக்குப் பணம் பெற்று படிப்பித்தல்.
iii) கற்பித்தலில் பயிற்சி பெற்றவர்களும் அத் தகைய பயிற்சி எதுவும் பெறாதவர்களும் கற்பித்தல்.
iv) அரச பாடசாலைகளிலும், வேறு அரச நிறு வனங்களிலும் நிரந்த வேலையில் உள்ள வர்களும் தனியார் துறையில் பணிபுரி வோரும், வேறு எந்த நிறுவனத்திலும் பணி புரியாதவர்களும் கற்பித்தல்.
v)ஒரு பாடத்தை முழுதாக ஒரு ஆசிரியரோ அல்லது பங்கிட்டு பலரோ படிப்பித்தல்.
vi) ஒரு பாடத்தை ஒரே கல்வி நிலையத்தில் பல குழுக்களாக பலர் தனித்தனியாக கற்பித்தல்.
vii)பாடங்களை பல அலகுகளாக பிரித்து அதே மாணவர்களுக்குச் சிறப்பாகக் கற்பித்தல்.
viii)வினா - விடைகளுக்கான பயிற்சி வகுப் புக்கள், மற்றும் மீட்டல் வகுப்புக்களுக்கு அதே மாணவரிடம் தனியாக பணம் பெற் றுக் கற்பித்தல்.

ix) பயிற்சிக்கான சோதனைகள் பலவற்றைப் பணம் பெற்று நடாத்துதல்

x) கட்டுரைகள், வினாத்தாள்கள், வினா - விடை நூல்கள், பாடங்களிலான தனித்தனி நூல்கள் போன்றவற்றை அதே மாணவரிடம் தனியாக பணம்பெற்று விற்பனை செய்தல்.

xi) பல்வேறு மாணவர் சார்ந்த வைபவங்களையும் அவர்களிடம் பணம் பெற்று நடாத்துதல்.

xii) பாடசாலை நேரங்களிலும், பாடசாலை நேரத்துக்கு முன்பும், பின்பும் விடுமுறை நாட்களிலும் இடையறாது கற்பித்தல்.

xiii) ஒரே நாளில் பல தடவை வீட்டிலிருந்து வந்து கற்று பின் திரும்பிச் செல்லும் நடைமுறைகளைப் பின்பற்றுதல்.

இந்த பல்முனைப்பட்ட தொழிற்பாடுகளுக்கு மாணவர்களிடமிருந்து பெற்றோரிடமிருந்தும் அதிக ஆதரவு கிடைத்து வருகின்றது.

கல்வி அதிகாரிகள், கல்வித் திணைக்களங்கள் கல்வியமைச்சு என்பனவும் ஊடகங்களும் இதற்கு மறைமுக ஆதரவை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தப் பின்னணியில் நாடுமுழுவதும் நகரங்களிலும், கிராமங்களிலும், சிறியனவாகவும், பெரியனவாகவும் "ரியூசன்"நிலையங்கள் பல்கிப் பெருகியிருப்பதுடன் பல மில்லியன் ரூபாய்கள் புரளும் தொழிலாகவும் வளர்ச்சி பெற்றுள்ளமை கவனத்திற்குரிய முக்கியமான விடயமாகும்.

**"ரியூசன்"நிலையங்களின் சமூக விளைவுகள்**

பாடசாலைகளைப் போலவே பல்வேறு பிரதேசங்களிலும், பல்வேறு அளவுகளிலும் ஏராளமான மாணவர்களுடனும், ஏராளமான கற்பிப்போருடனும் தொடர்புகொண்டு பல மில்லியன் ரூபாய் முதலீடுகளுடன் வளர்ந்து வலிமை பெற்றுள்ள இந்தக் கல்வி நிலையங்கள் 1970களிலிருந்து ஏறக்குறைய நான்கு தசாப்த காலமாக எமது பிரதேசத்தில் ஏற்படுத்தியுள்ள சமூக விளைவுகள் கவன ஈர்ப்புக்குரியன அவை.

✦ பெண் பிள்ளைகள் குறிப்பாக கட்டிளமைப் பருவத்து பெண் பிள்ளைகள் சுதந்திரமாக தனியாக வீட்டிலிருந்து புறப்பட்டு செயற்படத் தொடங்கியமை.

முன்பு கோவில் மற்றும் வைபவங்கள், உறவினர் வீடுகளுக்கு பெற்றோருடன் மாத்திரம் சென்ற நிலைமையிலிருந்து அவர்களை முற்றாக விடுவித்துள்ளது.

கிராமப் பாடசாலை மாணவர்கள் நகரங்களில் உள்ள முன்னணி கல்வி நிலையங்களுக்கு அடிக்கடி வருவதால் நகர்ப்புற மாணவ மாணவிகளை பெற்றுக்கொண்டமை.

கைச் செலவுக்குப் பணம், கைத்தொலைபேசியின் அவசியம், மேலதிக உடைகளும் பாதணிகளும் அவசியமானவையாகியமை, திரைப்படங்களை பகல்வேளைகளில் பார்க்கத் தொடங்கியமை போன்றன குறிப்பிடத்தக்க புதிய பழக்கங்களாகியமை.

பாடசாலை நேரம் தவிர ஏனைய நேரங்களில் தோட்டங்களிலும் குடும்ப மட்ட சிறு தொழில்களிலும் பெற்றோருடன் இணைந்து தொழில்புரிந்த நிலைமைகளிலிருந்து முற்றாக விடுபடல்.

இதனால் தொழில் நாட்டம் குறைந்தது; பெற்றோர் சிரமங்களை உணரும் வாய்ப்பு விலகியது; வேலை செய்வதால் இயல்பாக விருத்தியடையும் உடல் வலு பாதிக்கப்பட்டது; குடும்பங்களில் ஐக்கியப்படும் உணர்வு தேய்ந்து போகலாயிற்று.

✦ சிறுவர்கள் ஓய்வு நேரங்களில் பாடசாலைவிட்ட பின்பு தாயுடன் கொஞ்சிக் குலாவி - செல்லமாக விளையாடி அன்பையும் உணர்வுகளையும் அந்நியோன்யங்களையும் பகிர்ந்து கொண்ட பிள்ளைப் பருவ வாழ்வு வீட்டிலிருந்து அதிக தொலைவிற்கு சென்று விட்டது.

✦ சிறு பிள்ளைகள் பாடசாலை இல்லாத நாட்களில் தமது ஒத்த வயதினருடன் விளையாடி, சண்டையிட்டு, பின்பு நட்புறவு பெற்று, குதூகலித்து மகிழ்ந்த வாழ்வு இல்லாமல் போய்விட்டது. தாமாகவே ஒன்று கூடி விளையாடியபோது, விளையாட்டு எதுவெனத் தீர்மானம் எடுத்தல், விதிகளை வகுத்தல், தவறுகளைத் தண்டித்தல், தவறு செய்பவர்களை விலத்துதல், பின்பு மன்னித்தல், கூட்டாகத் தீர்மானம் எடுத்தல், தீர்மானங்களுக்கு கட்டுப் படுதல், தோல்விகளை ஏற்றல், வெற்றியைக் கொண்டாடுதல், கூடி மகிழ்தல், கூடிக் குதூகலித்தல் போன்ற பல வாய்ப்புக்களைப் பல அனுபவ கல்வியைப் பெரும்பாலும் எல்லாப் பிள்ளைகளும் இழந்து விட்டனர்.

பல கிராமிய சிறுவர் விளையாட்டுக்கள் மறக்கப்பட்டுவிட்டன. சிறுவர் உணர்வு கலந்த உறவுகள் பலவும் உலர்ந்து விட்டன.

✦ பல பிரதேசத்து பதின்ம வயது மாணவர்கள் ரியூட்டரிகளில் ஒன்றிணைகின்றனர். ஒரு பாடசாலையின் உள்ளகப் பிரச்சினை பல தொகுதி மாணவருக்கும் பரப்புரை செய்யப்படுகின்றது. மாணவர் பொதுத் தீர்மானங்கள் பல பாடசாலைகளிலும் பரவி மாணவர் அமைதியின்மை ஏற்படுகிறது; நடத்தைகள் புதிய வடிவம் பெறுகின்றன; சில சமயம் நலக்கேடுகளை பல பகுதி களிலும் ஒரே நேரம் பாடசாலைகளில் உரு வாக்குகின்றனர். இதனால் பாடசாலை களின் சூழலும், நிர்வாக ஒழுங்கமைதியும் குலைகிறது.

✦ "ரியூசன்"நிலையங்கள் பலவற்றில் படிக்க தம்பிள்ளைகளுக்கு பெற்றோர் அதிக பணத்தை செலவிடுவதால், வீட்டில் பிள்ளைகளது படிப்பில் தாம் கவனம் செலுத்த வேண்டிய தேவையில்லை என்று எண்ணும் பெற்றோர் பண்பு அதிகரிக்கிறது. எளிதாக பிள்ளைகளின் கல்வியில் உதவி செய்யும், வழிகாட்டும், கலந்துரையாடும் குடும்ப உறவு நிலை - குடும்ப மட்ட பண்பாடு இல்லாமலே போய்விடுகின்றது. "பிள்ளைகள் ரியூசனுக்கு போவதால் சித்தியடைந்து விடுவார்கள். அவர்களது படிப்பில் தாம் துணை செய்யவேண்டியதில்லை" என்று உணர்வு பெற்றோரது குடும்ப பண்பாடாக மாறிவிட்டது.

பாடசாலை ஆசிரியர்கள் பல சமயங்களில் சில பாடங்களை கற்பிப்பதற்கு முயன்று - தேடி - படித்து வந்தனர். படிப்படியாக அப்பாடத்தில் நல்ல முன்னேற்றம் பெற்று பாடசலைகளில் உன்னத பங்களிப்பு செய்தனர்.

இப்போது "ரியூசனில் படிப்பதால் தாம் சிரமப்பட வேண்டியதில்லை" என்ற உணர் வுடன் தமது தேடல் ஊக்கத்தைக் கைவிட் டுள்ளனர். பிள்ளைகளின் பெறுபேற்றில் தமக்கு பெரிய பங்கேதுமில்லை என்ற உணர்வு பாடசாலை ஆசிரியர்கள் பலரிடம் பரவி விட்டது.

தொழில் உணர்வு - தொழில்சார் கடப் பாட்டிலிருந்த மனச்சுமை எதுவுமின்றி ஆசிரி யர்கள் விலகிவிடுகின்றனர். இது தொழில்சார் முரண்பட்ட ஒழுக்க நடைமுறையாகிவிட்டது.

"ரியூசன்" முறைமையைச் சார்ந்த பத்திரி கைகளும், ஏனைய விளம்பர ஊடகங்களும் வளர்ந்து வருகின்றன. "கல்விசார் விளம்பரத் தொழில்" வலிமையுடன் வளர்ந்து விட்டது.

இது பலருக்குத் துணைத்தொழில் வாய்ப் புக்களையும் வருமானங்களையும் வழங்கி வருகின்றது. கணிணித்துறை, அச்சுத்துறை. பத்திரிகை, தொலைக்காட்சி போன்ற பல துறைகளின் விரிவாக்கத்துக்கும் "ரியூசன்" தொழிற்துறை பெரும் பங்காற்றுகின்றது.

**"ரியூசன்" நிலையங்களின் சமூக நலன்கள்**

"ரியூசன்" முறைமை இன்றியமையாத தேவையாக பெற்றோரும், பாடசாலைகளும், சமூக நிறுவனங்களும், கல்வித்திணைக் களமும் ஏற்றுக்கொண்டுள்ளன. இத்தகைய சாதகமான சமூகமட்ட கருத்துருவாக்கத்துக் குப் பின்வரும் காரணங்கள் உதவிபுரிந்துள் ளன.

1. பல பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பிரதான பாடங்களுக்கு ஆசிரியர்கள் வழங்கப்படுவதில்லை. அல்லது தொடர்ச்சியாக வழங்கப்படுவதில்லை. இதனை ரியூட்டரிகள் நிறைவு செய்து வருகின்றன.

2. பாடசாலை ஆசிரியர்கள் சிலரிடம் தகுதிகள் - பட்டங்கள் உள்ள போதிலும் கற்பித்தல் திறனோ - கற்பித்தல் ஊக்கமோ இல்லை. பலவீனமானவர்களாக மாணவர்களினால் கணிக்கப்பட்டு உதாசீனம் செய்யப்படுகின்றனர்.

"ரியூசன்"ஆசிரியர்கள் தேடி, கற்று, புதிய விடயங்களை தயார் செய்து கற்பிக்கின்றனர். ரியூசனில் போட்டியில் மற்றொருவரால் தாம் தள்ளிவிடப்படும் அபாயம் எப்போதுமிருப்பதால் தொடர்ந்து ஊக்கம் நிறைந்தவராக மாணவர் முன் செயற்படுகின்றனர்.

3. பாடசாலைகளில் ஆசிரிய - மாணவ தொடர்புகளில் தற்போது அந்நியோன்யம் குறைந்து விட்டது. பல சமயங்களில் நன்றாக கற்பிக்காத ஆசிரியர்கள் பல தம் சுய பாதுகாப்புக்காக அதிகார வலுவைப் பயன் படுத்திக்கொள்கின்றனர். சொற்களினாலும் தண்டனைகளினாலும் பிள்ளைகளின் வெறுப்பை சம்பாதிக்கின்றனர்.

ஆனால் "ரியூசன்"ஆசிரியர்கள் இனிமையாக பேசுகின்றனர்; இதமாக உரையாடுகின்றனர்; முகம் பார்த்து சிரிக்கின்றனர்; தோழமை உணர்வைப் பரவ விடுகின்றனர். இவ்வாறு பிள்ளைகளின் மனதை வென்று விடுகின்றனர்.

4. பாடசாலைகளில் வினா - விடைப்பயிற்சிகளுக்கு அதிக முன்னுரிமை வழங்குவதில்லை. இதனால் மாணவர் விடையெழுதுவதற்கு உரிய முறையில் வழிகாட்டுவதில்லை. "விடைகளுக்கு பயிற்றுவித்தல்" என்பதற்கு பாடசாலைகளில் முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. ரியூட்டரிகள் இத்தகைய பணிக்கு அதிக முன்னுரிமை வழங்குகின்றன. பல ஆசிரியர்கள் பல மாதிரிகளில் பல படிநிலைகளில் இதில் ஈடுபடுகின்றனர். போதிய வாசிப்பதற்கான துணைக்குறிப்புக்களும் வழங்கப்படுகின்றன. தமது கடினமான பணிகளை ரியூட்டரி ஆசிரியர்களே சுமப்பதற்கு பணம் கொடுப்பது மாணவர்களால் விரும்பப்படுகின்றது.

5) பாடசாலைகளில் ஒரு ஆசிரியரிடம் படித்து விளங்காவிடில் மாற்று ஏற்பாடுகள் இல்லை. இதனால் பலவீனமான ஆசிரியரிடம் சிரமங்களுடன் படிப்பது போல் மாணவர்கள் நடிக்க வேண்டியுள்ளது.

ரியூட்டரிகளில் பல ஆசிரியர்களிருப்பதால் மாணவர் தம் விருப்பத்துக்கேற்ப பாடங்களுக்கும், அலகுகளுக்கும் மாறுகின்றனர். இது மாணவருக்கு அதிகம் வசதியாகவுள்ளது. இதனால் "ரியூசன்"ஆசிரியர்களை அதிகம் நம்புகின்றனர்.

**பாடசாலைகளை மூடிவிடலாமா?**

"ரியூசன்"ஆசிரியர்களும் ரியூட்டரிகளும் அதிக சமூக மதிப்பைப் பெற்றுள்ளன என்பது உண்மைதான். ஆனால் பள்ளிக்கூடங்களில் மாணவர் தொகை பெருகும் போதுதான் ரியூட்டரிகளுக்கான மாணவர்களும் பெருகுவார்கள்.

பாடசாலைகளை எள்ளி நகையாடுவது, பாடசாலைகளை பகைத்துக் கொள்வது, பாடசாலை செயற்பாடுகளைக் குழப்புவது, பாடசாலை பற்றிய மாணவர் நல்லெண்ணங்களைச் சிதைப்பது போன்றவற்றில் சில "ரியூசன்"ஆசிரியர்கள் பகிரங்கமாக செயற்படுகிறார்கள். இதில் புகழ் பெற்றவர்கள் சிலரும் உள்ளனர்.

இந்த நடைமுறையை மாற்றவேண்டும். பாடசாலைகளை மூடினால் தனியார் பாடசாலைகள்தான் வளரும். ரியூட்டரிகள் தேய்ந்து போகும். மாணவரின்றி "ரியூசன்" முறைமை வற்றிப்போகும். இதனை மறக்கக் கூடாது.

"ரியூசன்" ஆசிரியர்கள் பற்றிய நல்லெண்ணம் பாடசாலைகளிலும், சமூக நிறுவனங்களிலும் வளரவேண்டும். ரியூசனில் படித்து பெரிய மனிதர்களான பின்பும் "ரியூசன்" ஆசிரியர்கள் பற்றி மேம்பட்ட எண்ணம் அப்பிள்ளைகளின் மனதில் வளரவேண்டும். இதனை "ரியூசன்" ஆசிரியர்கள் மனதிற் கொள்ள வேண்டும்.

பாடசாலைகளின் நண்பராகவும், ரியூட்டரி நிலையங்கள் தமது சமூக விம்பத்தை வளர்க்க வேண்டும். பள்ளிகளின் தேவைகளுக்கு துணை செய்யவேண்டும். சில செயற்றிட்டங்களில் பாடசாலைகளுக்கு நல் மனதோடு கைகொடுக்க வேண்டும்.

இவ்வாறு புதிய சமூக பிரக்ஞையுடன் ரியூசன் முறைமை - ஆசிரியர்களும், ரியூட்டரிகளும், கற்பித்தல் முறைமையும் -தன்னை நிலை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

பிள்ளைகளின் ஓய்வுக்காகவும், குதூகலத்துக்காகவும் எல்லா ரியூட்டரிகளும் இணைந்து மாதத்தில் நான்கு நாட்களையாவது பூரண மான விடுமுறையாக விடுங்கள்.

பிள்ளைகளின் குதூகலத்துக்கான நிகழ்ச்சித் திட்டங்களுக்கும், கற்றல் மேம்பாட்டுக்கும் ஓரளவு நிதியுதவியும் செய்யுங்கள்.

ஆலமரத்தினைப் பார்த்து கற்றுக்கொள்ள வேண்டும். நிலத்திலிருந்து வளர்ந்த பின்பு தனது விழுதுக்கரங்களை அதே நிலத்தை நோக்கி நீட்டுகின்றனவே!

ரியூட்டரிகள் பாடசாலைகளுடனும் சமூகத்துடனும் சேர்ந்து நின்று வாழவேண்டும்; வளர வேண்டும். அதுவே வெற்றிபெறும் வழிமுறை

**முடிவுரை**

தனியார் கல்வி நிலையங்கள் ஏராளமானவர்கள் தமது உழைக்கக்கூடிய நேரத்தில் கற்பித்தலில் ஈடுபட்டு வருவாய் உழைக்க துணை செய்கின்றது. பாடசாலைகளில் பணியாற்றும் நிரந்தர ஆசிரியர்கள் மேலதிக வருமானம் பெறுவதற்கும் உதவுகின்றன.

ரியூட்டரிகளுடன் தொடர்புடைய பல துணைத்துறைகள் வருமானம் பெறவும் பலர் இடைநிலைத் தொழில்வாய்ப்புக்கள் பெறவும் உதவுகின்றது.

நல்ல ஆசிரியர்களைப் பெறமுடியாத பாடசாலை மாணவர்கள் திறமையானவர்களிடம் கற்று அதிக புள்ளிகள் பெற்று பரீட்சைகளில் சித்திபெறவும் உதவுகின்றன.

எனினும் ரியூட்டரிகள் தமக்கிடையேயுள்ள போட்டிகளினால் நேர அட்டவணைகளை ஏட்டிக்குப் போட்டியாக தயாரித்து அழுத்தங்களை மாணவர்களிடம் உருவாக்கு கின்றன.

பாடசாலை மாணவர்கள் ரியூட்டரிகளை நம்பி இயங்குகின்றபோதிலும் பள்ளிக்கூடங்களையும் பள்ளிக்கூட ஆசிரியர்களையும் சில சமயம் எள்ளி நகையாடுவதால் சமூகமதிப்பில் பாதிப்புக்களை உருவாக்குகின்றன.

பிள்ளைகளுக்கான குடிநீர் வசதி, கழிப்பறை வசதிகள், இருக்கை வசதிகள், அக்கறையற்றிருப்பதால் மாணவர்களுக்கு உடலியல் அபாயங்கள் நீண்டகாலத்தில் உருவாக்கு கின்றன.

பிள்ளைகளுக்கு - பிள்ளைப்பருவத்துக்கு உரித்தான சுதந்திரங்கள், விளையாட்டுக்கள், குதூகலங்கள், வழிபாடுகள் போன்றவற்றையும் தட்டிப்பறிக்கின்றன.

இத்தகைய சாதக - பாதக பண்புகளில் ஒரு நியாயப்பாட்டைப் பேணும்போது சமூக மதிப்புடன் இத்துறை வளர்ச்சி பெறமுடியும்.

# ஆலய முகாமைத்துவத்திற்கான தலைமைத்துவம்



# LEADERSHIP FOR TEMPLE MANAGEMENT

**பேராசிரியர் க. தேவராஜா**
மனிதவள முகாமைத்துவத்துறை
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

**1.0 அறிமுகம்**

இன்றைய உலகில் இந்து ஆலயங்கள் முன்னரைப்போல் அல்லாமல் ஆன்மீகத்தை வளர்க்கும் நிறுவனங்கள் மட்டுமன்றி சமூக நிறுவனங்களாக மாற்றமடைந்து தொழில் நிறுவனங்கள் போல் இயங்கத் தொடங்கிவிட்டன. இதன் காரணமாக முன்னர் மணியகாரர்களாக இயங்கி வந்த ஆலய தர்மகர்த்தாக்கள் இன்று முகாமையாளர்களாக மாறவேண்டிய காலத்தின் தேவை உருவாகியுள்ளது. ஆரம்பத்தில் அரசர்களாலும் பின்னர் பஞ்சாயத்து தலைவர்களாலும் நிர்வகிக்கப்பட்டு வந்த ஆலயங்கள் இன்று பொதுமக்களால் நிர்வகிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது. முன்னர் மக்களுக்காக மக்களால் உருவாக்கப்படுபவை என்ற நிலையிலிருந்து இன்று மக்களுக்காக தனிநபர்களால் உருவாக்கப்படுபவையாக ஆலயங்கள் மாறியுள்ளன. அத்துடன் ஆலயங்களில் பணிபுரிவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதுடன் அங்கு கையளிக்கப்படும் நிதியின் அளவும் பெருகிவிட்டது. இதன் காரணமாகவே ஆலயங்களின் சிறப்பான நிர்வாகத்திற்கு நல்ல தலைமைத்துவம் அவசியமென உணரப்பட்டுள்ளதுடன் அவர்களின் திறன் விருத்தி செய்யப்படவும் வலியுறுத்தப்படுகின்றது.

**2.0 தலைமைத்துவத்தின் அவசியம்**

ஆலயங்களுக்கு நல்ல தலைமைத்துவம் இருந்தால் மட்டுமே அவற்றின் நிர்வாகம் சிறப்பாக மேற்கொள்ளப்பட முடியும். எப்பொழுதுமே நிறுவனங்களினது இலக்கினை அடைய வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்குடன் இயங்கும் தலைமைத்துவம் ஆலயங்களின் சிறப்பான இயக்கத்திற்கு அவசியமாகின்றது. ஆலயத்துடன் தொடர்புபட்ட காணி, கட்டிடம், உபகரணங்கள், வாகனங்கள் போன்ற பௌதீக வளங்களையும், பூசகர்கள், உதவியாளர்கள் போன்ற மனித வளங்களையும் திறமையாகப் பயன்படுத்துவது ஆலய முகாமைத்துவத்தின் கடமையாகின்றது. இவர்கள் ஏனையோரை விட அதிக வலுவைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர். அதனூடாக ஏனையோர் மீது செல்வாக்கினைச் செலுத்தித் தான் விரும்பியவாறு ஆலயக் கருமங்களை ஆற்றுவிக்க ஆலய முகாமையாளார்களால் முடியும். முன்னர் அரசர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் போன்றவர்கள் ஆலய நிர்வாகத்தைக் கொண்டிருக்கும் பொழுது அவர்களுக்கான வலு (அதிகாரம்) இயல்பாகவே கிடைத்தது. ஆனால் இப்போதைய ஆலய தர்மகர்த்தா அல்லது பரிபாலன சபைத் தலைவர்கள் மக்களிடமிருந்தே தனது தெரிவின் மூலம் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்கின்றார். இதன் காரணமாகவே அவர்களின் தலைமைத்துவத்தின் விருத்தி செய்யப்பட வேண்டியுள்ளது.

**3.0 ஆலயத் தலைவருக்கான திறன்கள்**

ஆலயங்கள் தொழில் நிறுவனங்கள் போல் நிர்வகிக்கப்பட வேண்டிய அமைப்புக்கள் மாறி

வருவதன் காரணமாகவே அவற்றைச் சிறப்புற நிர்வகிக்க நல்லதோர் தலைமைத்துவம் வலியுறுத் தப்படுகின்றது. வெளிநாடுகளில் வாழ்கின்ற மக்க ளும் உள்நாட்டு மக்களும் பெருமளவான நிதி களை வழங்கி அந்நிதிகள் ஊடாக ஆலயங்கள் ஆன்மீக வளர்ச்சிக்கு மட்டுமன்றி சமூக அபிவிருத் திக்கும் உதவ வேண்டும் என எதிர்பார்ப்பதனால் ஆலயங்களின் தலைமைத்துவம் சமூகத்திடம் நன் மதிப்புப் பெற்றதாக அமைதல் வேண்டும். இதன் அடிப்படையிலேயே முன்னர் தலைவர்கள் பிறக் கின்றார்கள் என்ற நிலை மாற்றமடைந்து இன்று தலைவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள் என்ற நிலை உருவாகியுள்ளது. இதன் அடிப்படையில் ஆலயங்களுக்கு தலைமை தாங்குபவரிடம் பல திறன்கள் விருத்தி செய்யப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.1 தொழில்நுட்பத்திறன்

ஆலயம் தொடர்பான வேலைகள் பற்றிய பூரண அறிவைக் கொண்டிருக்க வேண்டும் என்பதே தொழில்நுட்பத்திறன் என்பதாகும். ஆலயத்துடன் வெவ்வேறு பணிகளை ஆற்றுவோர் தொடர்புபடுவதனால் அவர்கள் ஆற்றவேண்டிய பணிகளைத் தெளிவாகச் சொல்லிக் கொடுக்கும் ஆற்றல் ஆலயத் தலைவரிடம் இருத்தல் வேண்டும் பூசகர்கள், வழிபடுவோர், உபயங்கள் ஆலயத்து டன் சம்பந்தப்படுவதனால் எல்லோருடைய விருப் பங்களையும் திருப்திப்படுத்தக்கூடிய வகையில் பணியாற்றும் திறன் கொண்டிருத்தல் தலை வருக்கு அவசியமாகின்றது. அத்துடன் ஆலயப் பணிகள் தொடர்பாக எத்தகைய சந்தேகங்கள் இருந்தாலும் அவற்றைத் தெளிவுபடுத்தக்கூடிய ஆளுமையினையும் அறிவையும் தலைவர் கொண் டிருந்தால் மட்டுமே ஆலய நிர்வாகம் சிறப்பாக அமைய முடியும்.

### 3.2 தீர்மானமெடுக்கும் திறன்

ஆலயம் தொடர்பான பல்வேறு தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியிருப்பதனால் ஆலயத் தலை வர்கள் தீர்மானம் எடுப்பவராக பணியாற்ற வேண்டி யுள்ளது. இத்தீர்மானங்கள் தனித் தீர்மானங் களாகவும் குழுத் தீர்மானங்களாகவும் எடுக்கப்பட முடியும் என்றாலும் தீர்மானத்தில் வரும் தவறு களை நீக்கப் பலர் ஆலோசனை வழங்கக்கூடிய குழுத் தீர்மானங்களே பெரிதும் விரும்பப்படுதல் வேண்டும். ஆலயத்திற்கென உருவாக்கப்பட்டி ருக்கும். பரிபாலன சபையினரின் ஆலோசனை வகைகளைப் பெற்றே தீர்மானங்கள் எடுக்கப்பட மாயின் பலரது கருத்துக்களைக் கொண்ட தீர் மானங்களில் தவறுகள் ஏற்பட வாய்ப்பிருக்க மாட்டாது.

### 3.3 தொடர்பாடல் திறன்

ஆலய நிர்வாகத்திற்கென பல தகவல்களைப் பரிமாற்ற வேண்டிய பொறுப்பு தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தலைவரின் பணி நேரத்தில் பெருந்தொகையான நேரம் தகவல் பரி மாற்றத்துக்கென ஒதுக்கப்படமுடியும். பொருத்த மான நேரத்தில் பொருத்தமான தகவலை வழங் குவது தலைவரின் கடமையாகும். முகாமைத்து வத்தில் சொற்களில் அல்லது மக்களில் மட்டுமே கருத்துள்ளது என்பதனால் எத்தகைய தகவல் வழங்கப்பட்டாலும் அதை ஏற்றுக் கொள்ள வைப்பது தலைவரின் பொறுப்பாகும். இதற்கென பின்னூட்டி முறையைப் பயன் படுத்தி தகவலை மீளவும் வலியுறுத்தி அதனை ஏற்றுக்கொள்ள வைப்பது தலைவரின் பொறுப் பாகும்.

### 4. மனிதநேயத் திறன்

ஆலய முகாமைத்துவத்திற்கான தலைமைத் துவப் பணியாற்றுபவர் ஏனையோர்களது விருப்பு வெறுப்புக்களை அறிந்து பணியாற்றும் மனோ நிலையைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆலயத் துடன் தொடர்புடைய பூசகர், உதவியாளர்கள், உபயகாரர், பொதுமக்கள் எனக் கொள்ளப்படும் பல்வேறு தரப்பினரும் கொண்டிருக்கின்ற கருத் துக்களை அவர்களைக் கேட்காமலேயே ஊகித் தறிந்து அதற்கேற்ப நடவடிக்கை எடுப்பது ஆலய முகாமையாளரின் மிகச் சிறந்த பணியாகும். இதற்காக மற்றையோர் நிலைக்குள்ளாகும். (Empathy) பண்பை ஆலய முகாமையாளர் கொண்டிருத்தல் வேண்டும். இத்தகைய உளவியல் சார்பான திறன் ஆலய முகாமையாளர்களுக்கு இருப்பின் எத்ததகைய முரண்பாடுகளும் இன்றி நிர்வாகத்தைக் கொண்டு செல்ல முடியும்.

### 5. விமர்சனங்களை ஏற்றல்

ஆலய நிர்வாகம் தொடர்பாகப் பல்வேறு தரப்பினரிடமிருந்து விமர்சனங்கள் எழுவது வழக் கம். இத்தகைய விமர்சனங்களின் நம்பிக் கைத் தன்மையை மதிப்பீடு செய்வது ஆலய முகாமை யாளருக்கு அவசியமாகின்றது. விமர்சனங்களில் உண்மை இல்லாதிருப்பின் அவ் விமர்சனங்களின் மதிப்பளிக்கப்படத் தேவையில்லை. மாறாக விமர் சனங்களில் உண்மை இருக்குமாயின் அவற்றைச்

சீர்செய்ய முற்படுவது ஆலய முகாமைக்கு அவசிய மாகும். வழமையில் விமர்சனங்களெல்லாம் முகாமையைத் திருத்துவதற்கான ஆலோசனை கள் தான் எனக் கருதும் மனோநிலை ஆலய முகாமையாளரிடம் வளர்க்கப்படுதல் வேண்டும்.

**6. பொறுப்புக்களை ஏற்றல்**

ஆலயத் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்ட வர்களிடம் காலத்துக்குக் காலம் புதுப்புது பொறுப் புக்களையும் தட்டிக்கழிக்காமல் அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கு ஆலய முகாமையா ளரிடம் வளர்க்கப்படல்வேண்டும். பொறுப்புக்கள் ஏற்கப்படுவதே அதிகாரத்தினையும் பெற்றுக் கொள்வதற்கான மார்க்கமாகும். ஆலய முகாமை யாளரிடம் திருப்பணிகள், அறக்கொடைகள் தொடர்பான புதிய பொறுப்புக்கள் காலத்துக்குக் காலம் வந்தடைவது மட்டுமன்றி இப்பொழுது பல சமூகப் பணிகளும் ஒப்படைக்கப்படுகின்றன. சிறுவர் நிலையங்களைப் பேணுதல், அறநெறிப் பாடசாலைகளைப் பேணுதல் போன்றன ஆலயத் தலைமைத்துவத்திடம் அண்மைக் காலத்தில் ஒப் படைக்கப்பட்டிருக்கும் பொறுப்பாகும். அவற்றை மனவிருப்புடன் ஏற்று நடாத்தும் திறமை ஆலய முகாமையாளரிடம் வளர்க்கப்படல் வேண்டும்.

**7. பயிற்சியளித்தல்**

ஆலயங்களில் ஆற்றவேண்டிய பணிகள் தொடர்பான பல்வேறு தரப்பினருக்குமான பயிற்சி களை வழங்குவது ஆலய தலைமைத்துவத்திற்கு அவசியமாகின்றது. எந்தவொரு தெரியாத விடயத் தினையும் செய்யுமாறு கோருவது முகாமையில் விரும்பப்படாத காரணத்தால் அவற்றைச் செய் வதற்கான குறுங்கால, நீண்ட காலப் பயிற்சித் திட்டங்களை நடாத்துவது ஆலயத் தலைமைத்து வத்தின் பணியாகும்.

ஆலயப் பூசகருக்கான பயிற்சி, உதவியாளர் களுக்கான பயிற்சி, தொண்டர்களுக்கான பயிற்சி எனப் பல்வேறு மட்டங்களிலும் பயிற்சித் திட்டங் களை ஒழுங்கு செய்து நடாத்துவது ஆலயத்திற்கு அவசியமாகின்றது. ஆலயத்துடன் தொடர்புடைய வர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுமாயின் வேலை யில் பூரண நிறைவு காணப்படுவதை ஆலயத் தலைமைத்துவம் உணர்ந்து கொள்ள முடியும்.

**8. ஊக்குவித்தல்**

ஆலயங்கள் சமய நிறுவனங்கள் என்ற நிலைமாறிச் சமூக நிறுவனங்கள் என்ற புதிய பரிமாணத்தைப் பெறும் பொழுது ஆலயங்கள் பல சமூகப் பணிகளை ஆற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகும். இதன் காரணமாக ஆலயங்களுடன் தொடர்புடையவர்களை ஊக்குவிப்பது பணி தொடர்பான நிறைவேற்றத்திற்கு அவசியமாகின் றது. முகாமைத்துவத்தில் மக்கள் கொண்டிருக்கும் தேவைகளை இனங்கண்டு அவற்றுக்கான திருப்திகளை வழங்குவதன் ஊடாக ஊக்குவித்தல் என்பது ஆலயங்களில் சாத்தியமாகின்றது. பூசகர்கள், உதவியாளர்கள், உபயகாரர்கள், பொது மக்கள் என்போர் வெவ்வேறு தேவை களுடன் இயங்குபவர்கள் என்பதனால் அவர்களுக் குரிய தேவைகளை இனங்கண்டு திருப்திகளை வழங்குவது ஆலயத் தலைமைத்துவத்திற்கு அவசியமாகின்றது. ஆலயத்துடன் தொடர்புடைய வர்கள் பூரண ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்ற எந்தவொரு ஆலயத் தலைவரும் வெவ்வேறு தரப்பினரின் தேவைகளை இனங் கண்டு திருப்திகளை வழங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**9. கையளித்தல்**

எல்லாக் கடமைகளையும் ஆலயத் தலைவர் நிறைவேற்ற முடியாது என்பதனால் தனது பொறுப் புக்களில் சிலவற்றை ஏனையோரிடம் கையளித்தல் அவசியமாகின்றது. திருவள்ளுவர் கூறுவது போல் "இதனை இதனால் இவன் முடிப்பான் என ஆய்ந்து அதனை அவன் கண்டால்" எனது பொய்யா மொழிக்கு இணங்க அவரவருக்குப் பொருத்தமான வேலைகளைக் கையளித்து அவர்கள் மூலம் இலகுவில் பணிகளை நிறைவேற்றும் திறன் ஆலயத் தலைவரிடம் இருத்தல் வேண்டும். ஆலயங்களின் வெற்வேறு பணிகள் வெவ்வேறு தரப்பினரால் ஆற்றப்படவேண்டியிருப்பதனால் பொருத்தமானவர்களைக் கண்டறிவதும் அவர் களிடம் அப்பணிகளை ஒப்படைப்பதும் ஆலயத் தலைவருக்கு அவசியமாகின்றது. இச்சந்தர்ப் பத்தில் அப்பணிகளை நிறைவெற்றுவதற்கான அதிகாரங்களையும் தலைவர் கையளிப்பதுடன் கையளிகப்பட்ட பணி சரிவர நிறைவேற்றப்படு கின்றதா என்பதைத் தொடர்ந்து கண்காணிக்கும் பணியை ஆலயத் தலைவர் மேற்கொள்ளுதல் வேண்டும்.

**10. நேரக்கட்டுப்பாடு**

எல்லா வகையான நிறுவனங்களிலும் நேர முகாமைத்துவம் வலியுறுத்தப்படுவது போல் ஆல யங்களிலும் நேர முகாமைத்துவத்தைப் பின்பற்று

தல் அவசியமாகின்றது. வழமையான பூசை நேரங்கள், விசேட பூசை நேரங்கள், திருவிழாக் காலத்திற்கான பூசை நேரங்கள் ஆகியவற்றை முகாமை செய்வது ஆலயத் தலைவரின் கடமையாகின்றது. நேரம் என்பது அருந்தலான வளம் என்பதால் அதனைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவது ஆலயத் தலைவரின் கடமையாகின்றது. நேரம் தொடர்பான முகாமைத்துவத்தில் முரண்பாடுகளைக் குறைக்க நெகிழ்ச்சிகொண்ட நேர முகாமைத்துவமும் பின்பற்றப்படுதல் வேண்டும். அத்துடன் வேலைகள் முக்கியத்துவம் (Impotency) வேலைகளின் அவசரம் (Ergency) ஆகிய இரண்டையும் இணைத்து ஆலயக் கருமங்களை யார் ஆற்றுவது என்ற முடிவை ஆலயத் தலைவர் எடுத்தல் வேண் டும். குறிப்பாக அவசரமும் முக்கியத்துவமும் கொண்ட வேலைகள் அவரால் ஆற்றப்படும் அதேவேளை ஆறுதலாகவும், முக்கியத்துவம் இன்றியும் ஆற்றப்படுகின்ற வேலைகளை ஏனை யோர் மூலம் நிறைவேற்றிக்கொள்ளுதல் வேண்டும்.

**11. முரண்பாடுகளை நீக்குதல்**

ஆலயங்களுடன் பல்வேறு தரப்பினர் பங்கு கொண்டிருப்பதனால் அவர்களுக்கிடையே முரண்பாடுகள் தோன்றுவது இயல்பாகும். இத்தகைய முரண்பாடுகளை முகாமை செய்யும் திறன் ஆலயத் தலைவரிடம் காணப்படுதல் வேண்டும். பூசகர், உதவியாளர், உபயகாரர், பொதுமக்கள் எனக் கொள்ளப்படும் பல்வேறு நோக்கம் கொண்ட தரப்பினர் பங்கு கொண்டிருப்பதனால் அவர்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படுவதனால் அவர்களுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படுவதனைத் தவிர்த்தல் முடியாது. எனவே எத்தகைய முரண்பாடுகளையும் இலகுவில் தீர்த்து வைக்கும் ஆற்றல் ஆலயத் தலைவரிடம் காணப்படுதல் வேண்டும். எப்பொழுதுமே ஆலயத் தலைவர் கொண்டிருக்கும் நன்மதிப்பு முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு உதவும் என்பதனால் ஆலயத்தவர் தனது நடத்தை பற்றிய நல்லெண்ணத்தை ஆலய சமூகத்தவரிடையே வளர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

**12. குழுவேலை (TEAM WORK)**

ஆலயத்துடன் பல பணிகள் தொடர்புபட்டிருப்பதனால் அவற்றை இலகுவில் நிறைவேற்ற புதிய முகாமை நுட்பமான குழுவேலை அறிமுகப் படுத்தப்படல் வேண்டும். தற்காலத்தில் ஒருவரால் முழுக் கடமைகளையும் நிறைவேற்றமுடியாது என்பதனால் குழு வேலைகள் விரும்பப்படுகின்றன. இம்முறையில் குழுவினாலே தீர்மானங்களை எடுக்கவும் நடைமுறைப்படுத்தவும் தேவை அதிகாரங்கள் வழங்கப்படும். ஆலயங்களில் திருப்பணிச் சபை, தொண்டர் சபை, அன்னதான சபை, போன்றன உருவாக்கப்படுவதனால் அவை குறித்த பணியினை சிறப்பாக நிறைவேற்றும் தகுதி பெற்றிருக்கும். இங்கு ஆலயத் தலைவர் மேற் பார்வைப் பணியை மட்டுமே கொண்டிருப்பதனைக் காண முடியும். குழுவேலையில் பணி நிறைவேற்றத்திற்கான சுதந்திரம் இருப்பதனால் எத்தகைய பணிகளையும் இலகுவில் ஆற்றக்கூடிய முகாமைத் துவ தந்திரோபாயம் குழுவேலையினால் நடை முறைப் படுத்தப்படும். இதன் காரணமாகவே எல்லா ஆலயங்களும் குழுமுறையிலான நிர்வாகத்தை அறிமுகப்படுத்தப்படுகின்றன. இது ஜனநாயக முறையில் தீர்மானங்களை எடுத்து வெவ்வேறு ஒத்துழைப்புடனும் எதனையும் நிறைவேற்றிட உதவும்.

**13. முடிவுரை**

ஆலயங்களின் முகாமைத்துவம் இன்று சிக்கல் நிறைந்ததாக மாறி வருவதனால் அதனைச் சீராக மேற்கொள்ள புதிய நுட்பங்கள் பயன்படுத்துப்படல் வேண்டும். இன்றைய ஆலயங்கள் அறங்காவலர் சபை, தர்மகர்த்தா சபை, பரிபாலனசபை, வழிபடுவோர் சபை என்ற பல்வேறு பெயர்களில் தமது நிர்வாக அமைப்பைக் கொண்டிருக்கும் அதேவேளை தனிநபருக்குச் சொந்தமான ஆலயங்களும் நிர்வாக சபை எதுவும், ஏற்படுத்தப்படாது. பூசகர்களால் நிர்வகிக்கப்படும் ஆலயங்களும் இருக்கின்றன. இந்த ஆலயங்களுக்கு இன்று உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந் தும் நிதியுதவிகள் உட்பட பல்வேறு மட்டங்க ளிலான உதவிகளும் வந்தடைவதாக உள்ளன. இந்நிலையிலேயே இவ்வாலயங்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர்கள் இவ்வாலயங்களின் சிறப்பான நடைமுறைகளுக்கு முகாமைத்துவ நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டிய நிலையிலுள்ளனர். இதற்கு வாய்ப்பாகவே ஆலயத் தலைவர் எத்தகைய முகாமைத்துவ நுட்பங்களை பயன்படுத்தலாம் என்ற வகையில் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவை ஆலயங்களில் பின்பற்றப்படுமானால் அவை எதிர்காலத்தில் ஆலயங்களின் நிர்வாகத்திற்கு ஒளியூட்டும் என்பது எனது நம்பிக்கையாகும்.



# மாணாக்கரின் கல்வி மேம்பாட்டில் சமயத்தின் வகிபாகம்

**பேராசிரியர் கலாநிதி மா. வேதநாதன்**
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மாணாக்கரின் கல்வி மேம்பாடு பெறுவதற்கு சமயப் போதனைகள் அடிப்படையாக விளங்குகின்றன. இந்துசமயம் என்பது சாத்திர ஞானம் மட்டுமன்று. அது வாழ்க்கைநெறியாகும், வாழும் முறையாகும். மாணாக்கரை நல்வாழ்வுக்கு ஆற்றுப்படுத்துவதற்கு இந்து சமயச் சிந்தனைகள் உயரிய தெய்வீக ஔடதங்களாக விளங்குகின்றன. மனிதனுக்கு என்றும் செழிப்பைக் கொடுப்பது சமயமாகும். இந்துசமயம் அழியாப் பேரின்பத்திற்கும், அழியாத் தன்மைக்கும் வழிகாட்டுகின்றது. அது புனிதத்தின் ஓர் அடையாளமாகும். இவற்றிற்கமைய இந்துசமய வழித்தடத்தில் மாணாக்கரை வழிப்படுத்தினால் எதிர்காலத்தில் பண்பட்ட ஆரோக்கியமான சமுதாயம் ஒன்று தோன்றும் என்று எதிர்பார்க்கலாம்.

இந்துசமயம் எல்லா நலன்களையும், வளங்களையும் கொடுக்கக்கூடிய சக்தி வாய்ந்தது. "சமயம் இல்லாத சமூகம் காட்டுமிராண்டிகளின் காடு" என்பது சுவாமி விவேகானந்தரின் ஆணித்தரமான கருத்தாகும். இதனை அவர் "சமயம் உணவையும் ஆடைகளையும் கொடுக்குமா? அது கொடுக்கிறது. அது எப்பொழுதும் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அழியாத வாழ்க்கையை அது மனிதனுக்குக் கொடுக்கிறது. இன்றுள்ள மனிதனை அதுதான் படைத்தது. இது மனித விலங்கைக் கடவுளாக்கப் போகின்றது. சமயம் செய்யக் கூடியது இதுதான். மனித சமுதாயத்திலிருந்து சமயத்தை எடுத்துவிடுங்கள். அப்போது என்ன மிஞ்சுகின்றது. "காட்டுமிராண்டிகள் உள்ள காடுதான் மிஞ்சும்" என்று கூறுவதால் அறிய முடிகின்றது.

இன்று மாணாக்கருக்குத் தேவைப்படுவது சமய ஒழுக்கநெறிமுறைகளாகும். சைவசமய வழித்தடத்தில் வாழ்ந்துகாட்டிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நல்மாணாக்கரின் சமய ஒழுக்கநெறிகளைத் தனது "பாலபாடம்" மூன்றாம் புத்தகத்தில் சிறப்பாகப் பதிவுசெய்துள்ளார். சமய வழித்தடத்தில் பயணிக்கும் நன் மாணாக்கரின் சமய ஒழுக்கநெறிமுறைகளை அவர் பின்வருமாறு பட்டியலிட்டுள்ளார். "நல்ல மாணாக்கன் அதிகாலையில் நித்திரை விட்டெழுவான், அவன் கல்வியில் விருப்பமும்,

ஊக்கமும் உடையவனாயிருப்பான். வித்தியா சாலைக்கு ஒழுங்காகப் போவான். உபாத்தி யாயரிடத்து அன்பும் பணிவும் உடையவனாய், அவருடைய சொல்லுக்கு அடங்கி நடப்பான். அவன் தான் நோயாயிருக்குங் காலமும் தன் பிதா, மாதா முதலிய பெரியோர்கள் முக்கிய கருமங்களுக்காகத் தடைசெய்த காலமும் அல்லாத மற்றைய எப்பொழுதாவது, பள்ளிக் கூடத்திற்குப் போகாமலிருக்கமாட்டான். போகாத பொழுதும் தான் வித்தியாசாலைக்கு வரமுடியாமைக்குக் காரணத்தை தன் உபாத்தி யாயருக்குத் தெரிவித்து அவர் அனுமதி பெற் றுக்கொள்வான். ஒருவேளை தான் செய்யுங் குற்றத்துக்காக உபாத்தியாயர் தன்னைத் தண்டித்தாராயினும், அவர் தன்மேல் வைத்த நேசத்தினால் அது செய்தார் என்று நினைத்து, தான் அவர்மேல் வைத்த அன்பை ஒருபோதும் மறக்கமாட்டான். இன்னும் கல்விக்குப் பயன் அறிவும், அறிவுக்குப் பயன் அறிந்தபடி நடத் தலுமே எனத்தெரிந்து தான் படித்த பாடங்களிற் சொல்லியபடி நடக்கப் பழகிக் கொள்வான்."

இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நன் மாணாக்கருக்குக் கூறும் சமய ஒழுக்கநெறி முறைகளை இன்றைய மாணாக்கரும் பின் பற்றினால் எதிர்காலத்தில் ஆரோக்கியமுள்ள ஒரு சமுதாயம் நம்மிடையே மலரும்.

இன்று மாணாக்கர் மத்தியில் சமய நம்பிக் கைகளும் சமயக் கோட்பாடுகளும் ஆட்டங் காண்கின்ற நிலை தெரிகின்றது. மாணவர்கள் சமயம் ஏன்? அது எதற்கு என்ற கேள்விகளைக் கேட்கின்றார்கள். அதற்கு அர்த்தமுள்ள பதில ளிக்க வேண்டியது எம் எல்லோரதும் பொறுப் பாகும். ஒவ்வொருவரும் தத்தம் வீட்டில் தமது பிள்ளைகளுக்கு சமய சிந்தனைகளைக்கூறி அவற்றைப் போற்றி வாழ்ந்துகாட்டினால் பிள்ளைகளும் சின்னஞ்சிறு பிராயம்முதல் அதனைப் பின்பற்றுவார்கள். பாலர் வகுப்பு முதல் சமய உண்மைகள் போதனை செய் யப்பட்டால் பிஞ்சு மனங்களில் அவை நன்கு வேரூன்றிவிடும். அப்போதுதான் "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பது அர்த்த முள்ள மகுட வாசகமாகத் தெரியும்.

மாணாக்கரின் கல்வியில் சமய விழுமியங் கள் நிலைநிறுத்தப்படாமல் இருக்கும்வரை அவர்களின் வாழ்வு பாலைவனமாகவே இருக் கும். சமயபாடம் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தாம் கற்பிக்கின்ற சமயக் கருத்துக்களுக்கும், விழுமியங்களுக்கும் முன்மாதிரியான வழிகாட் டிகளாகவும், ஞானதீபங்களாகவும் ஒளிர வேண்டும். இதுவே காலத்தின் கட்டாய தேவை யாகும். "சமயங்கள் தவறு செய்வதில்லை. சமயிகளே தவறு செய்கின்றார்கள்" என்பதை அடிக்கடி மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். இதனால் சமயக் கருத்துக்கள் மாணாக்கர் மனதில் நன்கு பதியும், உயர்வு ஏற்படும்.

கல்வி கற்பதன் பயன் அறிவுபெறுதலாகும். அதன் பயன் இறைவனைத் தொழுவதாகும். கல்வி கற்றலால் வருவது நூலறிவு. இறை வனைத் தொழுவதால் வருவது வாலறிவு. இந்த அறிவே மேலான அறிவு. இதனையே திருவள்ளுவர்,

**"கற்றதனால் ஆய பயன்என்கொல் வால் அறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்"**

என்று மொழிவர். இவற்றை நன்குணர்ந்து மாணாக்கரின் கல்வியில் சமயங்கள் கூறும் நற்சிந்தனைகளைப் புகட்டுவதன் மூலம் எதிர் காலத்தில் ஓர் ஆரோக்கியமான சமுதாயம் மலரும் என்று எதிர்பார்ப்போம்.



# "ஆதாம் பாலம்" (Adam's Bridge) "இராமர் அணை" ஓர் புவியியல் நோக்கு...




**பேராசிரியர் கலாநிதி S.T.B. இராஜேஸ்வரன்**
புவியியற்றுறைத்தலைவர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


தென் இந்திய நிலப்பரப்பிற்கும் இலங்கைத் தீவுக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்திருக்கும் "ஆதாம் பாலம்" (Adams' bridge) அல்லது "இராமர் அணை" என்றழைக்கப்படும் அமைப்பினை (Sturcture)ப் பற்றி பல்வேறு விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் "இராமாயணம்" என்னும் இதிகாசத்தில் விபரிக்கப்பட்ட விளக்கங்களைத் தொடர்ந்தும் மக்கள் இறையுணர்வுடன் நம்பி வருகின்றனர். அறிவியல் ரீதியாக இவ் அமைப்பின் தோற்றம் குறித்து பல்வேறுபட்ட கருத்துக்கள் அவ்வப்போதுமுன்வைக்கப்பட்டுள்ளன. புவியியல் ரீதியாக "ஆதாம் பாலம்" அமைந்து காணப்படும் பாக். குடா, மன்னார் வளைகுடா உள்ளிட்ட காவேரி தாழ்நிலப்பகுதியின் தோற்றத்துடன் அல்லது உருவாக்கத்துடன் தொடர்புபட்ட புவிச்சரிதவியல் காரணிகளையும் மற்றும் வெளியுருவ செயன்முறைகளையும் ஓரளவிற்காவது விளங்கிக்கொண்டாலன்றி ஆதாம் பாலம் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது. அந்த வகையில், இப்பிராந்தியத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் ஆதாம் பாலத்தின் இன்றைய நிலைபற்றி மிகச் சுருக்கமாக விபரிப்பதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

புவிச்சரித வரலாற்றுக்கால அட்டவணையின் படி எமது புவிக்கோளின் வயது 4500 மில்லியன் வருடங்களாகும். புவிச்சரிதகால அட்டவணையை இன்றிலிருந்து பின்னோக்கி நோக்கும்பொழுது 12 மில்லியன் தொடக்கம் 70 மில்லியன் வரையிலான பகுதி "ரேஷற்"க் காலம் என அழைக்கப்படுகின்றது. (Tetiary period). இக்காலம் பல உப பகுதிகளைக் கொண்டுள்ளது. அவற்றுள் "மயோசின் காலம்" (Miocence reriod) (13 மில் - 25 மில்லியன் வருடங்கள்) மிக முக்கியமானதாகும். இக்கால கட்டத்தில் தான் "ரெதீஸ்" என்று அழைக்கப்பட்ட கடற்பகுதியின் ஒரு பகுதி இந்திய - இலங்கை நிலப்பரப்புக்களுக்கிடையே அமைந்திருந்த ஒடுங்கிய ஒரு பகுதியினுள் ஊடுருவியதன் விளைவாக இலங்கை ஒரு தனித்தீவாக உருப்பெற்றது. (Cooray, P.G., 1967). (இந்நிகழ்வுக்கு முன்னர் இப்பிரதேசம் நிலப்பகுதியாகவே இருந்திருக்கின்றது).


எனவே, மயோசீன் காலத்தில் இருந்து தொடர்ந்து இன்றுவரையிலான புவிச்சரித


காலம் வரையில் பல்வேறுபட்ட புவிச் சரித, புவிவெளியுருவ செயன்முறைகளின் (ரேஷறிக் காலத்தின் பிற்பகுதிகளில் (Pliocene) படி வாக்கம் (Sedimen tation - marine deposits), நில மேலுயர்த்துகை (upliftment), நிலப்பகுதிகளில் அரித்தல் செயன்முறைகள் (Erosion processes) ஏற்பட்டுள்ளன. குவாட்னறி (Quaternary < 2.0 m.y) காலங்களில் தென் இந்தியா - இலங்கை எல்லைகளைச் சூழ கடற்படிவுகளும் நிலத்திலிருந்து வந்த படிவு களும் கலந்து படிவுற்றமை, காலநிலை மாற்றங்களால், வடிகால்களிலும் கடல் மட்டங் களிலும் மாறுதல்கள் ஏற்பட்டமை) விளைவு களால் தென்இந்திய - இலங்கைப் பிதேசங் களுக்கு இடைப்பட்ட பகுதிகளில் சிக்கலான உருவவியல் தோற்றப்பாடுகள் இடம்பெற் றுள்ளன.

மேலும் குவாட்னறி காலப்பகுதியின் பிற்பட்ட காலங்களான "பிளிஸ்தோசீன்", "கொலோசீன்" காலங்களில் பிரதேச வெளி யுருவ மாற்றங்கள் தொடர்பான பல்வேறுபட்ட ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. விஷேடமாக இலங்கையின் வடக்கு, வடமேற்கு, மேற்குக் கரையோரங்களில் கொலோசின் கால கடல் மட்ட மாற்றங்கள் (Sea level changes) குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இக் காலங்களில் இலங்கையில் மேற்கு, வடமேற் குக் கரையோரங்கள் கடலில் அமிழ்ந்துள் ளமை அறியப்பட்டுள்ளது. அதேபோல தென்னிந்தியாவின் தென்கிழக்கு, தெற்குக் கரையோரங்களிலும் கடல் மட்ட மாற்றங்களின் விளைவுகள் அறியப்பட்டுள்ளது. எனவே, புவிச்சரித காலங்களினூடாக நிகழ்ந்து வந்த பல்வேறுபட்ட செயன்முறைகளின் விளைவு களையே இன்று நாம் நிலவுருவங்களாகக் காண் கின்றோம். இந்த வகையில் தான் தென் இந்தியாவுக்கும் வடமேற்கு இலங்கைக்கும் இடையில் அமைந்துள்ள "ஆதாம் பாலம்" என்னும் அமைப்புப் பற்றி புவியியல் ரீதியாக நோக்கப்படுகின்றது.

தென்னிந்தியாவின் "பாம்பன் தீவு"க்கும் வடமேற்கு இலங்கையின் மன்னார் தீவுக்கும் இடையில் அமைந்துள்ள "ஆதாம் பாலம்" அண்ணளவாக 79° - 41' கிழக்கு நெடுங்கோடு களுக்கும் 9° - 03 வடக்கு 9° - 05 வடக்கு அகலக்கோட்டுப் பகுதிக்குள் அமைந்துள்ளது. பாக். குடாவுக்கு தென்புறமாக பாலம் உட்குழி வான அமைப்பைக் கொண்டதாக அமைந் துள்ளது. (படம் 01) அண்ணளவாக 30 கி.மீ நீளத்தையும் 2.0 கி.மீ வரையான அகலத்தை யும் கொண்ட இவ் அமைப்பில் சிறியதும் பெரியதுமான 14 தீவுகள் 0.0 - 2.0 மீற்றர் ஆழக் கடற்பரப்புள் அமைந்துள்ளது. பருவ காலங் களுக்கு ஏற்ப இடம்பெறும் நீரோட்டங்களினா லும் கடல்மட்ட ஏற்றவிறக் கங்களுக்கேற்பவும் இத்தீவுகளின் வெளியுரு வவியலில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்ட வண்ணம் இருக்கின்றன. இப்பாலத்தின் வடக்காகவும் தெற்காகவும் அமைந்துள்ள சமுத்திர அடித்தள அமைப் பிற்கு ஏற்ப தீவுகளுக்கூடாக மன்னார் குடாவுக் குள் பாக்குக்குடாவில் இருந்து நீரோட்டங்க ளும் மண் நகர்வும் வேகமாக இடம்பெறு கின்றது.

ஆதாம் பாலத்திற்கு மேற்குப்புறமாக பாம்பன் தீவும், கிழக்குப்புறமாக மன்னார் தீவும் காணப்படுகின்றது. இவ்விணைப்பு தென் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடை யிலான ஓர் இடைவிட்ட நிலப்பாகமாக அமைந் துள்ளது. இவ்விணைப்புக்குத் தெற்காக பழைய கடற்கரைகளுக்கான எச்ச அடையா ளங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. இக்கரை யோரம் சம ஆழக்கோடுகளுக்கு சமாந்தரமாக வளைந்த நிலையில் காணப்படுகிறது. (படம் 02) சிலாவத்துறை, வங்காலை முருகைப்பார் தொடர் தென் இந்தியாவின் (மன்னார் குடா நோக்கிய) கரையோரத்தில் அமைந்துள்ள "மணலி தீவு" (Mannalli tivu) "முல்லி தீவு" (Muli tivu), "வலைத்தீவு" (Valai tivu)", "தலைறி தீவு" (Talairi tivu), "அப்பா தீவு" (Appa tivu), "பாலையாமுனை தீவு" (Balaiyamunai tivu) போன்ற பல தீவுகளுடன் தொடர்புபடுத்தக்


Pamban


PALK STRAIT
Pedro Channel
PALK
BAY
Jaffna
Mannar
GULF OF MANNAR
Old Shoreline
(submerged)
0
15

படம் - 02

கூடிய நிலையில் உள்ளது. இம்முருகைப் பார்கள் கடல் மட்டத்தில் இருந்து 3.5 - 4.5 மீற்றர் ஆழத்தில் உள்ள அடிப்பாறைகளின் மேல் வளர்ச்சிபெற்றுள்ளன. ஆதாம் பாலத் திற்கு வெளிப்பக்கமாக முருகைப்பாறைகள் வளர்ச்சியடையவில்லை. இப்பகுதியின் பௌதீகச் சூழல் முருகைகளின் வளர்ச்சிக்கு சாதகமாக அமையாமையே இதற்குக் காரண மாகலாம். (நீரோட்டம், மணல் படிவுறுதல்) இப்பகுதியின் கடல் மட்டத்தில் இருந்து 10-11 மீற்றர் ஆழத்தில் தடுப்புப்பார் (Barrier type) மாதிரியான மணற் கல்லால் ஆன பாறைத் தொடர் காணப்படலாம் என நம்பப்படுகின்றது. (Swan, B, 1983)

**காவேரி வடிநிலம் – உருவாக்கப் பின்னணி**

ஆதாம் பாலத்தின் அமைப்புப் பற்றி அறிவதற்கு தென் இந்திய - இலங்கைப் பிர தேசங்களுக்கிடையேயுள்ள காவேரி வடிநிலத் தின் உருவாக்கப் பின்னணியை சுருக்கமாக அறிந்துகொள்வது அவசியம். "கேம்பிறியன்" புவிச்சரித காலத்தின் (600 மில்லியன் வருடங்கள்) போது இன்றைய கண்டங்கள் சமுத்திரங்களின் ஒழுங்குகள் இன்றைய அமைப்பில் இருக்கவில்லை. புவிச்சரித காலங்களினூடாக புவியோட்டில் (Curst) ஏற்பட்ட மாற்றங்களுக்கமைய கண்டங்கள் - சமுத்திரங்கள் என்பவற்றின் ஒழுங்கமைப்பில் மாற்றங்கள் நிகழ்ந்து வந்திருக்கின்றன. அந்தவகையில் "கொண்டு வானா" என்று அழைக்கப்பட்ட பாரியதொரு நிலத்திணிவின் ஒரு பகுதியாக இந்தியாவும் இலங்கையின் பெரும்பகுதியும் இருந்திருக்கின்றன. புவிச்சரி தவியல் ரீதியாக இவ்விரு நிலத்திணிவுகளும் எவ்வாறு இருந்திருக்கக் கூடும் என்ற ஆய்வில் இவ்விரு நிலத்திணிவுகளையும் மீளப்பொருத் திப் பார்க்கும் ஆய்வு முயற்சிகள் பல இடம் பெற்றுள்ளன. (Katz, 1978). இவ்வாய்வுகளின் பயனாக இன்றைய இந்து சமுத்திர அடித்தளம் "கடற்தரை பரவுதல்" (Sea floor spreading processes) செயன் முறையின் (புவியோட்டில் இடம்பெறும் கிடையசைவுகளின் விளைவு களால் புவியோட்டில் பிளவுகள் ஏற்பட்டு புவியுட்பாகப் பொருட்கள் புவியோட்டிடை வெளிகளூடாக வெளிவந்து பாறைகளாகப் படிவுறும் நிகழ்வு) விளைவால் உருப்பெற்றது என்று அறியப்பட்டுள்ளது.

இந்து சமுத்திரப் பகுதியில் மூன்று பிரதான காலகட்டங்களில் "கடற்கரை பரவுதல்" இடம்பெற்றிருக்கின்றது. முதலில் வங்காள விரிகுடாப் பகுதியிலும் (கிறிட்டேஷியஸ் காலத் தின் ஆரம்பம் - 80 மில்லியன் வருடங்களுக்கு முன்). இரண்டாவதாக "பலியோசீன்" காலத் தில் (65 மில்லியன் வருடங்களுக்கு முன்) தென் இந்து சமுத்திரப் பகுதியிலும், இறுதியாக ஒலிக்கோசீன் காலத்தில் (30 மில்லியன் வருடங்களுக்கு முன்) அரபியக் கடற்பகுதியி லும் இவை நிகழ்ந்துள்ளது. (Curray and moore, 1974; Sclater and fisher, 1974; mckenzic and Sclater, 1973, Eremenko, 1968, crady, 1971)

மேற்குறிப்பிட்ட மூன்று காலகட்டங்களின் போதும் புவிமேலோட்டில் தோற்றம் பெற்ற பிளவுகள் (faults) வழியாக நிலத்திணிவுகளின் நகர்வு (Crustal movement) இடம்பெற்றுள்ளது. இந்திய - இலங்கை நிலத்திணிவுகளிலும் பிளவுகள் ஏற்பட்டு இத்திணிவுகளிலும் படிப்படி யாக நகர்வு இடம்பெற்றுள்ளது. இன்னும் இத் தகைய நகர்வுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தென் இந்திய - இலங்கை நிலத்திணிவுகள் பிளவுற்று நகர்ந்த இடை வெளியில் காவேரி தாழ்நிலப்பரப்பு படிப்படி யாக விருத்தியுற்றிருக்கின்றது. இத்தாழ் நிலங் களில் படிவாக்கங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்திருக்கின்றன. ஒலிகோசீன் காலத்தைத் தொடர்ந்து வந்த "மயோசீன்" காலப்பகுதியில் "ரெதீஸ்" கடலின் ஒருபகுதி இத்தாழ்நிலத்தில் ஊடுருவியதன் விளை வாகவே இரு நிலத்திணிவுகளுக்கிடையேயும் நீர்ப்பரப்பு ஒன்று தோன்றியிருக்கின்றது. இலங் கையும் தனித்தீவாக மாற்றம் பெற்றிருக் கின்றது. (Cooreay, P.G. 1967).

தென்னிந்திய - இலங்கையைச் சூழ இடம் பெற்ற புவியோட்டசைவுகள் (Crustal move ments) இரு நிலத்திணிவுகளிலும் கிடையசை

வுகளை மட்டுமல்ல குத்தசைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. தென் இந்தியாவின் தென்கிழக்குக் கரையோரத்திலும் இலங்கையின் வடக்கு, வடமேற்குக் கரையோரத்திலும் மயோசின் காலப்பாறைகள் மேலுயர்த்தப்பட்டமைக்கு குத்தசைவுகளே காரணமாகும். இக்குத்தசைவுகள் தொடர்ந்தும் இயங்கி வருவதும் அறியப்பட்டுள்ளது. குத்தசைவுகளுக்கும் கிடையசைவுகளுக்கும் ஏற்பவே காவேரி தாழ்நில தரையமைப்பும் அமைந்துள்ளது. இப்பிரதேசங்களை ஊடறுக்கும் பிளவுகள் NW-SE, NE, NE-SW திசைகளில் அமைந்துள்ளதுடன் இவை இரு திணிவுகளின் அசைவுப் போக்குகளை நிர்ணயிப்பதாகவும் இருக்கின்றன. இந்தியத் திணிவு வடக்கு நோக்கி நகர்வதும் இலங்கையின் வடக்கு நோக்கிய நகர்வு கட்டுப்படுத்தப்பட்டு எதிர் மணிக்கூட்டுத் திசையில் அசைவதற்கும் ஆதாம் பாலத்தின் வளைவிற்கும் மேற்படி திசையில் அமைந்துள்ள பிளவுப்போக்குகளே காரணமாகலாம் என நம்பப்படுகின்றது.

தென் இந்திய - இலங்கை திணிவுகள் பிளவுற்று மெதுவாக நகரும்பொழுது ஏற்படும் இடைவெளிகளில் படிவுகள் படிந்து வந்திருக்கின்றன. ஆகவே இப்படிவுகளின் காலம் கிறிட்டேஷியஸ் தொடக்கம் இன்றுவரையான வயதைக் கொண்டவையாகும்.

**புவிச்சரிதகால காலநிலை:**

புவிவரலாற்றுக் காலங்களில் எத்தகைய காலநிலை நிலவிவந்துள்ளது என்பதை அறிவது எளிதல்ல. ஆனாலும் புவிச்சரித காலத்தின் பிற்பட்ட காலங்களில் நிலவியிருக்கக் கூடிய காலநிலை பற்றி ஆய்வுகள் வாயிலாக அறியக் கூடியதாகவுள்ளது. அயனப்பகுதிகளில் மயோசீன் காலத்திற்குப் பிற்பட்ட காலப் பகுதியில் பெரும் மழைக்காலங்களும் வரட்சிக்காலங்களும் ஏற்பட்டிருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. குறிப்பாக இடைவெப்பப் பகுதிகளில் இடம்பெற்ற குவாட்னறிகால பனியாக்க நிகழ்ச்சிகளை (Quaternary Glaciation) (பனிக்காலம், இடைப்பனிக்காலம்) அயனப் பகுதிகளில் இடம்பெற்ற பெரும் மழைக் காலங்களுடன் பெரும் வரட்சிக்காலங்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது. தென் இந்திய இலங்கைச் சூழல்களிலும் இத்தகைய காலநிலை பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். குறிப்பாக கடல்மட்ட உயர்வு, தாழ்வு, வரட்சி, வடிகால்களில் மாற்றம், படிவாக்கம் போன்றவற்றில் பெரும் தாக்கங்கள் நிகழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

**பிளித்தோசீன் – கொலோசீன் கால கடல் மட்ட மாற்றங்கள்**

குவாட்னறி - புவிச்சரித காலத்தின் அண்மைய காலமாக (2.0 மில்லியன் வருடங்கள்) கருதப்படுகின்றது. இக்காலத்தின் மிகமிக அண்மிய காலமாக பிளித்தோசீன் (1800 வருடங்களுக்கு முன்), கொலோசீன் (10,000 வருடம்) காலத்தைக் குறிப்பிடலாம். இக்காலத்தில் நிலவிய காலநிலை பற்றி நீண்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இக்காலப்பகுதிகளில் வரண்ட காலநிலை, ஈரமான காலநிலை மாறிமாறி நிகழ்ந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது. காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப வரட்சி, வெள்ளப்பெருக்கு, கடல்மட்ட உயர்வு தாழ்வு போன்றவை தென் இந்திய இலங்கை சூழல்களில் நிகழ்ந்தமை ஆய்வுகள் வாயிலாக வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. இவ்வாய்வு முடிவுகளின்படி கடல்மட்ட உயர்வுகள் தென் இந்திய - இலங்கை சூழல்களில் பல உருவவியல் மாற்றங்களைஏற்படுத்தியுள்ளமையை வெளிக் கொண்டு வந்துள்ளது.

உலகளாவிய நிலையில் கடல்மட்ட மாற்றங்கள் பற்றி நீண்ட ஆய்வுகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. கடல்மட்ட உயர்வுகள் பற்றிய அண்மைக்கால ஆய்வுகள் புவிச்சரித காலத்தின் மிக அண்மைக்காலங்களில் கடல்மட்ட உயர்வுகள் ஏற்பட்டமை பற்றி உறுதிப்படுத்தப்படுகின்றன. Fairbridge, 1961, 1963; Thomson, 1989; Tooley, 1987; Vaidyanathan, 1989.

ஆய்வுகளின்படி இன்றில் இருந்து 18000 ஆண்டுகளுக்கு முன்னர் இறுதிப் பனிக்கால உச்சம் (Last Glacial Maximum - LGM) நிகழ்ந்திருக்கின்றது. இக்காலகட்டத்தில் கடல் மட்ட அளவுகளில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. (Prell et. al. 1970; Kolla Biscaru, 1977;) தற்காலத்தில் காணப்படும் கடல்மட்ட அளவுகளைவிட குறைந்தது 100 மீற்றர் வரையில் கடல்மட்டம் தாழ்ந்திருக்க வாய்ப்புண்டு என அனுமானிக்கப்பட்டுள்ளது. பின்னர், பனிக்கட்டி பின்வாங்கல் (உருகுதல்) ஏற்பட்டதைத் தொடர்ந்து கடல்மட்டம் உயரத் தொடங்கியது. இதுவே "கொலோசின்" கால கடற்பெருக்கு எனப்படுகின்றது. (Oleman and Robert, 1989) உலகளாவிய ரீதியாக கடல் மட்டம் உயர்ந்தபொழுது பல (18,000 - 6000 வருடங்கள் வரை) தீவுகள் இக்காலங்களிலேயே உருவாக்கப்பட்டுள்ளது. உதாரணமாக 12,000 ஆண்டுகளுக்கு முன்னர் அவுஸ்ரேலியாவில் இருந்து "தஸ்மேனியா" பிரிக்கப்பட்டு தீவாக மாற்றம் பெற்றிருக்கின்றது. (Bird, 1987). இந்நிகழ்வுகளுக்கு ஒப்பாக தென் இந்திய - இலங்கை பல பகுதிகள் நீரினுள் அமிழ்ந்துள்ளன. இச்செயன் முறையே சில காலங்களில் தீவிரமாகவும் சில காலங்களில் தீவிரம் குறைந்தும் இருந்திருக்கின்றன.

தென் இந்திய - இலங்கைச் சூழல்களில் மேற்கொள்ளப்பட்ட "கெலோசின்" கால கடற்பெருக்குப் பற்றி பல ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளன. (Kameswara Rao and Desikan, 1990: Krishna Rao, Bhanumoorthy, Srinivasa Rao and Rajendra Prased, 1990; Loveson, Rajamanikkan, 1987, 89; Jinadasa and Katupotha, 1988 Katupotha and Fujiwara, 1988; Fairbrige, 1961; Walcott, 1972; Pirazzoli, 1987, Davies, 1987)

ஆய்வுகளின்படி 18000 - 17000 (இ.முன்னோக்கி) ஆண்டு காலகட்டங்களில் மத்தியதரைக்கடல் மற்றும் பெரும்பாலான அயன மண்டலக் கடல்களில் நீர்மட்டம் இன்று இருப்பதைவிட 80 மீற்றர் வரையாவது குறைந்திருந்தது என்பதை அறிய முடிகின்றது. Davies என்பவருடைய ஆய்வின்படி (1987) இந்து சமுத்திரப்பகுதியில் 7000 ஆண்டுகளுக்கு முன்னர் தற்போதைய கடல்மட்டத்தைவிட 10.0 மீற்றர் வரையில் அன்றைய கடல் மட்டம் குறைந்திருக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்றார். இன்னோர் ஆய்வின்படி 6000 - 4600 வரையான காலப்பகுதியில் கடல் மட்ட உயர்வானது இன்று உள்ள மட்டத்தைவிட குறைந்தது 3.0 - 5.0 மீற்றர் வரை உயர்ந்திருக்க வேண்டும் (Fairbridge, 1961), என்று குறிப்பிடப்படுகின்றது. இந்து சமுத்திரப் பகுதியில் இன்றிலிருந்து 6000 வருடத்திற்கு முன்பிருந்து, தொடர்ந்து வந்த 4000 ஆண்டு காலப்பகுதியில் (6000 - 2000) கடல்மட்டம் இன்று இருப்பதைவிட 1.0 - 6.0 மீற்றர் வரையில் உயர்வு ஏற்பட்டிருக்கின்றது என்று இன்னுமோர் ஆய்வு (Kirshana Rao and Desikan, 1990) குறிப்பிடுகின்றது. மேற்கூறப்பட்ட முடிவுகளுடன் இலங்கையின் மேற்குக் கரையோரங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளும் ஒத்துப்போகின்றன உதாரணமாக கொலோசின்கால நடுப்பகுதியில் இருந்து இறுதிப் பகுதியின் ஆரம்பம் வரையான காலப்பகுதியில் (6600 - 3700) கடல் மட்டம் இன்று இருப்பதைவிட 1.5 மீற்றர் வரை உயர்ந்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

(Katupotha. 1988)

மேற்குறித்த ஆய்வு முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது பிளித்தோசின் - கொலோசின் கால கடற்பெருக்கு தொடர்பாக தென் இந்தியா - இலங்கைக்கு இடையிலான சூழலில் இடம்பெற்றிருக்கக்கூடிய நிலமைகளைப் பின்வருமாறு அனுமானிக்கலாம்.

1) இறுதிப்பனிக்கால உச்சம் நிகழ்ந்த வேளைகளில் காவேரி - பாக் தாழ்நிலப் பகுதிகளில் வறண்ட காலநிலை நிலவியிருக்கின்றது. இன்றைய தென் இந்திய - இலங்கைக்கு இடைப்பட்ட பகுதிகளில்

இருப்பது போல் அல்லாமல் கடற்பகுதிகள் வெகுவாகப் பின்நோக்கி அமைந்திருந்த துடன் தரைப்பகுதியும் ஒப்புரவற்ற நிலையில் இருந்திருக்கவேண்டும்.

2) இறுதிப்பனிக்கால உச்சத்திற்குப் பிறகு கடல்மட்ட உயர்வு ஏற்பட்டதாலேயே காவேரி பாக். தாழ் நிலத்தில் கடல் ஊடுருவத் தொடங்கியிருக்கின்றது. தாழ்நிலங்கள் படிப்படியாக கடலினுள் அமிழ்ந்துவிட நிலப்பரப்பு சுருங்கி வந்துள்ளது. (படம்3)

3) இன்றில் இருந்து 7000 ஆண்டுகள் முன், இன்றைய கடல்மட்டத்தைவிட காவேரிபாக் தாழ்நிலத்தில் 10 மீற்றர் குறைவாகவே இருந்திருக்கலாம். இந்நிலையில் இப் பகுதியில் இன்றைய 10 மீற்றர் சம ஆழக்கோடே அக்கால கடல் எல்லையாகக் கருதவிடமுண்டு (படம் -4) படத்தில் இன்றைய தென் இந்தியாவின் கரையோரமும் இலங்கையின் வடக்கு, வடமேற்கு, மேற்குக் கரையோரமும் அகலமாக இருப்பதுடன் இராமேஸ்வரப் பகுதிக்கும் மன்னாருக்கும் இடைப்பட்ட பகுதி ஒடுங்கி வந்துள்ளதையும் அனுமானிக்கக் கூடிய தாகவுள்ளது. குறைந்தது ஒரு வருடத்திற்கு 1.0 சென்ரிமீற்றர் என்ற அளவில் கடல்மட்ட உயர்வு அக்காலத்தில் அதிகரித்திருக்கலாம் என்ற அளவீட்டின்படி 6500 ஆண்டுகளுக்கு முன்னர் இப்பிரதேசங்களில் அன்றைய கரையோரம் தற்கால 5.0 மீற்றர் சம ஆழக்கோட்டுடன் தொடர்புபட்டிருக்கலாம் (படம்5)


4) இன்றில் இருந்து 6000 வருடங்களுக்கு முன்னர் இன்றைய கடல்மட்டத்தை பெற்றிருக்கின்றது என்று ஆய்வுகள் குறிப்பிட்டபோதும், தொடர்ந்தும் கடல் மட்டம் உயர்ந்து செல்வதாக பல ஆய்வுகள் உறுதிசெய்துள்ளன. ஆனாலும் சில காலங்களில் கடல்மட்டம் குறைந்தும், சில காலங்களில் நிலையாகவும் இருந்திருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்படுகின்றது. 6000 - 2000 (இன்றில் இருந்து முன்னோக்கி) வருடகாலப் பகுதியில் இன்றைய கடல் மட்டத்தைவிட 1.0 - 6.0 மீற்றர் வரை கடல் மட்ட உயர்வுகள் என்னும் ஆய்வு முடிவுகளின்படி (Krishnan Rao Desikan 1990) நோக்கும் பொழுது இன்றைய தென் இந்திய இலங்கைக்கிடையிலான தாழ் நிலங்கள் உட்பட கரையோரங்களும் கடலில் மூழ்கியிருக்கின்றன என்றே கொள்ள இடமுண்டு.

(கடல் மட்ட உயர்வுகளை ஆய்வு செய்தவர்கள் கடல் நீர் அதிகரிப்பு மட்டுமல்ல அந்தந்தப் பிரதேச நிலப்பகுதிகளில் இடம் பெற்றிருக்கக்கூடிய நில அசைவுகளையும் கருத்தில் கொள்ளவேண்டும் என்பதையும் குறிப்பிட்டுள்ளனர். ஏனெனில் நிலத்தின் உயர்ச்சி, தாழ்தல் நீர்மட்ட அளவுகளைப் பாதிக்கும்)


### ஆதாம் பாலம் பற்றிய முடிவுகள்

தென் இந்திய இலங்கைப் பிரதேசங்களைச் சூழவுள்ள பிரதேசங்களில் இதுவரை இடம் பெற்ற புவிச்சரிதவியல், புவி - வெளியுருவ செயன்முறை ஆய்வுகள் அடிப்படையில், ஆதாம் பாலம் என்று அழைக்கப்படும் அமைப்புப் பற்றி புவியியல் ரீதியாகப் பின் வரும் முடிவுகளை அனுமானிக்கக்கூடியதாக வுள்ளது.

1) காவேரி தாழ்நிலம் தென்இந்திய - இலங்கை நிலத்திணிவுகளின் பிரிவு ஏற்பட்ட காலத்தில் இருந்து (கிறிட்டேஷியஸ் காலம்) படிப்படியாக விருத்தியடைந்துள்ளது. இன்றுவரை இப்பகுதியில் விரிவு பெற்றுக்கொண்டிருக்கும் அசைவுகளுக்கு ஏற்பவும். வெளியுருவ செயன்முறைகளுக்கேற்பவும் மேற்படி தாழ்நிலத்தின் தரையமைப்பு அமைந்துள்ளது. (மேடு பள்ளமான உருவவியல் தன்மை) பிரதேசங்களின் கரையோர அமைப்பும் மேற்படி செயன்முறைகளினால் கட்டுப் படுத்தப்படுகின்றது.





ஆதாம் பாலமும் பழைய கரைக்கோடுகளும் (படம் 02)
(தற்போது கடலில் அமிழ்ந்துள்ளது)



(படம் 03)


இன்றைய கடல் மட்டத்தை விட 80.0 மீட்டர் கடல்மட்டக் குறைவு 80.0 மீட்டர்) சமஆழக்கோட்டினை கடல் எல்லையாகக் கொண்ட பொழுது அமையும் இந்திய-இலங்கை தரை அமைப்பு
(இன்றில் இருந்து 18000 வருடங்களுக்கு முன் LGM காலத்தில் இருந்தநிலை) (LGM:Last Glacial Maximum)




(படம் 04)

இன்றைய கடல்மட்டத்தை விட 10.0 மீற்றர் கடல்மட்டம் குறைந்த நிலை, கடற்பெருக்கின் மூலம் இந்திய இலங்கை நிலப்பகுதிகள் குறைந்து வருதல், நெடுந்தீவு உட்பட இன்றைய தீவுக்கூட்டங்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் இணைந்து ஒரே நிலத்திணிவாகக் காணப்படல்.

இன்றைய கடல்மட்டத்தை விட 5.0 மீற்றர் கடல்மட்டம் குறைந்த நிலை நெடுந்தீவு தனித்தீவாக உருப்பெற்று விட்டது. ஏனைய தீவுகளும் குடாநாடும் ஒரே நிலத்திணி வாகக் காணப்படுகின்றது (இன்றில் இருந்து 6500 வருடங் களுக்கு முன்னர்)




(படம் 05)

2) மன்னார் வளைகுடாப் பகுதிகள் ஆழமான தாகவும் பாக் குடா ஒப்பீட்டளவில் ஆழம் குறைந்ததாகவும் இவற்றிற்கு இடைப்பட்ட நிலப்பாலப்பகுதி போன்றவற்றின் உருவ வியலுக்கு மேற்கூறப்பட்ட புவியோட்டசைவு களும் வெளியுருவ செயன்முறைகளுமே காரணமாகும். இன்று காணப்படும் மன்னார் வளைகுடா, பாக். குடாப்பகுதிகள் புவிச்சரித காலங்களில் இடம்பெற்ற கால நிலை மாற்றங்களுக்கு ஏற்ப வரண்ட, ஈரக் காலநிலைகளை அனுபவித்து வந்திருக் கின்றன. கடல்மட்ட உயர்ச்சிகளின்போது தாழ்நிலங்கள் நீரினால் மூழ்கடிக்கப்பட, மூழ்கடிக்கப்படாத எஞ்சிய நிலங்கள் தீவு களாக மாற்றம் பெற்றுள்ளன. இவ்வகை யில் தான் ஆதாம் பாலத்தின் அமைவும் அதன் இரு அந்தங்களிலும் இருக்கின்ற பாம்பன், மன்னார் தீவுகளும் உருப் பெற்றிருக்க வேண்டும்.

3) தென் இந்தியா - இலங்கை தாழ் நிலங்களில் கடல் உட்புகாத வேளைகளில் இரு நிலத்திணிவுகளில் இருந்தும் ஆறுகள் இத்தாழ்நிலங்களில் தத்தமது பள்ளத் தாக்குகளையும் கழிமுகங்களையும் உரு வாக்கியிருப்பதற்கும் வாய்ப்புண்டு. இவ் ஆறுகளால் வெட்டப்பட்ட பள்ளத்தாக்கு கள் பின்னர் கடல் உட்புகுந்த வேளையில் நீரினால் மூழ்கடிக்கப்பட்டுவிட்டிருக்கலாம். பள்ளத்தாக்குகளுக்கிடைப்பட்ட உயர் பிர தேசங்களே தீவுகளாக இன்று தென்படு கின்றன என்றும் கருதிக்கொள்ள இட முண்டு. இன்றைய நிலையிலும் ஆதாம் பாலத்தின் தீவுகளுக்கூடாக வேகமான நீரோட்டமும், மணற்படிவுகளும் மன்னார் வளைகுடாவுக்குள் வருவதை அவதானிக்க முடியும்.

4) சிலவத்துறை. வங்காலை முருகைத் தடுப்புப்பார் முன்னைய கரையோரத்தின் எச்ச நிலங்களாகும். இதன் தொடர்ச்சியாக பாம்பன் தீவுக்கு மேற்கே இந்திய கரை யோர முருகை பார்களையும் தொடர்பு படுத்தப்படலாம். இங்கு சில தீவுகள் இருக்கின்றன.

5) மன்னார் வளைகுடா, பாக்குடாப் பகுதிகள் உள்ளிட்ட தாழ்நிலங்களில் புவியோட சைவுகள் இடம்பெறும் வலயமாகும். இவ் அசைவுக்கு ஏற்ப ( Crustal Movement) நிலத்திணிவுகளில் உயர்வு, தாழ்வு ஏற் படலாம் ஆதாம் பாலத்தின் வளைவு, தீவுகளின் ஒழுங்கமைப்பு என்பன கூட இவ் அசைவுகளின் பிரதிபலிப்பு எனவும் கருதலாம்.

6) ஆதாம் பாலத்தின் தீவுகளில் மணப்படிவுகள் தொடர்ச்சியாகப் படிகின்றன. இப்பகுதி களில் நீரோட்டம் மிகையாக காணப்படு கின்றபடியினால் மணப்படிவுகள் அசைவு களுக்கு ஏற்ப இவற்றின் உருவவியலில் அடிக்கடி மாற்றங்கள் ஏற்பட்டவண்ண மிருக்கின்றன. இப் பகுதியில் முருகைக் கற்பாரின் வளர்ச்சி தடைப்பட்டுள்ளது. இப் பகுதிகளில் கடல் மட்டத்தில் வீழ்ச்சி ஏற்படும் பொழுதோ அல்லது குத்துயர்ச்சி மூலம் நிலம் உயர்த்தப்பட்டாலோ தீவு களின் இணைவு சாத்தியமாகும்.

மன்னார் விரிகுடா, பாக்குடா போன்ற பகுதி களில் மேற்கொள்ளப்படக்கூடிய புவிச்சரித, புவியியல் ஆய்வுகள் இன்னும் நிறைய உண்டு. இத்தகைய ஆய்வுகள் செய்யப்படும் நிலை யில் ஆதாம் பாலம் போன்ற அமைப்புக்கள் பற்றிய மேலும் பல உண்மைகள் வெளிக் கொண்டு வரப்படலாம்.

> "பூமியின் சாரம் குறைந்ததும் மனிதனுடைய ஆரோக்கியமும் ஜீவனும், புத்திசாலித்தனமும் அதோடு மறைந்துவிடுகிறது"
>
> -லூயி பிராம்ஃபீல்டு

## BIBLIOGRAPHY


1. Bird, E.C.F., 1990 - The effects of a rise level on Coastal Environments. pp. 9 - 30.

2. Cooray, P.G., 1967, 1984 - An Introduction to the Geology of Sri Lanka (Ceylon), second revised edition, National museum Sri Lanka.

3. Curra, J.R and Moore, D.G., - 1974 - Sedimentary and tectonic processes in the Bengle deep sea fan and geosyncline. In the Geology of continental Margins, PP. 617-27. New York: Springer verlag.

4. Davies, R. A. Jr. and Clifton, H.E. 1987 - Sea level change and the preservation potential of wave dominated and tied dominated coastal sequences. In : D. Nummedal, O.H. Pilky and J.D. Haward (EDS). Sea-Level fluctuations and Coastal evolution. Soc.Econ.Paleontal. Mineral. Spl.Publ, PP.167-178.

5. Deraniyagala, S.U., 1986 - Some post Gondwana land links Ceylon. Proc. Ind. sci.con.27th meeting, pt.(4)., PP.119-120.

6. Davies J. and Selvaratnam. R. 1982 - North - West land and water resources development project Sri Lanka. WRB, cround water division, Colombo.

7. Eremenko, N.A., 1968 - The tectonic and petroleum possibilities of the southern part of India. mem. gelo.soc. India. 2, 317-6.

8. Fairbridge. R.W., 1961 - Eustatic changes of sea level, physics and chemistry of the Earth, 4: pp.99 - 175. (Pergamon).

9. ...................., 1961 - The changing level of the sea, scientific Amer., v.202(5), pp.70-79.

10. Grady, J.C., 1971 - Deep main faults of south India. Journ. geol.soc. India. 12, 56 - 62.

11. Guilcher, A., 1969 - Pleistocene and Holocense sea level changes, Earth scie v.5, pp. 67 - 69.

12. Katupotha, J., 1988 (a) - Hiroshima University radiocarbon dates 1, West & South coasts of Sri Lanka. Radio carbon v.30(1).pp.125-128.

13. ...................... 1988 (b) - Hiroshima University radiocarbon dates 2, West & South coasts of Sri Lanka. Radio carbon v.30 (3).pp.341-346.

14. ...................... 1988 (c) - Evidence of high sea level during the mid - Holocene of the southwest coast of Sri Lanka, Boreas, V.17, 209-213.

15. ...................... 1988 (d) - Evolution of the coastal land forms in the western part of Sri Lanka. Geographical Sciences, (Hiroshima University), v.43(1), pp. 18-37

16. ...................... 1988 (e) - Coast and shelf evolution of Sri Lanka in the Quaternary. In: Extended abstract of the International symposium on "Theoretical and Applied Aspects of coastal and shelf Evolution; Past and future' Jointly with the Inaugural meeting of IGCP project 274 - Amsterdam (Netherlands) 19-24 sep. 1988, 64 - 66.

17. ......................, 1990 - Sea level variations: Evidence Sri Lanka and South India. In: Sea level variation: and is its impact on coastal Environment ed. G.V. Rajamanikkam. Tamil University, Thanjavur, Tamil Nadu, India. pp.31-52.

18. ................, and Fujiwara, K., 1988 - Holocene seal level change on the southwest and south coast of Sri Lanka. Palaeogeogr; palaeoclimatol: Vo-68, pp.189-203.

19. Kameswaran Rao, K and Desikan, - 1990 - Quaternary geomorphic evidences for sea level variations along south Andra coast. In: sea level variation and its impact on coastal Environment. ed: G. V. Rajamanikam, Tamil University, Thanjavur, Tamil Nadu, India. pp.81-96.

20. Katz, M.B., 1978 - Sri Lanka in Gondwanaland and the evaluation of the India Ocean, Geol.mag., Vol. 115.pp.237 - 244.

21. Krishnan, M.S., 1968 - Geology of India and Burma. Madras: Higginbothans.

22. Kolla, N and Biscave, P.V., 1977 - Distribution and origin of quartz in the sediments of the Indian Ocean, Journ. of sedimentary petrology, V.47 (2), pp.642 - 649.

23. Krishna Rao, B, Swamy - Distribution of calcrete in Holocene coastal sediments from Andhra Pradesh. East coast of India. In: sea level variation and its impact on coastal Environment (ed).

A.S.R. Bhanumurthy., nd Rajendraprasad, P. 1990 - G.V. Rajamanikam, Tamil University publ.No:131.

24. Krishna Rao, B, Swamy - A.S.R., and Murthy, P.B, 1990 - Sedimentary characteristics of Holocence beach ridges in western delta of Krishna river. In: Sea level variation and its impact on coastal Environment (ed). G.V. Rjamanikam, Tamil University. publ. No. 131.

25. Mc Kenzie, D.P and Sclater J.G., 1973 - The evolution of the Indian Ocean. In planet earth, pp. 147 - 58. San Francisco: W.H. Freeman.

26. Mohanti, M., 1989. - Sea level rise. An overall view anticipated consequences along Orissa coast, eastern India. Abs. National seminar on sea level variation and its impact on coastal environment. Tamil University, Thanjavur, p. 19 - 21.

27. Prell, W.L. Hutson, W.H. Williams, D.F.Be, A.H.W. ceitzenaure, K. and Molfino, B., 1980 - Surface circulation of the Indian Ocean during the last glacial maximum approximately 18000YB.P. Quat. res., V14.pp.309-336.

28. Preu, C. Weerakkody, U., 1987 - Mapping of geomorphology of estuarine coast using remote sensing techniques. A case study from Sri Lanka. Berliner geographische studien 25, pp. 389 - 401.

29. Sambasiva Rao. M, 1982 - Morphology and evolution of modern cauvery delta Tamil Nadu, India. Trans. Ind. Tnst Geos., pune V.4(1), pp.67 - 78.

30. Sclater, J.G. and fisher, R.L., 1974 - Evolution of the east central Indian ocean with on the tectonic setting of the Ninety east ridge. Bull. geol. soc. Am. 85, 683 - 702.

emphasis on the tectonic setting of the Ninety east ridge. Bull. geol. soc. Am. 85, 683 - 702.

31. Senaratne, A, and Dissanayake, C.D., 1982 - Palaeogeographic Reconstruction of the Jaffna Peninsula, Sri Lanka. Geological society on India, Vol. 1.23. no. 11.

32. Smith, A.G and Hallam, A., 1970 - The fit of the southern continents. Nature, Lond. 225, 139 - 44.

33. Stoddart, D.R., 1969 - Ecology and morphology of recent coral reefs. Biology reviews, 44: 433 - 498.

34. Tooley, M.J., 1987 - Sea level studies. In: M.J. Tooley and I. Shenman (eds). Sea level changes. Institute of British Geographers, spl. Publ. Basil Blackwell, Oxford, 397p.

35. Vaidyanathan, R., 1971. - Evolution of drainage of cauvery basin in south India. J.Geol. soc. Indi, V.12(1). pp.14-23.

36. ................, 1985 - Sealevel changes during quaternary in India, sea level (Info. Bull, IGCP project No. 61), Ed. M.J. Tooley, Uni.Durham, U.K., 5, pp. 1-5.

37. Victor Rajamanikam, G, Mohan Rao, K., and Rao, T.C.S., 1990 - Inference of coastal submergence from the study of beach rock off Visakhapatnam. In: Sea level variation and its impact on coastal Environment ed. G.V. Rajamanikam. Tamil University, Thanjavur, Tamil Nadu, India. pp.391-410.

38. ................, 1972 - Post Precambrian uplifts and regional neotetonic movements in Ceylon, 24th Int. Geol. congress, section 3, 642 - 54.

39. ................, 1985 - The Geology structure and tectonics of Sri Lanka and south India. Proc. symposium on Geology of Sri Lanka, Peradeiya, 1983, occasional Publ. No. 6, Paris, France.

40. 1988 - Mid-Holocen sealevel changes in Sri Lanka. J. Nat science council Sri Lanka 16, pp. 23-37.

council Sri Lanka 16, pp. 23-37.

41. ................, 1990 - Geomorphological evolution of the southwest coast of Sri Lanka. Land from evolution since the mid-Holocene period and historical coastline changes. Natural resources, energy and science auth. Sri Lanka. Colombo.

42. Wolcot, R.I., 1972 - Past sea levels, ecstay and deformation of the earth. Quat. res. Vo.2, pp. 1-14


# புற்றுநோய் - ஓர் அறிமுகம்



Dr. ந. ஜெயகுமாரன் MD
புற்றுநோய் வைத்திய நிபுணர்
யாழ் போதனா வைத்தியசாலை


### புற்றுநோய் என்றால் என்ன?

இது உடற்கலங்கள், உடலின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் தன்னிச்சையாக, அசாதாரண முறையில் பெருக்கமடைவதால் ஏற்படும் வளர்ச்சிகள் அல்லது கட்டிகள் எனக் கொள்ளலாம். புற்றுநோய் எமது உடலின் எப்பகுதியிலும் ஏற்படலாம்.





படம் 1

உலகளாவிய ரீதியில் புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதேபோல் இலங்கையிலும் இவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இலங்கையின் புள்ளிவிபரமானது படம் - 1இல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. புற்றுநோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பானது பெண்களில் கூடுதலாக உள்ளதையும் அவதானிக்கலாம்.





படம் 2

ஆண்களில் புற்றுநோயானது வாய் மற்றும் தொண்டைப் பகுதியில் அதிகூடிய அளவிலும், இரண்டாவதாக நுரையீரலில் அதிக அளவிலுமாக ஏற்படுகின்றது. (படம் - 2) பெண்களில் மார்பகங்களிலேயே அதிக அளவில் புற்றுநோய் ஏற்படுகின்றது. இரண்டாவதாகக் கருப்பைக் கழுத்துப் பகுதியிலும், மூன்றாவதாக களப்பகுதியிலும் ஏற்படுகின்றது. (படம் - 3) இலங்கையில் ஒரு வருடத்தில் சுமார் 20,000 புதிய நோயாளிகள் இனம் காணப்படுகின்றனர். இவர்களில் கணிசமானோர் பிந்திய நிலைகளிலேயே சிகிச்சைக்காக வருகின்றனர்.





படம் 3

உலகளாவிய கணிப்பீடுகளின் அடிப்படையில் 2020ஆம் ஆண்டளவில் 10.3 மில்லியன் மக்களும் 2030ஆம் ஆண்டளவில் 12 மில்லியன் மக்களும் புற்றுநோயால் மரணிப்பர் என்று எதிர்வு கூறப்படுகின்றது. (படம் - 4)




படம் 4

இவ்வாறு மரணிப்பவர்களில் பெரும்பான்மையானோர் வளர்முக நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் எனவும் எதிர்வு கூறப்படுகின்றது. (படம் - 5).




படம் 5

புற்றுநோயானது எமது பரம்பரை அலகுகள், சூழலில் ஏற்படும் மாற்றங்கள், உணவுப் பழக்கவழக்கங்கள் எனப் பல காரணிகளின் ஒட்டுமொத்தத் தாக்கங்களின் விளைவாகவே எமது உடலில் ஏற்படு கின்றது. இந்தத் தாக்கச் செயற்பாடுகள் என்ன என்பது தற்போது பெருமளவில் கள உள் அளவிலான ஆராய்ச்சிகள்மூலம் கண்டறியப் பட்டுள்ளது. இந்த அறிவின் வளர்ச்சி புற்றுநோய்க்கான நிர்ப்பீடன ஊசி (Vaccination) வழங்கல் மூலமாக புற்றுநோயை இல்லாதொழித் தல், புற்றுநோயைக் குணமாக்கல் அல்லது அதன் அசௌகரியத் தைக் கட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு வழிசமைத் துள்ளது.



படம் 5




படம் 6

**புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கான காரணங்கள்**


**1) வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரித்தல்**

உலகளாவிய ரீதியில் வயோதிபர்களின் எண்ணிக்கை அதிகரித்தே வருகின்றது. உலக சனத்தொகைப் பரம்பல் மற்றும் ஆண், பெண்பாலாரிடையே அதிகரித்துவரும் வயோதிபர்களின் எண்ணிக்கை என்பவற்றை படம் - 6இல் காணலாம். வயோதிப காலத்தில், உடலின் கலங்கள் உடலின் கட்டுப்பாட்டுக்கு அமைவாக இல்லாது செயற்படுவதனால் அசாதாரண வளர்ச்சிகள் இலகுவாக ஏற்படுகின்றன. ஆண், பெண்பாலாரிடையே புற்று நோயின் தாக்கம் அதிவயதானவர்களில் கூடுதலாக ஏற்படுவதினை படங்கள் 7, 8 இல் தெளிவாகக் காணலாம்.




படம் 7


**2) தனிநபர் சார்ந்த பழக்க வழக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள்**



படம் 8


- ❖ புகையிலை பாவித்தல் : இதனைப் புகைப்பதனாலோ, அருகிலி ருந்து உள்வாங்குவதினாலோ, அல்லது இதனைப் பாக்கு, சுண்ணாம்புடன் உட்கொள்வதனாலோ புற்றுநோய், குறிப்பாக நுரையீரல், வாய், தொண்டை மற்றும் களப்பகுதியில் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளன.
- ❖ மதுபானம் அருந்துதல்: இதன் இரசாயன மற்றும் எரிவுத் தாக்கத்தால் வாய், தொண்டை, களப்புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது. அத்துடன் இதனால் ஈரல் பாதிப்புற்று ஈற்றில் ஈரலில் புற்றுநோய் ஏற்படும்.
- ❖ பாக்கு, புகையிலை, சுண்ணாம்பு போன்றவற்றை வெற்றிலை யுடன் உட்கொள்ளல். இவை வாய், தொண்டை, களப்புற்று நோய்களை அதிகளவில் ஏற்படுத்தும்.
- ❖ வாய்ச்சுகாதாரமின்மை மற்றும் ஒழுங்கற்ற பற்களால் அல்லது சரியான அளவிற் செய்யப்படாத செயற்கைப் பற்களால் ஏற்படும் தொடர் உறுத்தல் என்பனவும் வாய்ப்புற்று நோயை எற்படுத்தும்.

❖ மாறுபட்ட உணவுப் பழக்க வழக்கங்கள்: அதிக கொழுப்பு அடங்கிய உணவு, அதிகமாக உப்பிட்ட உணவு, பொரித்த, கருக்கிய உணவுகள், நிறமூட்டிய உணவுகள் மற்றும் உறைப்பான உணவுகள் என்பன பலவகையான புற்றுநோய்களைக் குறிப்பாக, மார்பகப் புற்றுநோய், குடற்புற்றுநோய் மற்றும் களப் புற்றுநோயை ஏற்படுத்துகின்றன.



படம் 6

❖ போதைப்பொருள் பாவனை மற்றும் கட்டுப்பாடற்ற / பாதுகாப்பற்ற பாலியல் பழக்க வழக்கங்கள் இவை குறிப்பாக வைரசுக்களால் ஏற்படும் புற்றுநோய்களை அதிகரிக் கின்றன. உதாரணமாக பாலுண்ணி வைரஸ் (Human Papilloma Virus) பெண்களில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயை அதிக அளவில் ஏற்படுகின்றது. ஈரல் அழற்சி வைரஸ் (Hepatitis Virus B, C) மூலமாக ஈரல் புற்றுநோய் ஏற்படுகின்றது. எயிட்ஸ் நோயுடன் தொடர்பாகவும் புற்றுநோய்கள், குறிப்பாகக் கருப்பைக் கழுத் துப் புற்றுநோய், குதப்புற்றுநோய் மற்றும் நிணநீர்க்கணுப் புற்றுநோய் மற்றும் நிணநீர்க்கணுப் புற்றுநோய் என்பன ஏற்படுகின்றன.



படம் 7

**3) சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்கள்**


❖ நகரமயமாக்குதல் மற்றும் பல்வேறு வகைகளில் சூழல் மாசடைதல்.

❖ தொழிற்சாலைகள் உருவாக்கப்படலும், அதன் விளைவாக இரசாயன, பௌதீகக் கழிவுகள் சூழலில் கட்டுப்பாடுகள் கடந்து கலத்தல்.




படம் 8

❖ கட்டுப்பாடற்ற முறையில் விவசாயத்துக்காகப் பீடை கொல்லிகள், வளமாக்கிகளைப் பயன்படுத்தல். இதன் மூலம் சுவாசிக்கும் காற்று, குடிப்பதற்காகப் பயன்படுத்தும் நிலத்தடி நீர் மற்றும் உண்ணும் மரக்கறி வகைகள் என்பவற்றில் இரசாயனப் பதார்த்தங்கள் செறிந்து இருப்பதன் மூலம் எமது உடற்கலங்களைப் பாதிக்கின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விவசாய பீடத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் எமது பிரதேச நிலத்தடி நீரானது அதிகளவிலான நைத்திரேற்றுகள் கொண்டதாக உள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது. (படங்கள் - 9, 10) நாம் உட்கொள்ளும் மரக்கறிகளில் பீடைநாசனி மீதிகள் (Pesticide Residues) எந்தளவில் செறிந்து உள்ளது என்று இன்னமும் ஆய்வுகள் மூலம் அறியப்படவில்லை. ஆனால், விவசாயிகள் பீடைநாசினிகளை கடைசியாக விசிறியதில் இருந்து ஒரு சில நாட்களிலேயே விற்பனைக்காக அறுவடை செய்கின்றனர் என்பது கண்கூடு. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நாம் எமக்குத் தெரியாமலேயே உடலுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தும் இரசாயனங்களை உள்ளெடுத்து ஈற்றில் புற்றுநோயாளியாகும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றோம்.



படம் 9



படம் 10

❖ பெண்களில் மாதவிடாய் நின்ற பின்பு ஓமோன்களைப் பாவிப்பதால் மார்பகப் புற்றுநோய் அதிகளவில் ஏற்படுகின்றது.

❖ சூரியனில் இருந்துவரும் அல்ரா வயலற் (UV) கதிர்கள் மூலமாகவும் ஓசொன் படல உடைவால் பூமியை அடையும் பாதகமான சூரியக்கதிர்கள் மூலமாகவும் தோல் சம்பந்தமான புற்றுநோய்கள் ஏற்படுகின்றன.

**4) அணுக்கதிர்த் தாக்கம்**


அணுக்கதிர்த் தாக்கம் புற்றுநோயை ஏற்படுத்தும் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. குறிப்பாக 1945களில் இடம் பெற்ற ஜப்பானிய அணுக்குண்டுத் தாக்குதலின்பின் அப்பிரதேசத்தில் உயிர் பிழைத்து வாழ்ந்த பலர், ஆண்டுகள் சில கழிந்து புற்றுநோய்த் தாக்கத்துக்கு உள்ளாகினர். ஜப்பானின், கிரோசிமா (Hiroshima) மற்றும் நாகசாக்கியில் (Nagasaki)இல் ஏற்பட்ட அணுத்தாக்கப் படத்தினை (படம் - 11)இல் பார்க்கும் போது அதன் வலுவான தாக்கத்தை ஊகிக்கலாம். இதே போன்று 1986இல் சேணோபில் (Chernobyl)இல் நடைபெற்ற அணு உலை விபத்தின் (படம்-12) பின்னர் பல சிறுவர்கள் தைரொயிட் புற்றுநோய்க்கு ஆளாகியுள்ளனர். அண்மையில் நடைபெற்ற சுனாமி தாக்கம் காரணமாக ஜப்பானில் ஏற்பட்ட அணுக்கசிவானது அங்கு வாழும் மக்களின் எதிர்காலத்தில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்தப் போகின்ற என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். பல வளர்ச்சியடைந்த நாடுகள் அணுசக்தியை யுத்தத்துக்காவும் பயன்படுத்தத் தயாராகிப் பெரிய அணு ஆயுத உற்பத்தியிலும் இறங்கியுள்ளன. இந்தச் செயற்பாடானது மனித குலத்துக்கே பெரிய அழிவை ஏற்படுத்துவதுடன் தப்பிப்பிழைப்போரும் புற்றுநோய் போன்ற கொடிய நோய்களுக்கு நாளடைவில் முகம் கொடுக்கவும் நேரிடும் என்பது நிச்சயம்.


படம் 11


படம் 12

**5) பரம்பரை அலகுகளின் தன்மை**

ஒரு சில புற்றுநோய்கள் உதாரணமாக மார்பகப்புற்று நோய், குடற்புற்றுநோய் மற்றும் சிலவகையான இரத்தப் புற்றுநோய் என்பன ஒரு சிலரில் பரம்பரை அலகுகளின் (படம் - 13) இயல்பான தன்மை காரணமாக இலகுவில் ஏற்பட வாய்ப்பளிக்கின்றது.


படம் 13

**6) உடற்பயிற்சி இன்மை**


இதன் விளைவாக எமது உடம்பு பருக்கும்போது (படம்-14) குடல் மற்றும் மார்பகப் புற்றுநோய்கள் அதிகளவில் ஏற்படுவதுடன் இதய சம்பந்தமான நோய்களும் அதிகளவில் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, நாம் தினமும் குறைந்தது 30 நிமிடங்களாவது உடற்பயிற்சி செய்து உடலை ஊரோக்கியமாக வைத்திருப்பது நல்லது.


படம் 14

# புற்றுநோய்கள் உருவாக்கம்


புற்றுநோயை உருவாக்கும் காரணிகள் எமது சாதாரண உடற்கலங்களை உடனடியாகப் புற்றுநோய்க் கலங்களாக மாற்றமடையச் செய்வதில்லை. புற்றுநோயானது பல படிமுறை மாற்றங்களூடாகவே (Multi Step Process) ஏற்படுகின்றது. எமது உடற் கலங்கள் புற்றுநோயாக மாற்றமடைவது நாம் அரவணைக்கும் பாதகமான காரணிகள் மற்றும் பாதுகாப்பான காரணிகளின் அளவுத் தன்மையிலேயே தங்கியுள்ளது.

படம்-15இல் காட்டப்பட்டவாறு நாம் பாதகமான காரணிகளை அதிகமாக அரவணைப்போமாயின் சமநிலை வலப்பக்கமாக வலுவடைந்து ஈற்றிற் புற்றுநோய் உருவாக்கத்தை ஏற்படுத்தும். இவ்வாறான பல படிகளூடான புற்றுநோய் உருவாக்க மானது கல உள் அளவில் ஆராய்ச்சிகள் மூலம் அறியப்பட்டுள்ளது.



படம் 15

எமது சாதாரண உடற்கலங்களில், குறிப்பாக உடல் மேலணிக் கலங்களில் இரசாயனங்கள், அணுக்கதிர் வீச்சு மற்றும் வைரஸ் தொற்று என்பவற்றின் தாக்கத்திற்கு உள்ளாகையில் படி படிகளூடாக புற்றுநோய் ஏற்பட்டு ஈற்றில் முற்றிய நிலையை அடைகின்றது. (படம்-16)




படம் 16

இவ்வாறான பாதகமான காரணிகள் தொடர்ச்சியாக எமது உடற்கலங்களுடன் தொடுகையில் இருப்பின் இப்படிமுறை மாற்றம் வேகமாக நடைபெறும். இவ்வாறான மாற்றங்களின் போது எமது உடற்கலங்களில் உள்ள நிற மூர்த்தங்கள் (DNA) முதலில் உடைகள் மற்றும் மாற்றங்களுக்குக்குள்ளாகின்றன. சிறிய மாற்றங்கள் ஏற்படும் இடத்து எமது உடலில் உள்ள நொதியங்கள் மற்றும் பாதுகாக்கும் காரணிகளினால் மீளவும் சரி செய்யப்படுகின்றன. அவற்றையும் மீறி மாற்றமடையும் கலங்கள் எமது உடல் நிர்ப்பீடன சக்தியால் அழிவடையச் செய்யப்படுகின்றன. எனவே, கூட்டு மொத்த விளைவு காரணமாகக் குறிப்பாக எமது உடலில் உள்ள பாதுகாக்கும் காரணிகள், நொதியங்கள் மற்றும் நிர்ப்பீடன சக்தி குறைவாக இருக்கையில் புற்றுநோய் உருவாக்கம் ஏற்படுவது நிச்சயமாகின்றது.

புற்றுநோய் உருவாக்கத்தினை கல உள் அளவில் நோக்குவோமாயின், முதலில் சாதாரண உடற்கலங்கள் புற்றுநோயின் ஆரம்பக் கல நிலைக்கு (Initiated Cells) மாற்றமடைந்து, பின்னர் புற்றுநோய் முன்னிலைக் கலங்களாகி, பின்னர் அப்பகுதியில் அருகே உள்ள இழையங்களை ஊடுருவி, அமுத்தம் கொடுத்து மேலும் அவற்றுடன் உணவு, ஒட்சிசன் போன்றவற்றுக்குப் போட்டியிட்டு ஓர் ஒட்டுண்ணி போலச் செயற்படும். இவ்வாறு உருவாகும் புற்றுநோய்க் கட்டிகள் ஈற்றில் வேறு உறுப்புகளுக்கு (நுரையீரல், ஈரல், மூளை, என்பு) பரவலடைந்து முற்றிய நிலையை அடைகின்றது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அல்லது முழுமையாகவே மாற்றமடைந்த அங்கம் அல்லது உறுப்பு அதன் சாதாரண செயலைச் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்படும். இவ்வா றான பல படிநிலை மாற்றங்கள் குடற்புற்றுநோயின் உருவாக் கத்தில் மிகவும் தெளிவாகக் காட்டப்படுகின்றது. (படம் - 17)

இது மட்டுமல்லாது புற்றுநோய்க் கலங்கள் வேறு அங்கங்களுக்குச் செல்லுமிடத்து அந்த அங்கங்களிலும் பெருக்கமடைந்து அவற்றின் செயற்பாட்டையும் பாதிப்புறச் செய்யும். இவ்வாறான நிகழ்வுகளூடாக எமது உடலில் பலவகையான அறிகுறிகள் ஏற்படுகின்றன.




படம் 17

## புற்றுநோயின் அறிகுறிகள்

**1) நீண்டகாலமாக நிலைத்திருக்கும் இருமல் அல்லது குரல் வித்தியாசம்**

இவ்வாறான அறிகுறி சாதாரண நுரையீரல் தொற்று மற்றும் காசநோய் (TB) போன்ற நோய்களிலும் ஏற்படலாம். எனவே, இவை இல்லை என்பதை அறிந்த பின்னர் புற்றுநோய் நுரையீரலில் அல்லது குரல் நாண் பகுதியில் உள்ளதா என்பதை உறுதிப்படுத்தும் பரிசோதனைகளைச் செய்யமுற்பட வேண்டும்.




படம் 18

**2) குணமடையாத புண் (படம் 19)**

இந்த அறிகுறியும் சாதாரணமாக நீரிழிவு நோயாளர் களில் ஏற்படலாம். எனினும், நீடித்தகாலமாக உடலின் எப்பகுதியில ாவது பலகாலமாகக் குணமடையாது புண் இருப்பின் அதன் விளிம்புப்பகுதியிற் கலமாதிரி (Tissue Specimen) எடுத்து நுணுக்குக்காட்டியில் பரிசோதித்து புற்றுநோய் உள்ளதா என உறுதி செய்யலாம்.

**3) உடலில் கட்டிகள், தழும்புகள் அல்லது தடிப்புகள் ஏற்படல்**

இவை உடலில் எந்தப் பகுதியில் ஏற்பட்டாலும் குறிப்பாக நோவில்லாத கட்டிகள் மார்பகங்களில் ஏற்படும் இடத்து விரைவில் வைத்திய ஆலோசனை பெற்று அவை புற்றுநோயா என்பதைத் தெளிவுபடுத்துவது நன்று.



படம் 19

**4) தோலில் உள்ள உண்ணி அல்லது மச்சப்பகுதிகளில் திடீர் மாற்றம் ஏற்படல்**

அளவில் மாற்றமடைதல், இரத்தக் கசிவு மற்றும் கடி சொறிவு ஏற்படுதல் போன்றவை இவ்வாறான உண்ணி, மச்சப்பகுதி புற்றுநோயாக மாற்றமடைகின்ற தன்மையை உணர்த்தும். எனவே அவை புற்றுநோயாக மாற்றமுற்றுள்ளதா (படம் -20) என்பதை வைத்திய பரிசோதனைமூலம் விரைவில் தெளிவு படுத்துதல் நல்லது.

**5) பெண்களில் யோனி வழியில் இருந்து அசாதாரணமாக இரத்தம் அல்லது வெள்ளைப்போக்கு ஏற்படுதல்.**

இவ்வாறான அறிகுறிகள் பெண்களில் கருப்பைக் கழுத்துப் புற்றுநோயிலும், கருப்பை உடற் புற்றுநோயிலும் தென்படும். பெண்கள் இவ்வாறான அறிகுறிகள் தென்படின் குறிப்பாக மாதவிடாய் நின்ற பின்பும் இரத்தப்போக்கு இருக்கும் இடத்து வைத்திய ஆலோசனை பெறவேண்டும்.



படம் 20

**6) மலசலம் கழிக்கும் பழக்கத்தில் ஏற்படும் வித்தியாசம் அல்லது மலத்தோடு இரத்தம் வெளியேறல்**


இவை சாதாரணமாக மூல சம்பந்தமான வருத்தத்திலும் ஏற்படலாம். ஆனால் இவை குடல், மலவாசல் போன்ற பகுதிகளில் ஏற்படும் புற்றுநோய் காரணமாகவும் ஏற்படலாம். எனவே, இந்த அறிகுறி ஏற்படின் உடன் வைத்தியரை நாடவும். சலம் அடிக்கடி போதல், ஆண்களில் சுக்கிலச் சுரப்பி (Prostate Gland) இல் ஏற்படும். சாதாரண புற்றுநோய் அல்லாத வளர்ச்சி காரணமாகவோ அல்லது புற்றுநோய் வளர்ச்சி காரணமாகவோ ஏற்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் மருத்துவ ஆலோசனையை உடன் பெறுதல் நன்று.

**7) உணவு விழுங்குவதில் ஏற்படும் கஷ்டம் அல்லது அஜீரணம் (சமிபாடின்மை)**

இவை பெரும்பாலும் களம் மற்றும் இரப்பைப் புற்றுநோயின் அறிகுறிகளாக இருக்கும்.

**8) வாய்க்குழியில் காணப்படும் தடித்த வெள்ளை, சிவப்பு நிறமான அகற்ற முடியாத தழும்புகள் (Leukoplakia, Erythroplasia)** (படம் - 21)

இவை வாய்ப்புற்றுநோயின் முன்னிலைகளாகும். அவற்றுடன் வாய்ப் பகுதியில் இருக்கும் மாறாத புண்களும் புற்றுநோயின் அறிகுறிகளே.



படம் 21

**9) காரணமற்ற நீண்ட நாட் காய்ச்சல்**

இவ்வாறான காய்ச்சல் பெரும்பாலும் குறைந்த வெப்பநிலை அளவிலேயே இருக்கும்.

**10) மாறாத மஞ்சட் காமாலை**

புற்றுநோய்க் கட்டியானது பித்தக்கானை அழுத்துவதனால் பித்த நீரோட்டம் தடைப்படல், ஈரலில் புற்றுநோய் உருவாகுதல் அல்லது வேறு இடத்தில் இருந்து புற்று நோய் ஈரலுக்குப் பரவுதல் போன்ற சந்தர்ப்பங்களில் மஞ்சள் காமாலை உருவாகும்.

**11) இரத்தக் கசிவு**

இலகுவில் முரசிலிருந்து இரத்தம் கசிதல் அல்லது தோலின்கீழ் இரத்தக்கசிவு ஏற்படும் இடத்து உடன் வைத்திய ஆலோசனை பெற்று நீங்கள் இரத்தப் புற்று நோயினால் பாதிக்கப் பட்டுள்ளீர்களா என்ற சந்தேகத்தைத் தீர்க்கவும்.



படம் 22

இவை தவிர புற்றுநோயின் பிந்திய நிலைகளிலும் பல அறிகுறிகள் ஏற்படும். உதாரணமாக:

★ உடல் அதிக அளவில் மெலிவடைதல் (படம் -22)


★ பசியின்மை

★ அதிக சோர்வடைந்திருத்தல் போன்றன.

இவ்வாறான அறிகுறிகள் புற்று நோயின் தாக்கம் உடலின் பல பகுதிகளை அடையும் இடத்து புற்றுநோய் கலங்களினாலோ அல்லது உடல் கலங்களினாலோ சுரக்கப் படும் பல பதார்த்தங்களின் செயற்பாட்டினால் ஏற்படுகின்றது. இதுவரை உங்களுக்குக் கூறப்பட்ட பொதுவான புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகளைத் தவிர்ப்பதன் மூலமும், அதற்கான ஆரம்ப அறிகுறிகள் காணப்படும் இடத்து வைத்தியரை நாடி ஆரம்பத்தில் புற்றுநோயை இனம் காண்பதன் மூலமும் புற்றுநோயின் பிடியில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம்.


## வாய்க்குழிப் புற்றுநோய்

வாய்க்குழியானது உதடுகள், முரசு, சொக்குப்பகுதி வல்லண்ணம், நாக்கின் முன் 2∴3 பகுதி மற்றும் நாவின் கீழ் உள்ள அடித்தளப் பகுதி எனப் பல பகுதிகளைக் கொண்டுள்ளது. (படங்கள் - 23, 24)




படம் 23

இலங்கையில் வயதான ஆண்களில் வாய் மற்றும் தொண்டைப் பகுதிகளிலேயே புற்றுநோயானது அதிகளவில் ஏற்படுகின்றது.




படம் 24

வாய்க்குழிப் புற்றுநோயின் முன்னிலைகளாக உயர்ந்து தென்படும் அகற்ற முடியாத வெண்ணிற அல்லது செந்நிற மான தழும்புகள் ஆரம்ப காலத்தில் காணப்படும். இவற்றை நீங்களே கண்ணாடியிற் பார்த்து இலகுவில் இனம்கண்டு கொள்ளலாம். இவ்வாறான புற்றுநோய் முன்னிலைகளுடன் ஆரம்ப நிலையில் உள்ள வாய்க்குழிப் புற்றுநோயும் இழையப் பரிசோதனை மூலம் அறியக் கூடியதாக இருக்கலாம். ஆரம்ப நிலைகளில் புற்றுநோயைக் கண்டறியும் இடத்துப் பூரண

குணமாக்குதல் முறையிலான சிகிச்சை பெறலாம். அவ்வாறின்றிப் பிந்திய நிலைகளில் புற்றுநோய் இனங்காணப்படுமிடத்து சிகிச்சை பெரிதும் பயனளிக்காது என்பது குறிப்பிடத்தக்கது.

**வாய்ப்புற்று நோய் ஏற்படுவதற்கான காரணிகள்**

★ வெற்றிலை, பாக்கு, புகையிலை மற்றும் சுண்ணாம்பு போன்றவற்றை மெல்லுதல்.

★ சுருட்டு சிகரெட், பீடி புகைத்தல்

★ மதுபானம் அருந்துதல், கசிப்பு, சாராயம் மற்றும் புளித்த கள் அருந்துதல்

★ அதிக உறைப்பான மற்றும் சூடான உணவுகளை உண்ணுதல்

## புற்றுநோயும் உணவுப் பழக்கவழக்கங்களும்

**உணவு**

சில உணவானது புற்றுநோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. சில உணவுகள் புற்றுநோய் ஏற்படும் அபாயத்தைக் குறைப்பனவாகவோ அல்லது தடுப்பனவாகவோ உள்ளன. பொதுவான விலங்கு உணவுகள் புற்றுநோய் அபாயத்தைக் கூட்டுவனவாகவும், மரக்கறிகள், பழங்கள் புற்றுநோய் அபாயத்தைக் குறைப்பனவாகவும் உள்ளன.


**புற்றுநோயும் உணவின் பங்களிப்பும்**

புற்றுநோய் உருவாக்கத்தில் உணவின் பங்களிப்பு சுமார் 35வீதம் ஆகும்.

**உணவும் புற்றுநோயும்**

**புற்றுநோயை ஏற்படுத்தும் காரணிகள்**

- உணவின் சில கூறுகளிலே நேரடியாகக் காணப் படுதல்
  - அதிக அளவிலான கொழுப்பு
  - கூடுதலான இனிப்பு
- புறச் சூழலிலிருந்து உணவில் சேருதல்
  - விவசாய இரசாயனங்கள்
  - உறைப்பான உணவுகள்
  - உணவிற் சேர்க்கப்படும் மேலதிக பதார்த்தங்கள்
  
  உ- உணவு தயாரிப்பின்போது சம்பவிக்கும் தீய விளைவுகள் (படம் -99)
  - பதனிடப்பட்ட உணவுகள்.



படம் 99

- உணவின் சில கூறுகளில் இருந்து உடல் அனுசேபத் தாக்கங்களினால் உருவாகும் பதார்த்தங்கள் உதாரணமாக நைத்ரோ சமைன்கள் உருவாதல்.
- புற்றுநோயைக் குறைக்கும் காரணிகள் குறைவாயிருத்தல்.
  
  நார்ப்பொருள்கள் குறைவாய் உட்கொள்ளல்.

**உணவுப்பதார்த்தங்களும் பாதிக்கப்படும் உடற்பகுதிகளும்**

- புகையிலை - நுரையீரல், களம், சிறுநீரகம், சிறுநீர்ப்பை, கருப்பைக் கழுத்து
- மதுபானம் - வாய்க்குழி, தொண்டை, களம், ஈரல்
- அதிக கொழுப்புள்ள இறைச்சி (மாடு, பன்றி) - குடல், மார்பகம், சுக்கிலச் சுரப்பி (Prostate Gland)
- சூடான காரமான உணவுகள் - வாய்க்குழி, தொண்டை, களம்.
- அதிகளவிலான உப்பு - இரைப்பை
- மிகை நிரப்புப் பதார்த்தங்கள் - வாய்க்குழி, இரைப்பை, சிறுநீர்ப்பை

கணிசமாக கட்டுப்பாடற்று சில உணவுகளை உண்பதால் புற்றுநோய் உருவாக்கத்தில் அதிகளவு பங்களிப்புச் செய்வதாகக் கருதப்படும் பிரதான உணவுகள்.

1. வெதுப்பிய, வாட்டிய செந்நிற இறைச்சிகள்
2. பொரியல் வகைகள்
3. பாற்பண்டங்கள்
4. சீனி தூவிய, உப்புச் சேர்ந்த கொறிக்கும் உணவுகள்
5. மதுபான வகைகள்
6. வர்த்தக ரீதியான வெண்ணெய் தயாரிப்புக்கள்
7. ஊறுகாய், அச்சாறு வகைகள்
8. கோப்பி
9. பதனிடப்பட்ட இறைச்சியினாலான தீன்பண்டங்கள்
10. கொழுப்பு அதிகமுள்ள உணவுகள்

**விவசாய இரசாயனங்களும் புற்றுநோயும்**

- பீடை கொல்லிகளின் மிகையான பாவனை (படம் - 100)
- கட்டுப்பாடற்ற செயற்கைப்பசளை உபயோகம்
- நிலத்தடி நீரில் இரசாயனங்களின் செறிவு அதிகரித்தல்
- தோற்றப் பொலிவுக்காகப் பச்சை இலை வகைகள், பழங்கள் மீது இரசாயனம் விசிறுதல் (படம் 101)
- பழங்கள், காய்கறிகளை நன்கு கழுவாது உட்கொள்ளல்.
- விவசாய இரசாயனங்களின் மீதிகள் உணவுப்பொருள்களில் அனுமதிக்கப்பட்ட அளவுக்குள் உள்ளனவா என அளவிடப்படாமை. மற்றும் இது தொடர்பான கடுமையான சட்டங்கள் பிரயோகிக்கப்படாமை.




படம் 100




படம் 101


**புற்றுநோய் ஏற்படும் அபாயத்தைக் குறைப்பதற்கான சில உணவுப் பழக்கவழக்கங்கள்**


படம் 102

- ஒவ்வொரு சாப்பாட்டு வேளைகளிலும் வேறுபட்ட வகையான புதிய மரக்கறிகளையும், பல நிறமுள்ள பழங்களையும் அதிகளவிற் சேர்த்தல்.
- தானியங்களில் அதிகளவு நார்ச்சத்து இருப்பதால் அதனை இயன்றளவிற் சாப்பாட்டிற் சேர்த்தல் (படம் -102)
- பழச்சாறுகள் உட்கொள்ளும்போது இயன்றளவில் 100 வீதமாகச் சாறாகவே உட்கொள்ளல்.
- இரசாயனப் பதார்த்தங்கள் விசிறப்பட்ட மரக்கறிகள், பச்சை இலைகள் மற்றும் நிறப் பழவகைகள் நீரில் நன்றாக அலசிக் கழுவிய பின் பயன்படுத்தல்.
- சமையலறையில் பொரித்தலுக்காக முதல் நாள் பாவித்த எண்ணெயை அடுத்த நாள் பாவித்தலைத் தவிர்த்தல்.
- உணவின் மூலம் பெறும் சக்தியின் அளவின் 10 வீதத்திலும் குறைவான அளவு மட்டும் கொழுப்புணவு மூலம் பெறல்.
- விலங்குணவு வகைகளைத் தவிர்த்தல்.
- பதனிடப்பட்ட உணவுகளைக் குறைந்தளவில் பயன்படுத்தல்.
- பொரிக்கப்பட்ட மரக்கறி வகைகளை இயன்றளவில் குறைத்தல்.
- சிறிய வகை மீன்களை உணவில் இயன்றளவில் சேர்த்தல்.
- பூஞ்சணம் பிடித்த ஒடியல், நிலக்கடலை மற்றும் பழுதடைந்த தயிர் போன்ற உணவுகளைத் தவிர்த்தல்.
- மிகச் சூடான உணவுகள், பானங்கள் என்பன அதிகம் உள்ளெடுத்தலைத் தவிர்த்தல்.


படம் 103

சீரான வாழ்க்கைமுறையும், முன்னேற்றகரமான நடத்தையியல் மாற்றங்களும் புற்றுநோய் தோன்றுவதைத் தடுப்பதில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன.


படம் 104

- உடற்பருமனைக் கட்டுப்பாடாகப் பேணல் (படங்கள் 103, 104)
- அளவான - ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளல்.
- வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, புகையிலை உபயோகித் தலைத் தவிர்த்தல்.
- புகைத்தலை நிறுத்துதல், பாவனையிலிருந்து படிப்படியாக விடுபடுதல்.
- நாளாந்தச் செயற்பாடுகளிலே உடலைக் கட்டுக்கோப்பாய் பேணவல்ல உடற் பயிற்சிகளை மேற்கொள்ளல்.
- உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருத்தல்.

# புற்றுநோய் சிகிச்சை வசதிகள்


வடமாகாணத்தில் முதன் முதலாக புற்றுநோய் சிகிச்சை வசதிகள் 14.12.2004இல் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஏழு வருடங்கள் கடந்த நிலையில், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஆண், பெண்பாலருக்கு தனித்தனியே பல வசதிகள் கொண்ட விடுதிகள், மருத்துவ ரீதியிலான சிகிச்சைக்காக அமைக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ள G.G.பொன்னம்பலம் புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் கதிர்வீச்சு சிகிச்சை வழங்கப்படுகின்றது. புற்றுநோயால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தூரபிரதேசத்தில் இருந்து வரும் நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெற புற்று நோயாளர் காப்பகம் மருதனார் மடத்தில் அமந்துள்ளது. இதனை CANE (UK) தொண்டு நிறுவனம் பராமரித்து வருகின்றது.



கதிர்வீச்சு சிகிச்சைத் திட்டமிடல்

இவை தவிர, தீவிர புற்றுநோய் சிகிச்சை முடிவுற்ற நிலையில் உள்ள நோயாளர்களைப் பார்வையிடுவதற் காக பல கிளினிக் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.






கதிர்வீச்சு சிகிச்சை.

**யாழ் மாவட்டத்தில்:**

- யாழ். போதனா வைத்தியசாலை
  - பிரதி வெள்ளி, சனி - காலை
- தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை
  - பிரதி திங்கள், வியாழன் - காலை
- பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை
  - பிரதி முதலாம் புதன் - காலை
- சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை
  - பிரதி இரண்டாவம் புதன் - காலை
- சங்கானை பிரதேச வைத்தியசாலை
  - பிரதி நான்காம் புதன் - காலை
- காரைநகர் பிரதேச வைத்தியசாலை
  - பிரதி நான்காம் புதன் - மாலை
- வவுனியா மாவட்டத்தில் : வவுனியா பொது வைத்தியசாலை
  - பிரதி இரண்டாம் செவ்வாய் - காலை
- கிளிநொச்சி மாவட்டத்தில் : கிளிநொச்சி பொது வைத்தியசாலை - காலை



புற்றுநோயாளர் காப்பகம்
மருதனார்மடம்

புற்றுநோய் விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காக புற்றுநோய் சம்பந்தமான பதாதைகள் மற்றும் "நண்டு" என்னும் இறுவெட்டு என்பன வெளியிடப் பட்டுள்ளது. மேலும் விழிப்புணர்வு நிகழ்வுகளை ஏற்படுத்துவதற்காக, புற்றுநோய் சம்பந்த மான கல்வி வழங்கல் மற்றும் நோயாளர்களை ஆற்றுப்படுத்தல் மையமானது HNB நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடபகுதியில் புற்றுநோய் சிகிச்சைக்கான ஒருங்கிணைந்த சிகிச்சை நிலையம் அமைப்பதற்காக, பாதை (Trail) என்னும் மனிதன் நடைப்பயணமானது தெய்வேந்திர முனையில் இருந்து பருத்தித்துறை வரை மேற்கொள்ளப்பட்டு பெருநிதி சேகரிக்கப்பட்டது. இந்த நிலையத்தை அமைப்பதற்கான பூர்வாங்க வேலைகள் தெல்லிப்பழையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எல்லாம் இனிதே நிறைவேற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

*"இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க"*



# கோள வெப்ப அதிகரிப்பும், அதன் தாக்கங்களும்

# Global Worming and its effects

**திருமதி சுபாஜினி உதயராசா**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
புவியியற்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

வளிமண்டலம் என்பது புவியைச் சூழ்ந்து காணப்படுகின்ற நூற்றுக்கும் மேற்பட்ட வாயுக்களைக் கொண்ட ஒரு மெல்லிய படையேயாகும். புவிக்கு உள்ளதைப் போன்ற வளிமண்டலம் ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள ஏனைய கோள்களுக்கும் உண்டு. எனினும் உயிர் துடிப்புள்ள சூழல் அமைப்பினை உருவாக்கக்கூடிய தனித்துவமான வாயுக்கலப்பினைக் கொண்ட வளிமண்டலம் புவிக்கோளுக்கு மட்டுமே உள்ளமை அதற்குள்ள தனிச் சிறப்பாகும். நிலையானதும், மாறுபடும் தன்மை கொண்டதுமான $N_2$, $O_2$, Ar, Ne, He, $H_2$, $CH_4$, $H_2O$, $CO_2$, $N_2O$ மற்றும் $O_3$ போன்ற பல வாயுக்களின் செறிவினால் புவிக்குரிய வளிமண்டலம் அமைந்துள்ளது. ஆனால் இன்று இத்தகைய வாயுக்களைக் கொண்ட வளிமண்டலத்தினால் புவிக்கோளுக்கு கிடைத்த அந்த உயிர்த்துடிப்பு, அதே வளி மண்டல நிலைமைகளில் மனிதனால் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற விரும்பத்தகாத மாற்றங்களால் அடங்கிப் போவதற்கான வாய்ப்புக்களை அதிகரித் துள்ளன. குறிப்பாக இன்று மனிதனின் பல்வேறுவிதமான செயற்பாடுகள் பூகோள வெப்ப மாதலைத் தூண்டி புவியின் இருப்பை இல்லாது ஒழிக்கத்தக்க வகையில் புவிமேற்பரப்பு வெப்பநிலையில் பாரிய மாற்றத்தை தோற்றுவித்துள்ளது. இதனால் உயிரின வாழ்வு புவியில் பலவிதமான சவால்களுக்கு முகம்கொடுத்து வருகின்றது. அதிகரிக்கும் வெப்பமானது உலகையே உருக்கும் அளவுக்கு மோசமாக்கிக் கொண்டு வரும் அதேவேளை முனைவுப் பனிப்படலங்கள் தன்னை உருக்கிக் கடல் மட்டத்தை உயர்த்திக் கொண்டிருக்கின்றன. வரட்சி யும், வெள்ளமும் மாறி, மாறி மக்களுக்கு வழமையான நிகழ்வுகளாக அதிகரிக்கத் தொடங்கி யுள்ளன. இந்த நிலையில் கோள வெப்பம் அதிகரிப்பதற்கான காரணங்களையும், அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் (தாக்கங்களையும்) அவற்றைக் குறைப்பதற்கான வழிமுறைகளை யும் ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

### கோள வெப்பம் அதிகரிப்பதற்கான காரணங்கள்


தொலைநோக்கு இன்றித் தனது தற்போதைய தேவைகளை அவசரமாகப் பூர்த்தி செய்யும் மனித நடவடிக்கைகளே பூகோளத்தை இவ்வாறு சூடுபோட்டுக் கொண்டிருக்கின்றன. உலகம் எங்கும் உள்ள அவனது அளவிற்கு அதிகமான தொழிற்சாலைகளும், மோட்டார் வாகனங்களும் வளிமண்டலத்தினுள் இடைவிடாது கக்கிக் கொண்டிருக்கும். காபனீரொட்சைட்டு ($CO_2$) மெதென் ($CH_4$) > நைதரசன் ஒக்சைட்டு ($NO_2$) காபன் ஒக்சைட்டு போன்ற வாயுக்களினால்

தான் பூகோளம் பெருமளவில் வெப்பமாகிக் கொண்டிருக்கின்றது. இவற்றில் மிகமுக்கியமான சூத்திரதாரி காபனீரொட்சைட்டு வாயுதான். இந்த வாயுக்களோடு வேறு சில வாயுக்களையும் சேர்த்து பச்சைவீட்டு வாயுக்கள் என்றும், இவற்றின் விளைவாக பூகோளம் வெப்பமாதலை "பச்சை வீட்டு,விளைவு (Green house effect) என்றும் சூழல் விஞ்ஞானிகள் பெயரிட்டுள்ளார்கள். பூகோளத்தைப் பொறுத்தவரையில் இந்த பச்சைவீட்டு விளைவு என்பது ஒரு எல்லை வரை அவசியமானதாகவே உள்ளது. பூகோளத்தை நோக்கி வருகின்ற சூரியக்கதிர்களின் ஒரு பகுதி கண்ணுக்குப் புலப்படாத அகச்சிவப்புக் கதிர்களாக மீண்டும் விண்ணை நோக்கி வீசப்படு கின்றது. இவ்வாறு செல்லும் வெப்பத்தின் கணிசமான பகுதியைப் பூமியின் வளிமண்டலப் போர்வையில் உள்ள காபனீரொட்சைட் போன்ற வாயுக்கள் அப்படியே பிடித்து வைத்துக் கொள்கின்றன. வளிமண்டலம் ஒரு கம்பளிப் போர்வை போல வெப்பத்தை தக்க வைத்துக் கொண்டிருப்பதால் தான் பூமி கதகதப்பாக உள்ளது. பூமியில் தண்ணீர் திரவ நிலையில் பாய்கின்றது. பூமியில் உயிரினங்கள் வாழ முடிகின்றது. இந்த பச்சை வீட்டு விளைவு மட்டும் இல்லாது போயிருந்தால் பூமி அதன் தற்போதைய வெப்பநிலையை விட வெகுவாக குறைந்து குளிரில் நடுங்கும் ஒரு கோளமாக உறைந்திருக்கும். ஆனால் தற்போது காபனீரொட்சைட்டின் அளவு அதிகரித்துச் செல்வதால் அது உறிஞ்சி வைத்திருக்கும் வெப்பத்தின் அளவும் அதிகரித் துச் செல்கின்றது. இதனாலேயே பூகோளத்தின் வெப்பநிலை எல்லை தாண்டிச் சென்று கொண்டிருக்கின்றது.

கைத்தொழில் புரட்சி ஆரம்பிக்கப்பட முன்னர் 1750 இல் வளிமண்டலத்தில் காபனீ ரொட்சைட்டின் செறிவு வெறுமனே 280ppmv (parts per million by volume) அளவுதான். இந்த அளவு 1990 ஆண்டு 360ppmv ஐத் தாண்டி விட்டது. 360 ppmv என்ற இந்த அளவானது கடந்த 160,000 வருடங்களில் எந்த ஆண்டிலும் இல்லாத அதிகரிப்பாகும். 2000ஆம் ஆண்டு இதன் அளவு 370ppmv ஆகவும் இன்று 380ppmv அளவையும் தாண்டிவிட்ட நிலையில் இதன் வளிமண்டல செறிவு விரைவான வளர்ச்சியை நோக்கியதாக நகருவதை அவதானிக்க முடிகின்றது. காபனீரொட்சைட் 450ppmv என்ற அளவை எட்டுமானால் 2.0 c – 5.5. c ஆக உயரும் வாய்ப் புள்ளது. ஆனால் இவை அதிகரித்துச் செல்லும் வேகத்தைப் பொறுத்தவரையில் இந்த நூற்றாண் டின் இறுதியில் 540ppmv – 970ppmv என்ற அளவை வளிமண்டலத்தில் எட்டிவிடும் அதே நேரம் புவி மேற்பரப்பு சராசரி வெப்பநிலை 60°Cஆல் அதிகரிக்கும் பேராபத்தும் உண்டு என்பதைச் சூழலியலாளர்கள் எதிர்வு கூறியிருக்கின்றனர்.

விளக்கப்படம் - 01

**காபனீரொட்சைட்டின் அதிகரிப்பின் போக்கு**




Source :- http:en.Wikipedia.org/wiki/file:evidence _ $Co_2$ .jpg.

காபனீரொட்சைட்டினை வெளியேற்றுவதில் அபிவிருத்தியடைந்த, அடைந்துவரும் நாடுகள் என்கிற பேதமின்றி உலக நாடுகள் அனைத்துமே பங்களிப்புச் செய்து வருகின்றன. அபிவிருத்தியடைந்த நாடுகளைப் பொறுத்தவரையில் அவை அடைந்துள்ள அதீத தொழில்நுட்ப விருத்தியும் அதனால் அதிகரித்துள்ள உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் பாவனையுமே அதிகரிக்கும் $Co_2$ வெளியேற்றத்திற்கான பிரதானமான காரணங்களாகும். ஆனால் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு இதில் குறைவான பங்கே உண்டு எனக் கூறமுடியாது. இந் நாடுகளில் உச்சநிலையில் இடம்பெறும் காடழிப்பு அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கு ஈடாக வெளியேற்றிக் கொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக இன்றுவளிமண்டலத்தில் இருக்கக்கூடிய $Co_2$ இன் அளவிலும் பார்க்க 65% மேலதிகமாக உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ள நிலையில் இதில் 35% காடழிப்பின் காரணமாக வளிமண்டலத்தினுள் புகுந்தவையாகும். உலகில் இன்று சக்தி வளத்திற்கு இருக்கின்ற அதிகரித்த கேள்வியே $Co_2$ இன் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாகும்.


வளிமண்டலத்திற்கு $CO_2$ ஆனது எரிமலை கக்குதல், காட்டுத்தீ போன்ற இயற்கையான சில சம்பவங்களால் வெளிவிடப்பட்டாலும் அதிகமான பங்கு மனிதனது பல்வேறு உற்பத்தி நடவடிக்கைகளிலும் தங்கியுள்ளது. அத்கைய மானிட நடவடிக்கைகளாக மின்பாவனை சீமெந்து உற்பத்தி, இரும்பு மற்றும் இரும்புருக்கு உற்பத்தி, காடழிப்பு, சோடாத்தூள் உற்பத்தியும் பாவனையும், அலுமினிய உற்பத்தி, அமோனியா உற்பத்தி, சுண்ணக்கல் மற்றும் தொலமைற் பாவனை, போக்குவரத்து சாதனங்களின் விருத்தி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

காபனீரொட்சைட்டு வாயுவிற்கு அடுத்தபடியாக பூமியைக் கொதிக்க வைப்பதில் மெதேன் வாயு ($CH_4$) பெரும் பங்கு வகிக்கின்றது. இதன் பெருமளவு பங்கு பண்ணை விலங்கு களாலும் ஆடு, மாடு, எருமை, ஒட்டகம் போன்ற இரை மீட்கும் கால்நடைகளின் இரைப்பையில் சமிபாட்டுக்கு உதவும் நுண்ணங்கிகளாலும் உருவாக்கப்படுகின்றது. இவற்றில் குறிப்பாக நொதித்தல் செயற்பாட்டின் மூலம் சிறிதளவு மெதேன் வாயு வெளியேறுகின்றது. பண்ணை விலங்குகளின் கழிவுகளில் பக்ரீறியாக்கள் பல்கிப் பெருகியும் மெதேன் வாயுவை விடுவிக் கின்றன. நெற்பயிர்ச் செய்கையும் பிரச்சினைக்குரியதாகும். களைகளையும், பீடைகளையும் கட்டுப்படுத்துவதற்காக வயல்களில் தண்ணீரைத் தேக்கிவைப்பது உண்டு. அதிக பசளைகள், ஈரலிப்பு, காற்றில்லாச் சூழல் போன்றன பற்றீரியாக்களுக்கு வாய்ப்பாக அமைய மெதேன் வாயு மிகுதியாக வெளியேறுகின்றது.

இவற்றினை விட குளோரோபுளோரோ காபன்கள், ஓசோன், நைதரசன், ஒக்சைட் போன்ற வாயுக்களின் அதிகரிப்பும் கோளவெப்ப அதிகரிப்பிற்கு காரணங்களாக உள்ளன. இத்தகைய பச்சை வீட்டு வாயுக்களின் அளவு அதிகரிக்க அதிகரிக்க பூமியை விட்டு வெளியேற விடாது அவை தடுத்து வைக்கும் வெப்பத்தின் அளவும் கூடி வருவதாலேயே பூகோளம் இவ்வளவு வெப்பமடைந்து வருகிறது. கடந்த நூற்றாண்டில் பூமியின் வெப்பநிலை சராசரியாக 0.6 பாகை செல்சியஸ் அளவால் உயர்ந்திருக்கிறது. இது ஒரு சிறிய அளவுதானே எனத் தோன்றும் ஆனால் இந்த அதிகரிப்பு சாதாரண ஒன்றல்ல. கடந்த 600 ஆண்டு கால புவி வரலாற்றில் இந்த அளவு மிக வெப்பமான ஒன்றாகும்.

விளக்கப்படம் - 02

## 2005ம் ஆண்டு உலகளாவிய ரீதியில் துறை ரீதியாக வெளியேற்றப்பட்ட பச்சைவீட்டு வாயுக்களின் அளவு




Source :- http: en.Wikipedia.org/wiki/file:evidence _ $Co_2$ .jpg.

### கோள வெப்பமாதலுக்கான காரணங்களில் பொதுமக்களும், விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்ட அளவுகள் (வீதத்தில்)

அட்டவணை 1

| | காலநிலை மாற்றம் தொடர்பானவை | பொது மக்கள் (%) | விஞ்ஞானிகள் (%) |
|---|---|---|---|
| 01 | மனித செயற்பாடுகளினால் வெப்பமடைதல் | 49 | 84 |
| 02 | இயற்கை மாற்றங்களினால் வெப்பமடைதல் | 36 | 10 |
| 03 | புவி வெப்பமாதலுக்கு உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை | 11 | 04 |

Source :- www.washingtonpoast.com.

அட்டவணை 2

### கோள வெப்பம் தொடர்பானவை

| | பிரச்சினையின் அளவு | பொது மக்கள் (%) | விஞ்ஞானிகள் (%) |
|---|---|---|---|
| 01 | மிகத் தீவிரமான பிரச்சினை | 47 | 70 |
| 02 | சில வேளைகளில் பிரச்சினை | 26 | 22 |
| 03 | அவ்வளவு தீவிரமான பிரச்சினை அல்ல | 11 | 04 |
| 04 | ஒரு பிரச்சினையும் இல்லை | 13 | 02 |

Source :- www.washingtonpoast.com.

**கோள வெப்ப அதிகரிப்பால் ஏற்படும் தாக்கங்கள் / பாதிப்புக்கள்**

பூகோளத்தின் வெப்ப உயர்வால் நீர்ப்பரப்புக்களிலிருந்து வளியில் சேரும் நீராவியின் அளவு அதிகரித்து வருகின்றது. இது கடந்த 20 வருடங்களில் 20 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்த மேலதிக ஈரப்பற்று தட்ப வெப்பநிலையில் மாற்றங்களை உண்டுபண்ணும். குளிர்காலத்தை விரைவிலேயே மரணிக்கச் செய்து கோடை காலத்தின் ஆயுளை நீடிக்க வைக்கும். காற்று, மழை ஆகியவற்றின் போக்கில் திசை திருப்பத்தை ஏற்படுத்தும். இதனால் பாலைவனப் பகுதியில் அடைமழை பொழிய வளமான நிலங்கள் வரண்டு போகலாம். சூறாவளிகள் வேகங்கொண்டு அடிக்கடி ஏற்படலாம். இந்த நிலைமைகளில் ஒன்றாகவே 1998 இல் கடும் வரட்சி மூட்டிய காட்டுத்தீ இந்தோனேசியாவில் 20 லட்சம் ஏக்கர் காடுகளைப் பொசுக்கி எரித்தது. 1998 இல் தீபெத் லாசா வரலாறு காணாத வெப்பத்தைக் கண்டது. 1999 இல் நியூயோர்க் மிகவும் உக்கிரமான கோடையை அனுபவித்தது. 2002 இல் மத்திய ஐரோப்பிய நாடுகளில் வெப்ப உயர்வு சுமார் 2000 பேர்களின் உயிர்களைக் கருக்கியது. 2005 இல் கத்ரீனா, ரீட்டா, வில்மா என்று சீறிய சூறாவளிகள் அமெரிக்காவை வெள்ளத்தால் புரட்டியெடுத்தன. அதே ஆண்டில் அல்ஜீரியா 50 பாகை செல்சியஸ் அளவு சூட்டில் தவிக்க அதற்கு நேர்மாறாக பால்கன் பகுதியில் கடும் குளிர் நிலவியது.

உலகின் கரையோரங்களில் அமைந்துள்ள பல நாடுகள் வெப்பநிலை அதிகரிப்புக் காரணமாக கடல்மட்ட உயர்விற்கு உட்படுகின்றன. பச்சைவீட்டு வாயுக்களின் அதிகரிப்பால் சமுத்திரங்களின் பனிப்படலமும் தரையின் பனிப்படலமும் உருகும். துருவப் பகுதிகளில் உள்ள பனிப்படலங்கள் உருகி நீர் கடல் நீருடன் சேர்ந்து கொள்ள கடல் மட்டம் மெல்ல மெல்ல உயர்ந்து வருகிறது. கடந்த் நூற்றாண்டில் மட்டும் இப்படி 25 சென்ரிமீற்றர்களால் உயர்ந்துள்ளது. 2010 ஆம் ஆண்டளவில் கடல் மட்டம் அரை அடி தொடக்கம் மூன்று அடிகள் வரை உயரக்கூடும் என்று "அனைத்து அரசாங்கங்களின் வெப்பநிலை மாறுபாட்டு ஆய்வுக்குழு" (Inter Governmental Panel on Climatic Changes – IPCC) எச்சரித்திருந்தது. இது நிகழுமாயின் அமெரிக்காவின் நியூயோர்க் தொடங்கி இந்தியாவின் மும்பை வரையான கரையோர நகரங்கள் பலவற்றுள் கடல் நீர் புகுந்து விடும் எனவும் கூறப்பட்டது. வெப்ப மண்டல நாடுகளில் கரையோரப் பகுதியிலேயே உலக சனத்தொகையின் இருபத்தைந்து சதவீதமானோர் வாழ்கின்றனர். மாலைதீவு மக்களின் விதி இன்று சோகமானது. ஆயிரத்து நூற்று எண்பது தீவுகளின் கூட்டமே மாலைதீவு. இவற்றில் 80 வீதமானவை கடல் மட்டத்தில் இருந்து மூன்று அடிகள் உயரத்தில் மட்டுமே அமைந்துள்ளன. இப்போதே மாலைதீவுகளின் தலைநகரான மாலே (Male) சுற்றியிருக்கும் கடல் நீர் கொஞ்சம் உயர்ந்தாலே பாதிப்புக்கள் ஏற்படும் என்ற நிலையில், கொங்கிறீட் சுவர்களை எழுப்ப ஆரம்பித்துள்ளது.

கோள வெப்ப அதிகரிப்பினால் உலகில் பவளப் பாறைகளிலும் (Corals) பாரதூரமான பாதிப்பு ஏற்பட ஆரம்பித்திருக்கின்றது. வெப்பம் அதிகரிக்கும் போது பவளப் பிராணிகளை வளர்க்கின்ற அல்காக்கள் வெளியேற, பவளப் பாறைகள் நிறமிழந்து வெளிறி உணவின்றி இறக்கத் தொடங்குகின்றன. 1998 இல் ஏற்பட்ட வெப்ப உயர்வு வெப்ப மண்டலக் கடல்களில் உள்ள எல்லாப் பாறைத் தொடர்களிலுமே ஏதேனும் ஒரு அளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. உலகிலுள்ள பவளப் பாறைகளில் ஏறத்தாழ 15 வீதமானவை மீள முடியாத அளவிற்கு ஏற்கனவே அழிந்து விட்டதாகவும் இன்னும் 30 வீதமான அளவு எதிர்வரும் 30 ஆண்டுகளில் அழிந்துவிடும் எனவும் ஆய்வுகள் கூறுகின்றன. பூகோளத்தில் அதிகரித்து வரும் வெப்பம் துருவப் பகுதிகளில்

பரந்து கிடக்கும் பனிக்கட்டிகளையும் தாக்கத் தொடங்கியுள்ளது. அடுக்கடுக்காக உறைந்து கிடக்கும் பனிப் பாறைகள் எப்போதுமே பளபளப்பாக மினுங்கிக் கொண்டிருக்கும். இந்தப் பளபளப்பு சூரியக் கதிர்களில் விழும் போது கதிர்களின் வெப்பத்தை அப்படியே திருப்பி விண்ணுக்கே அனுப்பிவிடும். இதனால் வெப்பம் அதிகம் தங்குவதில்லை. உறைபனியும் உருகுவதில்லை. கைத்தொழிற் புரட்சியின் பின்னர் உலகின் புகைப் போக்கிகள் கக்கித் தள்ளுகின்ற காபன் காற்று மெல்ல நகர்ந்து பனிப்பாறைகளைக் கரைத்து வருகின்றன. இதனால் கதிர்வீசும் திறனை படிப்படியாக இழந்து வரும் பனிப்பாறைகள் வெப்பத்தை அதிகம் உள்வாங்க, உருகும் வேகம் இன்னும் அதிகரித்துள்ளது. ஆட்டிக், அந்தாட்டிக் பகுதிகளில் மட்டுமன்றி இமய மலையில் உள்ள பனிக்கவிப்புகளும் உருகத் தொடங்கி உள்ளன. 1999ஆம் ஆண்டுத் தகவல்களின் படி இமயத்தின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட் பனி உருகி வழிந்ததில் அதன் உயரத்தில் 1.3 மீற்றர் குறைந்துள்ளது. இப்போது ஆண்டிற்கு சராசரியாக 0.1 மீற்றர் என்ற அளவில் பனி உருகிக் கொண்டிருக்கிறது. இந்த நிலை தொடர்ந்தால் 2050 ஆம் ஆண்டளவில் சீனாவில் உள்ள பனிமலைகளில் 65 வீதம் உருகிவிடும். இதனால் நதிகளில் நீர் குறைவடைந்து வரண்டு காய்ந்து மேற்குச் சீனாவில் 300 மில்லியன் பேர் குடிநீரின்றித் தவிர்க்கும் நிலை உண்டாகும் எனக் கூறப்படுகிறது. அத்துடன் ஆபிரிக்கா போன்ற நாடுகளில் பஞ்சம், பட்டினி போன்றன மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

கோள வெப்ப அதிகரிப்புக் காரணமாக பசி பட்டினியாலும், மலேரியா, வயிற்றுப் போக்குப் போன்ற வெப்பமண்டல நோய்களினாலும் ஏழை நாடுகளில் ஆண்டுதோறும் ஒன்றரை லட்சத்திற்கு அதிகமானோர் இறந்து வருவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த உயிரழிவு 2030 ஆம் ஆண்டளவில் இரண்டு மடங்காக உயரும் என அஞ்சப்படுகிறது. இதில் அனுதாபத்திற்குரிய விடயம் கோள வெப்ப உயர்வால் அதிகம் தண்டிக்கப்படும் இவர்கள் பூகோளத்தை வெப்பப்படுத்தும் செயல்கள் எதிலும் தொடர்புபடாத அப்பாவி ஏழை மக்கள் என்பதுதான்.

கோள வெப்ப அதிகரிப்புக்கு அயன மண்டல நிரந்தர பசுமைக் காடுகள் அழிந்து போவதுடன் மனிதனும் வேகமாக காடுகளை அழிப்பதும் காரணமாக அமைகின்றது. இதன் விளைவாக அதிக குடியேற்றங்கள் அழிந்து போகும் நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு பாகை செல்சியஸ் ($1^{\circ}C$) வெப்பம் அதிகரித்தால் தாய்லாந்து இலங்கை போன்ற நாடுகளில் பருவப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும். வெப்பநிலை அதிகரிப்புக் காரணமாக ஆபிரிக்கா, பிறேசிலின் கிழக்குப் பகுதி, மெக்சிக்கொ, மத்திய அமெரிக்கா போன்ற பகுதிகளில் வரண்ட பகுதிகள் அதிகரிக்கலாம். சகாராவிற்கு தெற்கே உள்ள புல்வெளிகள் அழிந்து போகலாம்.

கோள வெப்ப அதிகரிப்பு காரணமாக ஓசோன்படையில் துவாரம் ஏற்பட்டுள்ளதோடு ஓசோன்படை தேய்வடைந்தும் செல்கின்றது. ஓசோன்படையில் தாக்கம் ஏற்பட்டுள்ளதால் வளர்ந்த, வளர்முக நாடுகளில் அமிலமழை உருவாக்கம், பாலைவனப் பரவலாக்கம் என்பன அதிகரிக்கும். ஓசோன் படையில் துவாரங்களை அதிகரிப்பதனால் புற ஊதாக் கதிர்கள் நேரடியாக புவியை வந்தடைகின்றன. இதனால் பல்வேறு விதமான தோல் நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

### கோள வெப்ப அதிகரிப்பை குறைப்பதற்கான வழிகள்

பூகோள வெப்பமாறுதலை தடுக்கும் நோக்கில் அல்லது வெப்பநிலை அதிகரித்துச் செல்லுதல் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் 1971ம் ஆண்டு முதலாவது சூழல் உச்சி மாநாடு ஐக்கிய நாடுகள் சபையினது சுவீடன் தலைநகர் ஸ்ரொக்கிஹோமில் நடைபெற்றது. இம்மாநாட்டில் 20 நாடுகளே பங்குபற்றின. இதன்பின்பு 1992இல் றியோடிஜெனிரோவில் புவி உச்சி மாநாட்டை ஐக்கிய நாடுகள் சபை கூட்டியது. இம்மாநாட்டில் 114 நாட்டு அரச தலைவர்கள் பங்கு கொண்டனர். இம்மாநாட்டில் விரிவான அளவில் விவாதிக்கப்பட்ட விடயங்களாக

- ❖ வளிமண்டலத்தைப் பாதுகாத்தல்.
- ❖ நிலவள ஆதாரங்களை பாதுகாத்தல். (காடழிப்பினைத் தவிர்த்தல், மண்வளம் குன்றுதல், பாலை பரவுதல், வரட்சி)
- ❖ சமுத்திரங்கள், கடல்கள், கடலோரப் பகுதிகளை பாதுகாத்தல்.
- ❖ உயிரினப் பல்வகைமையைப் பேணிப் பாதுகாத்தல்.
- ❖ வாழ்க்கைத் தரத்தையும், தனிமனித சுகாதாரத்தினையும் மேம்படுத்துதல்.

இம்மாநாட்டில் சூழல் தொடர்பான கைச்சாத்திடப்பட்ட பல ஆவணங்களும் உடன்படிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள் சில.

- ❖ மனிதனின் மேம்பாட்டிற்கான செயற்பாடுகளில் நாடுகளிற்கான பொறுப்புக்களையும், உரிமைகளையும் வரையறை செய்கின்றன. 27 அம்சங்கள் கொண்ட றியோ அறிக்கை.
- ❖ அபிவிருத்தியை சமூக, பொருளாதார, சுற்றுகச்சூழல் ரீதியாக நிலைத்திருக்கச் செய்வதற்கான "நிகழ்ச்சி நிரல் 21"
- ❖ உயிரினங்களின் பல்வகைமையைப் பாதுகாத்து உயிரின வேறுபாட்டில் நன்மைகளைப் சமமாகப் பகிர்ந்து கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கான உயிரின பல்லினத் தன்மையைப் பேணும் ஒப்பந்தம்.
- ❖ வளிமண்டல வாயுக்களின் சமநிலையை பேணி உலகின் தட்ப வெப்ப நிலையை அபாயகரமான நிலைக்கு செல்லவிடாது தடுப்பதற்கும் உயிர்சுவட்டு எரிபொருள் பாவனையின் போது வெளிவிடப்படும். வாயுக்களின் அளவைக் கட்டுப்படுத்துவதற்கான தட்ப வெப்ப மாறுதல் குறித்த ஐக்கியநாடுகள் "சட்ட பொது ஒப்பந்தம்".

கோள வெப்பஅதிகரிப்பை தடுப்பதற்கு ஒவ்வொரு நாடுகளும் பின்வரும் வழிகளைப் பின்பற்றுவதன் மூலம் ஓரளவு குறைக்க முடியும்.

- ❖ சனத்தொகை வளர்ச்சி வேகத்தை குறைத்தல்.
- ❖ உயிர்சுவட்டு எரிபொருள்களின் பாவனையை குறைக்க முயலுதல்.
- ❖ இயற்கை சக்தி வளங்களை கூடுதலாக பயன்படுத்த முயலுதல் (சூரிய சக்தி, காற்றுச் சக்தி, நிலவெப்ப சக்தி)
- ❖ பசுமையான காடுகள் வெட்டுவதை தவிர்த்தலும், வெட்டுவோருக்கு தண்டனை வழங்குதலும்.
- ❖ சுற்றுச் சூழலுக்கு அதிக ஆபத்து விளைவிக்கின்ற குறைவான வாயுவை வெளியேற்று கின்றன வாகனங்களை உருவாக்குதல்.
- ❖ தொழிற்சாலைகளுக்கு பாதுகாப்பான நல்ல தொழினுட்பங்களை உருவாக்கி நடைமுறைப் படுத்தல்.

றியோடிஜெனிரோவில் எட்டப்பட்ட உடன்பாட்டிற்கு உயிர் கொடுக்க ஐக்கிய நாடுகள் சபை 1997 டிசம்பரில் மீளவும் உலக நாடுகளை ஐப்பானின் புராதன தலைநகரான கியோட்டோவில் கூடியது. இம் நாட்டில் பங்கேற்ற மாலைதீவு அதிபர் அப்துல்கயும் இந்த மாநாட்டிலாவது தீர்வு காணாவிடில் அடுத்த மாநாடு நடக்கும்போது எங்களைப் போன்ற தீவு நாடுகளுக்கு அமர்வதற்கு இருக்கைகள் கூட வேண்டியிராது என்று கூறினார். இம் மாநாட்டின் போது சில விட்டுக்கொடுப்புகளுடனும், கண்டிப்புகளுடனும் 1992இன் காலநிலை பற்றிய ஒப்பந்தத்தில் திருத்தங்கள் செய்யபட்டன. காபன் ஈரொக்சைட்டு, மெதென், நைட்ரஸ், ஒக்சைட்டு, சல்கர் ஹெக்ஸாபுளோரைட்டு, ஹைட்ரொ, புளோரோ காபன்கள், புளோரின் சேர்வைகள் ஆகிய ஆறு பசுமை இல்ல வாயுக்களைச் சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்துவது தொடர்பான இந்த மீள்வரைபு "கியோட்டொ ஒப்பந்தம்" (Kyoto Protocol) எனப்படுகின்றது. இலங்கையும் 2002 ஆம் ஆண்டு கியோட்டோ உடன்படிக்கையை ஏற்று உறுதி செய்துள்ளது. கியோட்டொ ஒப்பந்தம் ஒரு வகையில் கோளத்தை காத்தல் என்ற பெயரில் தொழில்வள நாடுகள் வறிய நாடுகளின் மீது கொண்டிருக்கும் சூழல் ஏகாதிபத்தியம் என்பதையும் மறுப்பதற்கு இல்லை. ஒப்பந்தம் தொழில்வள நாடுகள் பச்சைவீட்டு வாயுக்களின் அளவைக் குறைக்க வேண்டும் என்று கூறினாலும் இந்நாடுகள் புகைத் தணிக்கைகள் எதனையும் செய்யாமலே ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கும் கனவான்கள் ஆக முடியும். பூகோளத்தை வெப்பமாக்குவதில் பெரும்பங்கு வகிக்கின்ற வளர்ந்த நாடுகளிலேயே இந்த வாயுக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய தொழிநுட்ப வளமும் பணபலமும் நிறைந்து காணப்படுகின்றது. இந்த நாடுகள் நினைத்தால் பெற்றோலிய எரிபொருட்களுக்குப் பதிலாக சூரியசக்தியையும் குறைந்த அளவில் காபனீரொட்சைட்டை வெளியேற்றும் இயற்கை வாயுவையும் பயன்படுத்த முடியும். மின் உற்பத்திற்கு பூமியின் வெப்ப சக்தியையும், அணு சக்தியையும், காற்று நீர் வலுக்களையும் பயன்படுத்த முடியும் ஆனால் இவற்றுக்கு அதிக பணத்தை செலவிட்டு தொழில் போட்டியில் கொஞ்சமேனும் பின் தங்க இந்த நாடுகள் தயாராகவில்லை.

## முடிவுரை

இக்கட்டுரையானது கோள வெப்ப அதிகரிப்புக்கான காரணங்களையும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களையும் அவற்றிலிருந்து பாதுகாப்பினை பெறுவதற்கான வழிகளையும் சுருக்கமாக ஆரய்ந்துள்ளது. கோள வெப்ப அதிகரிப்பின் முதலாம் எதிரி வளர்ந்த நாடுகள் தான் என்ற குற்றச் சாட்டை மட்டும் வைத்துவிட்டு வெப்பத்தின் தீவிரத்திலிருந்து ஒதுங்கி விட முடியுமா? வளரும் நாடுகளின் அதிகளவு காபனை வெளியேற்றும் இந்தியா சீனா போன்ற நாடுகளும் பூகோளத்தை சூடு பண்ணி வேக வைத்துக் கொண்டே இருக்கின்றன. எனவே ஆபத்துக்களும் துன்பங்களும் ஏழை பணக்காரன் என்ற பேதத்தை பார்ப்பது இல்லை என்பது உண்மையாகும்.

**உசாத்துணை நூல்கள்**

1. Global warming- wikipedia https; www commondreams. org/ headline/2013/03/28-1. Access time 06/05/2013.3.15.p.m.
2. www.washingtonpost. com. Access time 3.35 p.m. 06/05/2013.
3. http: en.Wikipedia.org/wiki/file:evidence _ $Co_2$ .jpg.
4. ஐங்கரநேசன்.பொ.(2007) "கொதிக்கும் பூகோளமும் காபன் அரசியலும்", கூடம் இதழ் - 4 பப 21-28.

Golden Jubilee 50 Years

# ஆரம்பக் கல்வி ஓர் பார்வை



**திருமதி அ. வேதநாயகம்**
ஓய்வுநிலை
வலயக்கல்விப்பணிப்பாளர்

"ஆரம்பக் கல்வி" என்பது மிகவும் முக்கியமான விடயமாகும். ஒரு வீட்டின் ஆரம்பம் அதன் அத்திவாரம் ஆகும். அத்திவாரம் எவ்வளவு உறுதியானதோ அதிலேதான் வீட்டின் உறுதி தங்கியுள்ளது. அதேபோன்று மனித வாழ்வின் உறுதியான, பலமான, ஒளிமயமான ஆரம்பம் ஆரம்பக் கல்வியாகும். "எழுத்தறிவித்தவன் இறை வனாவான்" ஆரம்ப வகுப்பிலே எழுத்தறி விக்கும் ஆசான் இறைவனாக மதிக்கப்பட வேண்டுமாயின் அவன் பிள்ளைகளிடத்து தூய்மையான அன்பு செலுத்தி அவர்கள் மகிழ்வோடு விரும்பிக் கற்கும் வகையிலே அவர்களை வழிப்படுத்த வேண்டும். கள்ளங் கபடமற்ற அக்குழந்தைகளின் வளமான வளர்ச்சியைப் பார்த்து உள்ளம் பூரிப்படைய வேண்டும். கால ஓட்டத்தோடு மாறுகின்ற பாடவிதானத்தை நுணுக்கமாக ஆராய்ந்து ஐயம்திரிபின்றி விளங்கி தகுந்த முறையிலே நடைமுறைப்படுத்தி ஒவ்வொரு மாண வரதும் வெற்றியை மதிப்பீடு செய்து மன நிறைவடையும் ஆசிரியரே தெய்வமாக மதிக்கப்படுவார்.

ஓர் ஆசிரியர், மாணவர்கள் பார்த்து பின்பற்றுகின்ற ஒரு மாதிரி (Model) ஆவார். ஆகவே அந்த பிஞ்சு உள்ளங்கள் பார்த்துப் பின்பற்றக்கூடிய பக்குவமான நடை, உடை பாவனைகளைக் கொண்ட உயர்வான பண்பும் மலர்ந்த முகமும் கொண்டவர் களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும்.

கல்வி முறையில் ஆசிரியர்களே மிகவும் முக்கியமான வளங்கள். இவர்கள் சிறந்த தரமான கல்வியை வழங்குவதற்கு தம்மை முற்றாக அர்ப்பணித்து முழுப் பொறுப்புடன் செயற்படுவதற்கு அதிபரா லும், அலுவலர்களாலும் ஊக்கமளிக்கப்பட வேண்டும். அவர்களுடைய திறமை, அர்ப் பணிப்பு, பொறுப்புக்கள், மனப்பாங்குகள் என்பவையே மூலகாரணிகளாகும். பாட சாலையின் பௌதிக வளங்கள் சீரற்ற தாகவும், தரமற்றதாகவும் இருந்தபோதிலும் பாடசாலைக்கு வெளியிலுள்ள முகா மைத்துவக் காரணிகளில் குறைபாடுகள் இருந்தாலும்கூட இக்குறைபாடுகள் சிறந்த தலைமைத்துவமுடைய அதிபராலும், ஆசிரி யர்களின் வினைத்திறன் வாய்ந்த செயற் பாடுகளாலும் ஈடுசெய்யப்பட முடியும்.

சிறந்த முகாமைத்துவமும், தன்னார்வமும் கொண்ட, மாணவர்களின் சூழல் தேவைகளை அறிந்து உடனடியாக அவற்றிற்கு பரிகாரம் காணக்கூடிய, பொறுப்

புணர்ச்சியுடன் செயலாற்றக்கூடிய ஆளணியினர் பாடசாலையினுள் இருப்பின் கிடைக்கக்கூடிய வளங்களிலிருந்து அதிகூடிய பலனைப் பெறமுடியும். பாடசாலை ஆளணியினர் எனும்போது பாடசாலைத் தொழிலாளரும் முக்கிய பங்காளிகளாவர்.

ஒரு மாணவனது முழுமையான பாடசாலை வாழ்விலும் முக்கியமாக முதுகெலும்பாகத் திகழ்வது ஆரம்பநிலைக் கல்வியே ஆகும். இன்றைய கல்வி முறைமையிலே ஒவ்வொரு முதன்மை நிலையினின்றும் அடுத்தநிலைக்கு பிள்ளை செல்லும்போது அடையவேண்டும் என எதிர்பார்க்கப்படும் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளில் பிள்ளை பாண்டியத்தியநிலை அடைந்திருக்க வேண்டும். தனது இயலுமைக்கேற்ப சிறப்புத் தேர்ச்சிகளையும் பெற்றிருக்க வேண்டும். இதனை உறுதி செய்யும் வகையில் பாடசாலை அதிபரின் கண்காணிப்பும் இருத்தல் வேண்டும். ஆனால் இவ்வாறு அதிபராலும் ஆசிரியர்களாலும் உறுதிப்படுத்தப்பட்டு தரம் 6இல் உள்வாங்கப்படும் 55% இற்கு மேற்பட்ட மாணவர்கள் கற்றலைத் தொடர முடியாத - எழுத வாசிக்கக் கூட கஷ்டப்படும் நிலையில் இருப்பதை அவதானிக்கமுடிகின்றது. "உரிய படிமுறைகள் ஊடாகக் கற்பிப்பதன் மூலம் எதையும் யாருக்கும் கற்பிக்க முடியும்" என்கின்றார் "றாளர்" எனும் சிந்தனையாளர்.

1998ஆம் ஆண்டிலிருந்து கல்வி மறுசீரமைப்புத் தொடர்பாக பல கையேடுகள், வழிகாட்டிகள், ஆசிரியர் கைநூல்கள், அறிவுறுத்தல்கள் வெளியீடு செய்யப்பட்ட போதும் அவற்றைத் தேடிப்பெற்று வாசித்து விளங்கி செயற்படும் ஆசிரியர்கள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றது. "பாட நூற் தொகுதி ஒன்றுடன் சேர்த்துத் தயாரிக்கப்படும் நன்கு வடிவமைக்கப்பட்ட ஓர் ஆசிரியர் கைநூலானது நன்று பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு மிகவும் வினைதிறனுடைய சேவைக்காலப் பயிற்சி முறையாகும்" என்பவர் "பாறெல்" (Farrel) குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வோர் முதன்நிலை கற்பிக்கும் ஆசிரியர்களிற்கும் அறிவுரைப்பு வழிகாட்டிகள், அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள், கணிதவள நூல் பயன்பாடு, செயற்பாடுகள், வாய்மொழி ஆங்கிலம் என பல நாட்கள் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டும் அவற்றை உள்வாங்கி வகுப்பறையில் நிறைவாக நடைமுறைப்படுத்துவது அரிதாகவே காணமுடிகின்றது. அவற்றைவிட பிள்ளை நேயப் பாடசாலை தொடர்பான பயிற்சிகள், பிள்ளை மைய முறையியல், பரிகாரக் கற்பித்தல் பயிற்சிகளும், ஆசிரியர்களிற்கும் அதிபர்களிற்கும் வழங்கப்பட்டுள்ளது. பெற்ற பயிற்சிகளுடன் தங்கள் ஆக்கபூர்வமான சிந்தனையையும் சேர்த்து திட்டமிட்டு முழுமனதுடன் வகுப்பறையில் நடைமுறைப்படுத்துவோமானால் ஒவ்வொரு பிள்ளையும் உரிய தேர்ச்சியைப் பெறும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் உரிய பயிற்சிகளைப் பெறாமலே பல ஆரம்ப வகுப்புக்களில் ஆசிரியர்கள் கற்பிப்பதால் ஆரம்பக்கல்வியில் ஓர் பின்னடைவு காணப்படுகின்றது. சேவைக்காலப் பயிற்சிகளில் பங்குபற்றிய ஆசிரியர்களின் உதவியைப் பெற்று மற்றைய ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க ஏற்ற ஒழுங்குகளை அதிபர் பாடசாலை மட்டத்தில் செய்தல் வேண்டும் என அறிவுத்தப்பட்டுள்ளபோதும் அதிபர்கள் ஏனைய ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதில் அக்கறை செலுத்துவதில்லை. கற்றல் கற்பித்தலில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளை கண்டறிந்து அதற்கேற்ற நிபுணத்துவங்களைப் பயன்படுத்தி பயிற்சிகளை நடைமுறைப்படுத்த ஆசிரியரை அடிப்படையாகக் கொண்ட உயர்மட்டக் கல்விச் செயற்பாடுகளிற்காக பாடசாலைகளிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதும், வகுப்பறைகளில் பிரச்சினைகளை இனங்காண்பதிலும் அவற்றுக்கு ஏற்ற தீர்வைக் கண்டு சிறந்த விளைவைப் பெறுவதிலும் பாடசாலைகள் தூய்மையாக அக்கறை செலுத்துவதில்லை. வகுப்பறைக் கற்றல்

கற்பித்தலூடாகவும் விசேட செயற் திட்டங்கள் நடைமுறைப்படுத்தியும் பாடசாலை மட்டத்தில் தீர்க்க முடியாத மாணவர் எதிர் கொள்ளும் பிரச்சினைகளை துறைசார்ந்த நிபுணத்துவங்களைப் பயன்படுத்தி பயிற்றுவித்து தீர்வுகளை (SBHOP) இல் நிதி ஒதுக்கப்பட்டிருந்தும் பிரச்சினைகள் பிரச்சினைகளாகவே கொண்டு செல்லப்படுகின்றன.

ஆரம்பக்கல்வியே கற்றலின் அடித்தளம். அதனை உரிய முறையில் வலுப்படுத்தாவிடின் கற்றலில் பின்னடைவுகள் ஏற்பட்டு கல்வியில் நாட்டம் குறைந்து இடைவிலகல் ஏற்பட வழிசமைக்கும். எனவே அதிபர் ஆரம்பக்கல்வி பற்றிய சிறந்த அறிவைப்பெற்று ஆசிரியர்களிற்கு ஆரோக்கியமான வழிகாட்டியாகவும் கற்றல் கற்பித்தலுக்கு தேவையான தரஉள்ளீடுகள், பௌதிக வளங்களைத் தடையின்றி பயன்படுத்த வழிசமைத்தும் கொடுக்க வேண்டும்.

ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பல்வேறு ஆய்வுகளை அனுபவரீதியாக செய்து சமர்ப்பித்து பெருமைகொள்ளும் ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் வகுப்பறைகளில் பிரச்சினைகளை இனங்காண்பதற்கும் தீர்வுகளை கண்டறிவதற்கும், நடைமுறைப் படுத்தி வெற்றியை மதிப்பிட்டு உளம் மகிழவும் பின் நிற்கக் கூடாது. வகுப்பறையில் ஆசிரியர் ஆய்வு ரீதியான சிந்தனையுடன் செயற்பட வேண்டும்.

ஆரம்ப வகுப்புக்களில் மாணவர்கள் தெளிவாக உச்சரித்து வாசிப்பதற்கும் எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து உறுப்பமைய எழுத்துக்களை எழுதுவதற்கும் அழகிய சிறிய வசனங்களைச் சரியாக எழுதுவதற்கும் பொறுமையோடு பயிற்சி வழங்க வேண்டும். “இளமையில் கல்வி சிலையில் எழுத்து” என்பார்கள். ஆரம்ப வகுப்புக்களிலே பிழையான கணித எண்ணக்கருக்களை பதிய வைப்போமாயின் ஒரு போதும் அதனைத் திருத்த முடியாது. எனவே கற்பிக்கும் ஆசிரியர்கள் மிகவும் தெளிவாக இருக்கவேண்டும். ஓய்வு நேரங்களில் சக ஆசிரியர்களுடனும், துறை சார்ந்த ஆசிரியர்களுடனும் பாட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடி தமது அறிவை மேலும் வளப்படுத்திக் கொள்ளவேண்டும்.

தலைவன் எவ்வழி, குடிகள் அவ்வழி என்பார்கள். ஒரு பாடசாலையின் பெறுமதி அதிபரின் கையில்தான் தங்கியுள்ளது. மனிதநேயமும், சிறந்த ஆளுமையும் கொண்ட ஒரு அதிபரால் பாடசாலையை வளப்படுத்த முடியும். ஆசிரியர்களிற்கு உதவும் வகையில் நேர்மனப்பாங்குடன் செய்யப்படும் உள்ளக மேற்பார்வை சிறந்த விளைவினைத்தரும்.

ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆலோசகர்களின் பணி மிகவும் பெறுமதி வாய்ந்தது. பாடவிதான மாற்றம், கற்பித்தல் அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்படும் போது அதனைச் சரியாக உள்வாங்கி அதற்குரிய ஆசிரியர்கள் அனைவருக்கும் பயிற்சி அளிப்பதுடன் வகுப்பறையில் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப் படுவதையும் உறுதிசெய்ய வேண்டியவர்கள் சேவைக்கால ஆலோசகர்களேயாவர். சில இடங்களில் சேவைக்கால ஆலோசகர்கள் தமது பணியை மறந்து குழு மேற்பார்வையில் இணைந்து ஆசிரியர் செயற்பாடுகளில் குறை காண்கின்றார்கள். அந்தப் பிழைக்கு வகைகூற வேண்டியவர் தானே என்பதை மறந்துவிடுகிறார்கள். 1970ஆம் ஆண்டு காலப்பகுதியில் சேவைக்கால ஆலோசகர்கள் நியமிக்கப்படும்போது அவர்கள் ஆசிரியர்களிற்கு சேவைக்காலப் பயிற்சி வழங்குவதற்கும், கற்பிக்கும் சூழலில் வைத்து அவர்களுக்கு வழிகாட்டுவதற்குமாக நியமிக்கப்பட்டனர்.

“ஆசிரியர்கள் உண்மையில் ஒரு புதிய அணுகுமுறையைக் கற்பித்தலில் அமுல் நடத்தும்போது தான், அவர்களுக்குக் குறிப்பிட்ட கரிசனையும் ஐயங்களும் எழுகின்றன. இந்த நேரத்தில் உதவிக்காக

யாரையாவது அவர்கள் நாட வேண்டியுள்ளது. அவ்விடயம் தொடர்பாக சேவைக்கால அனுபவங்களில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்கு தொடர்ச்சியான ஆதரவும், தொடர்ந்து அவர்கள் செய்ய வேண்டிய வேலைகளுக்கான உதவியும் வழங்கப்படல் வேண்டும்" எனக் கஸ்கி (Guskey) என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் "தொடர்ச்சியான நடைமுறை வழிகாட்டல், நெறிப்படுத்தல், தனிப்பட்ட உதவி வழங்குதல், வகுப்பறைக்குள் உதவுதல் ஆகிய சந்தர்ப்பங்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்" என்றும் "கஸ்கி" (Guskey) குறிப்பிட்டுள்ளார்.

ஒரு குறித்த பாடசாலையின் அதிபர் சேவைக்கால ஆலோசர்கள் பற்றி குறிப்பிடும்போது "குறித்த ஒரு சேவைக்கால ஆலோசகர்கள் பாடசாலை தொடங்குமுன் பாடசாலைக்கு வந்து நிறைவாகப் பணி செய்து பாடசாலை முடிந்தபின் ஆசிரியர்களுடன் வீடு செல்வார். ஒரு முழுமையான முன் ஆயத்தத்துடன் அவர் வருவதாலேயே அவரால் முழுநேரம் நிறைவாகப் பணிசெய்ய முடிகிறது." என்றார்.

ஆரம்பக்கல்வியின் வெற்றியிலும் தோல்வியிலும் சேவைக்கால ஆலோசகர்கள் முக்கிய பங்குதாரர்கள் என்பதை அவர் மறந்துவிடக்கூடாது.

உதவிக் கல்விப்பணிப்பாளரின் கடமைக்கூற்றில் மிகமுக்கியமானது மேற்பார்வை. வலயத்திலுள்ள சகல பாடசாலைகளிலும் தனது பாடந்தொடர்பான சகல விடயங்களையும் அறிந்திருந்தல் வேண்டும். ஒவ்வொரு ஆரம்ப பாடசாலைகளினதும் பாதுகாப்பு, சுற்றாடல் வகுப்பறைக் கவின் நிலை, வளங்களைப் பேணுதலும் உச்சமாகப் பயன்படுத்தலும் போன்ற விடயங்களிலும் வழிகாட்ட வேண்டிய பொறுப்பு உதவிக் கல்விப் பணிப்பாளருக்குண்டு. வகுப்பறை மேற்பார்வையினை நேர்மனப்பாங்குடன் மேற்கொண்டு ஆசிரியர்களை ஊக்குவித்தல் வேண்டும்.

"ஆக்கப்பாட்டுத்திறன் மேற்பார்வையாளர்களின் ஓர் சிறப்பு அம்சமாகும். அவர்கள் மேற்பார்வை செய்கின்ற பிற ஆசிரியர்களையும் ஆக்க உணர்வுடையவர்களாக மாற்றவேண்டும்" என "ஆர்னோல்ட் ரொயின்றி" குறிப்பிட்டுள்ளார். எமது கல்வி மறுசீரமைப்பிலும் இது எதிர்பார்க்கப்படுகிறது. பாடசாலைக் கல்வி அபிவிருத்தியில் முதுகெலும் பாகத் திகழ்பவர்கள் சேவைக்கால ஆலோசகர்களும், அவர்களை ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் உதவிக் கல்விப் பணிப்பாளர்களும் ஆவார். இவர்கள் ஒன்று சேரக் கிடைக்கும் சந்தர்ப்பங்களை உச்சப் பயனுடையதாக்க வேண்டிய தேவை உள்ளது.

ஆரம்பக்கல்வி மறுசீரமைப்புத் திட்டமானது பயனுறுதிமிக்க செயற்பாடாக அமைவதற்கும், மேலும் செழுமைப்படுத்தலுக்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனும் "வாழ்க்கையில் ஓர் உறுதியான ஆரம்பம்" எனும் தலைப்புடன் அச்சிடப்பட்ட கையேட்டினை பெற்றோர்களிற்கு வழங்கி மாற்றங்கள் பற்றிய தெளிவினையும் பிள்ளையின் கல்வியில் பெற்றோர் பங்கு தொடர்பாகவும் பெற்றோருக்கு விழிப்பூட்டும் முயற்சிகள் பாடசாலைகள் தோறும் முன்னெடுக்கப் பட்டு வருகின்றபோதும் ஆரம்பக்கல்வி யில் பெற்றோரின் பங்களிப்பு போதாமலே உள்ளது.

அதிபர்கள், பாடசாலையை அழகு படுத்துவதிலும், வளப்படுத்துவதிலும் தமது பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிப்பதிலும் பெற்றோர்கள் பங்காளர்களாக மாறும்வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஆரம்ப பாடசாலைகளும் மகிழ்ச்சிகரமான கற்றல் அனுபவங்களை வழங்கும் இடமாக மாற சகலரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்.

"முயற்சி திருவினையாக்கும்"



# சிந்தைக்கு விருந்தளிக்கும் சினிமாப் பாடல்கள்

**கலாநிதி செ. திருநாவுக்கரசு**
ஓய்வுநிலை பிரதிஅதிபர்
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

1895இல் பிரான்ஸ் நாட்டில் உருவான சினிமா (Cinema) என்னும் சாதனம் இன்றைய உலக மக்களிடையே வலுவும், ஈர்ப்பும், கவர்ச்சியும் மிக்கதாகத் திகழ்கின்றது. தோமஸ் அல்வா எடிசன், லூயி சகோதரர்கள் இந்த வெகுசனத் தொடர்புசாதனத்தின் முன்னோடிகள். ஆரம்பத்தில் ஊமைப் படங்களாகக் காட்சிகள் நகர்ந்தபோதிலும், 1917ஆம் ஆண்டில் முதன்முதலில் பேசும் படம் உதயமாயிற்று. இன்று திரைப்படவுலகம் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வருகிறது. பன்முகப்பரிமாணங்களில் அவை வளர்ச்சி கண்டு வருகின்றன. இந்திய நாட்டிலும் தொடக்கத்தில் பேசாத ஊமைப் படங்களே 1913ஆம் ஆண்டிலிருந்து தயாரிக்கப்பட்டன. தமிழ்நாட்டில் என். நடராஜ முதலியாரால் இப்பணி 1917இல் "கீசகவதம்" என்னும் திரைப்படத்தினூடு தொடங்கப் பெற்றுச் சுமார் 112 மௌனப் படங்கள் தென்னகத்தில் வெளியாகின. 1931ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் முதலாவது இந்தியப் பேசும் படமான "ஆலம்ஆரா" இந்தி மொழியில் வெளியானது. இதனை அர்தேஷ் இரானி என்பவர் தயாரித்திருந்தார். அவரே முதலாவது தமிழ் பேசும் திரைப்படமான "காளிதாஸ்" என்பதையும் தயாரித்து 31.10.1931 அன்று சென்னையில் வெளியிட்டார். இப்படத்தின் கதாநாயகி டி.பி. ராஜலக்ஷ்மி தமிழில் பாடினார்; பேசினார். ஆனால் கதாநாயகன் நரசிம்மா தெலுங்கில் பேசினார். துணைப்பாத்திரங்களில் நடித்தவர்கள் சிலர் இந்தியில் உரையாடினார்கள். எனவே தமிழுக்கும் தெலுங்குக்கும் இதுவே முதற் பேசும் படம் எனலாம். ஏறத்தாழ 50 பாடல்கள் இப்படத்தில் இடம்பெற்றிருந்தன.

இன்றுவரை நேரடித் தமிழ்த் திரைப்படங்கள் சுமார் ஐயாயிரம் வரை இந்த 82 ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்துள்ளன. இவற்றுடன் மொழிமாற்றுப் படங்களும் நூற்றுக் கணக்கில் வெளியாகியுள்ளன. ஆரம்ப காலத் தமிழ்த் திரைப்படங்கள் உட்பட இந்திய சினிமாவில் ஐம்பது, அறுபது வரையிலான பாடல்கள் இடம்பெற்றன. பின்னர் குறைவான அளவில் பாடல்கள் இடம்பெற, வசனம் முக்கியத்துவம் பெறலாயிற்று. இருப்பினும் இந்திய சினிமாவில் பாடல்களுக்குரிய ஈர்ப்பும் செல்வாக்கும் குறையவேயில்லை. சுமார் ஆறு பாடல்கள் வரையிலாவது சராசரியாகத் தற்போது இடம்பெறுகின்றன. ஆரம்பகாலத்தில் இதிகாச புராணக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட படங்களே பெரிதும் வெளிவந்தன. பின்னர் சில சமூக - வரலாற்று - நகைச்சுவைப் படங்களும் வெளியாகின. ஐம்பதுகளில் இந்திய - தமிழ்த் திரைப்படங்களில்

பாடல்களின் எண்ணிக்கை குறைந்து வசனம் முக்கியத்துவம்பெற்றது. தற்காலத்தில் கலப்படமான வசனங்கள் இடம்பெறுகின்றன. அவை மிகக்குறைவாகவே தமிழ்த் திரைப் படங்களை ஆக்கிரமித்துள்ளன. முன்னர் நாடகங்கள் படம்பிடிக்கப்பட்ட நிலைமாறி தற்போது காமிராமூலம் காட்சிகள் நகர்த்தப்படுகின்றன. தொழில்நுட்பத் துறையில் தமிழ்த் திரைப்படங்கள் வலுவாக முன் னேறி வருகின்றன.

உலக அளவில் பாடல்கள் இடம்பெறுவது பத்துக்கும் குறைவான நாடுகளின் திரைப்படங்களிலேயே காணப்படுகிறது. இந்திய மரபுத் திரைப்படங்களில் பாடல்கள் தவிர்க்கவொண்ணாதவைகளாக இன்று வரை நீடித்துள்ளன. மக்களது இரசனையும் மாறாதநிலையில்தான் உள்ளது. இசைக்கும் பாடல்களுக்கும் இசைவான சமூகப் பாரம் பரியத்தின் விளைவு இதுவாகும். பல பாடல்களின் வெற்றி தோல்விகளைப் பாடல்களும் இசையும் தீர்மானிக்கின்றன.

இனி இந்தியத் தமிழ்த் திரைப்படங்களில் இசையும் பாடல்களும் எவ்வாறுள்ளன என்பதை நோக்கினால், முன்னர் நெஞ்சத்தை நெகிழ வைக்கும், மனத்தைத் தாலாட்டும், சிந்தனையைத் தூண்டும் மென்மையான இசைக் கோர்வையும், பொருள் பொதிந்த சொல்லாட்சியும் நிறைந்த இசைப் பாடல்கள் இடம்பெற்றன. அந்தச் சுகானுபவம் இன்று தொலைந்துவிட்டது. கருத்தாழம்மிக்க திரைப்பாடல்கள் வெகுவாகக் குறைந்துவிட்டன. கதையை நெறிப்படுத்தும் துறையாகப் பாடல்கள் அமைந்த காலம் மலையேறிவிட்டது. சிந்திக்க வைக்கும் சீரிய கருத்துக்களைத் தாங்கிய பாடல்கள் இல்லாமல் அல்லது மிக அரிதாகப் போய்விட்டன. கர்நாடக இசை, மெல்லிசை, மெலோடி இசை ஆகிய இசைகலந்த பாடல்கள் பின் தள்ளப்பட்டு இன்று படிப்படியாகத் துள்ளல் இசைப்பாடல்கள் பெரு வழக்காகிவிட்டன. கானாப்பாடல்கள், சோனாப்பாடல்கள், "ஜாக்" இசைப் பாடல்கள், "பொப்" இசைப் பாடல்கள் என்றவாறும். கைகால்களைத் தாளத்துக்கேற்ப ஆட்டத்தக்க வெற்று ஆரவாரச் சொற்கள் கலந்தும், பொருளற்ற சொற்சேர்க்கை கொண்டும் பாடல்களும் இசையும் உருவாகின்றன. ஆபிரிக்கா, தென்னாபிரிக்க மற்றும் ஐரோப்பிய இசைகளைத் தழுவியும், உள்நாட்டு நாட்டுப்புற இசைக்கலப்போடும் கலப்பிசையுருவாக்கம் ஏற்படுகிறபோது பாடலின் பொருள் பற்றி எவரும் அலட்டிக் கொள்வதில்லை. அடிக்கிற காற்றில் அவசரமாகத் தூற்றி எடுக்க வேண்டியதைத் திரைப்படவுலகம் எடுத்துக் கொள்கிறது. தங்களது வாழ்க்கை சுகப்படுவதற்காகவும் வயிறு காயாமல் பார்த்துக் கொள்வதற்காகவும் தமிழ்த்திரைப்படக் கவிஞர்கள் தொழிற்பட முயல்கின்றனர். இது தவிர எவரும் சினிமாப் பாடல் இயற்றுமளவுக்கு (நடிகர், நடிகை, தயாரிப்பாளர், இயக்குநர், இசையமைப்பாளர், பாடகர்) திரைக்கவிதை மலினப்படுத்தப்பட்டுள்ளது. நிலைத்து நிற்கக்கூடிய சிரஞ்சீவித்துவம் அற்றதான பாடல்கள் பெருகிவிட்டன. பழைய பாடல்களின் இனிமை, உள்ளீடு, பாவம், மென்மை, உணர்ச்சி ஆகியன தற்போதைய தமிழ்ச்சினிமா பாடல்களில் காணாதொளிந்துவிட்டன. ஒரு சில நல்ல பாடல்களுக்குப் பலகாலம் காத்திருக்க வேண்டியுள்ளது. சீசன் பாடல்களே பெரிதும் உருவாகின்றன. இத்தகு சூழ்நிலையில் தமிழ்த்திரைப்படங்களில் இடம்பெற்ற சிந்திக்க வைக்கும் சில சினிமாப்பாடல்களை மாணவர்களதும் தமிழ்ச் சமூகத்தினதும் நன்மை கருதி எடுத்துக் காட்டுவது இக்கட்டுரையின் அடிப்படையாக அமைகின்றது.

"நல்லநல்ல நிலம் பார்த்து
நாமும் விதை விதைக்கணும்
நாட்டு மக்கள் மனங்களிலே
நாணயத்தை வளர்க்கணும்
பள்ளி என்ற நிலங்களிலே
கல்விதனை விதைக்கணும்
பிள்ளைகளைச் சீர்திருத்திப்
பெரியவர்கள் ஆக்கணும்

கன்னியர்க்கும் காளையர்க்கும்
கட்டுப்பாட்டை விதைத்து
கற்புநிலை தவறாத
காதற் பயிர் வளர்த்து
அன்னை தந்தையானவர்க்குத்
தம் பொறுப்பை விதைத்து
பின்வரும் சந்ததியைப்
பேணும்முறை வளர்த்து

இருப்பவர்கள் இதயத்திலே
இரக்கமதை விதைக்கனும்
இல்லாதார் வாழ்க்கையிலே
இன்பப்பயிர் வளர்க்கனும் (நல்ல)

பார்முழுதும் மனிதகுலப்
பண்புதனை விதைத்துப்
பாமரர்கள் நெஞ்சத்திலே
பகுத்தறிவை வளர்த்து
போர்முறையைக் கொண்டவர்க்கு
நேர்முறையை விதைத்துச்
சீர்வளரத் தினமும்
சினேகமதை வளர்த்து
பெற்றதிரு நாட்டினிலே
பற்றுதனை விதைக்கனும்
பற்றுதனை விதைத்து விட்டுநல்ல
ஒற்றுமையை வளர்க்கனும் (நல்ல)
- (உடுமலை நாராயணசாமி - "விவசாயி" படத்தில்)

எவற்றை விதைக்கனும், எதை வளர்க்கனும் என்பதை எளிமையாக, ஓசைநயத்துடன் எடுத்துக்காட்டும் பண்புடைய கவிதையிது. நாட்டு மக்களின் கடமைகள் யாவை என்பதை அழகுற எடுத்துக்காட்டும் பொருள் மிக்கது. இதேபோன்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் "குமாரராஜா" படத்துக்காக இயற்றிய பாடலொன்று மாணவனொருவனுக்குரிய அறிவுரையாகவும் அவன் நெஞ்சத்தில் நல்ல நினைவுகளை எழுப்பி நிலைபெற்று வாழச்செய்வதாகவும் எளிய தமிழில் அற்புதமாக அமைந்துள்ளது.

"ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே
ஏன்படித்தோம் என்பதையும் மறந்துவிடாதே
நீ (ஏட்டில்)
நாட்டின் நெறிதவறி நடந்துவிடாதே நம்
நாட்டின் நெறிதவறி நடந்துவிடாதே
நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்துவிடாதே
நீ (ஏட்டில்)"

என அழகாகச் சொன்ன கவிஞர், ஒரு பிள்ளை எப்படி வாழவேண்டும் என்ற நியதியை பிள்ளை வளரும் போதே அறிவுறுத்துகிறார்.

"மூத்தோர் சொல்வார்த்தைகளை மீறக்கூடாது -
பண்பு
முறைகளிலும் மொழிதனிலும் மாறக்கூடாது
மாற்றார் கைப்பொருளை நம்பி வாழக்கூடாது -
தன்
மானமில்லாக் கோழையுடன் சேரக்கூடாது நீ
(ஏட்டில்)"

இவ்வாறு கூறுவதனூடாக பெரியவரை மதித்தல், நெறிமுறையைக் கடைப்பிடித்தல், தன் காலில் தான் நிற்றல், தன்மானமுடன் வாழல் ஆகிய நற்பண்புகளை இடித்துரைக்கின்றார். மேலும் அவர்,

"துன்பத்தை வெல்லும் கல்வி கற்றிடவேணும்
சோம்பலைக் கொல்லும் திறன் பெற்றிட வேணும்
வம்புசெய்யும் குணமிருந்தால் விட்டிடவேணும்
வளர்ச்சியிலே வான்முகட்டைத்
தொட்டிடவேணும் நீ (ஏட்டில்)

வெற்றிமேல் வெற்றிவர விருதுவரப் பெருமைவர
மேதைகள் சொன்னதுபோல் விளங்கிட வேணும்
பெற்றதாயின் புகழும் நீ பிறந்தமண்ணின்
புகழும்
வற்றாமல் உன்னோடு வளர்ந்திட வேணும் நீ
(ஏட்டில்)

சின்னப்பிள்ளைக்கு - வளரும் மாணவருக்குச் சொல்லக்கூடிய எளிமையானதும் மிகச்சிறந்ததுமான அறிவுரைகள் இவற்றைவிட வேறேதும் இருக்கமுடியுமா? சிந்தனையைத் தூண்டிவிடும் கிளர்ச்சிமிக்க கருத்துக்கள் இப்பாடலின் உயிர்நாடியாகின்றன. இதேபோல் இன்னுமொரு பாடலிலும் பட்டுக்கோட்டையார்,

"படிப்புத்தேவை அதோடு உழைப்பும் தேவை
- முன்னேற
படிப்புத்தேவை அதோடு உழைப்பும் தேவை
உண்மை தெரியும் உலகம் தெரியும் படிப்பாலே
- நம்
உடலும் வளரும் தொழிலும் வளரும்
உழைப்பாலே எதற்கும் (படிப்பு)
(சங்கிலித்தேவன்)
எனக் கூறுவதை நோக்கலாம்.

மேலும் அவரே "அரசிளங்குமாரி" படத்தில்

"வேப்பமர உச்சியில் நின்று பேயொன்று
ஆடுதென்று - நீ
விளையாடப் போகும்போது சொல்லி
வைப்பாங்க - உன்
வீரத்தை முளையிலே கிள்ளிவைப்பாங்க
வேலையற்ற வீணர்களின் மூளையற்ற
வார்த்தைகளை
வேடிக்கையாக நீயும் எண்ணிவிடாதே - நீ
வீட்டுக்குள்ளே பயந்து வெம்பி விடாதே"

எனச் சின்னப்பையனொருவனிடத்தே மூடக் கொள்கைகள் அணுகவிடாது பகுத்தறிவு வெளிச்சம் பாய்ச்சுகிறார். அப்பாடலில்

"ஆளும் வளரணும் அறிவும் வளரணும்
அதுதாண்டா வளர்ச்சி - உன்னை
ஆசையோடு ஈன்றவளுக்கு
அதுதான் நீ தரும் மகிழ்ச்சி" என்கிறார்.

பட்டுக்கோட்டைக் கவிஞர் "திருடாதே பாப்பா" என்னும் "திருடாதே" திரைப்படப் பாடலில்

"திட்டம்போட்டுத் திருடிற கூட்டம்
திருடிக்கொண்டே யிருக்குது - அதைச்
சட்டம்போட்டுத் தடுக்கிறகூட்டம்
தடுத்துக்கொண்டே இருக்குது
திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால்
திருட்டை ஒளிக்கமுடியாது"

எனக்கூறுவதும்,

"திருடாதே பாப்பா திருடாதே
வறுமை நிலைக்குப் பயந்துவிடாதே
திறமை இருக்கு மறந்துவிடாதே"

என்பதும் சிறுவர்களுக்கான மனவியல் அணுகுமுறைகளும், அவர்களைத் திருத்தும் இலட்சிய நோக்கும் கொண்டவைகளாகும்.

"எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும் - இங்கு
இல்லாமை இல்லாத நிலைவேண்டும்
வல்லான் பொருள் குவிக்கும் தனியுடைமை
- நீங்கி
வரவேண்டும் திருநாட்டில் பொதுவுடைமை"

எனக் கவியரசர் கண்ணதாசன் எடுத்துரைப்பதுகூடப் பொதுநலச் சமுதாய நோக்கைப் பிரதிபலிப்பதாகும்.

"ஒன்றே மாந்தர்குலம் ஒருவனே கடவுள்
என்றே கூறுவது அறிவாகும் - அது
நன்றே யாகுமென உணர்ந்திடாரை மக்கள்
என்றே கூறுவது தவறாகும்"

என உடுமலைக் கவிஞர் கவரும் உயர்ந்த தத்துவமும் (படம் - மாங்கல்ய பாக்கியம்) தமிழ்த்திரையுலகம் தந்த கவிச்செல்வமாகும்.

"சத்தியமே லட்சியமாய்க் கொள்ளடா - நீ
தலைநிமிர்ந்து உனை உணர்ந்து செல்லடா
எத்தனையோ மேடுபள்ளம் வழியிலே - உனை
இடறவைத்துத் தள்ளப்பார்க்கும் குழியிலே"

இவ்வாறு சோதனைகளைத் தாண்டிச் சத்தியத்தைக் கடைப்பிடிக்குமாறு கூறுபவர்; "நீலமலைத் திருடன்" படத்தில் கவிஞர் மருதகாசி அவர்கள். மேலும் அவர் "நேர்வழி" படத்தில்

"வாய்மையே வெல்லுமடா - அதன்
வழியே நாம் செல்வோமடா" என்கிறார்.

"பிள்ளைக் கனி அமுது" என்னும் திரைப் படத்தில்,

"ஏர்முனைக்கு நேர் இங்கே எவருமே இல்லை
என்றும் நம்ம வாழ்விலே துன்பமே இல்லை" என உழவுத் தொழிலின் உயர்வைப் பாடியவர், திருக்குறளின் பெருமையை எடுத்துக்கூறு முகமாக "அறிவாளி" படத்தில்

"அறிவுக்கு விருந்தாகும் திருக்குறளே
- வள்ளுவர்
ஆக்கி நமக்களித்த அரும்பொருளே
உயிருக்கு உடல்போலே உலகுக்கு ஒளிபோலே
பயிருக்கு மழைபோலே பைந்தமிழ் மொழியாலே"

எனப்பாடியுள்ளார். மேலும் "பாடவலை" படத்தில் இடம்பெற்ற அவரது பாடலொன்று இல்லறம் எப்படி நல்லறமாகிறதென்பதை உள்ளங்குளிர உணர்த்துகிறது.

"அன்பினாலே உண்டாகும் இன்பநிலை அதை
அணைந்திடாத தீபமாக்கும் பாசவலை
சொந்தமெனும் உறவுமுறை நூலினாலே அருட்
சோதியான இறைவன் செய்த பின்னல்வேலை
(அன்பினாலே)
கொஞ்சுமொழிக் குழந்தை செல்வம்
நிறைந்ததாலே - நல்ல
குலவிளக்காய் மனைவி வந்து அமைந்ததாலே
தம்பி தமையன் ஒன்றுசேர்ந்து வாழ்வதாலே
சம்சாரத்திலே எந்தநாளும் மனசுபோலே
(அன்பினாலே)"

"நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்" என்பதை இப்பாடலின் பொருள் தெளிவாக்குகிறது. கூட்டுக்குடும்ப வாழ்க்கையின் மேன்மையைப் பறைசாற்றுகிறது. இன்றைய காலத்தில் அருகிச் சென்றுகொண்டிருக்கும் குடும்ப ஒற்றுமை பற்றிச் சிந்திக்கச் சொல்கிறது. மருதகாசியின் இன்னுமொரு திரைப் பாடல் தனது குழந்தைக்கு அறிவுரைகூறி அவனை நல்லவனாக, வல்லவனாக உருவாக்க முனையும் அன்னையொருத்தியின் மனவுணர்வுகளைப் பிரதிபலிக்கின்றது.

"எல்லோரும் உன்னை நல்லவன் என்றே
கொண்டாட வேண்டுமடா!

ஏழைஎன் வாழ்வில் உன்னாலே இன்பம்
உண்டாக வேண்டுமடா!
பாலகா அதிகாலையில் விழிக்கும்
பழக்கம் வேண்டுமடா! (எல்லோரும்)

தெய்வம் தன்னை மறவாமல் நீயும்
வாழ வேண்டுமடா! – என் கண்ணே
தீய சகவாசம் பொய் களவை
விலக்க வேண்டுமடா!
சொல்லை நீ கேளடா! – தாயின்
சொல்லை நீ கேளடா!"

ஈன்ற பொழுதினும் பெருமகிழ்வடையத் தக்கதாகத் தனது மகன் சான்றோனாக வளர வேண்டுமென்பதே இந்தத்தாயின் கனவு மட்டுமல்ல, எந்தத் தாயினதும் கனவாகவும் விளங்கும்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான்
மண்ணில் பிறக்கையிலே – அவர்
நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும்
அன்னை வளர்ப்பதிலே"

"பாதை தவறிய கால்கள் விரும்பிய
ஊர் சென்று சேர்வதில்லை – நல்ல
பண்பு தவறிய பிள்ளையைப் பெற்றவள்
பேர் சொல்லி வாழ்வதில்லை"

இப்படியான, அருமையான பொருளுணர் வரிகள் நிறைந்த புத்திமதிப் பாடலான "இந்தபசச்சைக்கிளிக்கொரு" எனத் தொடங்கும் பாடலை எழுதியவர் "நீதிக்குத் தலை வணங்கு" படத்துக்காகக் கவிஞர் புலமைப்பித்தன் அவர்கள். கண்ணதாசனின் அருமையான பாடலொன்று குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் இடையிலான குண வேறுபாட்டினைச் சித்தரிப்பது.

"குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று
குற்றங்களை மறந்துவிடும் மனத்தால் ஒன்று
நடந்ததெலாம் நினைப்பதுதான் துயரம் என்று
ஞானிகளும் மேதைகளும் சொன்னார் அன்று"

இவ்வாறு தொடங்கிப் பின்வருமாறு அமைகிறது.

"உச்சி வெயில் சூரியனை மேகம்மூடுது – நம்
உள்ளமெனும் சூரியனைக் கோபம் மூடுது
காற்று வந்தால் மறுபடியும் மேகம் ஓடுது – பேசிக்
கலந்துவிட்டால் கோபம்மாறி நேசம் ஆடுது.

பிள்ளைகளாய் இருந்தவர்தான் பெரியவரானார்
– அந்தப்
பெரியவர்கள் கோபத்தினால் சிறியவரானார்
கள்ளமில்லா உள்ளத்தினால்
பிள்ளைகளெல்லாம் – என்றும்
கண்ணெதிரே காணுகின்ற தெய்வங்களானார்"

"குழந்தையும் தெய்வமும்" ஒன்று என்ற கருத்தை அதே பெயரிலான திரைப்படத்தில் எளிமையாகப் புரியவைத்துள்ளார் கவியரசர். எத்தனையோ அறக்கருத்துக்களையும், இலக்கிய - சமூக - சமய - வரலாற்று - இதிகாச - புராணக் கருத்துக்களையும் உள்ளடக்கிய ஆயிரக்கணக்கான சமூகப் பயனுடைய திரைப்படங்கள் தமிழில் உள்ளன. எமது மாணவர்களும், ஏனையவர்களும் அன்னப்பறவை போலத் தரங்கண்டு அவற்றைப் படித்துப் பயன்பெறவேண்டும். பழைய தமிழ்த் திரைப்படப் பாடல்களிலுள்ள பொருளை, இலக்கியச்சுவையை, நோக்கத்தை நுட்பத்தை, கவியின்பத்தை மாந்திக் குடிக்கும் வல்லமை மாணவரிடத்தே உருவாக வேண்டும். தற்காலச் சினிமாப் பாடல்களிலும் இடைக்கிடையே "ஒவ்வொரு பூக்களுமே" போன்ற சில நல்ல பாடல்களைத் தரிசிக்க முடிகிறது. வீணானவை பலவாயிருந்தாலும் மனிதகுல மேம்பாட்டுக்குக் கானவை சிலவாவது வெளிவருவது ஆறுதலைத்தருகிறது. இரசனையுணர்ச்சிமிக்க ஆசிரியர்கள் தம்மையும் வளர்த்து, மாணவரிடையேயும் திரைப்பாடல் பற்றிய இரசனையை வளர்க்கு முயற்சி செய்யவேண்டும். நல்ல இசை எது? நல்ல பாடல் எது? நமது நன்மை நாடிய கருத்து எது? அழகியல் எது? அறிவுபூர்வமானது எது? என்பதைத் தெரிந்து புரிந்துகொள்ள வழிகாட்டப்பட வேண்டும்.

"ஒருகாலத் தமிழ்நாடு இதுதானடா! – அதை
உன்காலத் தமிழ்நாடு அறியாதடா!" எனக் கண்ணதாசன் பாடியதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அப்போதுதான் தமிழ்த் திரைப்படவுலகில் பலநூறு பாடல் முத்துக்களை இனங்கண்டு பொறுக்கியெடுக்க முடியும். வருங்காலச் சந்ததிக்கும், எத்தனையோ இன்னல்களுக்கிடையில் அல்லோல கல்லப் படும் இலங்கைத் தமிழர்க்கும் திரை இலக்கியம் என்ற செந்நெறியினூடாகப் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்ச முடியும்.

# STEM CELLS



**வி.எஸ். குணசீலன்**
சிரேஸ்ட விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

தாயின் கருப்பையில் குழந்தை உருவாகும் போது, தாய்க்கும் குழந்தைக்கும் இடையிலான ஒரு இணைப்புப்பாலமாக இருந்து பதார்த்தங் களைப் பரிமாறிக் கொண்டிருப்பது தொப்புள் கொடிதான். குழந்தை பிறந்தவுடன் தொப்புள் கொடியின் பயன்பாடும் முடிவுக்கு வந்துவிடுவதால் அதனை வெட்டி ஒரு கழிவாக வீசி விடுவதே இது நாள்வரையான நமது வழக்கமாக இருந்து வந்துள்ளது. ஆனால், இப்போது அந்தத் தொப்புள் கொடியைக் குழந்தையின் வாழ்நாள்வரைக்கும் "ஸ்ரெம்செல்" (Stem cell) வங்கிகள் வைத்துப் பாதுகாப்பாகச் சேமிக்குமாறு மருத்துவர்கள் ஆலோசனை கூற ஆரம்பித்திருக்கிறார்கள். ஆம்!, இதுவரை சிகிச்சைகள் கண்டறியப்படாத நோய்க ளுக்கான தீர்வைத்தரக்கூடிய "ஸ்ரெம்செல்" தொப்புள் கொடியில் இருப்பது கண்டறியப்பட் டதைத் தொடர்ந்து குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டு வந்த தொப்புள் கொடிக்கு இப்போது புதுமவுசு கிடைத்திருக்கிறது.

ஸ்ரெம்ஸ் செல்ஸ் (Stem cells) என்றால் நமது உடல் கோடானகோடி கலங்களால் ஆக்கப் பட்டதென்பது எல்லோருக்கும் தெரியும். இவற்றி லும் இரத்தத்தில் உள்ள செங்கலம், வெண்கலம், நரம்பில் உள்ள இயக்க நரம்புக்கலம், புலன் நரம்புக்கலம், நாக்கில் உள்ள சுவையரும் பாக்கலம், உணவுக்குழாயின் மேலணிக்கலம்.... என்று தோற்றத்திலும் தொழிலும் வேறுபட்ட 220 வரையான கலவகைகள் உள்ளன. இவை அனைத் துமே, முட்டைக்கலமும் விந்துக்கலமும் கருக்கட்டி உருவான ஒற்றை நுகக்கலத்தில் இருந்து தோன்றியவைதாம்.

தாயின் கருப்பையில் நுகம் பதிந்து கலப் பிரிவுக்கு ஆளாகும்போது ஆரம்பத்தில் எல்லாக் கலங்களும் வேறுபாடுகள் எதுவுமின்றி ஒரே மாதிரியாகவே காணப்படும். இக்கலங்கள் மேலும் மேலும் பிரிந்து முளையமாகித் தொடர்ந்து விருத்தி அடையும்போது, தொழிலுக்கு ஏற்ப வேறுபட்ட கலங்களாகவியத்தும் அடைகின்றன. கூடவே தமது பிரிகின்ற ஆற்றலையும் இழந்து விடுகின்றன.

மூளையில் உள்ள நரம்புக்கலங்கள், இதயத் தின் தசைக்கலங்கள் போன்றவை தமது பிரிகின்ற இயல்பை முற்றாகவே இழந்து விட்டிருக்கின்றன.

எனினும், அவசரத் தேவைகளுக்கு உதவு கின்ற கையிருப்பைப்போன்று பிரிகின்ற வலுவைத் தொடர்ச்சியாகத் தக்கவைத்துக்கொண்டிருக்கின்ற

நமது உடலின் சில பாகங்களில் காணப்படத்தான் செய்கின்றன. செவ்வென்பு மச்சையில் உள்ள கலங்கள் இதற்கு ஒரு உதாரணம். குருதியில் செங்கலங்கள் இறக்கும்போது செவ்வென்பு மச்சைக் கலங்கள் பிரிந்து புதிது புதிதாகச் செங்கலங்களை உருவாக்கி வருகின்றன. பிரிகின்ற ஆற்றலை எப்போதும் கொண்டுள்ள கலங்களைத் தான் ஆங்கிலத்தில் "ஸ்ரெம் செல்ஸ்" (Stem cells) என்கிறார்கள். தமிழில், இதற்கு நேரடி மொழிபெயர்ப்பாகத் "தண்டுக்கலங்கள்" என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. எனினும், உடல் இழையங்களின் தோற்றத்துக்கு ஆதி மூலமான இந்தக் கலங்களை "மூலக்கலங்கள்" என்று அழைப்பது கூடுதல் பொருத்தமானது. எலும்பு மச்சையைப் போன்றே தொப்புள்கொடி, விழித்திரை, பற்குழி போன்றவற்றிலும் தண்டுக் கலங்கள் கணிசமான அளவில் காணப்படுகின்றன. மூளைய விருத்தி முற்றுப்பெற்ற பின்பும் காணப் படும் இவற்றை நிறைவுடலித் "தண்டுக்கலம்" என்கிறார்கள்.

### தண்டுக்கலங்களின் மருத்துவ முக்கியத்துவம்

நரம்புக்கலங்கள் சேதமடையும்போது, செங்கலங்கள் உருவாகுவதைப் போன்று புதிதாக உருவாகுவதில்லை. நரம்பு இழையத்தின் இடத்தைத் தொழிற்பாடற்ற நார் இழையமே நிரப்பி விடுகிறது. இதனாலேயே மூளையில் ஏதாவது சேதம் ஏற்படும் போது பாதிப்பு நிரந்தரமாகி விடுகிறது. இதேபோன்றே மாரடைப்பு ஏற்பட்டு இறக்கின்ற இதயத்தசைக்கலங்களுக்கு மாற்றாக, அவ்விடத்தில் நாரிழையமே வளர்கிறது. இத்தகைய புத்துயிர்ப்புத்திறனற்ற இழையங்களில் சேதம் ஏற்படும்போது அவற்றைத் தண்டுக் கலங்களினால் சீரமைக்கும் முயற்சிகளில் மருத்துவ உலகு இறங்கியுள்ளது.

மனித மூளையில் தண்டுக்கலங்கள் குறைவாகவே உள்ளன. ஆனாலும், அவற்றை வேறாக்கி எலிகளின் மூளையில் செலுத்தியபோது அவை நரம்புக்கலங்களாக வியத்தம் அடைவது கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஆய்வின் மூலம் அல்சைமர் நோய் (Alzheimer disease) பார்க்கின்சன் நோய் (Parkinson's disease) போன்ற குணப்படுத்த முடியாத, மூளையுடன் தொடர்புபட்ட நோய்களைத் தண்டுக் கலங்களைப் பயன்படுத்தி நிவர்த்தி செய்யலாம் என்ற நம்பிக்கை மருத்துவ விஞ்ஞானிகளிடையே ஏற்பட்டுள்ளது.

தண்டுக்கல சிகிச்சை எதிர்கால நம்பிக்கையாக மாத்திரம் அல்லாமல் அண்மையில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டும் உள்ளது. பிறக்கும் போதே சுவாசப்பாதையில் வாதனாளி (Wind pipe) பூரணமாக விருத்தி அடையாத இரண்டு வயதுப் பெண் குழந்தைக்கு அமெரிக்காவில் தண்டுக்கல சிகிச்சையின் மூலம், அதை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அக் குழந்தையின் செவ்வென்பு மச்சையில் உள்ள தண்டுக்கலங்களைப் பயன் படுத்தியே வாதனாளி புதிதாக வளர்த்தெடுக்கப் பட்டுள்ளது.

இதேபோன்றே தொப்புள்கொடி, பற்குழி போன்றவற்றில் காணப்படும் தண்டுக்கலங்களைப் பயன்படுத்தி நீரிழிவு, குருதிப் புற்றுநோய் போன்ற நோய்களுக்கும் சிகிச்சைகள் மேற்கொள்ள முடியும் என்பதால், இவற்றைச் சேமிப்பதற்கென்று பல்வேறு நாடுகளிலும் தண்டுக்கல வங்கிகள் (Stem cells Bank) உருவாக ஆரம்பித்துள்ளன. இங்கு, பிரித்தெடுக்கப்படும் தண்டுக்கல இழையங்களைத் திரவ நைதரசனில், பூச்சியத்துக்கும் 100பாகை செல்சியஸ் குறைவான மிகக்குறைந்த வெப்பநிலையில் சேமிக்கிறார்கள். கிறையோஜெனிக் (Chryogenic preservation) என்னும் இம் முறையில் தண்டுக்கலங்களை ஆயிரம் வருடங்கள் வரையில் கூடப் பத்திரமாகச் சேமிக்கமுடியும்.

### தூண்டப்பட்ட தண்டுக்கலங்கள்

மருத்துவ ஆய்வுகூடங்களில் சோதனைகளை மேற்கொள்வதற்குத் தண்டுக்கலங்களுக்குப் பற்றாக்குறைவு நிகழ்கிறது. ஆய்வுகளில் பெரும்

பாலும் முளையத் தண்டுக்கலங்களையே பயன் படுத்தி வருகிறார்கள். குழந்தை இல்லாத தம்பதி கள் சோதனைக் குழாய் முறையில் குழந்தையைப் பெற்றுக்கொள்ளும்போது, வெற்றி வாய்ப்பை அதிகரிக்கச் செய்யும் பொருட்டுப் பல முளையங் கள் உருவாக்கப்படும். கடைசியில், ஒரு முளை யமே தாயின் கருப்பையில் குழந்தை விருத்திக் காகப் பதிக்கப்படும். எஞ்சிய ஏனைய முளை யங்களைப் பெற்றே, அதிலுள்ள முளையத் தண்டுக்கலங்களைப் பயன்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஆனால் ஒரு குழந்தையாக வளரவேண்டிய முளையத்தை இப்படி மருத்துவ ஆய்வுக்குப் பயன்படுத்துவது குழந்தைக் கொலைக்கு ஒப்பானது என்ற அறநெறி சார்ந்த விமர்சனங்களை இம் முளையத் தண்டுக் கல முறை எதிர்கொண்டு வருகிறது. இந் நிலையில் இத்தகைய கண்டனங்கள் எழாத விதத்தில் தண்டுக்கலங்களை உருவாக்கும் புதிய முறை யொன்றையும் மருத்துவ ஆய்வாளர்கள் கண்டறிந் திருக்கிறார்கள்.

எமது உடலில் காணப்படும் தண்டுக்கலங்கள் அல்லாத சாதாரண உடற்கலங்களில் கூட மரபணுக்களில் சில மாற்றங்களைச் செய்து அவற்றைத் தண்டுக்கலங்களாகத் தொழிற்படச் செய்யமுடியும் என்று அறியப்பட்டுள்ளது. இப்படி, ஒரு இழையம் உயிர்க்கடிகாரத்தில் பின்னோக்கிச் சுழன்று மீண்டும் பிரியத்தொடங்கும்போது அதைத் தூண்டப்பட்ட தண்டுக்கலங்கள் (Induced pluri potent stem cells) என்கிறார்கள்.

சீன விஞ்ஞானிகள் அண்மையில் இத்தகைய தூண்டப்பட்ட தண்டுக் கலங்களைப் பயன்படுத்தி எலியின் முளையங்களை உருவாக்கி உள்ளார் கள். அத்தோடு நிற்காமல், அம்முளையத்தில் சிலவற்றைப் பெண் எலிகளின் கருப்பையில் பதிவைத்து முழு எலிகளாக விருத்தி அடையச் செய்தும் உள்ளார்கள். இவ்வாறு ஒரு நிறைவான விலங்கை சில தண்டுக்கலங்களைப் பயன்படுத்தி உருவாக்க முடியுமெனில், விரைவில் மனிதர் களுக்கு வேண்டிய மாற்று உறுப்புக்களையும் ஆய்வுகூடத்தில் தண்டுக்கலங்கள் உருவாக்கித் தரும் என்பதில் நம்பிக்கையோடு காத்திருக்கலாம்.

கூடவே, தொப்புளில் இருந்து உலர்ந்து விழும் தொப்புள் கொடித் துண்டை அட்சரக்கூடுகளில் அடைத்து அணியும் பழக்கம் கொண்ட நாம், அதற்குக் கிடைத்திருக்கும் மருத்துவ மகிமையை யிட்டு மற்றவர்களைவிடக் கொஞ்சம் அதிகமாகவே பெருமை கொள்ளலாம்.

# புலமைப் பரிசில் பரீட்சை முதல் உயர் தொழில்சார் பரீட்சை வரை பொது அறிவு பாடத்தின் முக்கியத்துவம்



**திரு. P. உமாசங்கர்**
B.Com, M.Com (Kelaniya), PGDE (NIE)
Spl. Trd. Com, NDBF
விரிவுரையாளர்
மருதானை தொழில்நுட்பக் கல்லூரி.

**அறிமுகம்**

**"அ"** என்னும் எழுத்துடன் தனது அரிச் சுவடிக் கல்வியை ஆரம்பிக்கும் எந்த ஓர் மாணவனும் புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எனும் மூன்று பிரதான தேசிய மட்ட பரீட்சைகளுக் கூடாக தனது பதின்மூன்று வருடகால பாட சாலைக் கல்வியை பூரணமாக்கி நான்கு வருட கால பல்கலைக்கழக கல்வியை கற்று அல்லது மூன்று வருட கால தொழிற்கல்வியைப் பெற்று தொழிற் சந்தைக்குள் நுழைந்து சிறந்த உயர் தொழில் வாய்ப்பை பெற எத்தனிக்கின்றான் அம் மாணவன்...

ஆம், அவன் ஓர் பட்டதாரிதானே? எனினும் இங்கு மேலும் ஓர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலமே அவன் சிறந்த உயர் தொழில் வாய்ப்பொன்றை பெற்றுக்கொள்ள முடியும். இதுவே இன்றைய நிலைமை. அவ்வாறாயின் அவன் எவ்வாறான போட்டிப் பரீட்சைக்கு முகங்கொடுக்கத் தயாராக வேண் டும்? இதற்கான ஓர் விரிவான விளக்கத்தையே இக்கட்டுரை உங்களுடன் அலச ஆரம்பிக் கின்றது.

1997ஆம் ஆண்டில் இலங்கையில் மேற் கொள்ளப்பட்ட பாடசாலைக் கலைத்திட்ட சீர்திருத்தங்களுக்கமைய, பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டமும், சிறந்த ஆளு மைப் பண்புள்ள மாணவனை உருவாக்கும் நோக்கில் அவனது புத்தகக் கல்வி முறை மைக்கு மேலாக, உலக அறிவு விடயங்களை வழங்கும் நோக்கில் தரம் 5 முதல் சகல தரங் களிலும் பொது அறிவு புகுத்தப்பட்டு கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் பல் கலைக்கழக அனுமதிக்கு முக்கியமாக சித்தி யடைய வேண்டிய பாடமாக இப்பொது,அறிவுப் பாடம் "பொதுச் சாதாரணதரப் பரீட்சை" எனும் பெயரில் அப்போதய கல்வி அமைச்சர் கௌரவ ரிச்சர்ட் பத்திரண அவர்களால் அறிமுகப்படுத் தப்பட்டது.

இக்காலப் பகுதியில் தான் புலமைப்பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண தரப்பரீட்சையில் வரலாறு, விஞ்ஞா னமும் தொழில்நுட்பவியலும், வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் எனும் பாடங்களிலும் மாணவரது உலக அறிவு தொடர்பான விடயங் களை மதிப்பிடும் பொது அறிவு வினாக்கள்

நேரடியாக கணிசமான பங்கு இடம்பெற ஆரம்பித்தன.

ஆரம்ப காலங்களில் தான் இலங்கையில் இலங்கை நிர்வாக சேவை (SLAS) போன்ற உயர் பரீட்சைகளுக்கு மட்டும் அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் போது இப்பொது அறிவுடன் தொடர்புடைய பாடங்கள் மூலம் பரீட்சைகள் நடாத்தப்பட்டன. ஆனால் தற்பொழுது இலங்கையில் கூட அபி விருத்தி அடைந்த நாடுகளைப் போல தேசிய பல்கலைக்கழக அனுமதியாயினும் சரி, தொழில் வாய்ப்பொன்றைப் பெறுவதாயினும் சரி இப்பொது அறிவுப் பாடத்தில் சிறந்த அறிவு காணப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படு கின்றது.

இலங்கையின் இன்றைய பாடசாலைக் கலைத்திட்டத்தை நோக்கும்போது தரம் 5 வகுப்புக்களில் மாணவர்களை உதவிப்பணத் திற்காக தேர்ந்தெடுக்க நடாத்தப்படும் புல மைப்பரிசில் பரீட்சை வினாத்தாளின் இரண் டாம் வினாத்தாளில் அத்தரத்திற்கு ஏற்றளவில் தேசிய, சர்வதேச விடயங்களை மாணவன் அறிந்திருக்க வேண்டும் எனும் எதிர்பார்ப்பில் கணிசமான வினாக்கள் இடம்பெறுவதை அவ தானிக்க முடியும். மேலும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் மூன்று பிரதான பாடங்களுடன் பொதுச் சாதாரணப் பரீட் சைக்கு சித்திப்புள்ளி பெற்றால் மட்டுமே அவன் பல்கலைக்கழகத்திற்கு நுழையும் வாய்ப்பைப் பெறுகின்றான். இங்கு ஓர் மாணவன் தனது மூன்று பிரதான பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்று பொதுச்சாதாரண பரீட்சையில் முப்ப துக்குக் குறைவான புள்ளிகளைப் பெறுவானா யின் அவன் பல்கலைக்கழக அனுமதி வாய்ப்பை இழக்க நேரிடும். அல்லது அப்பரீட் சைக்கு இரண்டாம் தடவை தோற்றி சித்தியடை வதன் மூலமே பல்கலைக்கழக கல்வியைத் தொடர முடியும் என்பது பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவின் அனுமதி நடை முறையாகும்.

| இல | பரீட்சையின் பெயர் | பொது அறிவும் அதனுடன் தொடர்பான பாடங்களும் |
|---|---|---|
| 01. | தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை | பகுதி I, II வினாத்தாள்களில் பகுதி II வினாத்தாளில் |
| 02. | க.பொ.த. சாதாரண தரம் | வரலாறு, விஞ்ஞான தொழில்நுட்பவியல், வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் போன்ற பாடங்களின் பகுதி I வினாத்தாளில் |
| 03. | க.பொ.த உயர்தரம் | பொதுச்சாதாரண வினாத்தாளில் 60 வினாக்களில் முதல் 15 வினாக்கள் |
| 04. | முகாமைத்துவ உதவியாளர் ஆட்சேர்ப்பு | மொழித்திறமை, நுண்ணறிவு |
| 05. | கிராம அலுவலர் ஆட்சேர்ப்பு போட்டி பரீட்சை | பொது அறிவும் நுண்ணறிவும், மொழியாற்றல் |
| 06. | பட்டதாரி ஆசிரியர் ஆட்சேர்ப்பு பரீட்சை | பொது அறிவு, நுண்ணறிவு |
| 07. | வங்கி அலுவலர்களுக்கான ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை | பொது அறிவு, எண்ணியல் திறன், கிரகித்தல், ஆங்கிலம் |
| 08. | இலங்கை நிர்வாக சேவை SLAS (திறந்த) ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை | பொது அறிவு, நுண்ணறிவு, முகாமைத்துவ உளச்சார்பு, கட்டுரையும் சுருக்கமும். |
| 09. | இலங்கை கல்வி நிர்வாக சேவை SLEAS (திறந்த) ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை | நுண்ணறிவு, கிரகித்தல், பொது அறிவு, கட்டுரை |
| 10. | இலங்கை திட்டமிடல் சேவை (திறந்த) ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை | பொது அறிவு, நுண்ணறிவு, மொழியும் கட்டுரையும் |
| 11. | இலங்கை விஞ்ஞான சேவை ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை | பொது அறிவு, நுண்ணறிவு |
| 12. | இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவை ஆட்சேர்ப்பு போட்டிப் பரீட்சை | பொது அறிவு, நுண்ணறிவு |

**பொது அறிவு பாடம் என்பது**

இது ஏனைய கலைத்திட்டப் பாடங்களைப் போல ஓர் பாடமன்று. மாறாக தேசிய ரீதியாக கடந்த காலங்களில் இடம்பெற்ற, செக்கன் இடைவெளிகளில் இடம்பெறுகின்ற எதிர் காலத்தில் இடம்பெறவுள்ள விடயங்களை சீரான முறையில் தொகுத்து மனனம் செய் தலாகும்.

**பரீட்சையில் பொது அறிவு பாடத்தின் முக்கியத்துவம்:**

இங்கு பாடசாலைக் கலைத்திட்ட பரீட்சை கள் முதல் தொழில் வாய்ப்புக்களுக்காக ஆட் சேர்ப்பு செய்யப்படும் போட்டிப் பரீட்சைகள் வரை பொது அறிவும் அதனுடன் தொடர்பான ஏனைய பாடங்களும் எங்ஙனம் பரீட்சிக்கப்படு கின்றன என்பதை இவ் அட்டவணை காட்டு கின்றது.

**பொது அறிவு பாடத்தை இலகுவாகக் கற்று கூடிய புள்ளிகளைப் பெறும் நுட்ப முறை**

இப்பாடம் ஏனைய பாடங்களைப் போல குறித்த ஓர் நூலை மட்டும் கொண்டு இலகு வாக தயார் செய்யப்பட முடியாதது. மாண வர்கள் சிறு வயது முதலே வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, இணையம் போன்ற தகவல் தொடர்பு சாதனங்களுடன் தம்மை ஒன்றித்து உலகில் செக்கன் இடைவெளிகளில் மாற்றமடையும் தன்மைக் கேற்ப விரைவாக அவற்றை இற்றைப்படுத்தி (Update) மனனம் செய்து கொள்வதன் மூலமே இப் பாடத்தில் கற்பதில் உள்ள கடினத் தன்மையை நீக்கி பரீட்சையை இலகுவாக எதிர் கொண்டு உயர்புள்ளிகளைப் பெற முடியும்.

**முடிவுரை:**

சுருங்கக் கூறின் பெற்றோரின் பலத்த எதிர்பார்புக்குரிய தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மேலும் கூடியளவு மாணவர்கள் சித்தியடையவும், ஏறத்தாள 2% சதவீதத்திற்கு அண்மித்த அளவு பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் எண்ணிக்கையே மேலும் அதிகரிக்கவும், விசேட ஆளணி சேவை என அழைக்கப்படும் அரசாங்க உயர் பதவி களுக்கு கூடியளவு மாணவர்கள் தெரிவு செய் யப்படுவதற்கும் ஏற்ப மாணவர்கள் சிறுவயது முதலே இப்பாடம் தொடர்பாக தம்மை தயார் செய்வதன் மூலம் இலகுவாக அதியுயர் புள்ளிகளைப் பெற முடிவதுடன், இதற்கு கல்வியாளர்களும் இன வீதாசார முறை, வெட்டுப்புள்ளி முறை என்பவற்றை மாணவர் கள் இலகுவில் வெற்றி கொள்வதற்கு ஏற்ப இப்பாடம் தொடர்பாக பாடசாலை மட்டத்தில் வினாவிடை போட்டிகள், சஞ்சிகை வெளியீடு கள், தகவல் சமர் போன்ற நிகழ்ச்சிகளை நடாத்துவதன் மூலம் மாணவர்களின் தேடலை அதிகரித்துச் செல்வதன்மூலம் தாய்நாடு சுதந்திரமடைந்த உடன் தசாப்த காலத்திற்குள் தமிழ் பேசும் உயர் அதிகாரிகள் செயலாற்றி யது போல மீண்டும் அவ் ஆசனங்களை எதிர்கால எமது தமிழ் பேசும் மாணவர் சமூகம் அலங்கரிப்பர் என்பதில் எவ்வித ஐயமு மில்லை.

# கிரமமான உடற்பயிற்சியின் மூலம் ஏற்படும் உடற்றொழிலியல் மாற்றங்கள்
# (The Physiological Effect of Regular Training)



**திரு. பா. வாசுதேவன்**
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

இன்று நாம் எதிர்நோக்கிவரும் முக்கிய சாவல்களுள் பிரதான இடம்பிடிப்பன நோய்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதும், ஆரோக்கியமான வாழ்வு வாழ்வதும் ஆகும். எனினும் எமது பழக்கவழக்கங்கள், உணவு முறைகள், உடல் ஆரோக்கியத்தில் எமது ஈடுபாடு என்பனவற்றால் எமது உடலில் பல தொற்றாத நோய்கள் ஏற்படக்காரணமாகின்றன. அவற்றில் நீரிழிவு, உயர்குருதியமுக்கம், மாரடைப்பு என்பன முக்கியமானவையாகும். இவற்றைத் தவிர்க்க வேண்டுமாயின் சிறந்த உணவும், கிரமமான உடற்பயிற்சியும் எமக்குத் தேவையாகும். அதிகமானவர்கள் உடற்பயிற்சி என்பது ஒரு விளையாட்டு வீரனுக்கே உரியதென்று கருதுகின்றார்கள். இது தவறான கருத்தாகும். அனைவரும் உடற்பயிற்சியின் ஊடாக தங்கள் உடலை மிகவும் ஆரோக்கியமாக வைத்திருக்க முடியும். அத்துடன் நீண்ட நாட்கள் நோயற்ற வாழ்வைப் பெற்று வாழ முடியும். விஞ்ஞான ரீதியாக, நன்கு திட்டமிட்ட கிரமமான, உடற்பயிற்சியின் மூலம் உடற்றொழிலியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன எனவும் இதன் ஊடாக சிறந்த ஆற்றுகையை ஏற்படுத்த முடியும் எனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆய்வாளர்கள் ஒரு மனிதனின் ஆற்றுகையைத் தீர்மானிப்பதில் முக்கிய காரணிகளாக இரண்டைக் குறிப்பிடுகின்றார்கள்.

**I. பரம்பரையால் பெற்றுக்கொண்ட திறன்கள்**
***(Genetic Endowment)***

இங்கு உடற்பயிற்சியினூடாக உடற்றகைமையில் ஏற்படுகின்ற மாற்றங்களை நோக்குவோம். உதாரணமாக ஒலிம்பிக்போட்டியில் நடைபெறுகின்ற முக்கிய நிகழ்வான 100 மீற்றர் தூரத்தை எடுத்துக் கொண்டால் வீரர்கள் ஓடி முடிப்பதற்கு எடுக்கும் நேரம் குறைந்து கொண்டு செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. (1896ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் "Thomas Burke" 12.00 செக்கன் நேரத்தில் ஓடி முடித்தார். அதன் பின்னர் 2012ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் "Usain Boit' 9.63 செக்கன் நேரத்தில் ஓடி முடித்தார்.) இதனூடாக உடற்பயிற்சியின் மூலம் உடற்றொழிலியல் மாற்றம் நடைபெற்று வீரர்களின் ஆற்றுகை (Performance) முன்னேற்றமடைந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. கிரமமான உடற்பயிற்சியின் மூலம் பின்வரும் மாற்றங்களை அவதானிக்க முடியும்.

1. குருதிச்சுற்றோட்டத் தொகுதியில் ஏற்படுகின்ற மாற்றங்களை நோக்கும்போது இதய அடிக்கனவளவு (Stroke volume) அதிகரிக்கின்றது. அதாவது இதய அடிப்பொன்றின் போது வெளியேறும் குருதியின் கனவளவு அதிகரிக்கின்றது. இதய அடிப்பு எனும் போது ஒன்றுவிட்டொழுங்கில் இடம்பெறும் சோணையறை, இதயவறைச் சுருக்கமும் தளர்வும் ஆகும். சாதாரண நபர் ஓய்வில் இருக்கும்போது இதய அடிப்பொன்றில் வெளியேற்றப்படும் குருதியின் அளவு 70 - 90ml ஆகவும் அவர் விளையாடும்போது இதய அடிப்பொன்றில் வெளியேற்றப்படுகின்ற குருதியின் அளவு 100-120ml ஆகவுள்ளது. நன்கு கிரமமாக உடற்பயிற்சி பெற்றவர் ஓய்வில் இருக்கும்போது இதய அடிப்பொன்றில் வெளியேற்றப்படுகின்ற குருதியின் அளவு 100-120ml ஆகவும் உள்ளது. அவர் விளையாடும்போது ஒரு அடிப்பின் மூலம் வெளியேற்றப்படுகின்ற குருதியின் அளவு 150-170ml ஆகும். இதன் மூலம் ஒருவர் களைப்பின்றி நீண்டநேரம் வேலை செய்ய முடியும்.

2. தசைப்பிடிப்புத் தொடர்பாக ஏற்படுகின்ற மாற்றங்களை நோக்கும்போது ஒரு நபர் பயிற்சியின்றி விளையாட்டில் ஈடுபடும் போதோ அல்லது கடுமையாக வேலை செய்யும்போதோ தசைப்பிடிப்பு ஏற்படுகின்றது. இதற்கு பிரதான காரணமாக "இலற்றிக்கமில" உருவாக்கத்தைக் குறிப்பிட முடியும். கிரமமான முறையில் பயிற்சி செய்வதன் மூலம் இலற்றிக்க மிலத்தின் உயர் சகிப்புத்தன்மை அதிகரிக்கின்றது. (Lactic-acid) அதாவது சாதாரண நபர் விளையாடும்போது 100ml குருதியில் 80-90mg இலற்றிக்கமிலம் உருவாகும்போது தசைப்பிடிப்பு ஏற்படுகின்றது. பயிற்சியில் ஈடுபட்டவர் நீண்டநேரம் தொடர்ச்சியாக வேலை செய்யவோ அல்லது விளையாடவோ முடியும்.

3. வெளிவிடப்படும் சக்தி தொடர்பாக ஏற்படும் மாற்றங்களை நோக்கும்போது வேலை செய்வதற்கு அல்லது விளையாடுவதற்கு போதிய அளவுசக்தி தேவை. இவை உணவு உண்பதன் மூலம் கிடைக்கின்றது. மேலதிக சக்தி தேவைப்படும் போது இலற்றிக் அற்ற முறையின் மூலம் கிடைக்கின்றது. கிரமமான உடற்பயிற்சியின் மூலம் இலற்றிக் அற்ற முறையால் வெளிவிடப்படுகின்ற சக்தியின் அளவு அதிகரிக்கின்றது. அதாவது ATP-CP கொள்ளவு அதிகரிக்கின்றது. இங்கு தசைநார்களில் உள்ள CPயும் ATPயும் அதிகரிக்கின்றது. (ATP-ase, myokinase, creative kinase என் னும் நொதியங்களின் செயற்பாடு அதிகரித்து ATP, CP உடைத்தலும் ATPயின் மீள் தொகுப்புக்கும் உதவுகின்றது).

4. சுவாசத்தொகுதி தொடர்பாக ஏற்படும் மாற்றங்களை நோக்கும்போது உடற்பயிற்சியில் ஈடுபடுபவரின் சுவாசத்தொகுதி சிறப்பாக செயல்படுகின்றது. இதன் காரணமாக சுவாசத்தொகுதியுள் உட்செல்கின்ற வளியின் கனவளவு அதிகரிக்கின்றது. இதன் மூலம் நாடியில் இருந்து பெற்றுக்கொள்கின்ற ஒட்சிசன் அளவு அதிகரிக்கின்றது. இதன் மூலம் நாடியில் இருந்து பெற்றுக் கொள்கின்ற ஒட்சிசன் அளவு அதிகரிக்கின்றது. அத்துடன் ஒட்சிசனை சேமித்து வைத்திருக்கின்ற மயோகுளோபின் (Myoglobin) எனும் நிறப்பொருள் அதிகரிப்பதால் ஒட்சிசன் சேமிப்பு அதிகரிக்கின்றது. இதன்மூலம் உடற்பயிற்சியில் ஈடுபடுபவர் அதிகநேரம் களைப்பின்றி வேலை செய்வார்.

5. சேமிக்கப்படும் சக்தி தொடர்பாக ஏற்படும் மாற்றங்களை நோக்கும்போது உடற்பயிற்சி கிரமமாக மேற்கொள்வதன்மூலம் தசைக் கலங்களில் கிளைக்கோஜன் (glycogen) சேமிப்பு அதிகரித்துச் செல்வதுடன் இழை மணிகளின் எண்ணிக்கையும், பருமனும் அதிகரித்துச் செல்கின்றது. அத்துடன் அதன்

மென்சவ்வுகளின் மேற்பரப்புக்களும் அதிகரித்துச் செல்கின்றது.

6. குருதியமுக்கம் தொடர்பாக ஏற்படும் மாற்றங்களை நோக்கும்போது குருதியமுக்கம் குறைகின்றது. அதாவது சாதாரண நபர் விளையாட்டில் ஈடுபடும்போது குருதியமுக்கம் அதிகரிப்பதிலும் பார்க்க பயிற்சி பெற்றவர் விளையாட்டில் ஈடுபடும்போது குருதியமுக்கம் குறைகின்றது. இதயத் துடிப்பு குறைகின்றது. அதாவது சாதாரண நபர் விளையாட்டில் ஈடுபடும்போது இதயமானது நிமிடத்திற்கு 200 தடவை துடிக்கின்றது. இதன்மூலம் கிரமமாக உடற்பயிற்சி பெற்ற நபருக்கு நிமிடத்திற்கு 185-190 தடவைகள் துடிக்கின்றது. இதனால் கிரமமாக உடற்பயிற்சிபெற்றவர் குருதியமுக்க பாதிப்பின்றி நீண்டநேரம் செயற்பட முடியும்.

7. இதயத்தில் ஏற்படுகின்ற மாற்றத்தை நோக்கும்போது பின்வருனவற்றைக் கருதலாம். இதயத் தசைகளின் வலிமை அதிகரிக்கின்றது. இதய அறைகளின் கொள்ளவு அதிகரிக்கின்றது. இதயவறைச் சுவர்களின் தடிப்பு அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. இதன்மூலம் பம்பும் ஆற்றல் அதிகரித்து அதிகளவான குருதியை வெளியேற்ற முடியும். எனவே உடற்பயிற்சி பெற்றவர் அதிகளவு சக்தியை வெளிவிடும் ஆற்றல் காணப்படும்.

8. தசைநார்களில் ஏற்படுகின்ற மாற்றத்தை நோக்கும்போது பருமன் அதிகரிக்கின்றது. குறுக்கு வெட்டுப்பரப்பு அதிகரிக்கின்றது. தசைக்கும் என்புக்குமான இணைப்பு வலிமையடைகிறது. தசை நார்களினுள் காணப்படுகின்ற திரவத்தின் அளவு அதிகரிக்கின்றது. அத்துடன் புரதத்தின் (Actomyosin) அளவும் அதிகரிக்கின்றது. அத்துடன் கிரப்பின் வட்டம் (Kreb's cycle) இலத்திரன் இடமாற்றத்தொகுதியில் (electron-transport system) சம்பந்தப்பட்ட நொதியங்களின் தொழிற்பாட்டை அதிகரிக்கின்றது. அத்துடன் கிரப்பின் வட்டம் (Kreb's cycle) இலத்திரன் இடமாற்றத் தொகுதியில் (electron-transport system) சம்பந்தப்பட்ட நொதியங்களின் தொழிற்பாட்டை அதிகரிக்கின்றது. அத்துடன் சேமிக்கப்பட்ட கொழுப்பை ஒட்சியேற்றம் அடையச்செய்து சுயாதீன கொழுப்பாக விடுவிக்கச் செய்கின்றது. கிரமமாக உடற்பயிற்சியில் ஈடுபடும்போது தீமையான கொழுப்பு நீக்கப்படுதல் சிறப்பம்சமாகக் கொள்ள வேண்டும்.

நாம் விளையாட்டு வீரருக்கு மட்டும்தான் உடற்பயிற்சி எண்ணத்தை விடுத்து, எமது வாழ்க்கையை நோய் அற்றதாகவும் சிறப்பானதாகவும் அமைக்க வேண்டுமாயின் கிரமமான உடற்பயிற்சி மேற்கொள்வது மிகவும் அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. வயது வேறுபாடின்றி தினமும் உடற்பயிற்சியில் ஈடுபடவேண்டும். எமக்கு போதிய இடவசதி, உபகரணங்கள், பயிற்சியாளர் காணப்படும் சந்தர்ப்பத்தில் மட்டும்தான் உடற்பயிற்சி செய்யலாம் என்ற எண்ணத்தை விடுத்து தினமும் 30 நிமிடம் கிரமமாக உடற்பயிற்சியில் ஈடுபடலாம். அல்லது நடைப்பயிற்சியில் ஈடுபடலாம். இதனை கடைப்பிடித்து ஆரோக்கியமான வாழ்க்கையையும் நோயற்ற சமுதாயத்தையும் கட்டியெழுப்புவது நம் ஒவ்வொருவரதும் பொறுப்பும் கடமையுமாகும்.

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**

Refer: MacDougall,H.Wenger&H.GREEN's physiological Testing of the High-Prerformance Athlete.

# மேடைப்பேச்சு



**திரு. நாக. தமிழிந்திரன்**
B.A (Hons), Dip.in.Ed. M.A (Jaffna)
சிரேஸ்ர ஆசிரியர்
யாழ். மத்திய கல்லூரி.

பேசும் பேச்சு இனிமையாக இருக்க வேண்டும். இனிய பேச்சையே எல்லோரும் விரும்புவர். எளிய பேச்சே எல்லோரையும் கவரும். இதனையே வள்ளுவர்

**"சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல்அச் சொல்லை**
**வெல்லும்சொல் இன்மை யறிந்து"**

எனக்குறிப்பிட்டுள்ளார். நாம் பேசும் சொல்லை வெல்லக்கூடிய வேறு சொல் உள்ளதா என்று ஆராய்ந்து, இல்லை என உறுதிப்படுத்திய பின்னரே அச்சொல்லைச் சொல்ல வேண்டும்.

"முதற்கோணில் முற்றும் கோணும்" என்பது பழமொழி. எனவே தொடக்கத்திலேயே மக்களைக் கவரக்கூடிய உத்தி முறைகளைப் பேச்சாளன் கையாள வேண்டும். அதேபோலச் சிறந்த குரல்வளத்தைக் கொண்டிருப்பதும் பேசும் பொருள், சந்தர்ப்பம் மக்களின் மனோ நிலை என்பனவற்றைக் கணிப்பிட்டு குரலை மாற்றியும், தொனியை ஏற்றியும் இறக்கியும் பேசும் கலையைக் கைவரப் பெற்றவனே சிறந்த பேச்சாளன் ஆகின்றான்.

மேடைப்பேச்சுக்கென்று தனித்த இலக்கண விதியெதுவும் கிடையாது. எனினும் சிறந்த மேடைப்பேச்சாளர் ஆகிய அறிஞர் அண்ணாவின் பேச்சுமுறையை எடுத்துக் காட்டலாம். உலகத் தமிழ் மாநாடு, விழா மலர் சென்னை - 1968இல் ப. இ. 37 இல் அறிஞர் அண்ணாவின் பேச்சுத் திறன்பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"பேரறிஞர் அண்ணா அவர்கள் தம் பேச்சை மேடையிலேயே தொடங்குவது இல்லை. மேடைக்கு வருவதற்கு முன்னர் தொடக்கி விடுகிறார். நீண்ட நெடுங்காலமாக அவர் இதைத் தன் பழக்கமாக்கக் கொண்டதால் அவருக்கு இது மிக எளிதாகவும், விரைவில் செய்து முடிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. அவருடைய நிறைந்த அனுபவமும், ஆழ்ந்த அறிவும் அருந்துணையாக இருந்து சிக்கல் எதையும் உண்டாக்காமல் அதில் வெற்றியடையச் செய்கின்றன" என அறிஞர் அண்ணாவின் பேச்சு உத்தி விபரிக்கப்பட்டுள்ளது. இவை மட்டுமன்றி பேசும் பொருள் எது என்பதைத் தேர்வு செய்து, புடம்போடுவது, பேசுவது அவரது வழக்கமாகும்.

குறிப்பாக மக்கள் வாழ்வுக்கு வளம் சேர்க்கும் விடயம் எதுவோ அதுவே அவரது பேசும் பொருளாகும்.

பொருளைத்தேர்வு செய்தபின் அதனைக் கேட்போர் யார், அவர்களின் இயல்பு யாது? எப்படிப் பேசினால் மக்களுக்கு இலகுவாக அதனைப் புரியவைக்கலாம் எனச் சிந்தித்துப் பார்த்துப் பேசும் பழக்கம் அவரிடமிருந்தது .நாம் வழங்கும் உணவைச் சமிபாடடையச் செய்யும் சக்தி வயிற்றுக்கு உண்டா என அறிந்துதான் வழங்க வேண்டும். திணிக்கக் கூடாது, திணித்தால் வாந்திதான் வரும்.

பேரறிஞர் அண்ணாவின் கம்பீரமான குரல் நமக்கு இல்லாவிட்டாலும் அமைதியாக அறுத்து, உறுத்துப் பேசுவதால் இதனைச் சாதிக்கமுடியும்.

சுருங்கச் சொன்னாற் பேசத் தொடங்கிய சில நிமிடங்களிலேயே கேட்போரைத் தம் வயப்படுத்தும் ஆற்றல் அறிஞர் அண்ணாவிட மிருந்தது. முதல் ஐந்து நிமிடங்கள் கேட்டவர்கள் தொடர்ந்து முழுவதையும் கேட்டு விட்டுத்தான் போக வேண்டும் என ஆவல் பொங்கக் காத்திருக்கச் செய்யும் வசீகரம் அவரிடம் இருந்தது.

**"மாதமோ சித்திரை**
**நேரமோ பத்தரை**
**இடமோ கடற்கரை**
**மக்களோ நித்திரை**
**பேசுவதோ அண்ணாத்துரை"**

என்பது சகலரும் அறிந்த எடுத்துக் காட்டாகும்.

சரி நம் நாட்டிற் குறிப்பாக வடபகுதியில் மேடைப்பேச்சு எவ்வாறு உள்ளது என்பதனை நோக்குவோம். அரசியல் சார்ந்தும், சமய பிரசார நோக்குடனும், விழாக்களில் தமது புகழை நிலைநாட்டவும் பலர் பேசுகிறார்கள். இவற்றிற் இந்து சமயம் சார்பாகப் பேசுவோர் பிரசங்க முறையையே கையாளுகின்றனர். அவற்றிற் சிலரின் பேச்சு, கதைகள், நகைச் சுவைகள், வினாக்கள், பாடல்கள் என சுவாரஸ்யமாக அமைகின்ற போதும் மக்கள் அவற்றைப் பொருட்படுத்துவதாக இல்லை. கத்தோலிக்கர்கள் ஆங்கில மொழியையும் கலந்து குரலைச் சாந்தமாக்கிக் குளைந்து குளைந்து பேசும் வல்லமையைக் கொண்டிருக்கிறனர். கம்பன் கழக ஜெயராஜ், செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன், சொல்லின்செல்வர் இரா. செல்வவடிவேல் போன்றோரது மேடைப் பேச்சை முதல்வகைக்குச் சான்று கூறலாம். இரண்டாவது வகைப் பேச்சிற்கு யாழ் மறை மாவட்ட ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, தென்னிந்தியச் திருச்சபை பேராயர் எஸ். ஜெபநேசன் போன்றோரது பேச்சுக்களை உதாரணமாகக் கூறலாம்.

சமய பேச்சுவகையிற் பலரைச் சான்று காட்டமுடியும். எனினும் வலம்புரி ந. விஜய சுந்தரம், இலங்கைத் தமிழராசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் இன்றைய பொன் விழா நாயகனுமாகிய திரு. சரா. புவனேஸ்வரன் போன்ற குறித்த சிலரது மேடைப்பேச்சைச் சான்றுகாட்ட முடியும்.

எது எப்படியிருப்பினும் மேடையில் உள்ள அத்தனை பேருக்கும் கௌரவம் கொடுக்க வேண்டும் என்பதற்காக யாவரையும் பேச வைப்பது, அவர்களும் மணிக்கணக் காகப் பேசித் தள்ளுவது ஆகிய நடவடிக்கை களால் மேடைப் பேச்சு என்றாலே ஓடித் தப்பி விட வேண்டும் என்ற வெறுப்பைப் பொதுமக்க ளிடத்தில் ஏற்படுத்தி வருகிறது.

எனவே நாம் இனிய தமிழைப் பிறரைத் தாக்கவும், பழிவாங்கவும் பயன்படுத்தாது மேடையேற்றியவனை பாடை கட்டிப் படுக்க வைக்கப்பயன்படுத்தாது, தமிழ் வாழவும், தமிழர் வளரவும் கையாளுவோமெனில் வருங் காலம் பேச்சுத் தமிழில் ஆர்வம் கொள்ளும் என எதிர்பார்க்கலாம்.

**"வாழ்க மேடைப்பேச்சுத்தமிழ்**
**வளர்க தமிழர்தம் மேன்மை"**

# நாட்டு நடப்பு



**விகடகவி மூ. திருநாவுக்கரசு**
ஓய்வுநிலை மாவட்ட நீதிபதி

உச்சியில் உயர்ந்த கொண்டை
உடையதும் புலித்தோல் சாயல்
செப்பொடு வெள்ளி சேர்ந்த
சிறப்புறு காப்பும் பூண்டு
கழுத்தினில் சிப்பியினாலான
சிறந்ததோர் கறுத்த மாலை
கரமதில் கொள்ளி ஏந்தி
கமழ்தரு புகையை ஊத
அத்தரும் புனுகும் சேர்ந்து
அளவிடா மணம் பரப்ப
நவயுக நாயகனோ இந்த
நற்சிவ வேடம் கொண்டான்
கண்கவர் காட்சி கண்டு
காரிகையர் களிப்புற்று நோக்க
எங்கிருந்து இந்த இளைஞன்
இங்குற்றான் என வினவ
கட்டுடை கனக சிங்கனார்
காவடி எடுத்து நேர்ந்து
உத்தமி மனையாளோடும்
உவந்து பால் செம்பு ஏந்தி

பத்து நாள் விரதம் பூண்டு
பால் பழம் உண்டு பெற்ற
உத்தமன் இந்த வீரன்
உதயகுமார் எனப் பகர்ந்தார்.
இத்தனை புகழ் மிக்கோனை
இங்கிலாந்து நாட்டை விட்டு
கைகட்டி பிளேனில் ஏற்றி
காசின்றி அனுப்பி வைத்தார்
இத்தனையும் அறியாதார் போல்
இங்கு இந்த கட்டழகனுக்கு
திருமணங்கள் பலவும் பேசி
திரிகின்றனர் புறோக்கர் கூட்டம்
கண்டிவன் அழகை மெச்சி
கன்னியர் பலரும் இவனை
கவர்ந்திட முனைகின்றார்கள்
ஈசனே! சிவகாமி நேசனே!
எனையாளும் தம்பிரானே!
ஆரினி இவ் ஆரணங்குகளை காப்பர்
அரங்க மா நகருளானே!

# ஓட்டிசம் - ஓர் புரியாத புதிர்



**செல்வி. துவாரகா புவனேஸ்வரன்**
மருத்துவபீட மாணவி,
மூன்றாம் வருடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மனிதர்களுக்கு வரும் நோய்களில் உணர்ச்சிகரமான பிரச்சினைகளையும் தகவல் பரிமாற்ற பிரச்சினைகளையும் ஏற்படுத்துவதில் முதன்மையான நோயாக இருப்பது ஓட்டிசம் (Autism) ஆகும். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் தங்களைத்தாங்களே குழப்பிக் கொள்வார்கள். தங்களைச் சுற்றி ஏதோ நடக்கிறது என எண்ணுவார்கள். தாங்கள் வாழும் வாழ்க்கையில் எந்த அர்த்தமும் இல்லை என்று எண்ணிக்கொள்வார்கள். இதன் காரணமாக சமூகப்புறக்கணிப்புக்கு அவர்கள் ஆளாகின்றனர். தங்களைத் தாங்களே தனிமைப்படுத்திக் கொண்டு தனிமையான உலகில் வாழ்வார்கள். இந்தநோய் லேசான நிலையில் உள்ளதா? அல்லது தீவிரமான நிலையில் உள்ளதா? என்பது அவர்களுக்கு உள்ள பிரச்சினைகளைப் பொறுத்தே அமையும்.

ஒருவர் ஓட்டிசம் நோயால் லேசாகப் பாதிக்கப்பட்டிருந்தால், பிற மனிதர்களைப் போல் இயல்பான பணிகளை மேற்கொள்ள முடியும். அதேநேரத்தில் நோயின் தாக்கம் தீவிரமானதாக இருந்தால் அவர்களில் இயல்பான வாழ்க்கையை நடத்தமுடியாது. இந்த நோயின் அறிகுறிகள் மற்றும் தீவிரம் வேறுபட்டிருந்தாலும் Autistic Spectrum disorder என அழைக்கப்படும் குழுவின்கீழ் ஓட்டிசத்தின் நிலைகள் வகைப்படுத்தப்படுகின்றன. சிறுமிகளைவிட சிறுவர்கள் மத்தியில்தான் இந்த நோய் அதிகளவில் காணப்படுகிறது. ஆனால் பெண்குழந்தைகளுக்கு ஓட்டிசம் வந்தால் அது மிகவும் தீவிரமான நிலையாகத்தான் இருக்கும். பெரும்பாலான நேரங்களில் குணப்படுத்த முடியாத அளவிற்கு இந்நோய் தீவிரமானதாக இருக்கும்.

**காரணம் என்ன?**

ஓட்டிசம் நோய் ஏற்படக் காரணம் என்று மருத்துவ சமூகத்தால் இதுவரை சரியான விளக்கத்தைக் கூறமுடியவில்லை. ஆராய்ச்சியாளர்களைப் பொறுத்தவரை, இது மரபணு மூலம் வரும் பரம்பரைநோய் எனத் தெரிவிக்கின்றனர். சில மரபணுக்கள் குறிப்பிட்ட ஒரு முறையில் இணையும்போது ஓட்டிசம் ஏற்படுவதாக ஊகிக்கப்படுகிறது. ஓட்டிசம் நோயால் பாதிக்கப்பட்டவருக்குப் பிறக்கும் குழந்தைக்கு இந்தநோய் ஏற்படுவதற்கான

வாய்ப்பு 75% ஆக உள்ளது. குழந்தை பிறப்பதற்கு முன்போ அல்லது பின்போ சில சுற்றுப்புறக் காரணிகளும் அவர்களின் மூளை வளர்ச்சியைப் பாதிக்கின்றன.

**ஓட்டிசம் நோயின் அறிகுறிகள்**

இந்தநோய்க்கு மூன்று பெரிய அறி குறிகள் உள்ளன. ஓட்டிசம் நோயால் பாதிக் கப்பட்டவர்கள் பிறருடன் எளிதில் பழகமாட் டார்கள். பிறருடன் சுமூகமாகப் பேசிப்பழக மாட்டார்கள். அவர்கள் மிகவும் அரிதாகத்தான் பிறரை நண்பராக்கிக்கொள்வார்கள். சமூகத் திலுள்ள பிறருடன் இணையமாட்டார்கள். அவர்களுக்கு சிந்தனை அல்லது கற்பனை வளம் குறைவாக இருக்கும். அதனால் சற்றுச் சிந்திக்கவேண்டிய விளையாட்டில் அவர்க ளால் ஈடபடமுடியாது. அதேபோல், அவர்க ளால் வாய்மூலமாகவோ அல்லது சைகைமூல மாகவோ பேசமுடியாது. அவர்களால் சத்தத் தையோ, ஒலியையோ, முகபாவனையையோ புரிந்துகொள்ள முடியாது. இதுபோன்ற நடத் தைக்குறைபாடுகள் குடும்ப உறுப்பினர் களைக் கடுமையாகப் பாதிக்கும். இந்த நோயு டன் வளரும் குழந்தைகளின் பேச்சுத்திறன் பாதிக்கப்படும். ஒருவரை நேருக்கு நேர் பார்க்க முடியாது. யாருடனும் சேராமல் மிகவும் தனிமையில் நேரத்தைச் செலவிடுவர்.

ஓட்டிசம் அறிகுறியுடன் இருக்கும் குழந்தைகள், ஒரு வயதுவரை இயல்பான குழந்தைகள் போல்தான் இருப்பர். மிகவிரை வாகப் பேசக்கற்றுக்கொள்வது போன்ற, வழக்கமான முன்னேற்றத்தைக்கூட அக் குழந்தைகள் எட்டும். இருந்தபோதிலும் அக் குழந்தை தட்டுத் தடுமாறி நடக்க முற்படும் போது, பிறருடன் உரையாடும் திறனைப் பெற முடியாது. அதனால் பேச்சுத்திறனை அடிக்கடி அக்குழந்தை இழக்க நேரிடும். சில பொது வான அறிகுறிகளும் உள்ளன. ஓட்டிசக் குழந் தைகள் மீண்டும் மீண்டும் ஒரே செயலைச் செய்யும் (Repetitive behaviour) பழக்கத்தைக் கொண்டிருப்பார்கள். வழக்கமான நடை முறையை மாற்றினால் அதற்குக்கடுமையான எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். குறிப்பிட்ட பொருட்களின்மீது அதிக நாட்டம் கொண்டிருப் பதுடன், சில செயல்களைத் தொடர்ந்து செய்துகொண்டே இருப்பார்கள். ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் செயற்பாடு களை அவர்களாலேயே கட்டுப்படுத்தமுடி யாது. இயல்பான முகபாவனைகளோ அல்லது உடலியல் சமிக்ஞைகளோ இருக்காது. சிந்திக்கத் தூண்டும் விளையாட்டுக்களில் ஈடுபடத்தயக்கம் காட்டுவர். எனினும் ஓட்டிசத் தால் பாதிக்கப்படும் சில குழந்தைகள் கணிதம், ஓவியம் அல்லது இசைக்கருவிகளை மீட்டுவதில் அசாதாரணமான திறமையைப் பெற்றிருப்பார்கள். இசை மற்றும் கலைத் துறையில் மிகவும் பிரபலமாக விளங்கும் பலர் ஓட்டிச நோயாளிகளாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

*Reference: Medical Tourism*

# புவனம்

50 Years
Golden Jubilee

## பின்னிணைப்புப் பகுதி





பொன்விழா நாயகனுடன் விசேடசித்தி பெற்ற க.பொ.த (சா/த) மாணவர்கள் - 2012



பொன்விழா நாயகனுடன் விசேடசித்தி பெற்ற க.பொ.த (சா/த) மாணவர்கள் - 2012

## 2012 – கல்விப் பொதுத் தராதர (சா/த)பரீட்சையில் சித்தியடைந்து கௌரவிக்கப்படும் சயன்ஸ் அக்கடமி மாணவர்கள்

01. R. சுதர்சன்
02. G. தர்சிகன்
03. S. கார்த்திகா
04. S. பிரவீனா
05. T. கோகுலன்
06. S. சயந்தன்
07. S. நிரோஜிதன்
08. P. சஜீசன்
09. P. சுவஸ்திகா
10. K. விந்துஜன்
11. S. அபிராமி
12. R. நிவேதா
13. K. லிசாந்தி
14. S. பவிதா
15. R. வினோஜா
16. A. சிவமுகுந்தினி
17. V. இந்துஜன்
18. K. சுபாங்கன்
19. S. பிள்ஸ்சினி
20. S. சம்யுக்தா
21. S. சரண்யன்
22. R. நிருபனா
23. K. ஜனார்த்தனா
24. K. கீர்த்திகா
25. J. சிந்துஜா
26. N. பிரசாந்
27. N. வானுப்பிரியா
28. T. சரண்ராஜ்
29. P. பவித்திரா
30. R. கீர்த்தனா
31. M. நிசங்கினி
32. T. தர்சிகா
33. P. ரகுராமன்
34. S. டர்சிகா
35. V. துஷாஜினி
36. K. சிந்துஜன்
37. U. சாந்தராஜ்
38. J. லக்ஷிகா
39. J. அர்ச்சனா
40. R. யோயல்
41. N. நிலக்சன்
42. P. அகளங்கன்
43. T. கீர்த்தனா
44. T. சாஜினி
45. M. கபில்ராஜ்
46. S. பிரசன்யா
47. K. கபில்ராஜ்
48. K. மதீசன்
49. K. லச்சனா
50. A. அபீஸ்கர்
51. P. தர்சனா
52. S. சித்ரா
53. J. சங்கீர்த்தனா
54. S. றொசானி
55. K. நேருஜா
56. T. றொசான்
57. S. புனிதா
58. A. ஆர்த்திகா
59. S. ரேவதி
60. R. லக்சாயினி
61. J. தாட்சாயினி
56. R. கபிநயா
63. P. பிரகஜன்
64. S. சதீஸ்காந்
65. P. டிலக்சிகா
66. S. டிசாந்தன்
67. S. சக்தி
68. T. துசான்
69. G. குகாசினி
70. A. கஜன்
71. P. தாமிரா
72. Y. சுசில்டன்சுஜாத்
73. K. தர்சன்
74. N. நந்துசன்
75. T. ஜதீசன்
76. S. வினோஜா
77. J. பிரசாந்
78. S. லக்சலா
79. P. துஷாமினி
80. S. பவித்திரன்
81. R. ஜெகஜீவன்

## 2012ஆம் ஆண்டிற்கான முதன்மை நிலை மாணவர்கள்

### நல்லூர் சயன்ஸ் அக்கடமி

| | | | |
|---|---|---|---|
| தரம் - | 4 | செல்வன். | N. விபூசணன் |
| தரம் - | 5 | செல்வன். | A. சிவபவன் |
| தரம் - | 6 | செல்வி. | N. கிருசிகா |
| | 6E.M | செல்வன். | S. குகப்பிரியன் |
| தரம் - | 7 | செல்வன். | I. பௌசிகன் |
| | 7E.M | செல்வி. | K. ஜினோஜினி |
| தரம் - | 8 | செல்வி. | M. டனுஜா |
| | 8E.M | செல்வி. | J. தாருகா |
| தரம் - | 9 | செல்வி. | G. பரமிதா |
| | 9E.M | செல்வன். | S. சிவகரன் |
| தரம் - | 10 | செல்வன். | K. வாகீசன் |
| | 10E.M | செல்வி. | U.கோபிஷா |
| தரம் - | 11 | செல்வன். | R. சுதர்சன் |

### அரியாலை சயன்ஸ் அக்கடமி

| | | | |
|---|---|---|---|
| தரம் - | 6 | செல்வன். | S. பிரணவன் |
| தரம் - | 7 | செல்வி. | S. துஷாரா |
| தரம் - | 8 | செல்வன். | N. திலக்சன் |
| தரம் - | 9 | செல்வி. | M. பபித்திரா |
| தரம் - | 10 | செல்வி. | K. பிறீஸ்கா நியோமி |
| தரம் - | 11 | செல்வன். | P. சஜீசன் |

### பொன்விழா நிகழ்வுகளை முன்னிட்டு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட

## இலக்கியப்போட்டிகளுக்கான முடிவுகள்

### மனனத் திறன் போட்டி

**தரம் - 1**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | - செல்வன். | K. கௌதம் |
| இரண்டாம் இடம் | - செல்வி. | S. யுகின்ஷா |
| மூன்றாம் இடம் | - செல்வி. | S. சகிஸ்னா |

**தரம் - 2**

| | | |
|---|---|---|
| முதலாம் இடம் | - செல்வன். | P. ரிஷிதரன் |
| இரண்டாம் இடம் | - செல்வி. | N. ஏஞ்சலின் லக்ஷா |
| மூன்றாம் இடம் | - செல்வி. | Y. கிருஷிகா |

**தரம் - 3**

முதலாம் இடம் - செல்வி. P. மதுஷாயினி
இரண்டாம் இடம் - செல்வி. N. கவிநயா
மூன்றாம் இடம் - செல்வி. K. துவாரகா

## பொது அறிவுப் போட்டி

**தரம் - 4**

முதலாம் இடம் - செல்வன். N. பிருந்தாபன்
இரண்டாம் இடம் - செல்வன். S. அட்சயன்
மூன்றாம் இடம் - செல்வன். U. அஜய்

**தரம் - 5**

முதலாம் இடம் - செல்வன். S. ரிஷிகேசன்
இரண்டாம் இடம் - செல்வன். J. கிரிசாந்
மூன்றாம் இடம் - செல்வி. S. துஷாயினி
மூன்றாம் இடம் - செல்வன். N விபூசணன்

## கவிதைப் போட்டி

**தரம் - 6, 7**

முதலாம் இடம் - செல்வி. A.C. விதுஷாளினி
இரண்டாம் இடம் - செல்வி. T. அபிநயா
மூன்றாம் இடம் - செல்வன். L. துவாரகன்

**தரம் - 8, 9**

முதலாம் இடம் - செல்வி. J.Y. பிரியங்கா
இரண்டாம் இடம் - செல்வி. R. தனுஷ்ரிகா
மூன்றாம் இடம் - செல்வி. J. கஸ்தூரி
மூன்றாம் இடம் - செல்வி. P. வினுஜா

**தரம் - 10, 11**

முதலாம் இடம் - செல்வி. A. திவ்விஜா
இரண்டாம் இடம் - செல்வி. C. கஸ்தூரிகா
மூன்றாம் இடம் - செல்வி. N. கஜேந்தினி
மூன்றாம் இடம் - செல்வன். S. டினுஷாந்

## கட்டுரைப்போட்டி

**தரம் - 6, 7**

முதலாம் இடம் - செல்வன். S. றெமியூசன்
இரண்டாம் இடம் - செல்வி. K. பிறிசில்லா சிரோமி
மூன்றாம் இடம் - செல்வி. T. அபிநயா
நான்காம் இடம் -செல்வி. A. அசாரிகா
ஐந்தாம் இடம் - செல்வி. P. திபானுஜா

**தரம் - 8, 9**

முதலாம் இடம் - செல்வி. J. மயூரிக்கா
இரண்டாம் இடம் - செல்வி. S. சிவவாசினி
மூன்றாம் இடம் - செல்வி. T. தர்மிதா
நான்காம் இடம் -செல்வி. K. கிரித்திகா
ஐந்தாம் இடம் - செல்வி. J.Y. பிரியங்கா

**தரம் - 10, 11**

முதலாம் இடம் - செல்வி. M. பபித்திரா
இரண்டாம் இடம் - செல்வி. G. பரமிதா
மூன்றாம் இடம் - செல்வி. C. கஸ்தூரிகா
நான்காம் இடம் -செல்வி. S. இந்துஜா
ஐந்தாம் இடம் - செல்வி. U. கோபிஷா

## பேச்சுப்போட்டி

**தரம் - 6, 7**

முதலாம் இடம் - செல்வி. A. அசாரிகா
இரண்டாம் இடம் - செல்வி. B. சுதாமதி
மூன்றாம் இடம் - செல்வி. J. தனுஷா
மூன்றாம் இடம் -செல்வன். M. துவாரகன்

**தரம் - 8, 9**

முதலாம் இடம் - செல்வி. T. தர்மிதா
இரண்டாம் இடம் - செல்வி. B. பாரதி
மூன்றாம் இடம் - செல்வன். K. தனுசன்

**தரம் - 10, 11**

முதலாம் இடம் - செல்வி. P. விதுசனா
இரண்டாம் இடம் - செல்வி. S. நிவேதிகா
மூன்றாம் இடம் - செல்வி. J. தாட்சாயினி

# பொன்விழா நாயகனின் வாழ்க்கைத் தடங்கள்



தன்னை வளர்த்துவிட்ட தாயாரிடம் ஆசிபெறும்போது





திருமண நிகழ்வின் போது



திருமண பந்தத்தில் மனைவியுடன்

திருமண நிகழ்வில் தனது ஆசிரியர்களுடன்



2001ஆம் ஆண்டில் மனைவி, பிள்ளைகளுடன்



பட்டமளிப்பு நிகழ்வின்போது பிள்ளைகளுடன்



2007இல் மனைவி பிள்ளைகளுடன்



2012இல் மனைவி பிள்ளைகளுடன்



மாவட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டியின்போது



சிறுவயது விளையாட்டு விழாவில்



1988இல் ஆசிரியர் சேவையில் இணைந்துகொண்டபோது



முதல் பாடசாலையான அரியாலை கிழக்கு அ.த.க.
பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுடன்



ஆசிரியர்தின விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட
யாழ். மாநகர முதல்வரை அழைத்து வரும்போது



2012 ஆசிரியர்தின விழாவில் யாழ். மத்திய கல்லூரி அதிபர்
மற்றும் அக்கடமி ஆசிரியர்களுடன் ஆசிரிய கீதம் இசைக்கும்போது



சயன்ஸ் அக்கடமியின் 2010 ஆசிரியர்தின விழாவின்போது



2010 ஆசிரியர்தின விழாவில் தம்பதிகளாக கௌரவிக்கப்பட்டபோது



2012 சயன்ஸ் அக்கடமியின் கௌரவிப்பு விழாவில் உரையாற்றும்போது



வெற்றித்தேர்வு வினாவிடைத்தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவின்போது



2012 மாணவர் கௌரவிப்பு விழாவின் பதிவுகள்



2012 மாணவர் கௌரவிப்பு விழாவில் விருந்தினர்கள்



திருமலையில் சித்திபெற்ற மாணவர்களுடன்



திருமலையில் நடைபெற்ற வெற்றித்தேர்வு கௌரவிப்பு விழா



திருமலையில் புலமைப்பரிசில் நூலினை வெளியீட்டு வைக்கும்போது



திருமலையில் நடைபெற்ற புலமைப்பரிசில் நூல் வெளியீட்டுவிழாவில்
மூதூர் வலயக் கல்விப்பணிப்பாளரால் கௌரவிக்கப்பட்டபோது



துணுக்காயில் நடைபெற்ற சர்வதேச மகளிர்தின நிகழ்வில்



தேசிய நிலைபெற்ற கரப்பந்தாட்ட அணி யாழ். மத்திய கல்லூரி



மத்திய கல்லூரி ஆசிரிய குழாம்



சர்வதேச கல்வியக 6ஆவது மாநாட்டில்



சர்வதேச கல்வியக உறுப்பினர்களுடன்



சர்வதேச கல்வியகத்தின் செயலாளர் மத்தியூசுடன்



முன்னாள் கல்வியமைச்சு செயலாளர்
எச்.எம்.குணசேகரவுடன்



சர்வதேச கல்வியக மாநாட்டில்



வடமாகாண கௌரவ ஆளுநருடனான சந்திப்பின்போது



சர்வதேச கல்வியக பிரதிநிதிகளுடன் தொழிற்சங்கவாதியாக



சார்க் நாடுகளின் ஆசிரிய தொழிற்சங்க துணைத் தலைவரைக் கௌரவிக்கும்போது



கல்வி அமைச்சு கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினருடன்



வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட வன்னி மாணவர்களுக்கான உதவிப்பொருட்களை கல்வியமைச்சின் செயலாளரிடம் கையளித்தபோது



சார்க் ஆசிரியர் மாநாட்டில் சங்கத்தோழர்களுடன்



மாலபேயில் நடைபெற்ற கருத்தரங்கில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க தாய்ச்சங்க உறுப்பினர்களுடன்



சார்க் ஆசிரிய சங்கத் தலைவருடன், சங்கத்தோழர்களுடன்



பட்டிருப்புக் கல்வி வலயத்தில் சங்க உறுப்பினர்களால் வரவேற்கப்பட்டபோது




வடமாகாண தொழிற்சங்கக் கூட்டமைப்பில் உரையாற்றும்போது



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க தலைமைக் காரியாலய திறப்புவிழாவின் போது



முன்னாள் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளரும் வடமாகாண ஆளுநரின் செயலாளருமான உயர்திரு. இளங்கோவனுடன்



யாழ். மத்திய கல்லூரி ஆசிரிய நண்பர்களின் பாராட்டுவிழாவின் போது



யாழ். மத்திய கல்லூரி முன்னாள் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுடன்




திருமலை ஈச்சிலம்பற்று இலவசக் கருத்தரங்கில்




செயலமர்வில் கலந்துகொண்ட ஆசிரியர்களும், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியத்தின் உறுப்பினர்களும்.



ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்கள் – 2008



2010 புலமைப்பரிசில் செயலமர்வில் "ஆசிரியர் திலகம்" விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது




மகேஸ்வரி வித்தியாசாலை பரிசளிப்பு விழாவில்



சுகாதாரம், உடற்கல்வி நூல் வெளியீட்டின்போது
பரீட்சைத்திணைக்கள உதவிப்பரீட்சை ஆணையாளருடன்



லயன்ஸ் கழக அங்கத்தவராக இணைந்தபோது




லயனாக சின்னம் சூட்டப்பட்டபோது



புலமைப்பரிசில் பரீட்சை மாணவர் கௌரவிப்பில்



கல்வியியற் கல்லூரி செயலமர்வில் பாராட்டுப் பெறும்போது



பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின்போது



பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின்போது



ஆசிரிய கலாசாலை விளையாட்டு நிகழ்வின்போது



ஆசிரிய கலாசாலை உடற்கல்வி மன்றத்துடன்



ஆசிரிய கலாசாலை பட்டமளிப்பில் விருந்தினர்களுடன்



கலாசாலையில் அமைச்சர் றிசாத் பதியுதீனுடன்



கலாசாலை விளையாட்டு நிகழ்வில் கல்வி அமைச்சின் பணிப்பாளர் S. முரளிதரனுடன்



கலாசாலையின் ஆசிரியதின நிகழ்வில் உரையாற்றும்போது



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அதிபர், விரிவுரையாளர்களுடன் – 2011



ஆசிரிய கலாசாலை 100m ஓட்ட
சாதனை விருது பெறும்போது



ஆசிரிய கலாசாலை மூவிராசாக்கள்
நாட்டிய நாடகத்தில் கட்டியகாரனாக



தனது உடற்பயிற்சி விரிவுரையாளர்களுடன்



ஆசிரியர்களுடன் சுற்றுலா சென்றபோது



மூவிராசாக்கள் நாடக அணியுடன்



2012 கௌரவிப்பு விழாவில் முதன்மை விருந்தினர்களுடன்

பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எமது மனம் நிறைந்த
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!

# மிலேனியம் மல்ரி ஷொப்

பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள்,
காகிதாதிகள், அப்பியாசக் கொப்பிகள்
என்பனவற்றை நியாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.




## Millennium Multi Shop

134A, நிலாவெளி வீதி, அலஸ் தோட்டம்,
உப்புவெளி, திருகோணமலை.
☎ 0752181300

வெற்றித்தேர்வு வெளியீட்டகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர்
உயர் திரு. சரா. புவனேஸ்வரன் அவர்களின்
பொன்விழா நிகழ்வுகள் சிறக்க எமது நல்வாழ்த்துக்கள்!

# J.P.K. SHOPPING COMPLEX

பாடசாலை உபகரணங்கள், அழகுசாதனப் பொருட்கள்
என்பவற்றின் விற்பனையாளர்கள்
இல. 144, பஷார் ஸ்ரீட், வவுனியா.
தொ.பே:- 024 222 0295




# K.P.K. CENTER

தினசரிப் பத்திரிகைகள், வாராந்த சஞ்சிகைகள்
அனைத்துவகையான பாடப்புத்தகங்கள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.




இல. 24, பஸ் நிலையம், வவுனியா.
தொ.பே:- 024 222 2504

பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எமது மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!

# GOOD PHARM



இல. 132A, காலிவீதி, வெள்ளவத்தை,
கொழும்பு – 06

பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எமது மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!

# அறிவுநதி புத்தகசாலை





எம்மிடம் அனைத்து வகையான புத்தகங்களையும்,
பாடசாலை உபகரணங்களையும்,
விளையாட்டு உபகரணங்களையும்,
ரோனர் வகைகளையும்,
அழகுசாதனப் பொருட்களையும்
நியாய விலையில் உயர் தரத்தில்
பெற்றுக்கொள்ளமுடியும்.



இல. 06, கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

தொ.பே:- 021 2285395 , 0776737535


பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எமது மனம் நிறைந்த
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!
இன்றைய உலகின் நவநாகரிக ஆடைத்தெரிவுகளுக்கு...
சிவகணேசன்
ரெக்ஸ் ரைல்
புடைவைத் திணுசுகளின்
மொத்த சில்லறை வியாபாரிகள்
★ஆடவர் ★மங்கையர் ★சிறுவர்கள்
விரும்பும் ஆடைத் தெரிவுகளுக்கு
இன்றே நாடுங்கள்
இல. 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2063


பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய
எமது நல்வாழ்த்துக்கள்!
வரதன்
தச்சுத் தொழிலகம்
கதவுகள், யன்னல் கதவுகள்,
மேசைகள், கதிரைகள்,
அலுமாரிகள்
அனைத்து வகையான
தளபாடங்களையும்
நவீன முறையில்
தரமானதாகவும்,
நீங்கள் விரும்பிய
வடிவமைப்பிலும் செய்து
பெற்றுக்கொள்ளலாம்.
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.


பொன்விழா நிகழ்வுகள்
சிறப்புற அமைய
எமது நல்வாழ்த்துக்கள்!
வேலவன் மிக்சர்
மிக்சர், பிஸ்கட், சுவிட்,
குளிர்பானங்கள் ஆகியவற்றைப்
பெற்றுக்கொள்ளலாம்.
VELAVAN MIXTURE
இல. 630, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.


பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எமது மனம் நிறைந்த
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!
ஜோதி புத்தகநிலையம்
சகலவிதமான புத்தகங்களையும்,
பாடசாலை உபகரணங்களையும்
அழகுசாதனப் பொருட்களையும்
நியாய விலையில் உயர்தரத்தில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்
INK
இல. A 53, பெரியகடை, மன்னார்
T.P:- 023 2222052


பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எமது மனம் நிறைந்த
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!
வி. செல்லத்துரை
ஸ்ரோர்ஸ்
Reese's
பலசரக்குப் பொருட்கள்,
மரக்கறிவகைகள், பிஸ்கட்,
குளிர்பான வகைகள் மற்றும்
அழகுசாதனப் பொருட்கள், கற்றல்
உபகரணங்கள் என்பவற்றை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
இல. 735, நாவலர் வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

சயன்ஸ் அக்கடமியின் நிர்வாக இயக்குநர் சரா. புவனேஸ்வரன் அவர்களின்
பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எமது மனம் நிறைந்த
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!

# வஜிதா மோட்டோர்ஸ்

*Authorised YAMAHA Service Dealer*

# VAGEETHA MOTORS



300/1 Navalar Road, Jaffna.
300/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 0778097741

பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எமது
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!

# ARAVINTH DIGITAL

*Solution for Professional filming & linear Editing*



- Digital Video & Photo
- Album Making




- Digital Printing
- DVD Writing

Tel - 021 222 2190
Mobile : 0777162339
aravinthvideo@yahoo.com

#309, Navalar Road,
Anaipanthy, Jaffna.


பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எமது
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!
நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளைச் செய்து பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்
வைஷ்ணவி
நகைப்பூங்கா
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன் 22 காரட்டில் செய்து
கொடுக்கப்படும்
பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
தொ.பே: 021 226 4519


பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எமது மனம் நிறைந்த
நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!
செல்லமுத்து
ரெக்ஸ்ரைல்ஸ்
அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்றவகையில்
இன்றைய உலகில் நவநாகரிக
ஆடைத்தெரிவுகளுக்கு இன்றே நாடுங்கள்
SELLAMUTHUS TEXTILES
நெல்லியடி, கரவெட்டி.
T.P:021 2263238



பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்!
பூபாலசிங்கம் புத்தகசாலை
BOOBALASINGAM
BOOK DEPOT
எம்மிடம் அனைத்து வகையான பயிற்சிப் புத்தகங்கள்,
பாடசாலை உபகரணங்கள்,
தினசரி, வாராந்தப் பத்திரிகைகள்
என்பனவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 6693




பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற எமது நல்வாழ்த்துக்கள்!
நிலக்ஸ் ஹொட்டல்
Nilaks Hotel
அறுசுவை உணவுகளின்
சாம்ராஜ்யம்
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு.


பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற வாழ்த்தும் யாழ் நகரின் இன்றைய முன்னோடிகள்
ராஜா கிறீம் ஹவுஸ்
Rajah Cream House
சரஸ்வதி மண்டபம்
Saraswathy Hall
சரஸ்வதி மண்டபம்
மிகச்சிறப்பான சேவையை வழங்கும் பொருட்டு நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம்
உணவு வகைகள், சொகுசு ஒழுங்குபடுத்தல்கள்,
நட்புறவான ஊழியர்களுடன் எமது சேவையை யாழ் மண்ணில் வழங்கி வருகின்றோம்.
உங்களின் மங்கலகரமான நிகழ்வுகளை எம்முடன் இணைந்து மேலும்
சிறப்பாக அமைத்துக்கொள்ளுங்கள்.
இல. 37, சேர் பொன். இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலுக்கு அருகாமை, யாழ்ப்பாணம்.
021-3207369 021 2221678



பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற வாழ்த்தும்
நியூ நெல்சன்
L
லேணர்ஸ்
அரச அங்கீகாரம்பெற்ற "A" தர முதன்மைச் சாரதிப் பயிற்சிப் பாடசாலை
எமது சகல கிளை நிறுவனங்களிலும் குறைந்த கட்டணத்தில் மருத்துவச் சான்றிதழ் வழங்கப்படும்.
AD மருத்துவச் சான்றிதழ் திங்கள் - வெள்ளி வரை எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.
குறைந்த கட்டணத்தில் AD சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளலாம்.
சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து விரைவாகச் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும்.
எழுத்துப் பரீட்சை மூலம் சித்தியடைய மல்ரிமீடியா மூலம் விசேட வகுப்புக்கள்
அதிகூடிய பயிற்சி நேரங்கள்
தவணை முறைக் கட்டணங்கள்
வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
இல. 89, கண்டி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 4527
077 358 1916
இல. 127,
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி, கரவெட்டி.
☎021 492 3115
பஸ் நிலையம்,
சுன்னாகம்.
☎021 492 3732
இராமலிங்கம் வீதி,
சாவகச்சேரி.
☎021 492 3114
இல. 4, நவீன சந்தை,
வல்வெட்டித்துறை.
☎021 492 3733
பிரதான வீதி,
நெடுந்தீவு.
☎077 7906064


பொன்விழா நிகழ்வுகள் சிறப்புற வாழ்த்தும்
கணபதி பிறிண்டேர்ஸ்
முற்றிலும் கணனிமயப்படுத்தப்பட்ட அச்சு வேலைகள்
Ganapathi Printers
General & Commercial Offset printers,
Computer Designing & Screen Printing
54/2, தலங்காவல் பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம். 0775597754
54/2, Thalankaval Pillaiyar Road,
Thirunelvely West, Jaffna.
T.P. 021 321 5077

# வெற்றித்தேர்வு வெளியீட்டகம்

நாடளாவிய வெளியீடுகள்

**தரம் 1, தரம் 2, தரம் 3 மாணவர்களின் அடைவுமட்டத்தை மேம்படுத்தும் பாடரீதியான வினாப்பத்திரங்களைக் கொண்ட பரீட்சை வழிகாட்டிகள்**








## புலமைப்பரிசில் பரீட்சை

## தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான வெளியீடுகள்

**வெற்றித்தேர்வு வினாப்பத்திரங்கள்**

**வெற்றித்தேர்வு புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்கள்**




## ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான ஒரு வரப்பிரசாதம்

தொடர்புகளுக்கு: 021 222 9016, 0775388471, 0773126807

# நெஞ்சிருக்கும் வரை எம் நன்றிகள்

எங்கள் பொன்விழா நாயகன் உயர்திரு. சரவணமுத்து புவனேஸ்வரன் அவர்களின் சேவைகளுக்கு மதிப்பளித்து மென்மேலும் அவரின் பணிகள் சிறப்புற அமைய அவரது ஐம்பதாவது அகவையிலே பொன்விழா நிகழ்வுகளை நடாத்துவதற்கும் அவரின் அர்த்தம் நிறைந்த வாழ்க்கைத் தடங்களைப் பதிவு செய்யும் "புவனம்" பொன்விழா சிறப்பு மலரை வெளியிடுவதற்காகவும் சரா பொன்விழாச் சபையை அங்குரார்ப்பணம் செய்தபோது அதனைச் செயற்படுத்துவதற்காக முன்னின்று உழைத்த அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள். அத்துடன் பொன்விழா மலரை வெளியிடுவதற்கான ஆசிச்செய்திகளை வழங்கிய மதகுருமார்களுக்கும், வாழ்த்துச் செய்திகளை வழங்கிய அரச அதிகாரிகள், கல்வியாளர்கள், சமூகப் பெருந்தகைகள் அனைவருக்கும் இப் பொன்னான வேளையிலே எம் நன்றிகள் உரித்தாகட்டும்.


மேலும் பொன் விழா மலரில் வெளிவந்துள்ள பொன் விழா நாயகன் பற்றிய ஆக்கங்களையும், பல்துறை சார் ஆக்கங்களையும் வழங்கிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வி அதிகாரிகள், கல்வியாளர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் நன்றி கூறுவதில் பேருவகை அடைகின்றோம். அத்துடன் பொன்விழா மலர் சிறப்புற அமைய அனுசரணை வழங்கிய வர்த்தக நிறுவனங்களின் பிரமுகர்களுக்கும் இச் சந்தர்ப்பத்தில் எம் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் இம் மலரினை மிகக் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய திருநெல்வேலி கணபதி பிறிண்டேர்ஸ் தாபனத்தார்க்கும் உளம் கனிந்த நன்றிகள் உரித்தாகட்டும். பொன்விழா நிகழ்வுகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கும், புவனம் மலர் வெளியீட்டிற்கும் மனம் உவந்து அன்பளிப்புக்களை வழங்கி உதவிய "சயன்ஸ் அக்கடமி" ஆசிரியர்கள், புலம் பெயர் நாடுகளில் வாழும் "சயன்ஸ் அக்கடமி" உறவுகள், பொன்விழா நாயகனின் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதில் பேருவகை அடைகின்றோம். மேலும் பொன்விழா நிகழ்வுகள் நடந்தேறுவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து இறுதிவரை எம்முடன் இணைந்து செயலாற்றிய அனைத்து உள்ளங்களிற்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து அமைகின்றோம்.




என்றும் அன்புரிமையுடன்,
**சரா. பொன்விழாச் சபை**

**01.06.2013**














கணபதி பிறிண்டேர்ஸ் - திருநெல்வேலி. 021 321 5077